# ஸ்ரீகலா SRIKALA




ஸ்ரீகலா SRIKALA
ஸ்ரீகலா
பெண்ணே நீ
முள்ளா...! மலரா...!
PENNE! NEE
MULLLAA? MALARAA?


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

# ஸ்ரீகலாவின் "பெண்ணே நீ முள்ளா? மலரா?"

Contents

மலர் : 1
மலர் : 2
மலர் : 3
மலர் : 4
மலர் : 5
மலர் : 6
மலர் : 7
மலர் : 8
மலர் : 9
மலர் : 10
மலர் :11
மலர் : 12
மலர் : 13
மலர் : 14
மலர் : 15
மலர் : 16
மலர் : 17
மலர் : 18
மலர் : 19
மலர் : 20
மலர் : 21

## மலர் : 1

"என்னம்மா இது? நான் இருக்கையிலே நீங்க ஏன் இந்த அடுப்படியில் கஷ்டப்படணும்? போங்கம்மா என்ன வேணும்ன்னு சொன்னிங்கன்னா அரை மணி நேரத்தில் செஞ்சு அசத்திப்புட மாட்டேன்" வேலையாள் கமலம்

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

சலித்துக் கொள்ள, மதிவதனா அவளைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

“கமலம் என் அப்பாவுக்கு நானே செஞ்சு பரிமாறினாத்தான் எனக்குத் திருப்தி. நீங்களும் எத்தனை தடவைத் தான் இதே கேள்வியைக் கேட்பிங்க நானும் எத்தனை தடவைத் தான் இதே பதிலைச் சொல்வேன். கொஞ்சம் கேள்வியை மாத்தி யோசிங்க” சிரித்தப்படிச் சொன்ன எஜமானியம்மாளை வாஞ்சையுடன் பார்த்தாள் கமலம். மதிவதனாவின் சிறு வயதிலிருந்து இங்கே தான் வேலை செய்கிறாள். வீட்டு வேலையாளையும் சொந்த மனிதர்களாகப் பார்க்கும் எஜமானியிடத்தில் அவளுக்கு எப்பவுமே தனிப் பிரியம் தான்.

அந்நேரம் பார்த்து அவளின் கைப்பேசி அலற, அதில் அவளது தந்தை ராமகிருஷ்ணனின் உதவியாளர் கேசவன் தான் அழைத்திருந்தார். “மதிம்மா அப்பாவுக்குத் திடீர்ன்னு ஹார்ட் அட்டாக் வந்து ஹாஸ்பிட்டல்ல சேர்த்திருக்கு. நீ உடனே புறப்பட்டு வாம்மா” அதைக் கேட்டதும் அவளுக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு தலை சுற்றுவது போலிருக்க, அருகிலிருந்த உணவு மேஜையை ஒட்டிப் போடப்பட்டிருந்த நாற்காலியில் தொப்பென்று அமர்ந்தாள்.

“மதிம்மா என்னாச்சு? ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?” கமலம் தம்பளரில் தண்ணீருடன் அவளைத் தொட்டசைக்க, அதில் சுய உணர்வுப் பெற்றவள் தண்ணீரை வாங்கிப் பருகித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, “கமலம் அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்து ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியிருக்காங்க நான் போய்ப் பார்த்திட்டு வர்றேன்” பதற்றத்துடன் கிளம்பியவளைத் தடுத்த கமலம்,

“அம்மா நானும் வர்றேன் நீங்க எப்படித் தனியா...?”

“இல்லை கமலம் வீட்டை நீங்க பார்த்துக்கோங்க. ஏதாவது தேவைன்னா போன் பண்றேன்” என்றவள் அடுத்த நொடிக் காரிலேறி மருத்துவமனைப் புறப்பட்டாள்.

PDF தமிழ் .com

ராமகிருஷ்ணன் சென்னையில் நட்சத்திர அந்தஸ்துப் பெற்ற விடுதி வைத்திருக்கிறார். சென்னையில் மட்டுமில்லாது தமிழ் நாட்டின் மிக முக்கிய நகரங்கள் கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய மூன்று இடங்களிலும் விடுதியிருந்தது. அவரின் ஒரே செல்ல மகள் மதிவதனா தான் இத்தனை சொத்துக்கும் ஒரே வாரிசு. இருபத்திரெண்டு வயதான மதிவதனா நல்ல அழகி. ஆனால் அந்த அழகைப் பற்றிய கர்வம் சிறிதுக் கூட அவளுக்குக் கிடையாது. தந்தைக்குத் தொழிலில் உதவுவதற்காகவே ஹோட்டல் மானேஜ்மென்ட் எடுத்துப் படித்தாள். இப்பொழுது தான் படித்து முடித்திருப்பதால் இன்னமும் தொழிலைக் கையிலெடுக்கவில்லை.

அவளின் தாயார் அவள் கைக்குழந்தையாக இருக்கும் போதே இறந்து விட, ராமகிருஷ்ணன் தான் தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் அவளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தார். அதனால் தான் என்னமோ மதிவதனா தந்தையிடம் சற்றுக் கூடுதல் ஒட்டுதலோடு இருந்தாள். அவரும் தன் மனைவியை உரித்து வைத்துப் பிறந்திருக்கும் மகள் மீது அளவில்லாத பாசத்தை வைத்திருந்தார்.

மருத்துவமனையில் இறங்கியதும் அவசரமாக உள்ளே நுழைந்தவள் நேரே ஐசியூவிற்குத் தான் ஓடினாள். அங்கே அவளை உள்ளே அனுமதிக்காததால் தங்கள் குடும்ப நண்பரான மருத்துவர் மௌலியைச் சந்திக்க அவரது அறையை நோக்கிப் போனாள்.

“அங்கிள்... அப்பாவுக்கு ஒண்ணுமில்லையே?”

மௌலி அவள் தலையை ஆறுதலாக வருடி, “மைல்ட் அட்டாக் தான் பயப்பட ஒண்ணுமில்லை. நாளைக்கு நீ வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாம். நான் டெய்லி வந்து பார்த்துக்கிறேன். இன்னும் அரைமணி நேரத்தில் உன் அப்பாவைப் பார்க்கலாம். நீ இங்கேயே வெய்ட் பண்ணுறியாம்மா?”

“இல்லை அங்கிள் ஐசியூல வெய்ட் பண்ணுறேன்” என்றவள் ஐசியூ வார்ட்டுக்கு வெளிப்பக்கம் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்து ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொண்டாள்.

*************************

“அம்மா டிபன் ரெடியா?” குரல் கொடுத்தபடி வந்த மூத்த மகன் ஹரிசரணைப் பார்த்த சுபத்ரா மனம் பெருமையில் பூரித்தது.

கறுப்பு அழகில்லையென்று யார் சொன்னார்கள்? இதோ கருமை நிறத்திலும் கம்பீரமாகயிருக்கும் இவன் அதற்கு உதாரணமாக இருக்கிறானே. எல்லாவற்றிலும் சிறந்திருக்கும் மகனிடம் சுபத்ராவுக்கு ஒரே ஒரு குறை தான். அது வயது இருபத்தொன்பதாகிறது. இன்னமும் திருமணத்திற்குப் பிடிக் கொடுக்க மாட்டேங்கிறான் என்பதே சுபத்ராவின் தற்போதையக் கவலை. அடுத்தவனுக்கும் இருபத்தியேழாகிறது. சரண் திருமணம் முடித்தால், அடுத்தவன் திருமணத்தைப் பற்றி யோசிக்க முடியும். ‘இதெல்லாம் இவனுக்கு எங்கே புரியப் போகிறது?’ நினைத்தவருக்குப் பெருமூச்சுதான் வந்தது.

சுபத்ரா-ராமநாதன் தம்பதியருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் ஹரிச்சரண், இரண்டாவது ஹரிஹரன், அடுத்து ஹரிணி. ஹரிணி திருமணமாகித் தன் கணவன் ஶ்ரீதர், குழந்தை ஆகாஷுடன் இங்கே சென்னையில் தான் வசித்து வருகிறாள். ராமநாதன் சென்னையில் பெரியளவில் ஆயத்த ஆடை வடிவமைக்கும் தொழிற்சாலை நடத்தி வருகிறார். பெங்களூரிலும் ஒரு கிளையிருக்கிறது.

மகன்கள் இருவரும் படிப்பு முடிந்தவுடன் தந்தையின் தொழிலில் அவருக்கு உதவியாய் இருக்கின்றனர். சின்னவர்கள் எந்த முடிவு எடுத்தாலும் இறுதி முடிவென்பது ராமநாதன் கையில் தானிருந்தது. அந்த அளவுக்குத் தந்தையின் மேல் மகன்கள் இருவருக்கும் மதிப்பும் மரியாதையும் உண்டு. அதே சமயம் அவரும் சிறியவர்களின் எண்ணங்களை மதித்து அவற்றையும்

PDF தமிழ் .com

செயலாற்றினார். அதனால் தந்தை மகன்கள் இடையில் நல்ல நட்பு இழையோடியது.

“அம்மா டிபன் ரெடியான்னு கேட்டாப் பதில் சொல்லாம அப்படி என்ன ட்ரீம் வேர்ல்ட்ல இருக்கீங்க? ட்ரீம்ல யாரு ராஜேஷ்கன்னாவா? இல்லை அமிதாப்பச்சனா?” சுபத்ராவின் கன்னங்களைப் பிடித்துக் கொஞ்சிக் கொண்டே, கண் சிமிட்டியபடிக் கேட்டான் ஹரிசரண் என்கிற சரண்.

“ம்… ஆர்யா கூட…” மகனை முறைத்தார் சுபத்ரா.

“அம்மா ஆக்டர்ஸ் தான் மகள், பேத்திங்க கூட டூயட் ஆடறாங்கன்னா நீங்களுமா?” கண்ணில் போலி அதிர்ச்சியுடன் கூறிய சரண், “இந்தச் சின்ன இதயம் தாங்காதே” இடது நெஞ்சில் கையை வைத்தபடி கீழே விழுவது போல் நடிக்க, அதைக் கண்டு சுபத்ரா அவன் முதுகில் ஓங்கி ஒரு போடு போட்டார்.

“என்ன சரண்… இது கூட உனக்குத் தெரியலையா? அம்மா உன் அழகில் பூரிச்சுப் போய்ச் சிலையாகிட்டாங்க. என்னம்மா நான் சொல்றது சரிதானே?” அம்மாவைக் கேட்டபடி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான் ஹரிஹரன் சுருக்கமாக ஹரி.

“ஆமாண்டா அம்மா ஒருத்திக் கிடைச்சாளேன்னு ரெண்டு பேரும் கிண்டலடிங்க” இரண்டு மகன்களையும் சலித்துக் கொண்டவர், “ஏண்டாச் சரண்… எல்லாம் இங்கேத்தானே இருக்கு. எடுத்து வச்சுச் சாப்பிட்டா என்ன? இதுக்குத்தான் காலாகாலத்துலக் கல்யாணம் பண்ணிக்கோன்னுச் சொல்றேன் கேட்டாத்தானே” சுபத்ரா அலுத்துக் கொண்டாலும் இரு மகன்களுக்கும் பார்த்துப் பார்த்துப் பரிமாறத் தவறவில்லை.

“அம்மா சாப்பாடுப் பரிமாறுவதற்காக எல்லாம் கல்யாணம் செய்ய முடியாது” அன்னையின் முறைப்பில் பேச்சை மாற்றியவன், “அம்மா நீங்க எந்தப் பெண்ணைப்

பார்த்தாலும் எனக்குச் சம்மதம்ன்னு ஏற்கெனவே சொல்லிட்டேனே”

“ஆமாண்டா, நல்லாச் சம்மதம் சொன்னே. எந்தப் பெண் போட்டோ குடுத்தாலும் பிடிக்கலப் பிடிக்கலன்னு தான் சொல்ற. இதோட இருபத்தஞ்சுப் பெண் பார்த்தாச்சு. உனக்குன்னு வானத்தில் இருந்தாக் குதிச்சு வருவா? இப்படியே நீ சொல்லிட்டு இருந்தே அறுபதாம் கல்யாணம் தான் பண்ணனும்”

“அம்மா உங்களுக்கு என்ன... இந்த வீட்டில் கல்யாணம் நடக்கணும் அவ்வளவுதானே. நம்ம சூப்பர் ஹீரோ வைத்தி இருக்காரே. அவரும் பாட்டியில்லாம எவ்வளவு நாள்தான் தனியா இருப்பார். என்ன வைத்தி சார்... உங்களுக்கு எந்த மாதிரிப் பொண்ணு வேணும்?” அப்பொழுது தான் அங்கு வந்த தாத்தா வைத்தியநாதனை வம்பிழுத்தான் சரண்.

“டேய் படவா... என்னை ஏண்டா மாட்டிவிடுற? இந்தக் காமெடியெல்லாம் இங்க வேண்டாம். உன் அம்மா கேட்பதற்கு ஒழுங்காப் பதில் சொல்லு” வைத்தியநாதன் அவர் பங்கிற்குச் சரணை மிரட்ட,

“ஏன் வைத்தி உங்களுக்கெல்லாம் இந்தப் பொறாமை? ஒரு சின்னப் பையன் ஜாலியா இருந்தாப் பொறுக்காதே?”

“ஹா... ஹா... யாம் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம் என்கிற பரந்தச் சித்தாந்தம் தான் பேராண்டி” பெருங்குரலெடுத்து அவர் சிரிக்க, அதற்குள் ராமநாதன் அங்கு வரப் பேச்சு கல்யாணத்திலிருந்து தொழிலுக்கு மாறியது.

‘இவரு ஒருத்தர் நான் இப்பத்தான் கல்யாணத்தைப் பத்திப் பேச ஆரம்பிச்சேன். அதுக்குள்ளே எப்படித்தான் தெரியுமோ? மூக்குல வேர்த்த மாதிரி உடனே வந்துட்டாரு” கணவனை மனதில் கடிந்தபடி அவரை எரிச்சலுடன் பார்த்தார் சுபத்ரா.

PDF தமிழ் .com

சாப்பிட்டு முடித்ததும் கையைக் கழுவிய சரண், அம்மாவின் புடவை முந்தானையில் தன் ஈரக் கையைத் துடைக்க, அதைக் கண்ட சுபத்ரா தலையில் அடித்துக் கொண்டார். “நல்லா இருக்குடா நீ பண்றது! ஒழுங்காக் கல்யாணம் பண்ணிட்டு உன் மனைவி புடவையில் கையைத் துடைச்சு ரொமான்ஸ் பண்றதை விட்டுட்டு. கடவுளே இந்தக் காலத்துல இப்படியொரு தத்தியா என் புள்ளை?” தலையிலடித்துக் கொண்டார்.

“அட அடடா... அம்மா ஒரு நல்ல மாமியாரா லட்சணமாப் பேசுங்க. நீங்க பேசுறது பார்க்கும் போது எனக்கே சந்தேகமாயிருக்கு... நீங்க மாமியார் ரோலுக்கு ஏத்தவங்கத் தானான்னு?”

“முதல்ல மருமகளைக் கொண்டாடா! அதுக்கப்புறம் நான் மாமியார் ரோலுக்கு ஏத்தவளா இல்லையான்னுப் பார்க்கலாம்”

“சரண்... அம்மா சொல்றதைக் கேளேன்” அன்னையுடன் சேர்ந்து ஒத்து ஊதிய ஹரியைச் சந்தேகத்துடன் பார்த்தச் சரண்,

“என்னடாப் பக்கத்து இலைக்குப் பாயசம் கேட்கிற மாதிரியிருக்கு. அம்மா முதல்ல இவன் மேட்டரை என்னன்னுக் கவனிங்க”

“என்னடா ஹரி... சரண் என்னமோ சொல்றான் உண்மையா?” சுபத்ரா ஆர்வமுடன் சின்ன மகனைப் பார்க்க, அவனோ கூலாக...

“அப்பத்தானே என் ரூட் கிளியராகும்” சொல்லிவிட்டு அப்பாவியாக முகத்தை வைத்துக் கொள்ள, “உன்னை...” சரண் ஒரு விரல் நீட்டிப் பத்திரம் காண்பித்து முகத்தில் கடுமையைக் கொண்டு வர முயற்சிக்க, அது முடியாமல் சிரித்துவிட்டான்.

“அவன் சொல்வதில் என்னடாத் தப்பு? உனக்குக் கல்யாணம் முடிந்து ஒரு பேத்தியோ, பேரனோ பார்த்திட்டா,

அடுத்து ஹரியின் கல்யாணம் பேசச் சரியாயிருக்கும்” கோபத்துடன் சொல்லியவர் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டார்.

“என் செல்ல அம்மாயில்ல. இந்தத் தடவை ஒரு கழுதையைக் காட்டிக் கட்டுடாத் தாலின்னு நீங்க சொன்னாக் கட்டிடறேன். இப்ப ஓகேவா...! கொஞ்சம் சிரிங்களேன்” தாயின் நாடியைப் பிடித்துக் கெஞ்சிய சரண் பின் தந்தையை நோக்கி ,

“அப்பா வித் யுவர் பர்மிசன்” என்று சொல்லியபடி அம்மாவின் கன்னத்தில் முத்தமிட, அவனைத் தள்ளிவிட்ட சுபத்ரா,

“இந்த ஐஸ் வைக்கிற வேலையெல்லாம் இங்க வேண்டாம். இந்தத் தடவை நீ சம்மதம் சொன்னாலும் சரி, சம்மதம் சொல்லலைனாலும் சரி, நானே ஒரு பெண்ணைப் பார்த்து நிச்சயம் பண்ணப் போறேன்” அவர் கண்டிப்பாகக் கூற,

“ஓகேம்மா...” ஆங்கில பாணியில் குனிந்து நிமிர்ந்த சரண், “இப்ப நான் என் வேலையைப் பார்க்கப் போகலாமா?” குறும்புடன் கேட்டதும் சுபத்ராவுக்குச் சிரிப்பு பீறிட்டது.

“போடா போக்கிரி” சுபத்ரா செல்லமாக வைதபடி அவன் தலையைக் கலைக்க, எல்லோருக்கும் இது அன்றாட நிகழ்ச்சி என்பதால் சிரிப்புடன் அங்கிருந்து நகர்ந்தனர்.

வெளியில் கிளம்பிக் கொண்டிருந்த ராமனாதனின் அருகில் வந்த சுபத்ரா, “என்னங்க போற வழியில் என்னை ஹாஸ்பிட்டல ட்ராப் பண்ண முடியுமா? அண்ணனுக்கு ஆக்சிடெண்ட்டான அன்னைக்குப் போய்ப் பார்த்தது. திரும்பப் போய்ப் பார்க்கலன்னாத் தப்பா நினைப்பாங்க. இன்னைக்கு முத்து வேற லீவு... அதான் உங்கக்கிட்ட கேட்கிறேன்”

“சுபி இன்னைக்கு நானும் ஹரியும் முக்கியமான க்ளையண்ட்டைப் பார்க்க வேண்டியிருக்கு. நீ வேணாக் கால் டாக்ஸிப் பிடிச்சு ஹாஸ்பிட்டல் போயேன். ஓகே

PDF தமிழ் .com

இப்பவே லேட்டாகிடுச்சு. வர்றேன் சுபிம்மா” சுபத்ராவின் பதிலைக் கூடக் கேட்க நேரமில்லாமல் ஹரியுடன் விரைந்தார் ராமநாதன்.

வரவேற்பறையில் அன்றைய கூட்டத்திற்குத் தேவையானவற்றைச் சரி பார்த்துக் கொண்டிருந்த சரணின் காதில் இது விழ, “அம்மா நான் வேணா ஹாஸ்பிட்டல்ல ட்ராப் பண்ணவா?”

“இல்லப்பா... உனக்கும் முக்கியமான மீட்டிங் இருக்குன்னு நேத்தே சொன்னியே. நான் கால் டாக்ஸி பிடிச்சுப் போய்க்கிறேன்”

“மீட்டிங் பத்து மணிக்குத் தான். உங்களை ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டுப் போறதுல எந்த இடைஞ்சலுமில்லை வாங்க” அன்னையைக் காரிலேற்றி தானும் அமர்ந்தவன், அதை லாவகமாக ஓட்ட, அவனின் அன்பில் மனம் நெகிழ்ந்த சுபத்ரா, ‘இவனுக்கு மட்டும் தொழிலில்லையா? எவ்வளவு வேலைகளிருந்தாலும் இந்த மாதிரிச் சின்னச் சின்ன விசயங்களில் மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் தான் இவன் எல்லோரிடமுமிருந்து வேறுபட்டுத் தனியே தெரிகிறான்’

“என்னையே இப்படிப் பார்த்துக்கிறியே சரண். உன் மனைவியை எப்படிப் பார்த்துக்குவ? இப்பப் புரியது என் மகன் தத்தி இல்லைன்னு” என்றவருக்குப் புன்னகையைப் பதிலாகக் கொடுத்தான். இன்று மருத்துவமனையில் சந்திக்கப் போகும் பெண்ணால் பின்னாளில் அவனின் இந்தப் புன்னகை வாடப் போகிறது என்று தெரியாமல் அவனின் கார் மருத்துவமனை நோக்கிப் பறந்தது.

மருத்துவமனை வந்ததும் சுபத்ரா இறங்கிக் கொண்டு, “சரண் காரிலேயே உட்கார்ந்திருக்காமல் உள்ளே வா... மாமாவை நீ பார்க்காமப் போனா அவர் மனசு சங்கடப்படும். என்ன புரிந்ததா?”

“அம்மா நீங்க போங்க... நான் காரைப் பார்க் பண்ணிட்டு வர்றேன்”

“சரி சரி சீக்கிரம் வா...” சொல்லியபடிச் செல்லும் அன்னையைக் கண்டு சரண் தனக்குள் சிரித்தபடிக் காரை அதற்குரிய இடத்தில் நிறுத்தி விட்டு மருத்துவமனைக்குள் நுழைந்தான்.

தன் போக்கில் சென்றவன் கண்ணில் அங்கே நாற்காலியில் கண் மூடி அமர்ந்திருந்த மதிவதனா பட, அவளின் அழகில் கண்ணிமைக்க மறந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். எத்தனையோ பெண்களைக் கடந்து வந்திருந்த போதும் அவளின் அடக்கமான அழகு அவனை ஈர்த்தது. இந்த மாதிரியொரு பெண் மனைவியாக வந்தால் நன்றாக இருக்குமென்று எண்ணியவன், தன் எண்ணம் போகும் திசையறிந்து, ‘ச்சே என்ன இது? ஹாஸ்பிட்டல்ல வச்சுப் ஏதோ ஒரு பெண்ணைப் பார்த்துச் சைட் அடிச்சுக்கிட்டு இருக்கேன்? சரண் வர வர நீ சரியில்லை’ தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்தவன் அன்னையைத் நாடிச் சென்றான்.

ஏனெனில் அவனுக்கென்று சில கொள்கைகள் இருந்தது. அதில் ஒன்று காதலித்துப் பெற்றோரை எதிர்த்துத் திருமணம் செய்வதில் அவனுக்கு உடன்பாடில்லை. அடுத்து மனைவியாக வரும் பெண்ணை மட்டுமே நேசிக்க வேண்டுமென்ற அவனின் உறுதியான முடிவால் இதுவரை எந்தப் பெண்ணையும் அவன் பொருட்படுத்தியதில்லை. அவனிடம் காதல் சொன்னப் பெண்களைக் கூட அந்தக் காரணத்தால் தான் தவிர்த்து வந்தான்.

மீண்டும் அன்னையை வீட்டில் விட்டு விட்டு அலுவலகத்திற்கு வந்து வேலையில் மூழ்கியவன் அதன் பின் அந்தப் பெண்ணைப் பற்றி நினைக்கவில்லை. அப்படி நினைப்பதற்கு ஒன்றுமில்லை என்பதாலோ என்னவோ அவனுக்கும் அது மறந்து போனது. ஆனால் அவளால் தன் வாழ்வின் திசை, தன் இயல்பான குணமெல்லாம் மாறப் போகிறதென்று பாவம்... அந்நேரம் அவனுக்குத் தெரியவில்லை.

PDF தமிழ் .com

## மலர் : 2

வாடியப் பயிர் போல் களைத்துப் போய்ப் படுத்திருந்த தந்தையைப் பார்க்கப் பார்க்க மதிவதனா கண்ணில் கண்ணீர் பெருகியது. மென்மையாய் அவர் கையை எடுத்து தன் கன்னத்தோடு வைத்துக் கொள்ள, மகளின் ஸ்பரிசத்தில் மெல்லக் கண் திறந்தார் ராமகிருஷ்ணன்.

“என்னடா... பயந்துட்டியா? ஒண்ணுமில்லை லேசா நெஞ்சு வலி தான். நீ பயப்படாதே” தனக்காக ஆறுதல் கூறும் தந்தையைக் கண்டு இன்னமும் அவளுக்குக் கண்ணீர் வந்தது.

“அப்பா இனி மேல் நீங்க ரெஸ்ட் எடுத்துக்கோங்க. ஹோட்டல் நிர்வாகத்தை நான் பார்த்துக்கிறேன்”

“நீ எப்படிம்மா... அதுவும் தனியா?”

“அதான் கேசவன் அங்கிள் இருக்கிறாரே அப்புறம் என்ன? இனி நீங்க ஹோட்டலைப் பத்திக் கவலைப்படக் கூடாது”

“என் ஒரே கவலை உன் கல்யாணம் தான் மதிக்குட்டி”

“அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் முதல்ல நீங்க ரெஸ்ட் எடுங்க” அத்துடன் திருமணப் பேச்சிற்கு அவள் முற்றுப்புள்ளி வைக்க, அவரும் மகளின் மனமறிந்து அதைப் பற்றிப் பேசவில்லை.

************************************

“வாங்க மாப்பிள்ளை அம்மா, அப்பா நல்லாயிருக்காங்களா?” மருமகன் ஸ்ரீதரை வரவேற்ற சுபத்ரா,

“பாட்டி...” ஓடிவந்து அவர் காலைக் கட்டிக் கொண்ட மூன்று வயது பேரன் ஆகாஷை ஆசையுடன் தூக்கி அவனை முத்தமிட்டு, “ஆகாஷ் கண்ணா... நல்லாயிருக்கியாச் செல்லம்?”

“அம்மா உங்க கண்ணுக்கு மருமகன், பேரன் மட்டும் தான் தெரிறாங்களா? நீங்க பெத்தப் பொண்ணு நான் உங்க கண்ணுக்குத் தெரியல?” புலம்பியவாறு உள்ளே நுழைந்தாள் அந்த வீட்டின் இளவரசி ஹரிணி. அதற்குள் வைத்தியநாதன், ராமநாதன் வந்துவிட அவர்கள் ஸ்ரீதரிடம் பேசிக் கொண்டிருக்க, அம்மா மகள் இருவரும் சமையலறைக்குச் சென்றனர்.

“ஏண்டித் தெரியல நல்லாத் தெரியுது? அரை மணி நேரத் தொலைவில் இருக்கிறேன்னு தான் பேரு... இந்த அம்மாவைப் பார்க்க இப்பத்தான் நேரம் வந்ததா? கல்யாணமானதும் எங்களையெல்லாம் மறந்துட்ட என்ன?”

“அம்மா எல்லாம் தெரிஞ்ச நீங்களே இப்படிச் சொன்னா எப்படிம்மா? மாமா, அத்தை ரெண்டுப் பேரையும் தனியா விட்டுட்டு வர முடியல. உங்களுக்கே தெரியும் அவங்க ரெண்டும் பேரும் ரொம்பத் தளர்ந்துட்டாங்கன்னு. ஸ்ரீதருக்கும் பிசினெஸ்க்கே நேரம் சரியாயிருக்கு. இப்ப கூடச் சமையல்க்காரம்மாவைப் பெரியவங்களுக்குத் துணைக்கு வச்சுட்டுத் தான் நான் இங்கே வந்திருக்கேன். ப்ளீஸ்ம்மா கோவப்படாதீங்க” கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சிய மகளின் செயலில் நெகிழ்ந்த சுபத்ரா அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டு,

“உன்னிடம் நான் கோபப்பட முடியுமா ஹரிணி? நீ எங்களை மறந்துட்டியோன்னு ஒரு சின்ன ஆதங்கம் தான்”

ஸ்ரீதர் அவன் பெற்றோருக்குத் திருமணமாகிப் பல வருடங்களுக்குப் பின் பிறந்தவன். அவனின் பெற்றோர் பார்ப்பதற்கு அவனுக்குத் தாத்தா, பாட்டி போலிருப்பர். அந்தளவு வயது வித்தியாசம். ஹரிணி சொல்வது போல் தள்ளாத வயதிலிருக்கும் அவர்களுடன் யாரவது ஒருவர் துணையிருக்க வேண்டியக் கட்டாயமிருந்தது. அதனாலேயே ஹரிணியால் நினைத்த பொழுது எங்கும் செல்லமுடியாது. ஆனால் அதையெல்லாம் ஹரிணி பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டாள். இந்தக் காரணத்தினாலேயே ஸ்ரீதருக்கு மனைவியிடத்தில்

PDF தமிழ் .com

இன்னமும் அன்பு கூடியது. அவனின் அன்பில் மகிழ்ந்த ஹரிணிக்கு வீடு தான் சொர்க்கமாக இருந்தது. ஸ்ரீதரும் நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் மனைவி, மகனை வெளியில் கூட்டிச் செல்ல மறப்பதில்லை.

‘ம்ஹும்… என் மகள் போல் பொறுப்பான மருமகள் எனக்கும் கிடைத்தால் நானும் எல்லாப் பொறுப்புகளையும் அவளிடத்தில் ஒப்படைத்து விட்டுக் கொஞ்சம் ஓய்வாக இருக்கலாம். ஆனால் இந்தச் சரண் பையன் வாயைத் திறக்க மாட்டேங்கிறானே? நாமக் கொடுத்து வச்சது அவ்வளவுதான்?’ சுபத்ரா மனதில் எழுந்த ஏக்கம் அவரையுமறியாமல் பெருமூச்சாக வெளிப்பட்டது.

“அம்மா என்ன பெருமூச்செல்லாம் பலமாயிருக்கு? நீங்க விடறப் பெருமூச்சில் நான் பறந்துடப் போறேன்” அம்மாவைக் கிண்டலடித்த ஹரிணி, அவரின் முகத்திலிருந்த வாட்டத்தைக் கண்டு, “என்னம்மா… என்ன விஷயம் …?”

“எல்லாம் சரணைப் பத்தினக் கவலைதான். இன்னமும் கல்யாணத்திற்குப் பச்சைக் கொடிக் காண்பிக்க மாட்டேங்கிறானே. மருமகள் வந்தா அவளிடம் பொறுப்புகளை ஒப்படைச்சுட்டு ரெஸ்ட் எடுக்கலாம்ன்னு பார்த்தா… ம்ஹும்… எனக்கு அந்தக் கொடுப்பினை இல்லைன்னு நினைக்கிறேன்”

“ஆமாம் நானும் வந்ததிலிருந்து பார்த்துட்டிருக்கேன் எங்கே ரெண்டு அண்ணங்களையும் காணோம்?”

“இன்னைக்குச் சண்டேல்ல அதான் இன்னமும் எழுந்துக்கல. போ… ரெண்டுப் பேரையும் எழுப்பிக் கூட்டிட்டு வா”

சரண் அறைக்குள் ஹரிணி நுழைந்த பொழுது, அப்பொழுது தான் அவன் குளித்து முடித்து வெளியில் வந்தான். “ஹேய் ஹரிணி வாட் அச் சர்ப்ரைஸ்? நாங்க இருப்பதெல்லாம் உனக்கு நியாபகமிருக்கா?”

“அண்ணா ரெண்டு நாள் முன் தானே என்னை வந்து பார்த்திங்க? நியாபகம் இருக்கான்னுக் கேட்டா எப்படி?” செல்லமாய்ச் சிணுங்கினாள் ஹரிணி.

“அது நான் தானே உன்னை வந்து பார்த்தேன் நீ எங்களைப் பார்க்க வரலியே அதான் கேட்டேன். சரி விடு ஸ்ரீதர் வந்திருக்காரா?”

“வந்திருக்கார்... நான் போய் ஹரியை எழுப்பிட்டு வர்றேன்”

“இரு இரு நானும் உன் கூட வர்றேன். கும்பகர்ணன் இன்னும் தூங்கிக்கிட்டிருப்பான்”

இருவரும் ஹரியின் அறைக்குச் செல்ல, சரண் சொன்னது போல் அவன் தூங்கிக் கொண்டிருக்க, ஹரிணி பக்கத்திலிருந்த நீர் ஜாடியை எடுத்து அவன் மேல் கவிழ்த்தாள். அதில் பதறியடித்து எழுந்தவன் அங்கே ஹரிணி இருப்பதைக் கண்டு ஆச்சிரியமாய் அவளைப் பார்த்தவன், “ஹரிணி எப்போடா வந்த?”

“நாங்க வந்து நேரமாச்சு கும்பகர்ணா... முதல்ல நீ எழுந்திரு” கிண்டலுடன் கூற, ‘கும்பகர்ணன்’ என்று அவள் கேலி செய்ததில் சிறு வயது நியாபகம் வர ஹரி அவளை அடிக்கத் துரத்த, அதைப் பார்த்துச் சரண் சிரித்துக் கொண்டே கீழே சென்றான்.

அவன் ஸ்ரீதரிடம் நலம் விசாரித்துக் கொண்டிருக்கும் பொழுது, “ஐயையோ யாராவது காப்பாத்துங்களேன்” ஹரிணி கத்திக் கொண்டே கீழே ஓடி வர, அவள் பின்னே ஹரி துரத்திக் கொண்டு வந்தான்.

தங்கை கணவனைப் பார்த்ததும், “அத்தான் நல்லாயிருக்கிங்களா?” சம்பிரதாயமாகக் கேட்டு விட்டு அவன் பதிலை எதிர்பாராமல் தங்கையைத் துரத்திக் கொண்டு ஓட, அதைப் பார்த்து ஆகாஷ் சிரிக்க, அவனைப் பார்த்து ஸ்ரீதர் சிரிக்க... சுபத்ராவுக்குத் தான் பத்திக் கொண்டு வந்தது.

தமிழ் நாவல்

“என்ன பொண்ணோ... பையனோ? மாப்பிள்ளை இருக்கிறாரென்று கொஞ்சம் கூட இங்கிதமில்லாமல் இவர்களை என்ன செய்ய?” சின்ன மகனையும் மகளையும் சலித்துக் கொண்டார்.

“அத்தை ஹரிணியை இப்படிப் பார்க்கும் போது தான் சந்தோசமாயிருக்கு. அங்கே பெரிய மனுசி போல் எல்லா வேலையும் இழுத்துப் போட்டுச் செஞ்சுகிட்டிருப்பா. அவப் பொறுப்பா இருக்கிறதைப் பார்க்கும் போது பெருமையா இருந்தாலும் சில சமயம் சின்னப் பொண்ணைப் போய் இப்படி மாட்டி விட்டுடோமோன்னுத் தோணும். இங்கே வந்தா மட்டும் தான் இப்படிக் குறும்பாயிருக்கா. அவள் சந்தோசமா இருக்கிறதைப் பார்க்கும் போது எனக்கும் ரொம்பச் சந்தோசமாயிருக்கு” ஸ்ரீதரின் பேச்சில் அங்கிருந்த அனைவர் மனமும் நெகிழ்ந்தது.

ஹரிணி வீட்டிற்குக் கிளம்பும் போது சரணிடம் தனியாகப் பேசினாள். “அண்ணா நீங்க கல்யாணத்திற்குச் சம்மதிக்க மாட்டேங்கிறன்னு அம்மாவுக்கு ஒரே வருத்தம். அம்மாவுக்காகவாவது நீங்க சீக்கிரம் சம்மதம் சொல்லுங்க பாவம் அவங்க”

தங்கை திருமணம் என்றதும் அன்று மருத்துவமனையில் பார்த்தப் பெண்ணின் முகம் மின்னலாய் அவன் கண்முன் வந்து போனது. பதில் பேசாமல் ஏதோ நினைவில் நிற்கும் சரணை ஹரிணி ஆச்சிரியமாகப் பார்த்தாள்.

‘நான் கொஞ்ச நாள் நிம்மதியாக இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா? உன் ஸ்ரீதர் போல் என்னை மாட்டி வைக்கத் திட்டம் போடுகிறாயா?’ என்று அவள் காதைப் பிடித்துத் திருகும் அவள் அண்ணன் எங்கே போனான்?

“அண்ணா சம்திங் இஸ் ராங். என்ன பொண்ணை நீங்களே பார்த்திட்டியா? சொல்லுங்கச் சொல்லுங்க”

“போடி அரட்டை... கொஞ்ச நாள் முன் அம்மாவுடன் ஹாஸ்பிட்டல் போகும் போது ஒரு பெண்ணைப் பார்த்தேன். இப்படியொரு பெண் மனைவியாக வந்தால்

நல்லாயிருக்கும்ன்னு நினைத்தேன் அவ்வளவு தான். நீ நினைக்கிற மாதிரி எதுவுமில்லை. என்னைப் பத்தி உனக்குத் தெரியாதா? எனக்கு மனைவியாக வரப் போகிறவளை மட்டுமே காதலிக்கணும்ங்கிற உறுதியோடு இருப்பவன் நான். அதுக்கு முன் எந்த எண்ணமும் என்னைச் சலனப்படுத்தாது"

"ம்... அண்ணா... பெண்ணையே நிமிர்ந்துப் பார்க்காதவன் நீ... ஒரு பெண்ணைச் சைட் அடிச்சிருக்க. ம்ஹும்... இது சரியில்லை..." அண்ணனைக் கிண்டலடித்தவள் போகும் போது அன்னையிடம் சரண் கூறியதையும் சொல்ல மறக்கவில்லை.

"என்ன ஹரிணி சொல்ற... இவ்வளவு பெரிய ஊரில் அவளை எங்கே போய்த் தேடுவேன்?" அவர் கவலைப்பட, "அம்மா அண்ணன் மனசுக்கு நல்லதே நடக்கும்" ஹரிணி அவரைத் தேற்றினாள்.

*********************************

அலுவலக வேளையில் ஹரியை அழைத்த சரண், "ஹரி நான் அடுத்த வாரம் லண்டனுக்குப் பிசினெஸ் டூர் போறேன். திரும்பி வர ஒரு மாதமாகும். அதுவரை நீ இங்கே உள்ளப் பொறுப்புகளைப் பார்த்துக்கோ. ஏதாவது முக்கியமென்றால் எனக்குக் கால் பண்ணு"

"சரண் என்ன திடீர்ன்னு இந்த ப்ரோக்ராம்?"

"இப்ப அங்கே டெக்ஸ்டைல் எக்ஸ்சிபிசன் நடக்குது. அங்கே போய்ப் பார்த்தாத் தான் தெரியும்... என்ன மாதிரியான புது வகை மெஷினரி வந்திருக்கு... வேறு எந்த மாதிரி நம் பிசினசை டெவெலப் பண்ணலாம்... இப்படிப் பல ஐடியா கிடைக்கும். அதும் போகச் சில ஆர்டர்ஸ் எடுக்க வேண்டியிருக்கு அதுக்கு நான் நேரிடையாப் போயே ஆகணும்"

"சரி சரண்... இங்கே எல்லாத்தையும் நான் பார்த்துகிறேன். நீ கவலைப்படாமப் போயிட்டு வா. வேலை வேலைன்னு

இருக்காம கொஞ்சம் ஊரையும் சுத்திப் பாரு”

“அதைச் செய்யாமல் இருப்பேனா என்ன...” கண் சிமிட்டிச் சிரித்த அண்ணனைக் கண்டு, இருகரம் கொண்டு வாயைப் பொத்தி,

“அடப்பாவி உன்னையும் நல்லவன்னு இந்த உலகம் நம்புதே” இழுத்துச் சொன்னவனைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தான் சரண்.

“வேணுமென்றால் அடுத்தச் சான்ஸ் உனக்குத் தருகிறேன். நீ போய் என்ஜாய் பண்ணிட்டு வா”

“அய்யோ சாமி ஆளை விடு” பெரிதாகக் கூம்பிடுப் போட்ட ஹரியைக் கண்டு புன்னகைத்த சரண்,

“அப்புறம் ஹரி ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன் ஹோட்டல் மதி இன்டர் நேசனலில் அவங்க ஊழியர்களுக்கேல்லாம் யூனிபார்ம் தைப்பதற்குக் கொட்டேசன் கேட்டிருந்தாங்க. அதைக் கொடுத்துட்டு, என்ன மாதிரியான மெட்டீரியல் வேணும்ன்னு நம்மக் கிட்ட உள்ளதைக் காண்பித்துக் கேட்டுவிட்டு வா. ஒவ்வொரு மெட்டீரியலுக்கும் தனித்தனியாக் கொட்டேசன் போட்டு எடுத்துட்டுப் போ. அப்பத்தான் அவங்களுக்குக் குழப்பம் வராது. நானே போகலாம்ன்னு தான் இருந்தேன். ஆனால் இடையில் இந்த ப்ரோக்ராம் வந்ததால் போக முடியல. இந்த ஒரு வாரம் என் வேலைச் செய்து முடிக்கவே நேரமிருக்காது. ப்ளீஸ் ஹரி... உன்னால் முடியும் தானே?”

“சரண் என்ன இது...? ப்ளீஸ் எல்லாம் சொல்லிட்டு... போயிட்டு வாடான்னாப் போயிட்டு வரப் போறேன். சரி நீ வேலையைப் பார். நான் கிளம்பறேன்” சரணிடம் விடைப்பெற்று வெளியில் வந்த ஹரி, நாளை முதல் வேலையாக ஹோட்டல் மதிக்குச் செல்ல வேண்டுமென்று மனதில் குறித்துக் கொண்டான்.

****************************************

மருத்துவமனையிலிருந்து வந்த பின் ராமகிருஷ்ணனுக்குத் தேவையானதைச் செய்ய நம்பகமான வேலையாளை வைத்து விட்டு, மதிவதனா தங்கள் நட்சத்திர விடுதிக்குக் கிளம்பினாள். தந்தையின் உதவியாளர் கேசவனிடம் எல்லா விவரங்களையும் கேட்டறிந்தவள், அதன் பின் தன் வேலையில் மூழ்கிப் போனாள்.

அப்பொழுதுத் தொலைப்பேசி அழைக்கவும் அதையெடுத்துக் காதில் வைக்க, "மேடம்... உங்களைப் பார்க்க ஹரி டெக்ஸ்டைல்ஸ்லிருந்து வந்திருக்காங்க" வரவேற்பிலிருந்து மாலினி பேசினாள்.

"மாலினி இன்னைக்கு அவங்களுக்கு அப்பாயின்மெண்ட் கொடுத்திருக்கிங்களா?"

"ஒன் மினிட் மேடம்..." என்றவள், "எஸ் மேடம்..."

"சரி... அவங்களை வரச் சொல்லுங்க" என்றவள் மறுபடியும் தன் வேலையில் ஆழ்ந்தாள்.

"எக்ஸ்கியூஸ்மி..." கம்பீரமான குரல் கேட்டு வியப்புற்றவள்,

"எஸ்..." அவள் அழைத்ததும், குரலுக்கேற்றக் கம்பீரத்துடன் உள்ளே நுழைந்த ஹரியைக் கண்டு மதிவதனா மதி மயங்கித்தான் போனாள்.

## மலர் : 3

“எக்ஸ்க்யூஸ்மி...” என்றபடி உள்ளே வந்தவனைக் கண்டு மதிவதனாவின் இதயம் தாறுமாறாகத் துடிக்க ஆரம்பிக்க, படப்படவென இமைகள் படப்படக்க, இதயமோ டொம் டொமென்று சத்தத்துடன் மத்தளம் வாசிக்க, அவளின் மனமோ வந்தவனிடத்தில் மயங்கி நின்றது. காதல் மலர்வது பூ மலர்வது போல் எந்த நிமிடம் எப்பொழுது மலருமென்று யாருக்கும் தெரியாது. அது போல் அவளும் அவனைக் கண்டதும் காதல் கொண்டாள்.

“ஹலோ ஐயம் ஹரிஹரன்... ப்ரம் ஹரி டெக்ஸ்டைல்ஸ்” வந்தவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள, அவன் குரலில் சுயஉணர்வு அடைந்தவள்,

“ப்ளீஸ் உட்காருங்க...” அவன் அமர்ந்ததும், அவன் வந்ததற்கான காரணத்தைக் கேட்டறிந்தவள் அவனிடம் இருந்த கொட்டேஷனை வாங்கிப் பார்த்தாள். மிகவும் நேர்த்தியுடன் சிரத்தையாகத் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டிருந்த கொட்டேசன் அவளை மிகவும் கவர்ந்தது.

“தேங்க்ஸ் மிஸ்டர். ஹரி... அப்பாவிடம் காட்டிவிட்டுத் தான் மேற்கொண்டு பேச முடியும். எந்த ஒரு விசயமும் அவர் பார்த்துத் தான் முடிவு பண்ணனும். அப்பாவிற்கு ஓகேன்னா நாங்களே உங்களைக் காண்டாக்ட் பண்றோம்”

“ரொம்பச் சந்தோசம்... எங்களுக்குச் சாதகமான பதிலைத் தருவிங்கன்னு நம்புகிறேன் பை மிஸ்...”

“ஓகே போயிட்டு வாங்க...” அவன் கையைப் பற்றிக் குலுக்கியவள், தன்னுள் ஏற்பட்ட சலனம் போல் அவனிடத்தில் ஏதும் ஏற்பட்டிருக்கிறதா? என்று கூர்ந்து அவனைப் பார்க்க, ம்ஹும்... அந்த மாதிரியான சலனம் ஏற்பட்டதற்கான அறிகுறி ஏதும் அவனிடத்திலில்லை. அதைக் கண்டு மனம் வலிப்பது போன்ற உணர்வுத் தோன்ற அவன் சென்றதும் கண்களை இறுக மூடியவள் நாற்காலியில் அப்படியே சரிந்தாள்.

மாலையில் வீடு திரும்பிய மகள் முகத்தில் சிறிதளவுச் சோர்வு இருந்தாலும் அதையெல்லாம் மீறி அவள் முகம் தனிக்களையுடன் பிரகாசிப்பதாய் தோன்றியது ராமகிருஷ்ணனுக்கு.

“என்ன மதிக்குட்டி ரொம்பச் சந்தோசமாயிருக்கிற மாதிரியிருக்கு ....?” தந்தையின் கேலியில் முகம் சிவந்தவள், அப்படியா வெளிப்படையாய் தன் மன மகிழ்ச்சியைக் காட்டினோமென்று தலையைக் குனிந்து உதடு கடித்துத் தன் உணர்வை அடக்கினாள்.

“முதன் முதலாய் வேலைக்குப் போனேன் இல்லையா அதுதான் காரணம். ஆமாம் நீங்க ஒழுங்கா நேரா நேரத்திற்குச் சாப்பிடிங்களா? டேப்லட் போட்டிங்களா?” பாசமிகு மகளாய் தந்தையை விசாரிக்க,

“ம்

அதெல்லாம் போட்டு விட்டேன் மதிக்குட்டி. அப்புறம் நம் ஹோட்டலில் என்ன என்ன வேலைகள் பார்த்தாய்?”

மதிவதனா தான் பார்த்த அத்தனை வேலைகளையும் சொன்னவள், ஹரிஹரன் கொடுத்து விட்டுச் சென்றிருந்த கொட்டேசன் அடங்கிய பைலை அவரிடம் நீட்டினாள். அதை வாங்கிப் பார்த்தவர், “ஆமாம் மதி நான்தான் வரச் சொல்லியிருந்தேன். ரொம்ப நல்ல கம்பெனி...” அதில் ஒன்றைத் தேர்வு செய்து மதிவதனாவிடம் தந்தவர், “இந்த மெட்டீரியல் நல்லாயிருக்கு. ப்ரைசும் ரீசனபிளா இருக்கு. நாளைக்குக் கேசவனிடம் இதைக் கொடுத்து அவங்கக்கிட்ட ஓகே சொல்லிடச் சொல்லு”

அந்த நேரம் பார்த்து ராமகிருஷ்ணனின் நண்பர் ரத்தினம் வர, “அடடே ரத்தினம் வாப்பா வா... பார்த்து எத்தனை நாளாச்சு? இப்படி உடம்பு சரியில்லாமல் இருந்தால் தான் பார்க்க வருவியா?”

“என்ன செய்ய ராமா... நாமப் பார்க்கிற தொழில் நம்மளை அங்கே இங்கே நகர விட மாட்டேங்குதே. சரி அதை விடு...

“மதி… ரத்தினத்திற்குச் சாப்பிட ஏதும் கொண்டு வாம்மா, அப்படியே ஸ்ட்ராங் காபிக் கொண்டு வா. அவனுக்கு அதுதான் பிடிக்கும்” தன் தந்தை நண்பருடன் தனித்துப் பேச விரும்புகிறார் என்று புரிந்து உள்ளே சென்றாள் மதிவதனா.

“எல்லாம் மதியைப் பத்தினக் கவலைதான் ரத்தினம். எனக்கடுத்து அவளுக்குன்னு யாரிருக்கா? நான் இருக்கும்போதே அவளை நல்லயிடத்தில் கட்டிக் கொடுத்துடணும்ன்னு நினைக்கிறேன்”

“பேச்சைப் பாரு உதைபடப் போறப் படுவா… மதியின் பிள்ளைகள் கல்யாணத்தையும் பார்த்து விட்டுத்தான் நீ போவாய் பாரு. அப்புறம் நான் வந்தது உன்னைப் பார்க்க மட்டுமல்ல… மதிக்கு வரனையும் சேர்த்துத் தான் கொண்டு வந்திருக்கேன்”

“அப்படியா ரொம்பச் சந்தோசம் ரத்தினம். மாப்பிள்ளை யாரு? என்ன பண்றாரு? பேமிலி எப்படி?”

“ராமா ஒவ்வொண்ணாக் கேளு பையன் பேரு ஹரிசரண். நம்ம ஹரி டெக்ஸ் டைல்ஸ் வச்சிருக்காரே ராமநாதன் அவரோட பையன். இவன் தான் மூத்தவன். இவனுக்கு அடுத்து ஒரு பையன், ஒரு பொண்ணு. பொண்ணுக் கல்யாணமாகி இங்கே தான் இருக்கிறாள். ராமநாதன் வைப் சுபத்ரா தங்கமான குணம். நம்ம மதியைத் தன் பெண் போல் நல்லாப் பார்த்துக்குவாங்க. பிக்கல் பிடுங்கலில்லை. உனக்கு ஒரு நல்ல மகனா அந்தப் பையன் இருப்பான். நல்ல குணமும் கூட”

“இப்பத்தான் அவங்கக் கிட்ட பிசினெஸ் டீல் வைக்கிறதைப் பத்தி மதி கூடப் பேசிக்கிட்டிருந்தேன். நீ என்னடானா அவங்க வீட்டுப் பையனையே மாப்பிள்ளையாக் கொண்டு வந்திருக்க ரத்தினம்… ரொம்ப நன்றிப்பா. நாளைக்குக் கேசவன் கிட்ட மதியோட போட்டோ ஜாதகம் எல்லாம் கொடுத்துவிடறேன். மேற்கொண்டு பேச வேண்டியதை நீயே பேசு ரத்தினம்”

“அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். மதியும் என் பொண்ணு மாதிரி தான்” சொன்னது போல் ரத்தினம் ராமநாதனிடம் மதிவதனாவின் ஜாதகம் மற்றும் புகைப்படத்தைக் கொடுத்தார். ராமநாதனும் ரத்தினத்திற்கு நண்பர் தான்.

ராமநாதன் தன் மனைவியிடத்திலும், தந்தையிடமும் மதிவதனாவைப் பற்றிச் சொல்லி சரணிடம் சம்மதம் கேட்கச் சொல்ல, புகைப்படம் வாங்கிப் பார்த்தச் சுபத்ரா, மதிவதனாவின் அழகில் மயங்கி, அவள் தான் தனக்கு மருமகள் என்று முடிவே செய்துவிட்டார்.

“என்னங்கப் பொண்ணு அழகா இருக்காள்ல. இந்த மாதிரி அழகுப் பொண்ணு அமையத்தான் இவ்வளவு நாள் அவன் கல்யாணம் வேண்டாம்ன்னுத் தள்ளிப் போட்டுக்கிட்டு இருந்தானோ என்னமோ? இந்தத் தடவை எப்படியும் கல்யாணத்திற்கு ஒத்துக்குவான்னு நினைக்கிறேன்”

“ராமனாதா... பொண்ணுச் சரணுக்கு ஏத்தவதான். அவன் சம்மதிச்சான்னா நீ இந்தச் சம்பந்தத்தை விட்டுடாதே” தன் சம்மதத்தைத் தெரிவித்தார் வைத்தியநாதன்.

அந்த நேரம் பார்த்து ஹரிஹரன் வீட்டினுள் நுழைய, “எங்கேடாச் சரணைக் காணோம்? நீ மட்டும் வர்ற”

“அம்மா வீட்டுக்கு வந்தவனை முதல்ல கவனிங்க... அப்புறம் உங்க செல்லப் பிள்ளையைத் தேடுங்க” கிண்டலடித்தபடி அவன் சோபாவில் அமர, அதற்கு வைத்தியநாதன், “வேற எதுக்கு உங்க அம்மா செல்ல மகனைத் தேடப் போறா? எல்லாம் கல்யாணப் பந்தத்தில் சிக்க வைக்கத்தான்”

“அப்படியாம்மா... பொண்ணு யாரு? போட்டோ இருக்கா... கொடுங்கக் கொடுங்க...”

“ஏண்டாக் கல்யாணம் உன் அண்ணனுக்கா...? இல்லை உனக்கா...? பறக்கிறதைப் பாரு” அவன் தோளில் செல்லமாய் அடித்தவாறு மதிவதனாவின் போட்டோவை ஹரியிடம் காண்பித்தார்.

“அம்மா இவங்களா அண்ணி… காலையில் தான் இவங்களை மீட் பண்ணினேன். போட்டோவை விட நேரில் இன்னும் அழகாயிருப்பாங்க. நம்மச் சரணுக்கு ஏத்த ஜோடி தான்” ஹரி சொல்லும் போதே சரணும் வந்துவிட, அவனிடம் ஹரி மதிவதனாவின் புகைப்படத்தைக் கையில் திணித்தான்.

ஒன்றும் புரியாமல் பார்த்தச் சரணிடம் சுபத்ரா, “சரண் இந்தப் பெண் தான் உனக்குப் பார்த்திருப்பவள். உனக்குப் பிடித்திருந்தால்…. இல்லையில்லை… உனக்கு நிச்சயம் பிடிக்கும். போட்டோ பார்த்துட்டுச் சொல்லு”

சுவாரசியம் இல்லாமல் புகைப்படத்தைப் பார்த்தச் சரண் சட்டென்று துள்ளி எழுந்தான். அவன் கண்கள் நம்ப முடியாமல் புகைப்படத்தை உற்றுப் பார்த்தது. அதிசயம் ஆனால் உண்மை… இது கடவுளின் செயல் என்பதா? இல்லை அவன் அதிர்ஷ்டம் என்பதா? எந்தப் பெண் மாதிரி மனைவி வேண்டுமென்று நினைத்தானோ அவளே அவன் மனைவியாக…! அவனால் நம்பமுடியவில்லை…! கண்ணிமைக்க மறந்து புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சரணின் மாற்றத்தை உணர்ந்த சுபத்ரா அவனைச் சீண்டினார், “என்ன சரண்… இந்தப் பெண்ணையும் உனக்குப் பிடிக்கவில்லையா? சரி விடு… நான் வேறப் பெண் பார்க்கிறேன்” அம்மாவின் வார்த்தையிலிருந்த கிண்டல் அவனுக்குப் புரிய,

“அம்மா இந்தக் கிண்டல் தானே வேண்டாம்ங்கிறது. எனக்குப் பெண்ணை ரொம்பப் பிடித்திருக்கிறது போதுமா…? இப்ப உங்களுக்குத் திருப்தியா?'

“ரொம்பச் சந்தோசம் சரண்…” மகிழ்ச்சியுடன் சொன்னவர், அதன் பின் யோசனையில் முகம் சுருங்க, “சரண் அன்று ஹாஸ்பிட்டல்ல நீ ஏதோவொரு பெண்ணைப் பார்த்ததாய் ஹரிணி சொன்னாளே. அவளை உனக்குப் பிடித்த மாதிரியும் சொன்னாளே”

“அதற்குள் அந்த முந்திரிக்கொட்டை உங்கக்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டாளா?”

“சரண் அப்போ நீ ஹாஸ்பிட்டலுக்கு மாமாவைப் பார்க்கப் போகல... சைட் அடிக்கத் தான் போனியா? அம்மா கூடத் துணைக்குப் போறியே அவங்க மேல ரொம்பப் பாசமோன்னுல்ல நான் நினைச்சேன்” ஹரி, சரணைக் கிண்டலடிக்க, “போடா...” அவனை ரெண்டு அடி அடித்த சரண், “அம்மா உங்களுக்கு ஒண்ணுத் தெரியுமா? அன்னைக்கு நான் பார்த்தப் பெண்ணும்... இந்தப் பெண்ணும் ஒண்ணுதான். உங்களுக்குப் பெண் பிடித்திருக்கிறதா?'

“ஏன் எனக்குப் பிடிக்கவில்லைன்னா நீ வேண்டாம்ன்னு சொல்லிவிடுவாயா என்ன?”

“நிச்சயமா... எனக்கு இந்தப் பெண் மாதிரி நல்லாக் கேட்டுக்கோங்க இந்தப் பெண் மாதிரி ஒரு பெண் மனைவியாக வந்தால் நல்லாயிருக்கும்ன்னு நினைத்தேனே தவிர இந்தப் பெண்ணேதான் வேண்டும்ன்னு நினைக்கவில்லை. எனக்கு எப்பவும் நீங்க தான் முக்கியம். அழகான பொருளை நாம் ரசித்துப் பார்ப்பதில்லையா? அது போல் தான் இதுவும்... வேறு ஒண்ணுமில்லை. உங்களுக்குப் பிடிக்கவில்லைன்னா வேறு பெண் பாருங்க. எனக்கு எந்த வருத்தமுமில்லை. திருமணத்திற்கு முன் மனதில் எந்த ஆசையும் நான் வளர்த்துக் கொள்வதில்லைன்னு உங்களுக்குத் தெரியாதா என்ன?” உறுதியுடன் கூறிய மூத்த மகனை வாஞ்சனையுடன் அணைத்துக் கொண்டார் சுபத்ரா.

“ஹரி பார்த்தியாடா என் மகனை... அவனுக்கு எப்பவும் நான்தான் முக்கியம். இப்பப் புரிஞ்சிச்சா... அவன் ஏன் எனக்குச் செல்ல மகன்னு...!”

“போதும் அம்மா முடியல உங்க பாச மழையில் நனைஞ்சு எனக்கு ஜூரமே வந்துடும் போலிருக்கே” போலியாக நடுங்கினான் ஹரி.

சுபத்ரா அவனை முறைத்தவர் சரணிடம் திரும்பி, “சரண் பெண் வீட்டில் மேற்கொண்டு பேசவா? அப்படியே பெண் பார்க்க உனக்குத் தோதுப்படும் நாளையும் சொல்லு”

“எல்லாம் சரி தான்ம்மா நீங்க இன்னும் பெண்ணின் பேரைச் சொல்லவே இல்லையே?”

மகனின் ஆர்வம் கண்டு மனதுக்குள் சிரித்தவர், “பார்த்தியாப் பேசிட்டிருந்ததில் மறந்தே போயிட்டேன். பொண்ணுப் பேரு மதிவதனா”

‘மதிவதனா… பேரும் நல்லாத்தான் இருக்கு’ மனதில் சொல்லிக் கொண்டான் சரண்.

“சரண் உனக்கு ஒத்து வர்ற நாளை சொன்னா”

“அம்மா எனக்குப் பெண்ணைப் பிடிச்சிருக்கு. மேற்கொண்டு நீங்க பேசுங்க இல்லை பையன் வந்தாத்தான் மேற்கொண்டு பேசுவோம்ன்னு அவங்கச் சொன்னா ஒரு மாதம் பொறுத்துக்கச் சொல்லுங்க”

“ஏண்டா எதுக்கு ஒரு மாதம்?” சுபத்ரா கோபத்துடன் கேட்க சரணோ தன் கையை விமானம் பறப்பது போல் காட்டியவன், ‘ஷ… ஷ…’ என்று சத்தம் எழுப்ப, அவனின் செயலில் அதிர்ந்துப் பார்த்தச் சுபத்ராவைக் கொஞ்சியவன், “ஒரு மாதம் தான்ம்மா… நம்மப் பிசினெஸ்க்காகத் தானே போறேன். ப்ளீஸ் அம்மா…”

“அதானே பார்த்தேன் என்னடா நம்மப் பிள்ளை நல்ல பிள்ளையாய் கல்யாணத்திற்குச் சம்மதிக்கிறானேன்னு நினைத்தேன். இது தான் விசயமா? ஏண்டா நான் உன் வாழ்க்கையைப் பத்திப் பேசிக்கிட்டிருக்கேன். நீ பிசினெஸ் பத்திப் பேசற”

“அம்மா நான் தான் ஓகே சொல்லிட்டேனே நீங்களும் அப்பாவும் போய்ப் பார்த்துப் பேசி முடிங்க” உறுதியான குரலில் அவன் சொல்லியது கேட்டு சுபத்ராவால் மேற்கொண்டு பேச முடியவில்லை.

அவருக்கு மகனைப் பற்றித் தெரியும். ஒரு முடிவு எடுத்துவிட்டால் எடுத்தது எடுத்ததுதான். கணவனிடம் சொல்லிப் பார்த்தார். அவரும் மகனுக்கு ஒத்து ஊதவே சுபத்ராவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ரத்தினம் மூலமாக ராமகிருஷ்ணனுக்குத் தாங்கள் பெண் பார்க்க வருவதாகக் கூறித் தகவல் தெரிவிக்கச் சொன்னவர் அவரிடம் சரணின் புகைப்படம் மற்றும் ஜாதகத்தைக் கொடுத்து அனுப்பினார். சரண் வெளிநாடு சென்றிருப்பதையும் சொல்ல மறக்கவில்லை.

சுபத்ரா சரணின் திருமண விவரத்தை மகளிடம் பகிர்ந்து கொள்ள, அதைக் கேட்டு ஹரிணி மகிழ்ச்சியில் துள்ளினாள். “நான்தான் அப்பவே சொன்னேனேம்மா. அண்ணா மனசுக்கு நல்லதே நடக்குமென்று. இப்பப் பாருங்க அண்ணா பார்த்தப் பெண்ணும் இந்தப் பெண்ணும் ஒண்ணுதான்னு கேட்கும்போது எவ்வளவு சந்தோசமாயிருக்குத் தெரியுமா?”

“ஆமாம் ஹரிணி நான் கூட இவன் கல்யாணமே பண்ணிக்காம இருந்து விடுவானோன்னு பயந்தேன். நல்லவேளை சம்மதிச்சுட்டான். அப்புறம் ஹரிணி... எல்லாம் பேசி முடிவானதும் உன் மாமனார் மாமியாருக்கு நாங்க நேரில் வந்து சொல்றோம்” மேலும் ஹரிணியின் நலம் விசாரித்து விட்டு வைத்தவரின் மனம் மகிழ்ச்சியில் நிறைந்திருந்தது.

ராமகிருஷ்ணன் சரணின் புகைப்படமிருந்த கவரை மதிவதனாவிடம் கொடுத்தவர், “மதி இந்தக் கவரைப் பிரிச்சுப் பாரு...”

“என்னப்பா இது...?” கேட்டுக் கொண்டே கவரைப் பிரித்தவள் அதில் ஒரு இளைஞன் புகைப்படம் இருப்பதைக் கண்டு திகைப்புற்றுத் தன் தந்தையைக் கேள்வியுடன் நோக்கினாள்.

“உனக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை... பிடிச்சிருக்கா... மதிக்குட்டி!” கறுப்பாக இருந்தாலும் கம்பீரமாக அதேசமயம் அழகாக இருந்தவனைக் கண்டு அவள் மனதில் எந்தச்

சலனமும் தோன்றவில்லை. எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் கல்லையும் மண்ணையும் பார்ப்பது போல் அவள் வெறித்துப் பார்க்க, அவளின் மனதை அறியாத சரணோ மகிழ்ச்சியுடன் விமானமேறி லண்டனுக்குப் பறந்தான்.

## மலர் : 4

“பேரு ஹரிசரண்... நம்மக் கிட்ட கொட்டேஷன் கொடுத்தாங்களே ஹரி டெக்ஸ்டைல்ஸ்... அவங்க வீட்டுப் பையன்” ராமகிருஷ்ணன் அதன் பின் சொன்னது எதுவும் மதியின் காதில் விழவில்லை.

‘என்ன இது? யாரோ ஒருவன் போட்டோவைக் காண்பிக்கிறார் என்று பார்த்தால் என் ஹரியின் அண்ணன் போட்டோவா? என் ஹரி... இதை நான் அப்பாவிடம் சொல்ல முடியுமா? ஐயோ... என் நிலைமை யாருக்கும் வரக் கூடாது. கடவுளே! என்னை இந்தக் இக்கட்டிலிருந்து காப்பாற்ற மாட்டாயா?’ அவளின் மனம் ஊமையாக அழுதது.

“மதிக்குட்டி பையனை உனக்குப் பிடிச்சிருக்கா? எனக்காகச் சரின்னுச் சொல்ல வேணாம். உனக்குப் பிடித்தால் மட்டுமே நான் மேற்கொண்டு பேசுகிறேன்”

மதிவதனா தந்தையின் முகத்தைப் பார்த்தாள் அவர் வாய் அப்படிச் சொன்னாலும், அவரின் கண்கள் பரிதவிப்புடன் அவளின் பதிலை எதிர்பார்த்து ஏக்கத்துடன் காத்திருந்தது. மதிவதனா என்றுமே தனக்காக யோசிக்காதவள்... என்றுமே அப்பா தான் அவளுக்கு முதலில்... அதிலும் தந்தையின் உடல்நலம் சரியில்லாத இந்த நேரத்தில் அவர் மனதை நோகடிக்க அவளுக்கு விருப்பமில்லை.

தன் ஆசையை... காதலை... அடி மனதில் போட்டு மூடிப் புதைத்தவள் வலிய வரவழைத்த புன்னகையுடன், “உங்க இஷ்டம்ப்பா”

“இப்பத்தான் மதிக்குட்டி எனக்குச் சந்தோசமாயிருக்கு. எங்கே நீ மறுத்துவிடுவியோன்னுப் பயந்தேன்?” சிறு பிள்ளையாய் குதூகலித்தவரைக் கண்டு இவருக்காக எதையும் செய்யலாம்... எதையும் இழக்கலாமென்று தோன்றியது. தான் எடுத்த முடிவு சரியென்றே தோன்றியது அவளுக்கு.

“மதி ஒரு விஷயம்… பையன் லண்டனுக்குப் போயிருக்கானாம். வர ஒரு மாதமாகுமாம். அதனால் அவங்க அப்பா அம்மா மட்டும் வந்து உறுதிப் பண்ணிட்டுப் போறோம்ன்னுச் சொல்றாங்க. நீ என்னடாச் சொல்ற?”

நல்லவேளை சரண் இங்கில்லை என்றறிந்தவள் நிம்மதிப் பெருமூச்சுப் விட்டு, “என்னப்பா இது? மாப்பிள்ளை இல்லாமல் உறுதிப் பண்ணுவதா? அவர் வந்த பின் உறுதிப் பண்ணலாமென்று சொல்லிடுங்க” அவர்களின் வரவைத் தள்ளிப் போட எண்ணினாள்.

“மாப்பிள்ளையை நேரில் பார்க்கணும்ன்னுச் சொல் மதிக்குட்டி… எதற்கு இப்படிச் சுற்றி வளைத்துப் பேசுகிறாய்?” மகளைக் கிண்டலடித்தவர், “நீ சொல்வது போல் மாப்பிள்ளை வீட்டில் சொல்லிவிடுகிறேன். இப்போ சந்தோசமா மதி?” மகிழ்ச்சியுடன் கேட்டத் தந்தையைக் கண்டு மனம் நெகிழப் பதில் பேச முடியாமல் வெறுமனே தலையாட்டிவிட்டு தன்னறைக்கு வந்த மதிவதனா கதறியழுதாள்.

எல்லோரும் காதலித்தவனையே திருமணம் செய்து கொள்வதில்லை தான். அது போல் எண்ணி மனதைத் தேற்றிக் கொள்ளலாமென்றால்… என்ன சோதனை இது? தன் மனங்கவர்ந்தவன் அண்ணனையே மணக்க வேண்டியுள்ளது. தன் துர்பாக்கிய நிலை யாருக்கும் வரக் கூடாது என்று கதறியழுதவளுக்கு இதற்குத் தீர்வு என்னவென்று தான் தெரியவில்லை.

காலம் தாமதிக்காமல் ராமகிருஷ்ணன், ராமநாதனுக்குத் தகவல் தெரிவித்தார். அதாவது சரண் வந்தவுடன் நேரே நிச்சயம் வைத்துக் கொள்ளலாம்… ஏனெனில் சிறியவர்கள் ஒருவருக்கொருவர் நேரில் பார்த்துச் சம்மதம் சொல்ல விரும்புவார்கள் என்றவர் இந்த ஒரு மாதத்தில் எந்த முடிவும் மாறிவிடப் போவதில்லை, தனக்குச் சரண் தான் மருமகன் என்று தான் முடிவு செய்து விட்டதாகக் கூற, ராமநாதனுக்கும் சுபத்ராவுக்கும் அவர் சொல்வது சரியென்றே தோன்றியது. சரண் இல்லாமல் பெண்

பார்க்கப் போவது சுபத்ராவுக்கு அவ்வளவாகப் பிடித்தமில்லை. அதனால் ராமகிருஷ்ணன் சொல்லவும் சந்தோசத்துடன் சம்மதித்தவர், மதிவதனா தான் தங்கள் வீட்டு மருமகள் என்ற உறுதிமொழியும் கொடுத்தார்.

ஒரு மாதம் என்பது வேகமாகச் சென்றது என்று கூடச் சொல்லலாம். ராமகிருஷ்ணன் இந்த ஒரு மாதக் காலமாகத் தன் மகளைக் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறார். அவளிடம் ஏதோ சரியில்லை என்று தோன்றியது. இந்தத் திருமணம் பேசியதிலிருந்து அவளிடம் முன்பிருந்த கலகலப்பில்லை. முகத்தில் எந்நேரமும் யோசனையும் இறுக்கமும் இருந்தது கண்டு பயந்துப் போய் நேரிடையாக மகளிடத்தில் கேட்டுவிட்டார்.

“மதிக்குட்டி... உனக்கு என்ன பிரச்சினை? ஏன் இப்படியிருக்க?”

“ஒண்ணுமில்லை கொஞ்சம் வேலை அதிகம் அதான்” அதற்கு மேல் பேசாமல் எழுந்து தன்னறைக்குச் சென்ற மகளைப் பார்த்தவருக்கு, ஒன்றும் புரியவில்லை. ஒருவேளை தன்னை விட்டுப் பிரிவதற்கு மகள் கவலைப்படுகிறாளோ என்று யோசித்தவர், நிச்சயம் அதுவாகத் தான் இருக்குமென்று தன் மனதைச் சமாதானம் செய்து கொண்டார். இந்த நேரத்தில் தான் சரண் லண்டனிலிருந்து வந்து விட்டதாகத் தகவல் வர, இரு வீட்டாரும் நிச்சய வேலையில் இறங்கினர்.

ராமகிருஷ்ணன் மதியை அழைத்து, “சரண் லண்டனிலிருந்து வந்து விட்டாராம். வருகிற ஆறாம் தேதி நிச்சயம் வைத்துக் கொள்ளலாமென்று மாப்பிள்ளை வீட்டில் சொல்லியிருக்காங்க. மதி... நிச்சயத்திற்கு ஏதும் தேவைப்பட்டால் வாங்கிக் கொள். பட்டு, நகை எது வேணும்னாலும் கடைக்குப் போய் வாங்கிக் கொள். கடைக்காரர் நமக்குத் தெரிந்தவர் தான்”

நிச்சய விஷயம் கேள்விப்பட்டால் மகள் வெட்கப்பட்டு நாணுவாள் அவளின் வெட்கத்தை, மகிழ்ச்சியைப் பார்க்க வேண்டுமென்று எண்ணியவருக்கு மதியின் திகைத்த

முகம் அவர்க்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அவரறிந்த மதி இப்படிப்பட்டவள் இல்லையே என்ற எண்ணம் மனதை உறுத்த, ஒன்றும் பேசாமல் மதியின் கையைப் பிடித்துத் தன்னறைக்கு இழுத்துச் சென்றவர், அவரது அறையிலிருந்த அலமாரி ஒன்றைத் திறந்தார்.

“மதி உன்னிடம் ஏதோ சரியில்லைன்னு எனக்குத் தோணுது. இந்த நிச்சயத்தை நிறுத்தி எல்லார் முன்பும் என்னைத் தலைக்குனிய வைத்து விடாதே”

இதைக் கேட்டதும் மதியின் கண்கள் பளிச்சிட்டதோ... அதை உணர்ந்தவராய் அவர் மகளின் கையை எடுத்துத் தன் கை மேல் வைத்து, அலமாரியின் உட்புறத்தைக் காண்பித்து, “இதோ இது உன் அம்மா புகைப்படம்... இவள் முன்னிலையில் எனக்கு ஒரு சத்தியம் பண்ணிக் கொடு. இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதமென்று சொல்”

மதியோ தந்தையின் சொல் எதையும் காதில் வாங்காதவளாய், தாயின் புகைப்படத்தைப் புதிதாய்ப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருக்க, அவளின் கண்களிலிருந்து கண்ணீர் தாரைத் தாரையாக வழிந்தது. மகளின் கண்ணீரைக் கண்டதும் அவரால் தாங்க முடியவில்லை. அவளைத் தன்னோடு சேர்த்து ஆறுதலாக அணைத்துக் கொண்டவர்,

“உன் அம்மா போட்டோ பார்த்து நீ இப்படி அழுவதால் தான் வீட்டில் எங்கும் அவள் போட்டோவை மாட்டி வைக்கவில்லை. இப்பொழுதும் உன்னை இங்கே ஏன் அழைத்து வந்தேன் தெரியுமா? முன்போல் நீயில்லை. இந்தத் திருமணத்தில் உனக்கு இஷ்டம் இல்லையோன்னு எனக்குத் தோணுது. அம்மாடி மதிக்குட்டி நீ சரணைத் திருமணம் செய்து கொள்கிறேன்னு எனக்குச் சத்தியம் செய்து தா”

“அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை நா... நான்... சரணைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறேன்” அவரின் கை மேல் சத்தியம் செய்தவள் அவர் தோளில் சாய்ந்து அழ

ஆரம்பிக்க, மகளின் செயலில் அவர் மனம் நிம்மதியுற, அவளின் தலையை ஆறுதலாக வருடி விட்டவர்,

“மதிக்குட்டி உன் அம்மா மிகவும் பொறுமைசாலி. அவளைப் போல் நீயும் பொறுமையைக் கடைப்பிடித்துப் போகிற வீட்டில் எந்தக் குறையிருந்தாலும் அதை நிறையாக மாற்றி மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும். எனக்காக இதை நீ செய்வாயா?” சரியென்பது போல் தலையசைத்த மதி தந்தையின் மடியில் படுத்து வெகுநேரம் அழுது கொண்டிருக்க, அவருக்கோ அவளை எப்படிச் சமாதானம் செய்வதென்று தெரியவில்லை.

லண்டனிலிருந்து திரும்பி வந்த சரணுக்கு அலுவலக வேலைச் செய்யவே நேரம் சரியாகயிருந்தது. இதில் அவன் எங்கே நிச்சய வேலையைச் செய்ய? அதனால் நிச்சயத்தின் எல்லாப் பொறுப்புகளையும் பெற்றோரிடம் விட்டு விட்டு தன் வேலைகளில் மூழ்கி விட்டான். அப்படி அவன் வேலையில் மூழ்கியிருக்கும் போது தான் அவனின் கைப்பேசி அழைத்தது. அதில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்தவன் அது தெரியாத எண்ணாக இருக்கவும் யோசனையுடன் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன், மறுமுனையில் ஒலித்த குரல் கேட்டு முதலில் மகிழ்ந்தவன், அதன் பின் கேட்ட விசயங்களைக் கண்டு குழப்பமடைந்தவன் பேசி முடித்துவிட்டு அலைப்பேசியை அணைத்துச் சிந்தனையிலாழ்ந்தான்.

மாலை நேரம் அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் அழைத்த நட்சத்திர விடுதிக்குள் நுழைந்தவன், தனக்கு முன்பாக அவர் அங்கே அமர்ந்திருப்பதைக் கண்டு வேகமாக அவரிடம் சென்றான். எதற்காகத் தன்னை அழைத்ததாக அவன் கேட்க, அதற்கு அவர் காண்பித்த புகைப்படமும், கூறிய விசயமும் கேட்டு அவனால் நம்ப முடியவில்லை. அதன் பின் அவனிடத்தில் யோசனையும், கவலையும் ஒருங்கே தோன்றியது. சிறிது நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டவன் அவரிடம் தான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதாகக் கூறி, அவரை அழைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

“அம்மா இப்போதைக்கு எனக்குக் கல்யாணம் வேண்டாம். இந்த நிச்சயத்தை நிறுத்தி விடுங்களேன்” சரண் தன் அம்மாவிடம் மெதுவே விஷயத்தைச் சொல்ல, அவருக்கோ கோபம் வந்தது.

“என்ன சரண் எதில் விளையாடுவது என்றில்லை?”

“இல்லை… அது… வந்து…”

சுபத்ரா தீர்க்கமாக மகனைப் பார்த்தவர், “இங்கே பார் சரண்… மதி தான் இந்த வீட்டு மருமகளென்று அவள் அப்பாவிடம் நான் வாக்குக் கொடுத்திருக்கேன். என் வாக்கைக் நீ காப்பாற்றுவாய் என்று நம்புகிறேன். நான் சொன்னப் பெண்ணை எனக்காகத் திருமணம் செய்து கொள்வேன்னு சொன்னது உண்மைன்னா… இந்த மதித் தான் உனக்காக நான் பார்த்திருக்கும் பெண். இப்பொழுதுச் சொல்… எனக்காக அவளைத் திருமணம் செய்து கொள்வாயா? மாட்டாயா?” அன்னையின் வார்த்தையில் வேண்டுதலை விடக் கட்டளையே இருக்க, அவருக்காக வேறுவழியின்றிச் சம்மதித்தான் சரண்.

“வாங்க… வாங்க…” ராமகிருஷ்ணன் உற்சாகத்துடன் சரணின் குடும்பத்தாரை வரவேற்க, அனைவரும் உள்ளே வந்தமர்ந்ததும் ஆண்கள் பெண் பார்க்க வந்திருப்பதை மறந்துத் தொழில் விசயங்களைப் பேச, சுபத்ராவும், ஹரிணியும் தான் பொறுமையிழந்தார்கள்.

“அண்ணா மதியை அழைத்து வரச் சொல்லுங்களேன்…” சுபத்ரா நேரிடையாகவே ராமகிருஷ்ணனிடம் கேட்டுவிட்டார். மருமகளைப் பார்க்கும் அவசரம் அவருக்கு.

“இதோ…” என்றவர் கமலம் துணையுடன் மதியை அழைத்து வர, அவளின் அழகைக் கண்டு எல்லோரும் பிரமித்துப் போய்ப் பார்க்க, அவள் அழகில் மயங்கிச் சொக்கிப் போக வேண்டிய சரணோ, அவளை ஆராய்ச்சியாகப் பார்க்க, மதியோ அவனை நிமிர்ந்தும் பார்க்கவில்லை. சுபத்ரா, ஹரிணி அருகிலமர்ந்தவள் அவர்கள் கேட்கும் கேள்விக்கு இயல்பாய் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஆகாஷ் மதியிடம் வந்து, “நீங்க தான் சரண் மாமாவுக்குப் பார்த்திருக்கும் அத்தையா?” அவளைப் பார்த்துக் கேள்விக் கேட்டவன், அவள் தலையசைக்கவும், “நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க அத்தை...” அவள் கன்னத்தில் முத்தமிட்டு அவள் மடியில் ஏறியமர்ந்தான்.

மதியும் அவனை ஆசையாக மடியில் அமர்த்திக் கொண்டு அவன் கேட்கும் கேள்விக்குப் பொறுப்பாய் பொறுமையாய் பதில் சொல்ல, அதைக் கண்டு சுபத்ராவும் ஹரிணியும் திருப்தியாய் பார்வையைப் பரிமாறிக் கொண்டனர். சரணோ யோசனையுடன் மதியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நிச்சயத்திற்கான நேரம் நெருங்க சுபத்ரா சரணை அழைத்தவர், அவன் கையில் மோதிரத்தைக் கொடுத்து மதியின் கையில் அணிவிக்கச் சொல்ல, அவனோ மோதிரத்தை அணிவிக்காமல் அவளின் குனிந்தத் தலையை வெறித்துப் பார்த்தான். அவன் இன்னமும் மோதிரத்தைப் போடாமலிருக்கவும் மதி மெல்ல அவனை நிமிர்ந்துப் பார்க்க, ஒரு நொடித் தான் என்றாலும் அவளின் பார்வையில் அதில் தெரிந்தக் குழந்தைத்தனத்தில் அவன் அவளிடம் வீழ்ந்துத் தான் போனான். அந்தக் கணம் அவனுக்குமே அவளைப் பிடித்துதானிருந்தது. ஆனாலும்... ஏதோவொன்று அவன் மனதை இறுகச் செய்ய, அவன் மனம் போல் முகமும் பாறையாக இறுகியது.

“அண்ணா அண்ணியைப் பார்த்தது போதும். மோதிரத்தைப் போட்டு விடு. அண்ணி எவ்வளவு நேரம் தான் கையை நீட்டிகிட்டிருப்பாங்க” ஹரியின் கிண்டலில் தன் சிந்தனைக் கலைந்தவன் இயந்திரத்தனமாய் மதியின் கையில் மோதிரத்தை அணிவிக்க, மதியும் அவன் கையில் மோதிரத்தைப் போட, பிறகு இருவரும் மறந்தும் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை.

“சரண் மதியிடம் தனியாக ஏதும் பேசுவதென்றால் பேசிக் கொள்...” ராமநாதன் மகனிடம் கேட்க, அவனோ சங்கடமாய் நெளிந்தான்.

“மாமா இதையெல்லாம் வெளிப்படையாய் மச்சான் சொல்லுவாரா? என்ன மச்சான் நான் சொல்றது?” சரணைப் பார்த்துக் கேலியாய் சொன்ன ஸ்ரீதர், அதற்கான ஏற்பாட்டை ஹரிணியைச் செய்யச் சொன்னான்.

மாடியில் அழகுற அமைக்கப்பட்டிருந்த தோட்டத்தை ரசித்துக் கொண்டிருந்த சரணின் காதில் மெல்லிய கொலுசொலி விழ, அதைக் கேட்டதும் அதுவரை இருந்த ரசிக்கும் மனநிலைப் போய் மனதில் ஒருவித வெறுமைக் குடிக் கொள்ள, மெல்ல அவளைத் திரும்பி பார்த்தான். மதியும் அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் ஏதோ பேச விரும்புவதை உணர்ந்தச் சரண் அவளே பேச்சை ஆரம்பிக்கட்டுமென்று கைகள் இரண்டையும் கட்டிக் கொண்டு மொட்டை மாடிச் சுவற்றில் ஒரு காலை மடித்து வைத்து, மறுகாலைக் கீழே ஊன்றி லேசாகச் சாய்ந்து நின்றவாறு மதியைப் பார்த்தான். அவன் நின்றத் தோரணையே அவன் பேசப் போவதில்லை என்று புரிய மதியே வாயைத் திறந்தாள்.

'மிஸ்டர்.சரண்... உங்களுக்கு... இந்தத் திருமணத்தில் விருப்பமில்லைன்னுச் சொல்லி நிறுத்தியிருங்களேன்”

அவனே இந்தத் திருமணத்தை நிறுத்த தான் எண்ணியிருந்தான். அம்மாவிற்காகத் தான் வேறுவழியின்றி நிச்சயம் வரை வந்திருக்கிறான். ஆனால் அதை மதிச் சொன்னதும் அவன் ஆண்மைக்கு இழுக்கு வந்து விட்டதாக, தன்மானப் பிரச்சினையாக எண்ணியவன் மனதினுள் இந்தத் திருமணத்தை நடத்தியே ஆக வேண்டுமென்ற வெறி அவனுள் எழுந்தது.

“ஏன் என்ன காரணமோ?” ஒற்றைப் புருவத்தைத் தூக்கியப்படி கிண்டலாகக் கேட்டவன் வார்த்தையிலிருந்த கிண்டல் மருந்துக்கும் அவன் முகத்திலில்லை.

சரண் இப்படியொரு கேள்வியைக் கேட்பானென்று மதியும் நினைக்கவில்லை. திருமணத்தை நிறுத்த வேண்டுமென்றால் இதையெல்லாம் யோசித்து வந்திருக்க வேண்டுமென்று எண்ணியவள் தன் முட்டாள்தனத்தை

எண்ணித் தனக்குள் நொந்தாள். இப்பொழுது திடீரென்று என்ன காரணம் சொல்வதென்று யோசித்தவள் கண்ணில் அவனின் நிறம் பட்டது. அவனின் நிறத்தைக் குத்திக் காண்பித்துப் பேசினால் நிச்சயம் அவளை வேண்டாமென்று சொல்லி விடுவான் என நினைத்து,

“என்னை நல்லாப் பாருங்க என் அழகுக்கு நீங்கள் கொஞ்சமாவது ஈடாவீங்களா? நாம் இருவரும் அருகருகே நின்றால் எப்படியிருக்கும்? கொஞ்சம் யோசித்துப் பாருங்க. எனக்கு என் தந்தையை எதிர்த்துப் பழக்கமில்லை. அதனால் நீங்களே...” தொடர்ந்து பேச வாயெடுத்தவள் சரணின் தீப்பார்வையில் அப்படியே அதிர்ந்துப் போய் நின்றாள்.

“ஏய்... உன் மனசில் என்ன நினைச்சுகிட்டிருக்க? கல்யாணமென்றால் உனக்கு விளையாட்டா என்ன...? அது நம் இருவர் சம்பந்தப்பட்டதில்லை. நம் இரு குடும்பமும் சம்பந்தப்பட்டது. உனக்கு விருப்பமிருக்கோ... இல்லை எனக்கு விருப்பமிருக்கோ... இப்ப அது முக்கியமில்லை. இவ்வளவு தூரம் வந்துட்டு இப்படி லூசுத்தனமாப் பேசுறதை நிறுத்து. நிறுத்துவதென்றால் முதலிலேயே நிறுத்தியிருக்க வேண்டியது தானே. இனி என்னாலும் ஒண்ணும் செய்ய முடியாது” படபடவெனப் பேசியவனின் மனம் எரிமலையாய்க் கொதித்தது. அவள் அழகாய் இருந்தால் அவனுக்கென்ன அதற்காகத் தன்னை எப்படி அப்படிச் சொல்லலாம்? அவன் மனம் அவளின் வார்த்தையை ஏற்க மறுத்து அதிலேயே உழன்றது. அவள் சொன்ன வார்த்தை அவனின் ஆண் என்கிற ஈகோவை கிளப்பிவிட்டது.

சரணின் படபடப் பேச்சில் அவளுக்கு ஜுரமே வந்துவிடும் போலிருந்தது. தனக்கும் அவனுக்கும் நிச்சயமான பின்பும் தான் இப்படிப் பேசியது சற்று அதிகப்படித்தானோ? என்ற எண்ணம் அவள் மனதைச் சங்கடப்படுத்த, இந்நிலையில் திருமணத்தை நிறுத்துவது என்பது இயலாத காரியம் என்பதை உணர்ந்தவள் தலைத் தானாகக் கவிழ்ந்தது.

மதியின் குனிந்தத் தலையைக் கண்டு சரணுக்குள் திருப்தி எழ, ‘யார்க்கிட்ட என்ன பேசிக்கிட்டிருக்க... அதுவும் என்னிடமே உன் விளையாட்டைக் காண்பிக்கிறியா? கல்யாணம் முடியட்டும் இருக்குடி உனக்கு...’ மனதில் வன்மமாய் நினைத்தவன், அவளருகில் வந்து அவளின் முகத்தை ஒற்றை விரலால் தொட்டு நிமிர்த்தி, அவள் கண்ணுக்குள் தன் கண்ணைக் கலந்தவாறு தீர்க்கமாய்ப் பார்த்தபடி,

“என்ன சொன்ன... நான் கறுப்பென்றா... உனக்கு வேற வழியேயில்லை. இந்த ஜென்மம் முழுதும் இந்தக் கறுப்பன் தான் உன் கணவன். என்னை... என் தொடுகையை... நீ சகித்துக் கொள்ளத் தான் வேணும் செல்லம்...!” கண்சிமிட்டியபடிக் கிண்டலாய் சொல்ல, அதைக் கேட்டு அவள் அதிர்ந்துப் போய் அவனைப் பார்க்க,

“உனக்கு மதின்னு யார் பேர் வச்சாங்க...? கொஞ்சமும் மதியில்லை. ஆனால் உன்னைப் பார்த்தால் மதுக் குடிச்ச மாதிரி மனசுலப் போதைத் தான் ஏறுது” கண்களில் கிறக்கத்தோடு அவளை மேலும் கீழும் அளவெடுப்பது போல் பார்த்தவன், “அதனால் என்னைப் பொறுத்த வரை நீ ‘மது...’ தான். ஓகே... வரட்டுமா மது...”, ‘மது’வில் அழுத்தம் கொடுத்தவன், அவள் உதட்டைச் சுண்டியிழுக்க, வலியில் முகம் சுளிக்க நின்றிருந்தவளைக் கண்டு திருப்தியடைந்தவனாய் வேகமாய் அங்கிருந்து வெளியேறினான்.

சரணின் குடும்பத்தார் விடைப் பெற்றுச் சென்றதும், அதற்காகவே காத்திருந்தார் போல், மதி தன்னறைக்கு வந்து கதவைத் தாளிட்டவள், அப்படியே படுக்கையில் விழுந்தாள். அவள் காதில் சரணின் ‘மது...’ என்ற அழைப்பே ஒலித்தது.

சிறுவயது முதல் அவளை உயிருக்கு உயிராய் நேசித்த ஒரு ஜீவன் அவளை அப்படித்தான் கூப்பிடும். இப்பொழுதும் அந்த ஜீவன் அவளைப் பாசத்துடன் அழைப்பது போல் தோன்றக் காதுகள் இரண்டையும் இறுகப் பொத்திக்

கொண்டவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரைத் தாரையாக வழிய, அதற்கு மேல் தாங்க முடியாதவளாய், “தாத்தா... என்னை மட்டும் ஏன் தனியாத் தவிக்கவிட்டுப் போனீங்க?' முகம் மூடிக்கொண்டு கதறியழுதாள் மது என்கிற மதுமதி.

## மலர் : 5

சரண் தூக்கம் வராமல் அறைக்குள் நடைப்பயின்று கொண்டிருந்தான். காலையில் தான் மதுமதியிடம் நடந்து கொண்ட முறை சரியா? இல்லை தவறா? என்று அவனால் தீர்க்கமாகத் தீர்மானிக்க முடியவில்லை. ஆம்... அவள் மதிவதனா இல்லை... உருவத்தில் அவளைப் போலிருக்கும் மதுமதி. அந்தளவிற்கு இருவரும் உருவத்தில் ஒன்று போலிருந்தனர். எந்தவொரு வித்தியாசமும் அவர்களிடத்தில் இல்லை. மனதில் குழப்பத்துடனும் யோசனையுடனும் நடந்தவன் மனம் பின்னோக்கிச் சென்றது.

அன்று கைப்பேசியில் அவனை அழைத்தது வேறுயாருமில்லை மதிவதனா தான்.
“ஹலோ மிஸ்டர்.சரண்... நான் மதிவதனா பேசறேன்”

மதிவதனாவின் குரலைக் கேட்டதும் சந்தோசத்தில் மனம் மகிழ்ந்தவன், அவளின் ‘மிஸ்டர்...’ என்றழைப்பில் இருந்த அன்னியம் அவனுக்கு வெகு தாமதமாகப் புரிய, தானும் ஒன்றையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் சாதாரணக் குரலில், “என்ன விசயம் சொல்லுங்க மிஸ்.மதிவதனா?”

“அது... வந்து... போனில் சொல்ல முடியாத விசயம். உங்களை நான் நேரில் பார்க்கணும். ஹோட்டல் xxxxxக்கு வர முடியுமா?” அவளின் உணவு விடுதியிருக்கும் போது வேறு ஒன்றுக்கு ஏன் அழைக்கிறாள்? என்று யோசித்தவன், அவளின் குரலில் இருந்த பதற்றம் கண்டு சரியென்று சம்மதம் சொன்னான்.

மாலையில் மதிவதனாவைச் சந்திக்கும் வரை என்னவோ ஏதோ என்று அவனுக்குமே மனம் பரபரப்பாகத் தானிருந்தது. தனக்கு முன்பாக அங்கே வந்தமர்ந்திருந்த மதிவதனாவை நோக்கிக் கால்களை எட்டிப் போட்டவன், அவளுக்கு எதிரிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.
“ஹாய் மதிவதனா... எப்படி இருக்கீங்க?” அவனின் கேள்விக்குப் பதிலளிக்காமல் மதிவதனா தன்

கைப்பையிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள். அதை வாங்கிப் பார்த்தச் சரண் வாய்விட்டுச் சிரித்தபடி,
“ஆர் யூ ஜோக்கிங்? உங்க போட்டோவை எதுக்கு என்னிடம் தர்றிங்க? நேரில் உட்கார்ந்திருக்கிற உங்களை எனக்கு நல்லாத் தெரியுது”

அவள் ஒரு நிமிடம் தயங்கிப் பின் சுதாரித்து, “இது நானில்லை. இவள் பெயர் மதுமதி. இப்பொழுது எனக்குப் பதிலாக... என் வீட்டிலிருப்பவள் இவள் தான்”

சரண் இப்பொழுது குழப்பமாய்ப் புகைப்படத்தை எடுத்துப் பார்த்தவன், பின் மதிவதனாவை ஊன்றிப் பார்த்தான். இருவருக்குமிடையில் எந்தவொரு வித்தியாசமுமில்லை. ஒருவேளை இவள் திருமணத்திற்கு விருப்பமில்லாமல் இப்படிப் பொய்யாய் விளையாடிப் பார்க்கிறாளோ?

“லுக்... மதிவதனா உங்களுக்குத் திருமணத்தில் விருப்பமில்லை என்றால் அதை நேரிடையாகச் சொல்லிருங்க. அதை விட்டுட்டு இப்படிப் பொய் பேசாதீங்க. உங்களை மாதிரி ஒருத்தியாம் அதுவும் உங்களுக்குப் பதிலாய் உங்கள் வீட்டில் இருக்கிறாளாம் இதை ஏமாந்த இளிச்சவாய் வேறு யாரிடமாவது சொல்லுங்க... நம்புவாங்க. என்னிடம் வேண்டாம்” அவன் குரலில் அடக்கப்பட்ட கோபமிருந்தது. பொது இடமாயிருப்பதால் அவன் தன்னை முயன்று அடக்கிக் கொண்டான்.

அவள் இவனுக்கு எப்படிப் புரிய வைப்பதென்று தெரியாமல் ஒரு நிமிடம் யோசித்தவள், “சரண்... உங்கள் போனைக் கொடுங்களேன்”

இதை எதற்குக் கேட்கிறாள் என்று நினைத்துக் கொண்டே புரியாத பாவனையோடு அவளிடம் தன் அலைப்பேசியை நீட்ட, அவன் எண்ணம் புரிந்தோ என்னமோ அவள் அதில் எண்களை அழுத்தி, ஸ்பீக்கர் மோடில் போட்டாள்.

“ஹலோ...” மறுமுனையில் ராமகிருஷ்ணனின் குரல் ஒலிக்க, சரண் மதிவதனாவைப் புரியாமல் பார்க்க

அவளோ அதைக் கவனிக்கும் நிலையிலில்லை. தந்தையின் குரலை ஆர்வத்துடன் கேட்டவள் கண்ணில் கண்ணீர் தளும்பியது. அதைப் பார்த்த அவனுக்கோ அவளைக் கண்டு பரிதாபமாகயிருந்தது. அதிலும் அவள் முகத்தில் தெரிந்த உண்மை அவனை மேலும் குழப்பியது.

“ஹலோ... ஹலோ... யார் பேசுறிங்க?” பொறுமையின்றி அவரின் குரல் படப்படக்க, அதில் தன்னைச் சுதாரித்துக் கொண்டவள், சற்றுத் தன் குரலை மாற்றி அவரிடம் பேசினாள். “அங்கிள் மதி இருக்கிறாளா? நான் அவளோட பிரண்ட் பேசுறேன்?” சரண் இவளுக்கு ஏதும் மூளைக் குழம்பிவிட்டதோ என்றெண்ணிப் புரியாமல் அவளைப் பார்க்க,

“கொஞ்சம் இரும்மா...” என்றவர், அந்தப் பக்கம் திரும்பி, “மதிக்குட்டி இங்கே வாம்மா உன் பிரண்ட் யாரோ பேசுறாங்க”

“யார்ப்பா...?” என்றருகில் கேட்டப் பெண் குரலைக் கண்டு, அவன் தான் திகைத்துப் போய் அமர்ந்திருந்தான். மதிவதனா அவசரமாக அழைப்பைத் துண்டித்தவள் அவனை நிமிர்ந்துப் பார்த்தாள்.

“இப்பவாவது என்னை... நான் சொல்வதை... நம்புகிறீங்களா?” கேட்டவளைக் கண்டு அவனால் நம்பவும் முடியவில்லை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

மதிவதனா பொய் சொல்வதாக இருந்தாலும் அவளின் தந்தையும் அப்படிப் பொய் சொல்வதாகத் தெரியவில்லை. ஏனெனில் அவர் குரலிலிருந்த மென்மை, அன்பு அவர் அப்படிப்பட்டவர் அல்ல என்பது அவனுக்குமே புரிந்துதான் இருந்தது. அதிலும் அலைப்பேசியில் கேட்டப் பெண் குரல் அவனைக் குழப்பியது.

“சரி மதிவதனா நீங்கள் சொல்வது உண்மை என்றே வைத்துக் கொள்வோம். அதுக்காக எவளோ ஒருத்தியை உங்களைப் போலிருந்த காரணத்துக்காக மட்டுமே அவளை நம்பி உங்கள் தந்தையிடத்தில் விட்டு வந்திருக்கீங்களே.

இது எந்தளவுக்குச் சரி வரும்? அவள் யார்...? என்ன...? என்று நீங்க கேட்கலையா?”

‘இல்லை’ என்பது போல் தலையசைத்த மதிவதனா, “அதான் என்னைப் போலிருக்கிறாளே இதை விட என்ன சாட்சி வேணும்?” என்றவள் மதுமதியைத் தான் முதன்முதலில் சந்தித்த விவரத்தை சரணிடம் சொல்ல ஆரம்பித்தாள்.

மதிவதனா காலையில் பரபரப்பாக வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருக்க, அந்நேரம் பார்த்து அவள் கைப்பேசி இசைத்தது. யாரது இந்நேரத்தில் என்று அதை உயிர்பித்துக் காதில் வைக்க, “ஹலோ... மதிவதனா தானே...”

“ஆமாம் சொல்லுங்க”

“நான் சொல்லுமிடத்திற்கு இன்னும் அரை மணி நேரத்திற்குள் வா மற்றதை நேரில் பேசிக் கொள்ளலாம் என்ன?” அந்தக் குரலிலிருந்த அலட்சியம், கர்வம் கண்டு அவளுக்குச் சர்ரென்று கோபமேற, பதில் பேசாமல் அலைப்பேசியை அணைக்கப் போனாள்.

“மேட்டர் உன் அப்பா பத்தி என்றால்...” ‘அப்பா...’ என்றதும் அவளின் மூளை சுறுசுறுப்பானது.

“ஹேய் என் அப்பாவிற்கு என்ன...?”

“அதை நேரில் பேசிக்கலாமே?” சந்திக்குமிடத்தைச் சொல்லிவிட்டுப் பேச்சு முடிந்தது போல் அந்தப் பக்கம் அழைப்பு அணைக்கப்பட, இவள் அவசரமாகக் கிளம்பினாள்.

‘அப்பா’ என்றதும் வேறு எதைப் பற்றியும் மதிவதனா யோசிக்கவில்லை. அதிலும் பேசியது பெண்தானே என்ற நினைப்பு வேறு... அதனால் பயமில்லாமல் அவள் சொன்ன இடத்திற்குக் கிளம்பிச் செல்ல, அங்குச் சென்று பார்த்தப் பின் தான் தெரிந்தது தன்னைப் போல் ஒருத்தி இருப்பது. மதிவதனாவிற்கு அவளைக் கண்டதும் தலைச் சுற்றுவது

போலிருந்தது. தான் ஒரே பெண் என்று தந்தை சொன்னது நினைவு வர தன்னைப் போலிருக்கும் இவள் யார்? என்று ஆராய்ச்சியுடன் அவளைப் பார்த்தாள். அவள் முகத்திலிருக்கும் கோபம் மட்டுமில்லை என்றால் தனக்கும் அவளுக்கும் எந்த வித்தியாசமுமில்லை. இது எப்படிச் சாத்தியமென்று வியப்பும் ஆச்சிரியமும் அவளுள் எழுந்தது.

“என் பெயர் மதுமதி…” என்றவள் மதிவதனாவின் ஆச்சிரியப் பார்வையில் உதட்டைச் சுளித்து, “என்ன மதிவதனா அப்படி வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்க்கிறிங்க? ஓஹ்… உங்களைப் போல் நானிருக்கேன் என்றா…! என்ன செய்வது? நம் இருவருக்கும் தாய் தான் வேறு வேறு… ஆனால் தந்தை ஒருவரே” வெகு அலட்சியத்துடன் ஒலித்தது மதுமதியின் குரல்.

மதுமதியின் வார்த்தைகள் கேட்டு மதிவதனா திடுக்கிட்டுத்தான் போனாள். தன் தந்தையை அதுவும் அன்பே உருவான தந்தையை இந்த மாதிரித் துரோகத்துடன் இணைத்துப் பார்க்க அவளால் முடியவில்லை. ஆனாலும் தன் முன்னால் தன்னைப் போல் நிற்கும் இவள் யார்? என்று யோசித்தவள் மனதில் மின்னல் வெட்டியது.

‘நான் அம்மாவைப் போலிருப்பதாக அப்பா அடிக்கடிச் சொல்வாரே. இவ்வளவு என் நானும் தான் அம்மாவின் போட்டோ பார்த்திருக்கிறேனே. அவரும் நானும் ஒன்று போலிருப்பதை… அப்படியானால் என்னைப் போலிருக்கும் இவள்… இவளும் என் தாய் வயிற்றுப் பிள்ளை தானே. இதில் இன்னமும் என்ன சந்தேகம்? அதான் அம்மாவைப் போல்… என்னைப் போலிருக்கிறாளே… இதற்கு மேல் வேறு அத்தாட்சி வேண்டுமா என்ன…! இவளும் நானும் உடன் பிறந்த இரட்டைச் சகோதரிகள் தான்… எங்கோ ஏதோ தப்பு நடந்திருக்கிறது. அது என்னவென்று தான் தெரியவில்லை? எப்படியிருந்தால் என்ன இவள் என் உடன்பிறந்தவள்…’ மனதில் மகிழ்ச்சிப் பொங்க மதுமதியைப் பார்க்க, ஆனால் அதையெல்லாம் அவள்

கண்டு கொண்டதாய் தெரியவில்லை. அவள் மேலே பேசிக் கொண்டு போனாள்.

“இங்கே பார் நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் எனக்குப் பிரச்சினையில்லை. உன் அப்பா என் அம்மாவை நம்ப வைத்து வயிற்றில் கருவைக் கொடுத்துட்டு ஓடிப் போன கோழை. அதனால் என் அம்மா பட்ட வேதனை அவமானம் எத்தனை எத்தனை... அந்த வேதனைத் தாங்காமல் தான் என்னமோ என்னைப் பெற்று போட்டவுடன் கடமை முடிஞ்சதுன்னு இந்த உலகத்தை விட்டுப் போய்ட்டாங்க. என்ன இருந்தும் தாயில்லாமல் வளர்வது எவ்வளவு பெரிய துன்பம் தெரியுமா?” மதுமதி அவளைப் பார்த்து கேட்க,
‘எனக்காத் தெரியாது...? நானும் உன்னைப் போல் தாயில்லாத பெண் தான்’ மனதில் துயரத்துடன் நினைத்தவள் வாய்விட்டுச் சொல்லவில்லை. ஒன்றும் பேசாமல் மதுவைப் பார்த்தாள்.

“உனக்கெங்கே அதைப் பற்றித் தெரியப் போகுது என் அம்மாப்பட்ட அவமானத்திற்குக் கஷ்டத்திற்கு உன் அப்பா பதில் சொல்லியாக வேண்டும். நீ நினைக்கலாம் என்னடா இவள் இவ்வளவு நாள் வராமல் இப்பப் போய் வந்திருக்காளே என்று... ஆனால் எனக்கே இப்போ தானே தெரிந்தது இப்படியொரு அப்பா இருப்பது. அதன் பின் தான் உன் அப்பாவைப் பற்றி விசாரித்தேன். சும்மா சொல்லக் கூடாது வெளியில் ரொம்ப நல்லவர்ன்னு... பேர் வாங்கியிருக்கார். ஆனால் அந்த நல்லவரைப் பற்றி எனக்குத் தானே தெரியும். அப்பொழுது தான் எனக்கு உன்னைப் பத்தினத் தகவல் தெரிந்தது. உண்மையில் உன் போட்டோ பார்த்ததும் ஆச்சிரியப்பட்டுப் போனேன். என்னைப் போல் ஒருத்தியா? என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் இப்பொழுது நம்புகிறேன். உன்னைப் பார்த்ததும் தான் எனக்கு ஒரு யோசனைத் தோணுச்சு. உன் அப்பாவை பழிவாங்க வேண்டுமென்ற என் எண்ணம் நிறைவேறவும் வேண்டும் அதே சமயம் நான் இதில் மாட்டிக்கவும் கூடாது. என்ன... முழிக்கற? நான் சொல்வது இன்னும் புரியலியா? அதாவது உன் வீட்டுக்கு...

உன் உருவில்... நான் போகப் போகிறேன். மகளின் உருவில் போய் உன் தந்தையைப் பழிவாங்கப் போகிறேன். நான் செய்யப் போகும் ஒவ்வொரு காரியமும் அதனால் வரும் பழியும் உன் மீது தான் விழும். நான் இதிலிருந்து ஈசியாத் தப்பித்துக் கொள்ளலாம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய். இதற்கு நீ சம்மதிக்கா விட்டால் எல்லோரையும் கூப்பிட்டு உன் அப்பாவின் வண்டவாளத்தைப் பிட்டுப் பிட்டு வைப்பேன். என்ன செய்யப் போகிறாய்?"

"மதுமதி நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேள். நான் என் அம்மாவைக் கொண்டு பிறந்திருக்கிறேன். அப்படியென்றால் என்னைப் போலிருக்கும் நீயும் நானும் இரட்டை சகோதரிகளாகத் தானிருக்க வேண்டும். நம் இருவரின் அம்மாவும் ஒருவராகத் தான் இருக்க முடியும். நீ நினைப்பது போல் வேறு வேறாக இருக்க முடியாது. சட்டென்று எதையும் முடிவு செய்து விடாதே. கொஞ்சம் ஆற அமர யோசித்து முடிவுச் செய்" கெஞ்சிய மதிவதனாவை அலட்சியமாய்ப் பார்த்த மதுமதி,

"இங்கே பார் எனக்கு ஒரே அம்மா தான் உன் அப்பாவைக் காப்பாற்றுவதற்காகத் தேவையில்லாமல் பொய் சொல்லாதே. நான் கேட்டதுக்கு உன் பதிலென்ன? சரியென்று சொல்லப் போகிறாயா? இல்லை..."

மதிவதனாவிற்குத் திடீரென்று எதையும் யோசிக்க முடியவில்லை. அதிலும் உடல்நலம் சரியில்லாமல் இருக்கும் தந்தை இவளைக் கண்டால் என்ன ஆவாரோ? அதீத அதிர்ச்சியோ... இல்லை அதீத மகிழ்ச்சியோ... அவரின் இப்போதைய உடல்நிலைக்கு இந்த ரெண்டுமே தீங்குத் தரக் கூடியது. தாயைக் கொண்டிருக்கும் இவளைக் கண்டு தன் தாயைத் தந்தை சந்தேகப்பட்டால் அதை நினைக்கும் போதே அவளால் தாங்க முடியவில்லை. எல்லாவற்றையும் போட்டுக் குழப்பிக் கொண்ட மதிவதனா பேசாமல் மதுமதியைத் தந்தையிடம் கூட்டிச் சென்றிருக்கலாம் எல்லாப் பிரச்சினையும் இத்துடன் முடிந்திருக்கும். தந்தையைக் காப்பாற்றுகிறேன் என்று தேவையில்லாத பிரச்சினையை இழுத்துக் கொண்டாள்.

தந்தைக்கு ஒரு அவச்சொல் என்றால் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்றுணர்ந்தவள்... ஆனால் பழி வாங்கப் போவதாகச் சொல்லும் மதுமதியை எப்படித் தந்தையிடம் அனுப்ப முடியும்... இதனால் அவரின் உடல்நலம் மேலும் நலிவடைந்து விட்டால் அதை அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. கொஞ்ச நேரம் கண் மூடி யோசித்தவள், மதுமதியைத் தன் வீட்டிற்கு அனுப்ப முடிவு செய்தாள்.

அவளின் தந்தை மேல் அவளுக்கு நம்பிக்கையிருந்தது. அவரின் கனிவுவான பேச்சு, அன்பு எல்லாம் மதுமதியை நிச்சயம் மாற்றும். தானும் அவளும் ஒரு தாய் வயிற்றுப் பெண்கள் தான் என்பதை மதுமதியும் புரிந்து கொள்வாள். ஆம்... அவளுக்கு மதுமதி தன் சகோதரி என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அவள் பிறப்பிலிருக்கும் மர்மம் தான்... என்ன..? என்று அவளுக்குப் புரியவில்லை. அவளுக்குமே இந்தத் திருமணத்திலிருந்து தப்பிக்க வேண்டும்... அதற்கு மதுமதியை அந்தக் கடவுள் அனுப்பி வைத்ததாக எண்ணியவள், மதுமதியிடம் ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வைத்தாள்.

“மது... நீ அப்பாவைப் பழி வாங்க வேண்டும் என்று நினைப்பதற்கு முன் நம் அம்மாவின் போட்டோவைப் பார்த்து விட்டு எதையும் முடிவு செய்”

அவளுக்குத் தெரியும் தன் தாயின் புகைப்படம் பார்க்கும் பொழுது மதுமதியே உண்மையைப் புரிந்து கொள்வாள் என்று. மறந்தும் அவள் சரணுடன் தனக்கு நடக்கவிருந்த நிச்சயத்தைப் பற்றிப் பேசவில்லை. மதுமதியைத் தன் வீட்டிற்கு அனுப்பி விட்டு, அவள் தன் தோழியின் உதவியுடன் பெண்கள் விடுதியில் தங்கிக் கொண்டாள்.

சரணிடம் இதையெல்லாம் கூறியவள் மறந்தும் தனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை என்பதைக் கூறவில்லை.

“என்னங்க இது...? தெலுங்குப் படம் பார்க்கிற மாதிரியிருக்கு...” கிண்டலுடன் கூறியவன், அவளின்

கண்களிலிருந்த கலக்கத்தில் தன் கேலியைக் கைவிட்டான்.

“சரி இப்போ நான் என்ன செய்யணும்? உங்க அப்பாவிடம் பேசிப் பார்க்கவா? இல்லை அந்த மதுமதியிடம் பேசிப் பார்க்கவா? எதுவாகயிருந்தாலும் நம் திருமணம் நடப்பதில் எந்தப் பிரச்சினையுமில்லை. என்னை நீ நம்பலாம்”

“ஐயோ வேண்டாம்…” பதறியவளை ஒரு கணம் கூர்ந்துப் பார்த்தவன், “எது வேண்டாம் மதிவதனா… திருமணமா…?” சிறிது நேரம் அமைதியாயிருந்தவள் பின் ‘ஆமாம்’ என்பது போல் தலையசைத்தாள்.

“ஆம்… நான் வேறு ஒருவரை விரும்புறேன். ஆனால் இந்த நிலைமையில் அப்பாவிடம் பேசுவதற்குத் தயக்கமாயிருக்கு. அந்த நேரத்தில் தான் மதுமதி தெய்வம் போல் வந்தாள். இதை நான் உங்களிடம் சொல்லாமல் போயிருக்கலாம். ஆனால் சுயநலமாய்ச் செல்ல என் மனசாட்சி விரும்பல. அதான் உங்களிடம் சொன்னேன்”

மதிவதனா பேசப் பேச, ‘என்ன பெண்ணிவள்?’ என்று அவனுக்கு எரிச்சலாய் வந்தது.

“என்ன ஒரு விந்தை மதிவதனா? பழிவாங்க வந்தவளை தெய்வம்ன்னு சொல்றிங்க. நீங்க உங்களைச் சுயநலவாதியில்லை என்று சொன்னாலும் அது உண்மையில்லை. உண்மையில் நீங்கள் சுயநலவாதி தான். உங்க அப்பா என்னவானாலும் பரவாயில்லை உங்களுக்கு உங்கள் பிரச்சினை தான் முக்கியமாயிருக்கு. அதிலும் இந்தத் திருமணத்தில் அந்த மதுமதியையும் சேர்த்து இழுத்துவிட்டிருக்கீங்க. அந்த மதுமதி யாரையாவது காதலித்திருந்தால் அவளின் நிலை… என் நிலை… அதைப் பத்தி நீங்க யோசிக்கவில்லையே? எனக்கு என்னமோ நீங்கள் உங்க அப்பாவிடம் இதைப் பற்றிப் பேசியிருக்கலாமோன்னு தோணுது”

மதிவதனா இதைப் பற்றியெல்லாம் யோசித்துப் பார்க்கவில்லை. அவள் ஒருத்தியின் முட்டாள்த்தனத்தால்

மூன்று பேருக்கு அல்லவா தீங்கு விளைவித்து விட்டாள்.

“மிஸ்டர். சரண் எனக்கு எப்படியாவது உதவுங்களேன் இனி நான் என்ன செய்ய வேண்டும்?” கண்களில் கண்ணீர் மல்க கெஞ்சிக் கேட்டவளைப் பார்க்க அவனுக்குமே பரிதாபமாக இருந்தது.

“நீங்க யாரை லவ் பண்றீங்கன்னு சொல்லுங்க. நான் உங்க அப்பாவிடம் பேசறேன். அப்படியே மதுமதியைப் பற்றியும் உங்க அப்பாவிடம் சொல்கிறேன். வாங்கப் போகலாம்…”

“இல்லை நான் இப்போ அங்கே போனா அப்பா ஹெல்த்துக்கு ஏதாவது ப்ராப்ளம் ஆகிட்டா… வேண்டாம்… நான் அங்கே போகல. மதுமதிக்கு உண்மைத் தெரிந்தால் அவளே அப்பாவைப் புரிந்துக் கொள்வாள்”

“சரி அப்படியென்றால் அது உங்க இஷ்டம்…”

“நான் உங்களிடம் ஒன்று கேட்டால் தப்பா நினைக்க மாட்டிங்களே…” மதிவதனா தயக்கத்துடன் சரணைப் பார்க்க,

“இல்லை சொல்லுங்க…”

“நீங்க ஏன் மதுமதியைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது?”

“என்னை என்னன்னு நினைச்சிங்க? கேவலம் பழிவாங்க வந்திருக்கும் பெண்ணைப் போயா நான் கல்யாணம் செய்து கொள்வேன். பணமில்லை என்றாலும் பரவாயில்லை குணமிருக்க வேண்டும். அது அந்த மதுமதியிடம் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை. பழிவாங்கவென்று வந்து இளம் பெண் என்றும் பாராமல் உங்களை நிர்கதியாய் இப்படி நிற்க வைத்து விட்டுப் போனவள் எப்படிப்பட்ட பெண்ணாக இருப்பாள்?” மூச்சு வாங்கக் கோபத்துடன் பேசியவனை அச்சத்துடன் பார்த்தாள் மதிவதனா.

“இல்லை அவள் அப்படிப்பட்டவள் இல்லை…”

“அவள் எப்படிப்பட்டவளாய் இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. அது உங்கள் குடும்ப விஷயம். அதற்காக நான் அவளைத் திருமணம் செய்து கொள்ள முடியாது. நீங்கள் நினைப்பது போல் நானாக எதையும் சொல்லப் போவதில்லை. இந்தத் திருமணத்தை எங்கள் வீட்டில் சொல்லி நிறுத்த போறேன். இதனால் உங்களுக்கோ இல்லை அந்த மதுமதிக்கோ எந்தப் பாதிப்பும் வரப் போவதில்லை. அவளுக்கென்று ஒருவன் வராமலா போகப் போகிறான்? ஆனால் அந்த ஒருவன் நானில்லை அந்த அளவுக்குப் பரந்த மனப்பான்மை எனக்கில்லை” என்றவன், “இனி என்ன செய்யப் போவதாய் உத்தேசம்?”

“என்ன செய்வது? எங்கே செல்வதென்று எனக்குத் தெரியவில்லை?” பணக்கார வீட்டு வாரிசு இப்படி வக்கற்றுப் போய் நிர்கதியாய் நிற்பதைப் பார்க்கும் போது சரணுக்குமே கஷ்டமாகயிருந்தது.

மதிவதனா சொல்வதைக் கேட்கும் போது தனக்கே ராமகிருஷ்ணன் மேல் சந்தேகம் எழவில்லை. இந்த மதுமதி அலசி ஆராய்ந்துப் பார்த்துச் சரியான தீர்வு எடுத்திருக்கக் கூடாதா? என்ன பெண்ணோ... தன்னை மட்டும் நினைத்துக் கொண்டு மற்றவர்களைப் பற்றிக் கொஞ்சமும் புரிந்து கொள்ளாமல் ஏனோ தேவையில்லாமல் அந்த மதுமதி மேல் கோபம் கோபமாய் வந்தது.

“மதிவதனா என் மேல் நம்பிக்கையிருந்தால் என்னுடன் வாருங்கள். உங்களுக்கு இருக்க இருப்பிடம், வேலையெல்லாம் நான் ஏற்பாடு செய்து தருகிறேன்”
சரணின் வார்த்தையில் நம்பிக்கையுற்று அவன் பின்னே சென்றாள் மதிவதனா. அவன் சொன்னது போல் அவர்களின் பெங்களூர் கிளையில் அவளுக்கு வேலை போட்டுக் கொடுத்ததோடு அங்கே பாதுகாப்பாய் தங்கவும் ஏற்பாடு செய்தான்.

மதிவதனாவைப் பத்திரமாகப் பெங்களூரில் விட்டு விட்டு வந்தவன் மதுமதியைப் பற்றித் தேடத் துவங்கினான். மதிவதனாவை அவள் சந்தித்த இடத்தில் போய்

விசாரித்துப் பார்த்தான். ‘ஒரு நாளைக்கு எத்தனையோ பேர் வருகிறார்கள் அதில் இவங்களை எப்படி நியாபகம் வைத்திருப்பது’ என்று பதில் வர கொஞ்சம் தடுமாறித் தான் போனான். நூல் முனையளவுக் கூட விவரம் தெரியாமல் அவளைப் பற்றிய விவரங்களை எப்படிக் கண்டு பிடிப்பது? யோசித்தவனுக்குத் தலைவலி வந்தது தான் மிச்சம். மதுமதியை ஏற்குமளவுக்குத் தனக்குப் பரந்த மனப்பான்மை இல்லை என்று சொன்ன அவனை, அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளிய விதியைச் சபித்தான். தன் நிலையை எண்ணித் தனக்குளே நொந்தான்.

அதன் பின் சரண் இந்தத் திருமண நிச்சயத்தை நிறுத்த எவ்வளவோ முயற்சி செய்தான். ஆனால் அவன் அன்னை ஒரே வார்த்தையில் அவனை அடக்கி விட்டார். மிகுந்த கோபத்துடன் தான் நிச்சயத்திற்கு அவன் சென்றது. அங்கே மதுமதியைப் பார்த்தவன் திகைத்துத்தான் போனான். அந்தளவுக்கு இருவருக்குமிடையில் உருவ ஒற்றுமையிருந்தது. அதிலும் மதுமதி ஒன்றுமே அறியாதவள் போல் தன் வீட்டாருடன் பேசிக் கொண்டிருந்தது அவனுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது.

ஆனால் மோதிரம் போடும் போது அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்க... அப்பப்பா... ஆளை விழுங்கும் அந்த வசீகரப் பார்வையில் அவன் முற்றிலும் தன்னைத் தொலைத்தான் தான் இல்லை என்று சொல்ல முடியாது. அதன் பின்னர் அவளின் எண்ணம் அவன் நியாபகத்தில் வந்து அவன் முகம் இறுகச் செய்தது. அவளிடம் தனித்துப் பேசச் சொன்ன போது விருப்பமில்லாமல் தான் பேசச் சென்றான். அவள் தன்னை விரும்பவில்லை அதற்கு அவன் நிறத்தைக் காரணமாய்ச் சொன்னது அவன் தன்மானத்தைச் சீண்ட, திருமணத்தை நிறுத்த வேண்டும் என்றெண்ணிய அவனே அவளைப் பார்த்து, ‘நான் தான் உன் கணவன்’ என்று சொல்லி அவளைச் சகித்துத் தானாக வேண்டும் என்று சவால் வேறு விட்டு வந்திருக்கிறான்.

நடந்ததையெல்லாம் யோசித்தவனுக்கு என்ன செய்வதென்று தான் தெரியவில்லை. அவன் கண் முன்னே மதுமதியின் முகம் வந்து போனது. இந்த ஜென்மத்தில் அவள் தான் மனைவி என்று முடிவாகிவிட்டது. ஆனால் அவள் அறிமுகமான விதம் நல்லவிதமாக இருந்திருக்கக் கூடாதா? என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. அந்த நிமிடம் அவன் மனதில் எழுந்த ஒரே கேள்வி…

‘பெண்ணே… நீ முள்ளா…? மலரா…?’

## மலர் : 6

“என்னங்க முகூர்த்தப் புடவை எடுக்கப் போகணும். நம்ம ஹரிணி, மதியைக் (மதுமதி எல்லோருக்கும் இனி மதி தான் நமக்கும் சரணுக்கும் மட்டுமே மது...) கூட்டிக் கொண்டு போகலாம்ன்னு இருக்கேன். நீங்களும் வர்றிங்க என்றால்...” இரவு உணவு வேளையின் போது சுபத்ரா ராமநாதனிடம் புடவை எடுக்கப் போகும் விஷயத்தைச் சொல்ல...

“இதெல்லாம் லேடிஸ் சமாச்சாரம் நான்கு மணி நேரம் அங்கே வந்து காவல் காக்க என்னால் முடியாது” ராமநாதன் நைசாக நழுவி கொண்டார்.

“சரண் நீ கண்டிப்பா வரணும். மதி உன்னை ரொம்ப எதிர்பார்ப்பா?”

‘ஆமாம்... ஆமாம்... ரொம்பத் தான் எதிர்பார்ப்பா’ மதுமதியின் நினைவில் அவன் முகம் சுளித்தான். அன்னையிடம் இதைச் சொல்ல முடியுமா?

“அம்மா அன்னைக்கு எனக்கு முக்கியமான வேலையிருக்கு. நீங்க போயிட்டு வாங்க”

“டேய் என்னைக்குன்னு தெரியாம அன்னைக்கு முக்கியமான வேலையிருக்கா உனக்கு? நீ இப்படியெல்லாம் பேசுவன்னுத் தெரிந்து தான் வர்ற ஞாயிற்றுக் கிழமைப் புடவை எடுக்கப் போறோம். அதனால உன் தூக்கத்தைத் தியாகம் பண்ணிக்கிட்டு ஒழுங்கு மரியாதையா எங்களுடன் வா”

“ஹி... ஹி... ஹி...” சரண் அசடு வழிய,

“ரொம்பத் தான் வழியுது... துடைச்சுக்கோ சரண்” நக்கலாகச் சொல்லியவாறு ஹரி அருகிலிருந்த துண்டை அவனிடம் நீட்ட,

“என்னடா... கிண்டலா? நீ கல்யாணம் பண்ணிப் பாரு... அப்போ தான் என் நிலைமை உனக்குப் புரியும்”

“அடப்போ சரண்… எனக்கு இப்பன்னாலும் ஓகே தான். சுபத்ரா தான் பொண்ணுப் பார்க்க மாட்டேங்கிறாங்க” வருத்தத்துடன் சொன்னவனைச் சுபத்ரா காது பிடித்துத் திருக, அதற்குப் போலியாய் அலறியவனைக் கண்டு எல்லோரும் நகைத்தனர்.

நகரத்தின் மையத்திலிருந்த அந்தப் புடவைக் கடையின் உள்ளே நுழையும் போதே சரணுக்கு எரிச்சலாக இருந்தது. கல்யாணப் பெண்ணே பிடிக்கவில்லை இதில் அவள் கட்டப் போகும் புடவைப் பிடித்தாலென்ன? பிடிக்காவிட்டால் தான் என்ன? எல்லாம் இந்த அம்மாவைச் சொல்லணும் மனதில் நொந்து கொண்டே வந்தவன் கண்ணில் மதுமதி தென்பட்டாள். எளிமையான அலங்காரத்திலும் அழகாக இருந்தவளைக் கண்டு அவன் உள்ளம் தடுமாற… அவன் மீதே அவனுக்குக் கோபம் வர, அந்தக் கோபமெல்லாம் அவள் மீதே திரும்பியது.

‘பாம்புக் கூட அழகுத் தான் அதற்காக…’ தன் எண்ணம் செல்லும் திசையறிந்து முயன்று மனதை அடக்கியவன், நேரே ராமகிருஷ்ணனிடம் சென்றவன் அவரிடம் நலம் விசாரித்துப் பேச ஆரம்பித்தவன், அதன்பின் மதுமதி என்பவளை மறந்துத் தான் போனான்.

சுபத்ரா மதுமதியின் கையைப் பிடித்துத் தன்னருகில் அமர்த்திக் கொண்டு, ஒவ்வொரு புடவையாக அவள் மேல் போட்டு எது நன்றாகயிருக்கிறது என்று பார்த்தவர், அவளின் விருப்பத்தையும் கேட்கத் தவறவில்லை. ஹரிணியும் அன்னையுடன் சேர்ந்து அண்ணிக்கு எந்தப் புடவை நல்லாயிருக்கும் என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

மதுமதிக்குச் சரணைக் கண்டதும் அன்று அவன் பேசிய பேச்சு நியாபகம் வந்து கைக் கால் நடுங்க ஆரம்பித்தது. எவ்வளவு தைரியமான பெண் அவள்… ஏன் சரணிடத்தில் இவ்வளவு பயமென்று அவளுக்கே தெரியவில்லை. அவனின் குரலா? இல்லை கருமை நிறத்தில் ஆஜாகுபானுவாக இருந்த அவன் தோற்றமா எதுவென்று

தெரியவில்லை. ஆனால் அவனிடத்தில் பயந்துப் போயிருக்கிறாள் அது மட்டும் உண்மை.

“சரண்…” சுபத்ராவின் குரலில் திரும்பிப் பார்த்தச் சரண் ‘என்ன?’ என்பது போல் கண்களால் வினவ,

“இங்கே வா…” சுபத்ரா மீண்டும் அழைக்கவும்… வேறுவழியின்றி அங்கே வந்தவன், மதுமதியின் அருகில் நிற்கப் பிடிக்காமல் அம்மாவுக்கு மறுபுறம் வந்து நின்றான்.

“முகூர்த்தப் புடவை, சாந்திமுஹூர்த்தப் புடவையெல்லாம்… நீயும், மதியும் சேர்ந்து செலெக்ட் பண்ணுங்க. நாங்க கொஞ்சப் புடவைப் பார்த்து வைத்திருக்கோம். அதையும் ரெண்டு பேரும் பாருங்க. நானும் ஹரிணியும் மத்தவங்களுக்கு ட்ரெஸ் எடுக்கப் போகிறோம்” என்றவர் ஹரிணியையும், ராமகிருஷ்ணனையும் அழைத்துக் கொண்டு ஆண்கள் உடைகள் இருக்கும் தளத்திற்குச் சென்றார்.

தனித்து விடப்பட்ட மதுமதியோ சரணை நிமிர்ந்தும் பார்க்கவில்லை. அவளுக்குப் பயத்தில் கைக் கால் நடுங்க உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது. அவளுக்கு மேல் சரண் இருந்தான். அவனும் கையைக் கட்டிக் கொண்டு வேறுப்பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு யாருக்கு வந்த விருந்தோ என்று அமர்ந்திருக்க, கடை ஊழியர் குழம்பிப் போனவராய் இருவரையும் மாறி மாறிப் பார்க்க, வேறுவழியின்றிச் சரணே,

“புடவை நான் கட்டுவதில்லை. உனக்குப் பிடித்ததை நீ தான் செலெக்ட் செய்ய வேண்டும். சும்மா இப்படிப் பேசாமல் உட்கார்ந்து என் நேரத்தை வீணாக்காதே. உயிரை வாங்கிறதுக்குன்னு சில பேர் இருக்காங்க… ச்சே…” மதுமதியைக் கடிந்தவன், தனக்குத் தானே அலுத்துக் கொண்டான்.

மதுமதியின் கண்களில் நீர் அரும்பியது. இப்பொழுதெல்லாம் தான் எதற்கு எடுத்தாலும் இப்படித்தான் அழுகிறோம்? அந்தளவுக்காத் தான்

பலவீனமாகப் போனோமென்று மனதில் நினைத்தவள், ஒரு நிமிடம் கண்களை மூடிக் கொண்டு தன்னை அமைதிப்படுத்தியவள் சட்டென்று நிமிர்ந்தமர்ந்தாள். அவள் தாத்தா சொல்லிக் கொடுத்த பாடம் அவளுக்கு இப்பொழுது பயன்பட்டது. மளமளவென்று பத்தே நிமிடங்களில் தேவையான புடவைகளைத் தேர்ந்தெடுத்தவள், அதைப் பில் போட அனுப்பி விட்டு,

“போகலாமா…?” சரணைப் பார்த்துக் கேட்க, அவளின் வேகம் பார்த்துச் சரண் திகைத்துத் தான் போனான். அவள் தேர்ந்தெடுத்த புடவை நிறம் அனைத்தும் அவனுக்குமே பிடித்துத் தான் இருந்தது. ரசனை எல்லாம் ஒத்துப் போற மாதிரி மனமும் ஒத்துப் போயிருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும் என்று எண்ணியவன் ஒன்றும் பேசாமல் எழ, மதுமதியும் அவனைப் பின்தொடர்ந்து எழுந்தாள்.

இருவரும் மின்தூக்கியினுள் செல்லும் போது தான் அது நடந்தது. எங்கிருந்தோ வந்த நான்கு இளைஞர்கள் மதுமதியை இடிப்பது போல் உள்ளே செல்ல, சட்டென்று சரண் மதுமதியின் தோள் தொட்டுத் தன் பக்கமாய் இழுத்து, தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டவன், உள்ளே சென்றும் தன் கையைத் தளர்த்தவில்லை. போதாக் குறைக்கு அந்த நால்வரையும் முறைத்து வேறு பார்த்தான்.

மதுமதியோ அவனின் இந்தத் திடீர் செய்கையில் திகைப்புற்றுப் போய் அவனை நிமிர்ந்துப் பார்க்க, அவன் அவளைப் பார்த்தால் தானே அவனோ அந்த இளைஞர்களை அல்லவா முறைத்துக் கொண்டிருந்தான். அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவளின் மனதில் ஏதோ இனம் புரியாத உணர்வுகள் படையெடுத்தன.

அவளென்ன ஆண்களைப் பார்க்காதவளா… இல்லை அவர்களுடன் பழகாதவளா? அவள் பார்த்த, பழகிய ஆண்கள் எல்லாம் மேல் தட்டு வர்க்க ஆண்கள். அவர்களிடம் இது போல் ரௌத்ரத்தை எதிர்ப்பார்க்க முடியாது. இது போல் உரிமையை, சொந்தத்தைக் காண முடியாது. ஒருவன் மேலே வந்து இடித்தால் என்ன செய்யப்

பொது இடத்தில் கத்திச் சண்டை போடுவது அநாகரீகம் என்று சொல்வர். ஆனால் இவன் தனக்காக அவர்களை முறைக்கிறான்... விட்டால் அவர்களை அடித்து விடுவான் போலிருக்கே... . அவன் கை அணைப்பிலேயே அவள் அவனவள் என்ற உரிமையை உணர்த்துகிறான். அவனுக்குமே அவளைப் பிடிக்குமா என்று தெரியவில்லை... தனக்குப் பார்த்தப் பெண் என்ற ஒரே காரணத்திற்காகவே அவன் அவளைப் பாதுகாத்தது அவளுக்குப் பிடித்துத் தான் இருந்தது.

சற்றுக் கருமை தான் ஏன் அதை அவளே சுட்டிக் காட்டியவள் தான். ஆனால் இன்று அந்தக் கருமை அவள் கண்ணுக்குத் தென்படவில்லை. அவனின் கம்பீரமான ஆண்மை தான் அவள் கண்ணில் பட்டது. அவனின் ரௌத்திரம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. மொத்தத்தில் அவனை அவளுக்குப் பிடித்தது. அவள் மனம் அந்த நிமிடம் அவன் புறம் சாயத் தொடங்கியது. அவளையும் அறியாமல் அவள் அவனின் தோளில் தலைச் சாய, அவனிடமிருந்து வந்த அவனுக்கே உரித்தான நறுமணம் அவளுக்கு இதத்தை அளித்தது. எல்லாம் கொஞ்ச நேரம் தான் மின்தூக்கியின் கதவு திறந்ததும் வெளியில் வந்தவன், தன் அணைப்பிலிருந்த அவளைச் சட்டென்று உதறி விட்டுக் கையை விலக்கினான். அவனின் விலகலில் மதிமதியும் சுற்றுப்புறத்தை உணர்ந்து சுதாரித்துத் தன்னை நிலைப்படுத்திக் கொண்டாள்.

அங்கே தந்தையைப் பார்த்ததும் தான் சரண் மதிவதனாவிற்குப் பார்த்த மணமகன் என்பதே அவள் நினைவுக்கு வர, அவ்வளவு நேரமிருந்த இனிமை சட்டென்று மாறிப் போய் மனதில் வெறுமைக் குடிக் கொண்டது. மதிவதனா போல் அவள் நடிக்க வந்தவள் தான் இவ்வளவு ஏன் இந்தத் திருமணத்தில் கொஞ்சமும் இஷ்டமில்லாமல் தந்தைக்குக் கொடுத்த சத்தியத்திற்காகத் தான் அவள் உற்சாகமாயிருப்பது போல் காட்டிக் கொண்டிருந்தாள். மதிவதனா திருமணத்திற்கு முன் எப்பொழுது வந்தாலும் ‘இந்தா உன் புருஷன்’ என்று சரணை அவள் கையில் ஒப்படைத்து விட்டு விலகிப்

போவதற்குக் கூடத் தயாராகத் தான் இருந்தாள். அப்படியெல்லாம் செய்யத் தயாராய் இருந்தவள் முந்தைய மதுமதி.

ஆனால் இப்பொழுது இருக்கும் மதுமதியால் அப்படிச் சரணை மதிவதனாவிடம் விட்டுக் கொடுக்க முடியுமா என்றால் நிச்சயம் அவளால் முடியாது. இப்பொழுது தன்னிலைப் பயங்கரமாய் மாறியிருப்பதை உணர்ந்தவள் அதற்கான தீர்வு என்னவென்று அவளுக்கே தெரியவில்லை. தொழிலில் இக்கட்டான நிலைகள் பலவற்றை எளிதாக எதிர் கொண்டு அசால்ட்டாக அதைக் கையாண்டவளுக்கு இந்தக் காதலை எப்படிக் கையாளுவது? என்று தெரியவில்லை.

அதன் பின் எப்படிச் சுபத்ரா, ஹரிணி இவர்களிடம் பேசினாள்... எப்படி வீடு வந்து சேர்ந்தாள் எதுவும் அவளுக்கு நியாபகமில்லை. அவளின் நடவடிக்கையை விசித்திரமாய்ப் பார்த்தச் சரண் கூட அவள் கருத்தில் பதியவில்லை. வீட்டிற்கு வந்து தன்னறைக்குள் முடங்கியவள் மனம் பழைய நினைவுகளை நோக்கிச் சென்றது. அது அவள் வாழ்வின் வசந்த காலம். தாய் இல்லையென்றக் குறையைத் தவிர வேறு எந்தக் குறையும் அறியாதவள். இவ்வளவு ஏன் அம்மா என்ற நினைவே வராமல் மகாராணி போல் அவளைத் தாங்கியவர்கள் வளர்த்தவர்கள் அவளின் தாத்தாவும் பாட்டியும். அவர்களை நினைக்கும் போது அவர்களின் அருகாமையில் பாதுகாப்பாய் எந்தக் கவலையுமின்றிச் சிறகடித்த அந்த நாட்கள் திரும்ப வாராதா என்று அவள் மனம் ஏங்கத் தான் செய்தது.

மதுமதியின் தாத்தா சுந்தரம் பாட்டியின் பெயர் தேவகி. சிறு வயது முதல் பெற்றோரைப் பார்த்திராத மதுமதிக்கு தாத்தாவும் பாட்டியும் தான் எல்லாமும். மும்பையில் பெயர் சொல்லக் கூடிய தொழிலதிபர்களுள் சுந்தரமும் ஒருவர். அதிலும் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் அந்தளவிற்கு உயர்ந்திருக்கிறார் என்றால் அந்த வயதிலும் அவரது அயராத உழைப்பே அதற்குக் காரணம். அதிலும் மது பிறந்த

பின் இன்னமும் யோகம் வந்தது என்று பேத்தியிடம் அவ்வளவு செல்லம். தேவகியும் செல்லம் கொடுப்பதில் அவருக்குச் சற்றும் சளைத்தவரல்ல. ஆனால் அதில் கண்டிப்பும் கலந்திருக்கும். என்ன தான் நகரத்தில் வளர்ந்த நாகரீகப் பெண்ணாக மதுமதி இருந்த போதும் அவளுக்கென்று சில கட்டுப்பாடுகள் இருந்தது. அதற்கு உட்பட்டுத் தான் அவளும் நடந்து கொள்வாள்.

மதுமதிக்கு பதினைந்தாவது வயதில் தான் தேவகி அவள் அம்மாவைப் பற்றிய உண்மையைக் கூறினார். அது வரை தாயும் தந்தையும் விபத்தில் இறந்து விட்டதாகத் தான் எண்ணியிருந்தாள். தேவகி அம்மாள் சொல்லச் சொல்ல மதுமதியின் இதயம் தாய்க்காக ரத்தக் கண்ணீர் வடித்தது. மும்பைக்கு வருவதற்கு முன் அவர்கள் சென்னையில் தான் இருந்தனர். மதுமதியின் தாய் இவர்களுக்கு ஒரே மகள். நிரம்பச் செல்லம். அதிலும் வெகுளி வேறு. அதைப் பயன்படுத்தி யாரோ ஒருவன் அவளை ஏமாற்றி வயிற்றில் கருவைக் கொடுத்து விட்டு ஓடி விட, அவன் கொடுத்திருந்த முகவரியில் போய் விசாரித்த போது அது பொய்யான முகவரி என்று தெரிய, அதில் மனம் தளர்ந்தவர் தான் மதுமதியின் தாய், அதன் பின் அவர் மனதை யாராலும் மாற்ற முடியாது போயிற்று. குழந்தைக்காகவே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தவர் போல் மதுமதி பிறந்ததும் அவர் உயிரை விட்டார்.

மகளின் மறைவில் மனம் ஒடிந்திருந்த சுந்தரத்தை அவர் நண்பர் ஜெகன்நாதன் தான் மும்பைக்கு அழைத்து வந்தார். தங்களுக்கும் மாற்றம் தேவை என்பதை உணர்ந்து இங்கிருந்த சொத்துகளை விற்றுவிட்டு, மதுமதியுடன் மும்பைக்கு வந்தனர். அங்கு வந்த பின்பும் சொத்துக்களுக்கோ வசதிக்கோ சற்றும் குறைவில்லை. என்னயிருந்தும் மகளில்லாத வெறுமை அவர்களைத் தாக்கத்தான் செய்தது. அந்தக் குறையும் மதுமதி வளர வளர மறைந்து மறந்துப் போயிற்று. இதையெல்லாம் கேட்டப் பின்பு மதுமதி தனக்குத் தானே சில கட்டுப்பாடுகள் விதித்துக் கொண்டாள். என்ன தான் ஆண் நபர்கள் இருந்த

போதிலும் அவர்களிடம் அளவாகத் தான் பழகினாள். இன்னும் சொல்லப் போனால் சற்றுத் தள்ளியே தான் நின்றாள். அதில் ஜெகந்நாதனின் பேரன் ரிஷி மட்டும் விதிவிலக்கு. சிறுவயது முதல் அவனுடன் சேர்ந்து வளர்ந்ததால் சுந்தரமும் தேவகியும் அவர்கள் நட்பிற்குத் தடை விதிக்கவில்லை. பதினேழு வயதில் பாட்டியும் இறந்து விடத் தாத்தாவின் செல்லப் பேத்தியானாள்.

சுந்தரம் அந்த வயதிலேயே அவளைத் தொழில் கற்றுக் கொள்ளச் செய்து, சிறு வயது தானே என்று அவளை ஒதுக்கித் தள்ளாமல் முக்கிய முடிவுகளைப் பிரச்சனைகளை அவளிடம் கொடுத்துத் தீர்க்கச் சொல்வார். இயல்பிலேயே புத்திக் கூர்மைப் பெற்ற மதுமதி எந்தவொரு விசயத்தையும் அழகாகக் கையாண்டாள். சில சமயம் அது சரியாக வராத போது சுந்தரம் அவளிடம் ஆலாசனைக் கூறி அதைச் சரி செய்யவும் தவறவில்லை.

மதுமதி தன் படிப்பைத் தொடர்ந்து கொண்டே தொழிலையும் பார்த்துக் கொள்ள, சுந்தரத்திற்கு அவள் மேல் திருப்தி வந்து, சொத்துக்கள் அனைத்தையும் அவள் பேரில் மாற்றி எழுதினார். இப்படி நன்றாகச் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில் திடீரென்று சுந்தரம் நோய்வாய்ப்பட, அவளை அழைத்த சுந்தரம் அவளின் தந்தை ராமகிருஷ்ணன் என்று சொல்லி அவரைப் பற்றிச் சொல்ல, அதிர்ந்து போய்த் தாத்தாவின் முகத்தை அவள் பார்க்க, அவர் முழுவதும் சொல்வதற்கு முன் மூச்சு விடவே சிரமப்பட்டவர் கண்கள் தாமாகச் சொருக... அவரின் நினைவுத் தப்பியது. அதன் பின் அவர் நினைவுத் திரும்பாமலே மரணத்தைத் தழுவ, அவருடனே மதுமதியின் பிறப்பின் ரகசியமும் புதைந்து போனது.

தாத்தாவின் இறப்பினால் சோகமாக இருந்தவள் மெல்லத் தேறி தன் தந்தையைப் பற்றி அறிய முயன்றாள். தாத்தா சொன்ன அரைகுறை விசயத்தோடு ராமகிருஷ்ணனைத் தேடுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. ஆனால் அவளின் பணப் பலம் அதற்கு உதவியது. ராமகிருஷ்ணனைப் பற்றிய விவரங்கள் அவள் கைக்கு

வந்த போது அதிலிருந்த மதிவதனா புகைப்படம் பார்த்து ஆச்சிரியமடைந்தவள் அதே சமயம் ராமகிருஷ்ணன் மேல் கோபம் கொண்டாள். தன் தாயை ஏமாற்றியதும் இல்லாமல் கொஞ்சமும் மனசாட்சி இல்லாமல் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து பிள்ளையும் பெற்றிருக்கிறார். அதிலும் தன்னைப் போல ஒரு மகளை... அவளின் நெஞ்சம் கொதித்தது.

அப்பொழுதுத் தீர்மானித்தாள் அவரைப் பழிவாங்க வேண்டும்... அதுவும் அவர் விரல் கொண்டே அவர் கண்ணைக் குத்த வேண்டும். ஆம் மதிவதனா போல் தான் அங்கே போக வேண்டும்... அவளாகத் தான் மாறி... தன் இஷ்டம் போல் அவரைப் பழிவாங்க வேண்டுமென்றத் தன் எண்ணத்தைச் செயலாக்க எண்ணியவள் சென்னைக்குக் கிளம்புவதற்கு முன் மும்பை வீட்டை முதலிலிருந்து நிர்வகித்து வரும் மீராவிடமும், தொழிலைத் தாத்தா காலத்திலிருந்து இருக்கும் நம்பிக்கைக்குரியவரான சோப்ராவிடமும் ஒப்புடைத்து விட்டு நேரே சென்னை வந்தவள் முதலில் மதிவதனாவைத் தான் சந்தித்தாள்.

அதிலும் மதிவதனா பெரிதாக எந்த எதிர்ப்பும் இல்லாமல் ஒத்துக் கொண்டது அவளுக்கு ஆச்சிரியமாகயிருந்தது. இங்கு வந்தும் ராமகிருஷ்ணனைப் பழிவாங்க வேண்டும் என்று எண்ணியவளால் அதைச் செயலாற்றத் தான் முடியவில்லை. ஏனெனில் தந்தையின் பாசமில்லாமல் வளர்ந்தவள் ராமகிருஷ்ணன் காட்டிய அன்பில் அவள் சற்று நிலைக் குலைந்து தான் போனாள். இயல்பில் மதுமதியும் கெட்டவளில்லையே. அதனாலேயே அங்கு ஒட்டாத ஒரு வாழ்க்கையை வாழ ஆரம்பித்தாள். காலையில் சென்றாள் என்றால் இரவு தான் வந்தாள்.

ஒரு நாள் ராமகிருஷணன் அவளிடம்,
“மதிக்குட்டி உன் போன் ஏன் வேலைச் செய்யல? ஸ்விச்டு ஆப்ன்னு வருது”

மதுமதி என்ன சொல்வதென்று தெரியாமல் விழிக்க, அவளின் பதிலை எதிர்பாராமல் ராமகிருஷ்ணனே

தொடர்ந்தார், “என்ன மது போன் புதுசு போல் தெரிகிறதே?” அவர் கேட்டதும் தான் தாமதம் அவளின் மூளை வேகமாக வேலைச் செய்ய ஆரம்பித்தது.

“அது வந்து… போன் தொலைந்துப் போச்சு. அதான் புதுப் போன் வாங்கினேன்”

“ஓ… சரி… நம்பர் கொடும்மா” என்றவர் மகளின் எண்ணை வாங்கித் தனது கைப்பேசியில் பதிந்து கொள்ள, அந்த நிமிடம் அவளுக்குத் தோன்றியது அவரை அத்தனை எளிதில் ஏமாற்ற முடியாதென்று.

திடீரென்று ஒரு நாள் ராமகிருஷ்ணன் வந்து சரண் உன்னை நிச்சயம் பண்ண வருகிறான் என்று கூறியதும் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. திருதிருவென விழித்தவளை தன்னறைக்கு அழைத்துச் சென்ற ராமகிருஷ்ணன், ‘சரணைத் திருமணம் செய்து கொள்வேன் என்று சத்தியம் செய்து தா’ என்றதும் அவளுக்குமே பழிவாங்க நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததென்று கண்கள் மின்னப் பார்க்க, அதைக் கண்டு அவர் என்ன நினைத்தாரோ ஒரு புகைப்படத்தைக் காட்டி ‘அம்மா மீது சத்தியம் செய்’ என்றதும் தான் அதை உற்று நோக்கினாள். மதிவதனா சொன்னது போல் அவள் தாய் அவளைப் போல்… இல்லை இல்லை… அவர்களைப் போலல்லவா இருக்கிறார்கள்.

அப்படியென்றால் மதிவதனாவும் அவளும் ஒரு தாய் வயிற்று மக்கள் தானோ… இன்னும் என்ன சந்தேகமென்று தன் மனதைக் கடிந்தவள், வேறு எதைப் பற்றியும் யோசிக்காமல் தகப்பன் மனம் குளிர்வது போல் சத்தியம் செய்து கொடுத்தாள். அவள் செய்தப் பாவத்திற்கு, மதிவதனாவை அவரிடமிருந்து பிரித்த பாவத்திற்கு, அவளை எங்கோ விரட்டி அடித்ததுக்கு என்று என்னவெல்லாமோ நினைத்து நினைத்து உள்ளுக்குள் மருகி அழுதவள்… அழுதாள்… அழுதாள்… அழுது கொண்டே இருந்தாள். ராமகிருஷ்ணனால் கூட அவளைத் தேற்ற முடியவில்லை.

தந்தையிடம் செய்தச் சத்தியத்துக்காகச் சரணை மணக்க சம்மதித்த போதும் மதிவதனாவின் வாழ்க்கையைத் தான் வாழ்வதா என்று அவள் மனதில் உறுத்தல் இருக்கத்தான் செய்தது. அதனால் தான் நிச்சயத்தின் போது சரணிடம் அவனின் நிறத்தைச் சுட்டிக் காட்டி வெறுப்பாகப் பேசித் திருமணத்தை நிறுத்த முயற்சிச் செய்தாள். ஆனால் அவனோ திருமணத்தை நிறுத்தாமல் அவளின் பேச்சால் இந்தத் திருமணத்தை நடத்தியே தீருவேன் என்றல்லவா கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறான். அதிலும் அவனைச் சகித்துத் தானாக வேண்டுமென்றக் கோபம் வேறு… அவனா சகிக்க முடியாதவன்? இனி அவளால் அவனை மட்டுமே சகிக்க முடியும் என்பதை அவன் எப்பொழுது உணரப் போகிறான் நினைத்தவளுக்கு முகம் வெட்கத்தில் சிவந்தது. மறு நிமிடம் மதிவதனாவை நினைத்து முகம் தொங்கிப் போனது. சரணுடன் நடக்கவிருந்த இந்தத் திருமணத்தை அவள் எத்தனை தூரம் விரும்பினாளோ? சரணை எந்தளவு நேசித்தாளோ? அந்த நினைவே அவளுக்கு மூச்சு முட்டியது.

சிறிது நேரம் அழுது தீர்த்தவள் பின் தெளிந்தவளாய் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தமர்ந்தாள். தெளிந்த மன நிலையுடன் தன் தந்தையைத் தேடிச் சென்றாள்.

வரவேற்பறையில் அமர்ந்து தொலைக்காட்சிப் பார்த்துக் கொண்டிருந்த ராம கிருஷ்ணன் அருகில் வந்தமர்ந்தவள், “அப்பா நான் உங்கள் மடியில் படுத்துக் கொள்ளவா?”

“என்னடா மதுக்குட்டி இதற்கெல்லாமா பெர்மிசன் கேட்டுக்கிட்டு… வா…” மகளைத் தன் மடியில் படுக்க வைத்தவர், அவளின் தலையைக் கோத, அந்தச் சுகத்தில் கண் மூடியிருந்தவள் மெல்லப் பேச்சை ஆரம்பித்தாள்,

“அப்பா நான் ஏன் ஒத்தைப் பெண்ணாய் போனேன்? எனக்குத் தங்கையோ தம்பியோ இருந்தால் நல்லா இருந்திருக்கும்ல”

“யார் சொன்னது நீ ஒத்தைப் பெண்ணென்று... உன்னுடன் பிறந்த இரட்டைச் சகோதரி ஒருத்தி இருந்தாம்மா... ஏனோ தெரியல பிறந்தவுடனேயே அவள் இறந்துப் போக, அதை நினைத்து நினைத்து மருகி உன் அம்மாவும் இறந்துப் போனாள். தங்கச் சிலைப் போலிருக்கும் உன்னையும், கணவன் என்னையும் அவள் நினைத்துப் பாராமல் போய்ச் சேர்ந்து விட்டாள். ம்... இப்பொழுது நினைத்தாலும் வருத்தமாகத் தானிருக்கிறது. சரி உனக்கு ஏன் இவ்வளவு நாள் கழித்து இந்த எண்ணம் வந்தது?”

“அது... சும்மா தான் கேட்டேன். தம்பியோ தங்கையோ இருந்திருந்தால் அவர்களுடன் ஷாப்பிங் அது இதுன்னு வெளியில் போக வர என்று கலகலப்பாக இருந்திருக்கும் இல்லையா அதான் கேட்டேன்” பிறகு சந்தேகம் வந்தவளாய்,

“அப்பா நான் எந்த ஹாஸ்பிட்டல்ல பிறந்தேன்?”

“xxxxxx ஹாஸ்பிட்டல் ஏன்ம்மா ஏன் கேட்கிறாய்?”

'ஒண்ணுமில்லைப்பா...” என்றவள் மனம் வேகமாக யோசித்தது. அவள் பிறந்ததும் அதே மருத்துவமனையில் தான். அது அவள் பிறப்புச் சான்றிதழிலில் பார்த்திருக்கிறாள். சந்தேகமே இல்லை மருத்துவமனையில் நடந்த குளறுபடியால் தான் குழந்தை மாறியிருக்க வேண்டும் என்பது புரிந்து போனது. தான் மாறிப் போனதும் நல்லது தான் வயதான இரு ஜீவன்களுக்குச் சற்று நிம்மதிக் கொடுக்க முடிந்ததே என்று சந்தோசமாக எண்ணும் போதே, தன்னை நினைத்து தான் தன் தாய் இறந்து போனாள் என்று தெரிந்ததும் துக்கம் தொண்டையை அடைத்தது.

தன் தந்தை குற்றமற்றவர் என்று தெரிந்ததுமே மதிவதனாவைத் திரும்பத் தேடத் துவங்கினாள். அவள் பெண்கள் விடுதியிலிருந்தது வரை மதுமதிக்கு விபரம் தெரிய வந்தது. அதன் பின் அவள் என்னவானாள் என்பது தான் தெரியவில்லை. எங்கே போய் அவளைத் தேடுவது? அவளின் தந்தை இல்லை... அவர்களின் தந்தையை

அவளிடம் ஒப்புடைத்து விட்டு மும்பைச் செல்லலாம் என்ற அவள் நினைவு நிறைவேறாது போலவே. அடுத்துச் சரண்... அவனை அவ்வளவு எளிதில் விட்டுக் கொடுத்துப் போக முடியுமா? முடியாது தான். ஆனால் மதிவதனா வாழ்வையல்லவா இவள் பறிக்கயிருக்கிறாள். வேண்டாம் வேண்டாம்... அவன் மீதானத் தன் காதல் தன்னுடனே போகட்டும் என்று எண்ணித்தான் அவளைத் தேடியது. ஆனால் மதிவதனா கிடைக்காததைப் பார்த்தால் என்ன செய்வதென்று தெரியவில்லை.

என்ன தேடியும் விடை தான் கிடைக்கவில்லை பிறகு ஒருவழியாய் தன்னைத் தேற்றிக் கொண்டவள், மதிவதனா திரும்ப வந்தாளென்றாள் சரணை... தன் சரணை நினைக்கும் போதே... மறுபடியும் அவள் கண்ணில் கண்ணீர் நிரம்பியது. சரணை அவளுக்காக அவளிடம் விட்டுக் கொடுத்துப் போக வேண்டியது தான். அதுதான் தான் செய்தப் பாவத்திற்குப் பரிகாரம். அவளின் மீதி வாழ்க்கைக்குச் சரணின் நினைவுகள் மட்டும் போதும். முடிவு எடுத்த பின் மதுமதியின் மனம் தெளிந்த நீரோடை போலானது. மதிவதனா சரணை நேசித்திருந்தால் எப்படித் தன்னிடம் விட்டுக் கொடுத்துப் போயிருக்க முடியும்...? அதை விடச் சரணைப் பத்தித் தன்னிடம் ஏன் அவள் சொல்லவில்லை...? என்பதை எல்லாம் அவள் யோசிக்கவில்லை. யோசித்திருந்தால் பின்னால் வரப் போகும் பல விபரீதங்களைத் தவிர்த்திருக்கலாம்.

நடந்து முடிந்ததை மாற்ற முடியாது. நடக்கவிருப்பதைப் பார்ப்போமென்று எண்ணியவள் சரணுடனானத் திருமணத்தைச் சந்தோசத்துடன் கனவுகளுடனும் எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஆனால் அவளுக்கு நேர்மாறாய் சரணோ, மதுமதி தந்தையைப் பழிவாங்கவென்று எல்லோர் முன்னிலையில் சபையில் இந்தத் திருமணத்தை நிறுத்த முயற்சிப்பாளோ என்ற பயத்திலிருந்தான். மனம் முழுவதும் பயத்துடனும், குழப்புத்துடனும், வெறுப்புடனும் சரண் திருமண நாளை எதிர் நோக்கிக் காத்திருந்தான். இருவரின்

மனநிலையையும் பொருட்படுத்தாமல் திருமண நாளின் காலைப் பொழுது இனிமையாக விடிந்தது.

## மலர் : 7

“அண்ணா அய்யர் சொல்ற மந்திரத்தையும் கொஞ்சம் கவனிங்க. இனி அண்ணி எப்பவும் உங்க கூடத் தான் இருக்கப் போறாங்க” ஹரிணி சரணின் காதுக்கருகில் ரகசியமாகச் சொன்னதும் தான், தூரத்தில் நடந்து வரும் மதுமதியைத் தான் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பது புரிய, சரண் சட்டென்று பார்வையைத் திருப்பி மந்திரம் சொல்ல ஆரம்பித்தான்.

ஒன்றும் தெரியாதவள் போல் தன்னருகில் அமர்ந்திருக்கும் மதுமதியைப் பார்க்கப் பார்க்க அவனுக்குள் எரிச்சல் ஆத்திரம் எழுந்த அதே சமயம் பயமும் எழுந்தது. ஆம் பயமே தான்... தந்தையைப் பழிவாங்கப் போவதாகக் கூறிக் கொண்டிருக்கும் மதுமதி, அதற்கு இந்தத் திருமணத்தைப் பயன்படுத்த நினைத்தால் நினைக்கும் போதே தொண்டை வறண்டது. இத்தனை நாள் பாதுகாத்து வந்த தன் குடும்பக் கௌரவம் என்னாவது? தன் வீட்டார் நிலை, தன்னிலை, ஒன்றும் தெரியாத ராமகிருஷ்ணன் நிலை எல்லாவற்றையும் நினைத்தவன் நிலைப் பயங்கரமாக இருந்தது.

இதை அறியாத அய்யரோ மெதுவாக மந்திரம் சொல்லி ஒவ்வொரு சடங்காகச் செய்யச் சொல்ல அவன் பொறுமைக் காற்றில் பறந்தது. ‘யோவ் அய்யரே சீக்கிரம் தாலிக் கட்டச் சொல்லய்யா...’ மனதில் அவரைத் திட்டிக் கொண்டே அவர் செய்யச் சொன்னச் சடங்குகளைச் செய்தான். ஒரு வழியாய் தாலிக் கட்டும் நேரம் வந்ததும் தான் அவனுள் நிம்மதிப் பரவியது.

அனைவரின் ஆசிர்வாதத்துடன் சரண் மதுமதியின் கழுத்தில் தாலிக் கட்ட, முதல் முடிச்சு போட்டவன் கைத் தன்னிச்சையாக இரண்டாம் முடிச்சும் போட போனது. முதலிலிருந்தே அவன் எண்ணியது தான். அது தன்னவளுக்குத் தாலிக் கட்டும் போது மூன்று முடிச்சும் அவனே போட வேண்டுமென்று. ஆனால் இன்று மனம் விரும்பாத இவளுக்குத் தான் அப்படிச் செய்ய வேண்டுமா?

என்று எண்ணம் வர கை ஒரு நொடித் தயங்கியது. அவளுக்காகத் தான் ஏன் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற வீம்பு மனதில் எழ, மூன்று முடிச்சும் அவனே போட்டான். அதைத் தடுத்து நாத்தனார் முடிச்சுப் போட வந்த ஹரிணியின் கைகளைத் தடுத்தவாறு, அவன் முடிச்சிட்டதில் அவன் கை சற்று அழுத்தமாக மதுமதியின் தோள் மீது படிந்தது.

சரணுக்கு நேர்மாறாய் மதுமதி ஒவ்வொரு நிகழ்வையும் ரசித்து அந்த அனுபவம் தந்த இனிமையை விரும்பி மனதுக்குள் உள்வாங்கிக் கொண்டிருந்தாள். அதிலும் அவன் கைகள் அவள் தோளில் அழுத்தத்துடன் பதிந்ததில் முகம் வெட்கி, ஏற்கெனவே பூமாலைக்குள் ஒளிந்திருந்த முகத்தை இன்னமும் மாலைக்கிடையில் மறைத்தாள்.

அடுத்து அவள் நெற்றியில் குங்குமமிட வந்த சரண், அவளின் இந்தச் செய்கையை விசித்தரமாகப் பார்த்தவாறுத் திலகமிட, ‘உனக்காக நானிருக்கிறேன்’ என்று அவன் மனம் அவன் அனுமதியில்லாமலேயே அது பாட்டுக்குச் சொல்லியது கண்டு மனம் வெம்பித் தான் போனான். பெற்றோர் பார்த்தப் பெண்ணாக இருந்தாலும் அவளை முழு மனதோடு நேசித்துத் திருமணச் சடங்குகளை ஒவ்வொன்றாய் ரசித்து அதை அர்த்தமுள்ளதாய் மாற்ற வேண்டுமென்று அவன் நினைத்த நினைப்பில் இந்த மதுமதி இப்படி மண் அள்ளிப் போடுவாள் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. மதுமதியைப் பற்றி நினைத்ததும் மனதில் எழுந்த கசப்பை அவன் வாயிலிருந்த வெல்லத்தின் தித்திப்பால் கூட மாற்ற முடியவில்லை.

அடுத்து அக்கினியை வலம் வர மதுமதியின் கையைப் பிடித்த சரண், ‘இப்பொழுது பற்றிய அவள் கரத்தைக் காலம் முழுவதும் தொடர்ந்து பற்றியிருப்பேனா? இல்லை அவளின் செயலில் என்னையுமறியாமல் அவளை விட்டு விலகிச் சென்று விடுவேனா?’ மனதில் நினைத்தவனுக்கு முள் மேல் நிற்பது போன்ற தவிப்பு ஏற்பட, அதன் பின் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்திலும் அவனால் மனம் ஒன்ற

முடியவில்லை. இயந்திரத் தன்மையுடன் நடந்தவனுக்கு என்ன நடந்தது? யார் யார் வந்தார்கள்? என்ன பேசினான்? என்று கேட்டால் அவனுக்கே அது தெரியாது. மதுமதிக்கோ தாத்தா பாட்டி இல்லையே என்ற குறையைத் தவிர மற்றபடி மனதில் மகிழ்ச்சியுடனே காணப்பட்டாள்.

ராமகிருஷ்ணனைப் பிரியும் சமயம் மதுமதி அழுத அழுகையைப் பார்த்துச் சரண் ஆச்சிரியப்பட்டுப் போனான். பின்னே அவரைக் கட்டிக் கொண்டு 'ஓ'வென்று அழுதால் ஆச்சிரியமடையாமல் வேறென்ன நினைக்க முடியும். அதிலும் பழிவாங்கவென்று வந்தவள் திடீரென்று இப்படிப் பாசக்கார மகளாய் மாறிப் போன விந்தைத் தான் அவனுக்குப் புரியவில்லை.

'ஒரு வேளை இத்தனை சொத்தை பார்த்ததும் மனம் மாறி நல்லவள் போல் நடித்து இதையெல்லாம் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசையாகக் கூடயிருக்கலாம் யார் கண்டது? ம்ஹூம் ... இந்தச் சரண் இருக்கும் வரை அது மட்டும் நடக்காதுப் பெண்ணே. இதை எப்படிக் காப்பாற்றி மதிவதனா கையில் ஒப்படைக்க வேண்டுமென்று எனக்குத் தெரியும் உன் கடிவாளம் என் கையிலடி...' என வன்மத்துடன் நினைத்தவன் அவள் இன்னமும் அழுதுக் கொண்டிருப்பதைக் கண்டு எரிச்சலடைந்தவனாய்,

'ஹப்பா... உலகமகா நடிப்புடா சாமி... யாருகெல்லாமோ ஆஸ்கர் அவார்ட் கொடுக்கிறாங்களே அதை இவளுக்குத் தான் கொடுக்கணும்' மனதிலெழுந்த எரிச்சல் வாய் வார்த்தையாக வெளிவந்தது. "ரொம்பப் பாசமானவள் மாதிரி நடிக்க வேண்டாம். மனுஷன் எவ்வளவு நேரம் தான் நின்னுக்கிட்டிருப்பான். உன் நடிப்பை மூட்டைக் கட்டி வச்சிட்டு முதல்ல கிளம்பற வழியைப் பாரு" மதுமதியின் காதுக்கருகில் குனிந்து ரகசியமாய்ச் சொன்னவன் பிறகு ஒன்றும் தெரியாதவன் போல் முகத்தை வைத்துக் கொண்டான்.

மதுமதி நிமிர்ந்துச் சரணைப் பார்த்தவள் அவன் முகத்திலிருந்து அவளால் எதையும் கண்டு பிடிக்க

முடியவில்லை. ஏன் அப்படிச் சொன்னான்? எதற்கு அப்படிச் சொன்னான்? அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுக்கு ஏதும் விஷயம் தெரிந்து இருக்குமோ அந்த நினைவே அவளுக்குக் குளிரை உண்டாக்க, அன்று அவன் அழைத்த மது என்றழைப்பு இப்பொழுது அவன் பேசியதெல்லாம் சேர்த்து அவள் மனதில் பயத்தைக் கிளப்பியது.

இரவின் தனிமையில் அவனைச் சந்தித்த போதும் அந்தப் பயம் போகவில்லை. அறைக்குள் வந்தவள் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் சரணைக் கண்டு பயந்து அவள் தலையைத் தானாகக் கவிழ, கால்கள் இருந்த இடத்தை விட்டு நகர மறுத்தது.

“அப்படியே திரும்பப் போய் விடுவதாக உத்தேசமோ? ஏய் இங்கே வா…” அவனின் ஏக வசனத்தில் மனதிலிருந்த கொஞ்ச நஞ்சத் தைரியமும் பறந்தோட முடுக்கி விடப் பட்டப் பொம்மை போல் நடந்து அவனருகில் வந்தாள். மறந்தும் குனிந்தத் தலை நிமிரவில்லை.

“காலில் விழுந்துக் கும்பிடும் நல்ல பழக்கமெல்லாம் கிடையாதா…?” அவனின் பேச்சில் சொன்னதைச் செய்ய, அதைக் கண்டு சரணின் முகம் ஒளிர்ந்தது. ‘இருடி உன்னை ஓட ஓட விரட்டுறேன்’ மனதுக்குள் கருவி கொண்டான்.

வெகு நேரம் கழித்தும் சரண் தன்னைத் தூக்காததால் மதுமதி தானே எழ, அவள் எழுவதற்காகவே காத்திருந்தவன் போல் ஒரு கையால் விளக்கையும், மறு கையால் அவளையும் அணைக்க, அவனின் செயலில் மதுமதி திகைத்துத் தான் போனாள். அவளைத் தொடுகிறவன் அவள் கணவன் தான்… அவள் அவனை நேசிக்கிறாள் தான்… ஆனாலும் அவளால் அவனின் இந்த இயந்திரத்தனமான செயலை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவளும் பெண் தானே அவளுக்கும் மனமென்று ஒன்றிருக்கிறது. அதில் திருமணம், கணவன் பற்றிய ஆசைகள் மலையளவு இருக்கிறது.

மனம் விரும்பியவனை மணம் முடித்தாலும் இது அவள் சகோதரி வாழ வேண்டிய வாழ்வு அல்லவா. அவளின் வாழ்வைத் தான் எப்படிப் பங்குப் போட முடியும்? சரண் மதிவதனாவின் மன்னவன் அல்லவா என்னயிருந்தாலும் இவள் பாதியில் போக வேண்டியவள் தானே. அப்படிப்பட்டவள் இன்று அவனோடு கலந்தால் அது தனக்கு மட்டுமல்ல உண்மைத் தெரிந்தால் சரணுக்குமே அவமானமல்லவா? சரண் மதிவதனாவிற்குரியவன் என்ற எண்ணம் எழுந்ததும் மனதோடு அவனுடன் கலந்தவள் உடலோடு அவனுடன் கலக்க முடியாமல் தவித்தாள்.

“வேண்டாம்ங்க... ப்ளீஸ்... நாம ஒருத்தரை ஒருத்தர் நல்லாப் புரிஞ்சதுக்கு அப்புறம்...” கண்களில் இறைஞ்சுதலோடு கேட்டவளைக் கண்டு அவன் மனம் கொஞ்சமும் இறங்கவில்லை.

“ஹ... என்னைவிட உன்னை யாரும் நல்லாப் புரிஞ்சியிருக்க முடியாது. உன்னைப் பத்திப் புரிஞ்ச வரைக்கும் எனக்குப் போதும்” சொல்லியவாறு அவள் இதழில் தன் இதழை முரட்டுத்தனமாய்ப் பதித்தவன் அதற்கு மேல் அவளைப் பேசவிடவில்லை.

தன்னால் முடிந்த வரை அவனுக்கு எதிர்ப்புக் காட்டினாள்... திமிறினாள்... அவளின் எதிர்ப்பை எல்லாம் சரணின் இறுகிய அணைப்பு ஒன்றுமில்லாததாய்ச் செய்ய, கடைசியில் அவன் நினைத்ததைச் சாதித்து முடித்த பின் தான் அவளை விட்டான். அவன் விட்டதும் தான் தாமதம் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல் மதுமதி குளியலறைக்குள் சென்று கதவைச் சாத்தினாள்.

அவள் உடல் முழுவதும் வலியெடுத்து வேதனை ஏற்படுத்த, அவளின் நிலையறிந்து மனமோ மௌனமாய் ரத்தக் கண்ணீர் வடித்தது. அவனின் தொடுகையில் காதல் கொஞ்சமுமில்லை காமமும் கடமையும் போட்டிப் போட்டுக் கொண்டு உறவாடியதைத் தான் அவளால் தாங்க முடியவில்லை. மனம் அருவருத்து அவளுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. இரவு சாப்பிட்ட உணவுவெல்லாம் வாந்தி

எடுத்தவள் அதற்கு மேல் வாந்தி எடுக்க ஒன்றுமில்லை என்று புரிந்ததும் முகத்தைக் குளிர்ந்த நீரால் அடித்துக் கழுவித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

‘இப்போ என்ன நடந்ததென்று இப்படி அழுது குமைகிறாய்? யாரோ ஒருவனா உன்னைத் தொட்டான்... உன் கணவன் தானே... உன் காதலன் தானே...’ மனம் அவளைச் சமாதானம் செய்தது. ஆனால் மதிவதனா திரும்ப வந்தால் எல்லாவற்றையும் இருந்தது போல் அப்படியே அவளால் திருப்பிக் கொடுக்க முடியும். ஆனால் சரணை... தன்னுடன் கலந்து விட்டச் சரணை எப்படி அவளால் முதலிலிருந்த சரணாகக் கொடுக்க முடியும். மதிவதனா என் வாழ்க்கையை நீ வாழ்ந்து விட்டாயே என்று முகத்தில் காரி உமிழ மாட்டாளா? தொழிலில் எத்தனையோ பிரச்சனைகளைத் தைரியமாகக் கையாண்டத் தன் தைரியம் எங்கே போனது? அவளுக்கே அது தெரியவில்லை. மீண்டும் ஒரு மூச்சு அழுது முடித்தவள் முகத்தைக் கழுவி கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

மதுமதி வருவதற்காகவே காத்திருந்தவன் போல் அவள் படுத்ததும், சரண் அவளைத் தன் கைக் கொண்டு அருகில் இழுத்தவன் அவளை அணைக்க, இந்த முறை மதுமதி பலம் கொண்ட மட்டும் திமிறினாள். அவளைத் தன் இரு கைக் கொண்டு அடக்கியவன்,

“ஏன் இந்தக் கறுப்பனை உன்னால் சகிக்க முடியவில்லையா? என்ன செய்வது இந்த ஜென்மத்தில் உன் கணவன் நான் தான்... நான் மட்டும் தான். வேறுவழியில்லை செல்லம்... என்னைச் சகித்துத் தானாக வேண்டும். ஆனால் என் தொடுகை... அப்படியொன்றும் உனக்குப் பிடிக்காதது போல் தெரியவில்லையே” அவள் கண்ணுக்குள் உற்றுப் பார்த்தபடிக் கேட்டவனைக் கண்டு திகைத்தவள், தன் மனத்தைக் கண்டு கொண்டானே என்று மனம் வெட்கி மறுபக்கம் முகத்தைத் திருப்பினாள்.

அதையும் தவறாக எடுத்துக் கொண்ட சரண், “என்னிடம் இந்த மாதிரி முகத் திருப்பலை வைத்துக் கொள்ளாதே”

அவள் முகத்தைத் தன் புறம் வலுக்கட்டாயமாகத் திருப்பி அவள் இதழில் கதை எழுத ஆரம்பித்தான். அது தொடர் கதையாகத் தொடர்ந்ததை எதிர்க்க திராணியில்லாமல் அவள் அதிர்ந்து போயிருக்க, அவளைப் பற்றியோ, அவளின் மனதைப் பற்றியோ கொஞ்சமும் அக்கறை இல்லாதவனாய் சரண் சற்று முன்பு விட்டக் கதையை அவளின் பூ மேனியில், முன்பை விட அழுத்தமாக எழுதத் தொடங்கினான்.

## மலர் : 8

“மது...” சரண் கத்தியைக் கத்தலில் அவனுக்குக் காபிக் கொண்டு வந்த மதுமதி உடல் தூக்கி வாரிப் போட... கையிலிருந்த காபிக் கோப்பையைத் தவற விட, அது கீழே விழுந்து நொறுங்கியது. சூடான காபி அவள் கையில் பட்டு எரிச்சலை ஏற்படுத்த, “ஸ்... ஆ...” வலியில் துடித்தபடிக் கையை உதறினாள்.

“காபிக் கூட ஒழுங்கா எடுத்துட்டு வரத் தெரியல... வந்த முதல் நாளே இப்படியா... உன்னையெல்லாம் கட்டிக்கிட்டு...?” அதற்கும் அவளைத் திட்டிவிட்டு, “ஏய் இன்னும் என்ன யோசனை? அப்படியே பராக்குப் பார்த்துகிட்டிருக்க... நான் கூப்பிட்டது உன் காதில் விழுந்ததா இல்லையா?”

கையிலிருந்த எரிச்சலை விட அவன் பேசிய வார்த்தைகள் ஏற்படுத்திய எரிச்சல் அதிகமாக மனதை வலிக்க, ஒன்றும் பேசாமல் அவன் முன்னே போய் நின்றாள். அவன் முகத்தைப் பார்க்கும் துணிவுக் கூட அவளிடமில்லை. ‘மது உன் தைரியம்... உன் துணிச்சல் எல்லாம் எங்கே போனது?’ மனதின் கேள்விக்கு அவளிடம் விடையில்லை.

“என்னயிது...?” அவளைச் சுட்டிக் காட்டி அவன் கேட்டதில் ஒன்றும் புரியாமல் அவள் தன்னை மேலும் கீழும் பார்க்க,

“இது என்ன ட்ரெஸ்ன்னு கேட்டேன்?”

‘ஏன் இந்தச் சுடிதார்க்கு என்ன வந்தது? ஆபாசமாக இல்லாமல்... அதே சமயம் அழகாக இருக்கும்... இதற்கென்ன வந்தது?’ மனதுக்குள் நினைத்தவள் அதை வாய்விட்டு அவனிடம் சொல்லாமல் அவனின் பேச்சிற்கான அர்த்தம் விளங்காமல் மலங்க மலங்க விழித்தாள்.

“புடவைன்னு ஒண்ணுயிருக்கு... அது உனக்குத் தெரியுமா? இல்லையா?”

‘தெரியும்...’ என்பது போல் அவள் தலையாட்ட, ‘ஏதாவது பேசறாளான்னுப் பாரு நான் தான் கேனையன் மாதிரிக் கத்திக்கிட்டிருக்கேன்?’ மனதில் நினைத்தவன், “கேள்விக் கேட்டால் பதில் சொல்லணும்... அதை விட்டுட்டு இப்படித் தலையாட்டுற வேலையெல்லாம் என்னிடம் வேண்டாம்” கறாராகக் கூறியவனைக் கண்டு, அவள் மீண்டும் தலையாட்ட, அவன் ஆத்திரத்தில் தீப்பார்வை பார்க்க, அவனின் பார்வையைக் கண்டதும் தான் செய்தச் செயல் அவளுக்குப் புரிய,

“சரி...” மெதுவாய் சொன்னவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

“இங்கே பாரு... உன் வீட்டில் நீ என்ன ட்ரெஸ் போட்டியோ? எப்படியிருந்தியோ? எனக்குத் தெரியாது? ஆனால் இங்கே என் இஷ்டப்படித்தான் ட்ரெஸ் பண்ணனும். எனக்குப் புடவைக் கட்டினால் தான் பிடிக்கும். அதனால் இந்தக் கூடார ட்ரெஸை போட்டுட்டு என் முன்னால் வராதே... என்ன புரிஞ்சதா? போ... போய்ப் புடவைக் கட்டும் வழியைப் பாரு” அவளின் பதிலை எதிர்பாராமல் குளியலறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டான்.

சரண் சென்றதும் அருகிலிருந்த சுவற்றில் சாய்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவள் பின் சுதாரித்துச் சிந்தியக் காபி, உடைந்த கோப்பையை அவசரமாக அகற்றிச் சுத்தம் செய்தவள், அதன் பின் அலமாரித் திறந்துத் தான் கொண்டு வந்திருந்த புடவைகளைப் பார்வையிட்டாள். மும்பையிலிருந்து வரும் போது புடவை

ஏதும் அவள் எடுத்து வரவில்லை. ராமகிருஷ்ணன் தான் திருமணத்திற்காகப் புடவைகள் வாங்கிக் குவித்திருந்தார்.

‘இப்பொழுது அது நல்லதாகிப் போச்சு’ என்றெண்ணியவள் எலுமிச்சை நிறத்தில் வெண் முத்துக்கள் கொண்டு பூ வேலைப்பாடு செய்திருந்த புடவையை எடுத்துக் கட்டியவள், அதற்குப் பொருத்தமாக எளிமையான முத்து நகைகள் அணிந்து முதுகு வரை நீண்டிருந்த முடியைத் தளரப் பின்னியவள் கண்ணாடியில் தன் முகம் பார்த்தாள்.

அவளுக்கே அவளைப் புதிதாகப் பார்ப்பது போலிருந்தது. அவள் அழகி தான் இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் இன்று ஏனோ புதிதாகத் தான் இன்னமும் அழகாகயிருப்பது போல் தோன்றியது. கழுத்தில் புதிதாக ஏறியிருந்த மஞ்சள் தாலிக் கயிறா… இல்லை தாம்பத்திய ரகசியம் தெரிந்ததில் உண்டான பரவசத்தில்… அதனால் எழுந்த மகிழ்ச்சியாலா… எதனால் என்று? அவளுக்குத் தெரியவில்லை. அழகாயிருப்பது மட்டும் உண்மை… சிறுது நேரம் தன்னை ரசித்தவள் சரண் எந்நேரமும் வந்து விடுவான் என்று பயந்து வேகமாக அறையை விட்டு வெளியேறினாள்.

கீழே வந்ததும் சுபத்ரா அவளை அருகில் அழைத்து, “இந்தப் பூவை வச்சுக்கோ” மல்லிகைப் பூவையெடுத்து அவள் தலையில் வைத்துவிட்டு, அவளைத் திருப்பி அழகுப் பார்த்துத் திருஷ்டிக் கழிப்பது போல் கையைக் கொண்டு அவள் முகத்தை வழித்தவர், “எவ்வளவு அழகாய் இருக்கிறாயம்மா. என் கண்ணே பட்டு விடும் போலிருக்கு” என்றவருக்குப் புன்னகையையே பதிலாகக் கொடுத்து விட்டு, மீண்டும் காபிக் கலந்து சரணுக்கு எடுத்துச் சென்றாள். இந்த முறை அவன் அதட்டிப் பேசினாலும் பயப்படாமல் காபியை அவன் கையில் கொடுத்து விட வேண்டுமென்று உறுதி மொழி எடுத்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தாள்.

கண்ணாடியைப் பார்த்துத் தலைக் வாரிக் கொண்டிருந்த சரண் அறைக் கதவு திறக்கும் சத்தம் கேட்டுக்

கண்ணாடியின் வழியே யார்? என்று பார்க்க, அங்கே மெதுவாக அறைக்குள் நுழைந்த மதுமதியைக் கண்டு கண்ணிமைக்க மறந்தான். தேவதை எப்படி இருக்குமோ அவனுக்குத் தெரியாது? ஆனால் அதையெல்லாம் விட அழகு தன் மனைவி என்று அந்தக் கணம் அவனுக்குப் புரிந்தது. பிடிக்காத மனைவியாக இருந்தாலும் அவனும் உணர்ச்சிகள் நிறைந்த ஆண்மகன் தானே… தன்னை மறந்து அவளை ரசித்தான். தான் சொன்னதற்காகப் புடவைக் கட்டியிருக்கும் அவளின் அழகை விழிகளால் பருகினான். எல்லாம் கொஞ்ச நேரம் தான்… அவள் வந்திருப்பதன் நோக்கம் நினைவு வர அவன் முகம் பாறைப் போல் இறுகியது.

“காபி…” அவன் திரும்பிப் பார்க்காததால் ஒருவேளை அவன் தன்னைக் கவனிக்கவில்லையோ என்ற எண்ணத்தில் அவள் அவனை அழைக்க, “ம்… தெரியுது… இங்கே வச்சிட்டுப் போ” என்றவன், “ஒரு நிமிஷம்… நான் சாப்பிட வர அரை மணி நேரமாகும். எதுவாக இருந்தாலும் நீ தான் எனக்குச் சமைக்க வேண்டும் என்ன புரிந்ததா?”

சரியென்று தலையாட்டப் போனவள் அவன் சொன்னது நியாபகம் வர, “சரி…” வாய் திறந்துப் பதிலளித்தவள் அடுத்த நிமிடம் அங்கில்லை.

சாப்பிட அமர்ந்த சரணுக்கு அவன் சொல்லாமலே மதுமதியே பரிமாறினாள். அதற்கும் ஏதும் சொல்வானோ என்ற எண்ணத்தில் தான் அவள் அவ்வாறு செய்தது. தோசையைப் பிட்டுச் சட்னியில் தொய்த்து ஒரு வாய் வைத்தவன் ‘தூ…’ என்று துப்பினான். தட்டை மதுமதியின் புறம் கோபமாய்த் தள்ளியவன்,

“சட்னிக் கூட உன்னால் ஒழுங்கா வைக்க முடியலியா? உப்பில்லாமல் வெறும் காரம் மட்டுமிருக்கு” சரண் எல்லோர் முன் திட்டியதில் மதுமதியின் கண்ணில் கண்ணீர் அரும்பியது. ஆனாலும் சட்னியில் உப்பைப் போட மறந்த தன் மறதியை எண்ணித் தன்னைக் கடிந்துக் கொள்ளவும் அவள் தவறவில்லை.

“டேய் சரண் என்னயிதுப் புதுப் பழக்கம்? உப்பில்லை என்றால் போட்டுச் சாப்பிட வேண்டியது தானே. அதற்கு ஏன் மதியைத் திட்டுகிறாய்? ஆனால் சரண் இதை நான் உன்னிடம் எதிர்பார்க்கவில்லை. என்னானது உனக்கு? தாயில்லாப் பெண் மதி. இதையெல்லாம் அவளுக்குச் சொல்லித் தர ஆளில்லாமல் போயிருந்திருக்கும். கற்றுக் கொடுத்தால் பழகிக் கொள்ளப் போகிறாள்” சுபத்ரா திட்டியதும் சரணுக்குக் கோபம் தலைக்கேறியது.

நேற்று வந்த இவளுக்குப் பரிந்து கொண்டு தன் அன்னை அதுவும் அவள் முன்னிலையில் தன்னைத் திட்டியது அவனுக்குப் பிடிக்கவில்லை. அதுவும் மனம் முழுவதும் கெட்ட எண்ணத்துடன் இருக்கும் மதுமதியின் முன்னிலையில் திட்டியதை அவனால் தாங்க முடியவில்லை.

“அப்படியென்றால் அம்மா இருக்கும் பெண்ணாய் பார்த்து முடிப்பதற்கு என்ன? போயும் போயும் இவள் தான் கிடைத்தாளா… என் தலையில் கட்டுவதற்கு” மதுமதியை எப்படியும் காயப்படுத்தி விடும் நோக்கத்தில் கூறியவன் மதியின் முகம் சற்றுக் கூம்பியதைக் கண்டு மனம் திடுக்கிட, தான் பேசியது சற்று அதிகப்படித் தானோ என்ற எண்ணம் அவனைத் தடுமாற வைக்க, கையை உதறிக் கொண்டு எழுந்தவன், வேகமாக அங்கிருந்து வெளியேறினான்.

மதுமதி சரணின் வார்த்தையில் மனம் உடைந்து அழ ஆரம்பிக்க, சுபத்ரா தான் அவளை அணைத்து ஆறுதல் படுத்தினார்.

“அவன் கிடக்கிறான் மடையன்… என்னானது என்று தெரியவில்லை? முதலிலெல்லாம் நல்லாத்தான் இருந்தான். வீட்டிலேயே அவன் தான் ரொம்பப் பொறுமைசாலி, விட்டுக் கொடுத்துப் போகிறவன் மற்றவர் மனம் புரிந்து நடந்து கொள்கிறவன். அப்படிப்பட்ட அவன் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான்னு தெரியல? ஆனால் ஒண்ணு மட்டும் உண்மை… திருமணத்திற்கு முன்

உன்னை ஹாஸ்பிட்டல்ல பார்த்தப் போதே பிடித்திருந்ததாய்ச் சொன்னான். அதன் பின் உன் வரன் வரவும் சந்தோசத்துடன் தான் திருமணத்திற்குச் சம்மதித்தான். இப்பக் கொஞ்ச நாளாத்தான் அவன் சரியில்லை. ஒருவேளை ஏதாவது பிசினெஸ் டென்சனாக இருக்கலாம். நீ கவலைப்படாதே. அவன் நல்லவன் அதை மட்டும் நீ நியாபகத்தில் வைச்சுகிட்டாப் போதும். தேவையில்லாமல் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே... என்ன மதி?”

“சரி அத்தை...” இன்னமும் மதுமதியின் முகம் தெளியாதைக் கண்டு, “உப்புச் சப்பில்லாத விசயத்துக்கு அவன் தான் கோபப்படுறான்னா நீயும் அதை நினைச்சுட்டு இப்படியிருக்கியேம்மா?”

“அத்தை உண்மையில் உப்பே இல்லாமல் சப்பென்று இருந்ததுக்குத் தான் இவ்வளவு கோபம்” மதுமதி கள்ளங்கபடமற்றுச் சொல்ல, அவளின் நகைச்சுவையில் சுபத்ரா சிரிக்க... அவருடன் சேர்ந்து அவளும் நகைத்தாள்.

“அத்தை அவர் சொல்வது போல் அம்மா இல்லாமல் வளர்ந்தவள் நான். சமையலறைப் பக்கம் போய்ப் பழக்கமில்லை. முதலில் எப்பவும் படிப்புப் படிப்பென்று இருந்தேன். அதன் பின் பிசினெஸ் பிசினெஸ் என்றிருந்து விட்டேன். சமையல் பழகாததுக்கு இப்பொழுது வருத்தப்படுறேன். அம்மா போல் நீங்கள் இருந்து... எனக்குச் சமையல் சொல்லித்தாங்க”

“உன் பொறுமையைப் பார்க்கும் போது எனக்குச் சந்தோசமாயிருக்கு. உனக்குக் கத்துக் கொடுக்காமல் வேறு யாருக்கு கத்துத் தரப் போறேன். இன்னைக்கே சொல்லித் தர்றேன்” மருமகளை ஆறுதலாக அணைத்துக் கொண்டார் சுபத்ரா.

அறைக்குச் சென்றுவிட்டு மீண்டும் அலுவலகத்திற்குச் செல்ல கீழே வந்த சரணின் காதில் மதுமதி பேசியது விழ, ஒரு கணம் கண்களை மூடித் திறந்தவன் மறுகணம் வேகமாகத் தன் காரை நோக்கி நடந்தான்.

அலுவலகம் வந்த சரண் வேலை செய்யத் தோன்றாமல் அப்படியே தன் இருக்கையில் சாய்ந்து கண் மூடி அமர்ந்தான். இந்தத் திருமணத்தால் அவனின் இயல்பான சுபாவமே மாறி விட்டதை உணர்ந்து அவன் மீதே அவனுக்குக் கோபம் வந்தது. இதற்கெல்லாம் காரணம் அந்த மதுமதி தான்... அவளை... பல்லைக் கடித்தவனால் தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அவள் சொன்ன வார்த்தைக்காக அவளை வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்து அவள் வேண்டாம் வேண்டாமென்று மறுத்தும் அவனது பலத்தால் அவளை வென்று சுகித்திருக்கிறான். மேலோட்டமாகப் பார்த்தால் அவனின் செயல் காமக் கொடூரனின் செயல் போல் தெரியும். ஆனால் அதற்கெல்லாம் காரணம் அவள் அவனை இழிவுப்படுத்திப் பேசிய வார்த்தைகள் அவனின் காயப்பட்ட மனம் இவ்வாறு செய்து தன்னை ஆற்றிக் கொண்டது.

என்னத்தான் தான் செய்தது சரியென்று அவன் வாதிட்டாலும், 'நீ செய்தது கொடூரம் தான் ஒரு பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதி தான்' அவன் மனசாட்சிக் கேட்டக் கேள்விக்கு அவனிடம் பதிலில்லை. எத்தனை இனிமையாய்த் தொடங்கியிருக்க வேண்டிய வாழ்வு... காமமும் கடமையும் போட்டிப் போட... அதில் காதல் கிஞ்சித்தும் இல்லாமல் தான் அவளுடன் கலந்ததை நினைத்துப் பார்த்தவனுக்கு அந்த நினைப்பு ஏனோ நெஞ்சில் வலித்து... கண்களில் நீரைத் துளிர்க்க வைத்தது.

இதற்கெல்லாம் காரணம் அந்த மதுமதி தான். அவள் அவன் நிறத்தைக் கிண்டலடித்ததோ இல்லை அவனின் அழகைக் கிண்டலடித்துப் பேசியது கூடப் பரவாயில்லை என்று விட்டு விடலாம். ஆனால் பழிவாங்க வந்த ஒருத்தி... அதுவும் கேடுகெட்ட ஒருத்தி... அவனை இகழ்வதா? அதற்குத்தான் அவளைத் திருமணம் செய்து அவளுடன் வலுக்கட்டாயமாக வாழ்ந்தும் விட்டான். 'இனி அவள் எங்கே போகப் போகிறாளாம்? இனி வாழ்நாள் முழுவதும் இந்தக் கறுப்பனைச் சகித்துத் தானே ஆக வேண்டும்.

இன்னைக்குக் கொடுத்தது பத்தாது இன்னமும் இருக்குடி உனக்கு' என்று கறுவிக் கொண்டவன் மனதிலிருந்தது எல்லாம், கோபம்... கோபம்... கோபம்... மட்டுமே...

அந்தக் கோபத்தை அவன் கொஞ்சம் ஒதுக்கி வைத்துப் பார்த்திருந்தால் அவனுக்குப் புரிந்திருக்கும். அவளைத் தான் ஏன் வலுக்காட்டயமாகத் திருமணம் செய்தது, அவள் விருப்பமில்லாமல் அவளைத் தொட்டது, காலையில் அவள் அழகைத் தன்னை மறந்து ரசித்தது, அவள் முகம் வாடியதைக் கண்டு மனம் பொறுக்காமல் அங்கிருந்து வெளியேறியது, அம்மாவிடம் அவள் பேசிய வார்த்தைகள் கேட்டு ஒரு நிமிடம் தயங்கிய கால்களை வலுக்கட்டாயமாகப் பிரித்தெடுத்துக் காரை நோக்கி நடந்தது இதற்கு எல்லாம் காரணமென்ன? என்று புரிந்திருக்கும். அதில் அவன் மனமும் தெள்ளத்தெளிவாக அவனுக்குப் புரிந்திருக்கும்... தெரிந்திருக்கும். காலம் கடந்து புரியும் போது... தெரியும் போது... காலம் அவனுக்குச் சாதகமாக அமையுமா?

## மலர் : 9

மாலை நேர இளம் வெயில் மனதுக்கும் உடம்புக்கும் இதம் தர, மதுமதி அந்தத் தோட்டத்தை வேடிக்கைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள். கண்கள் என்னவோ தோட்டத்தைப் பார்க்க, மனமோ சரணையே நினைத்துக் கொண்டிருந்தது. அவள் சரணைச் சந்தித்த நாள் முதல் இப்பொழுது வரை நடந்ததெல்லாம் நியாபகம் வர அவனின் செயலுக்கான அர்த்தத்தை அறிய முயன்றாள்.

முதன் முதலில் அவனைச் சந்தித்த போது, தான் பேசிய பேச்சு சற்று அதிகப்படித் தான்... எந்தவொரு காரியத்தையும் திட்டமிட்டுச் செய்யும் தான் அப்பொழுது எந்தத் திட்டமிடலும் இல்லாமல் பேசியது தவறு தான்... அதான் அவன் இவ்வளவு கோபமாய் இருக்கிறான். அதிலும் அவன் மதுவென்று அழைத்தது, அப்பாவைப் பிரிய மனமில்லாமல் அழுதப் போது நடிக்காதே என்று அவன் சொன்னது எல்லாம் நியாபகம் வர அவனுக்கு ஏதும் தன்னைப் பற்றித் தெரிந்திருக்குமோ என்ற எண்ணம் தோன்ற... அவளுக்கு முதுகுத் தண்டுச் சில்லிட்டது.

அத்தைக் கூடச் சொன்னார்களே திருமணத்திற்கு முன் மருத்துவமனையில் அவளைப் பார்த்து விரும்பியதாக... நிச்சயம் அது மதிவதனாவாகத் தான் இருக்க வேண்டும். அதற்குப் பின் தான் மாறியது அவனுக்குத் தெரிந்து... தான் மதிவதனா அல்ல என்று புரிந்து, வேறு வழியின்றித் தன்னை மணம் புரிந்ததால் மதிவதனாவுடன் வாழ வேண்டிய வாழ்வைத் தன்னுடன் வாழ வேண்டிய நிர்பந்தம் வந்ததால் இப்படி நடந்து கொள்கிறானோ?

‘ச்சே... ச்சே... அது எப்படி அவனுக்குத் தெரியும்? ஒன்று நான் சொல்ல வேண்டும், இல்லை மதிவதனாச் சொல்ல வேண்டும் இரண்டும் இப்போதைக்கு நடக்க வாய்ப்பில்லை. ஏதோ என் மேல் உள்ளக் கோபத்தில் என்னை நோகடிக்க வேண்டுமென்று அவன் இது போல் பேசுகிறான். பேசட்டும் எவ்வளவு வேண்டுமானாலும் பேசட்டும் நான் செய்தக் காரியத்திற்கு, செய்தத் தப்பிற்கு

யார் தான் தண்டனைக் கொடுப்பது? அது அவன் கொடுத்ததாய் ஏற்றுக் கொள்கிறேன். உண்மையறிந்தால் அப்பாவும் என்னைத் தண்டிக்க மாட்டார். மாறாக அன்பைத் தான் பொழிவார். மதிவதனா சொல்லவே வேண்டாம். இப்பொழுதே ஏதோ அவள் உணரப் போய்த்தான் என்னை அப்பாவிடம் விட்டுவிட்டுப் போயிருக்கிறாள். எல்லோரும் பாசம் காண்பிக்க யாரவது ஒருத்தர் என்னைத் தண்டிக்க வேண்டாமா? அது சரணாக இருந்து விட்டுப் போகட்டுமே’

நினைத்தவளுக்கு அவனின் தண்டனைகள் நியாபகம் வர, முதல் நாள் இரவும் சேர்ந்து நியாபகம் வந்தது. அப்படியொன்றும் அவன் தொடுகையைத் தான் ரசிக்காமல் இல்லையே. அவன் மதிவதனாவிற்கு உரியவன் என்ற நினைவு மட்டும் இல்லையென்றால்... அவள் விருப்பத்துடன் அவனிடம் சரணடைந்திருப்பாளே. இப்பொழுது நினைத்து என்ன செய்வது? என்று வருந்தியவள் இங்கிருக்கும் வரை சரணுடன் மனம் ஒன்றி வாழ்வது என்று தீர்மானித்தாள். அவன் தீயாகக் காய்ந்தாலும் அவள் சற்றும் கவலைப்படப் போவதில்லை. அவன் சொன்னது போல் இந்த ஜென்மத்தில் அவள் கணவன் அவன் மட்டுமே.

அது நாள் வரை யாரும் அவளை உரிமையாய் அதட்டியதில்லை, வேலை வாங்கியதில்லை இப்படி அவள் செய்த வேலைக்கு யாரும் அவளைத் திட்டியதில்லை. அவள் தான் எல்லோரையும் அதட்டியிருக்கிறாள், வேலை வாங்கியிருக்கிறாள், எல்லோரும் அவள் செய்த வேலைகளைப் பாராட்டித்தான் பழக்கம். அப்படி அவன் அதட்டியது, வேலை வாங்கியது, திட்டியது எல்லாம் அவளுக்குப் பிடித்திருந்தது. அந்த அளவிற்கு அவள் தனிமைப்பட்டுப் போயிருந்தாள்.

இப்பொழுது அவளுக்கே அவளுக்கென்று அவள் சரண் இருக்கிறான். கோபப்பட்டாலும் அவளை அன்று போல் பாதுகாக்க அவனிருக்கிறான். அவன் அருகாமையில் அவள் மனமும் நிறைந்து தான் இருக்கிறது. இயல்பிலே அவன் கெட்டவனில்லை. என்றாவது ஒரு நாள் அவன்

மனம் மாறும். தன் மேல் அன்பைப் பொழிவான்... நம்பிக்கை அவளுள் எழுந்தது. மும்பையில் பெரிய தொழிற் சாம்ராஜ்யத்தின் தலைவிச் சரணின் அன்பிற்காக ஏங்கி நின்றாள். எல்லாம் யோசித்தவள் அவனின் நடத்தைக்கான காரணம் என்ன? திருமணத்திற்கு முன் மதிவதானவை நேசித்திருந்தால்... அவளைப் போலிருக்கும் தன்னை அவன் ஏன் நேசிக்காமல் எப்பொழுதும் கோபம் கொள்கிறான்? என்று எதைப் பற்றியும் அவள் யோசிக்கவுமில்லை... ஆராயவுமில்லை...

வேலை முடித்து வந்த சரண் கண்ணில் தோட்டத்தில் சோக சித்திரமாய் அமர்ந்திருந்த மதுமதி தான் தென்பட்டாள். அவளின் சோகம் மனதில் பதிந்தாலும் அவளின் மீதான கோபம் தலைத் தூக்க, எல்லோரையும் படுத்தியெடுத்து விட்டு ஒன்றும் தெரியாதவள் போல் முகத்தை வைத்துக் கொள்வது இவளுக்குக் கை வந்த கலைப் போல என்றெண்ணியவன், அவள் அருகே போய் நின்றான்.

“புருஷன் வருவது கூடத் தெரியாமல்... அப்படி என்ன கனவு...?” நக்கலான அவன் பேச்சில் திடுக்கிட்டு நிமிர்ந்தவள், அங்கே சரணைக் கண்டதும் நிதானமாக எழுந்தாள். முன்பிருந்த பயம் அவளிடத்திலில்லை மாறாகச் சிறு புன்னகையுடன் அவனைப் பார்த்தாள்.

“இப்ப என்ன இளிப்பு வேண்டியிருக்கு? போ... போய்க் காபிக் கொண்டு வா” என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் வீட்டினுள் செல்ல,

‘ம்ஹும்... இந்த டயலாக்கை இவன் மாற்றுதாயில்லை...’ மனதுக்குள் நகைத்தவள், அவன் முதுகுக்குப் பின் பழிப்புக் காட்டியபடி அவனைத் தொடர்ந்தாள்.

இரவில் முந்தைய நாள் போலருகில் வந்தவனை அவள் தள்ளவில்லை. மாறாக அவனுடன் அவளும் ஒன்றினாள். ஆனால் அது எதையும் அவன் உணரும் நிலையிலில்லை. அவனுக்கு அவளை எப்படியாவது காயப்படுத்தி விட வேண்டும். அதற்கு அவள் வேண்டாம் என்று சொன்ன இந்தக் கூடலை ஆயுதமாகக் கையிலெடுத்துக்

கொண்டான். அந்த ஆயுதம் அவளைக் குத்தி கிழிக்குமென்று அவன் நினைக்க, அவளோ அதை மலர்க்கணையாக மாற்றி அந்த மலரில் மாலைத் தொடுத்து அவனுக்கே திருப்பிச் சூட எண்ணினாள்.

“ஸ்… ஸ்…” அவளின் மெல்லிய முனங்கல் சத்தம் கேட்டு அவன் ஆர்வம் அடங்கியவனாய் அவள் முகம் பார்க்க, அவளோ அவன் கைப்பிடியிலிருந்த தன் கையைப் பார்த்தாள். அவள் பார்வையைத் தொடர்ந்து அவன் தன் கையை விலக்கி அவள் கையைப் பார்க்க, அவள் கைச் சூடுப்பட்டு நீர்க் கொப்பளமாய்க் கொப்பளித்து இருந்தது. அவனின் கோபம், மூர்க்கமெல்லாம் சட்டென்று வடிய அவளை விட்டு விலகியவன், சூட்டுக் காயத்திற்குப் போடும் மருந்தை எடுத்து வந்து மென்மையாக அவள் கையைப் பற்றித் தடவிவிட, மென்மையான அவன் செய்கை அவள் மனதை வருட… அவனின் குனிந்த தலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“எப்படி ஏற்பட்டது?” அவள் முகம் பாராமல் அவன் வினவ.

“சமையல் கத்துக்கும் போது…”

“ஓ…” என்றவன் வேறு எதுவும் பேசவில்லை.

அவனின் செயலில் நெகிழ்ந்திருந்த மனம் அவனுக்குச் சாதகமாக யோசிக்க ஆரம்பித்தது. இது தான் இவனின் உண்மையான முகம். அத்தைச் சொன்னது போல் இவன் நல்லவன் தான். தன்னிடத்தில் மட்டும் தான் இவ்வளவு கோபம் கொள்கிறான். இவன் மனதை மாற்றுவது எளிது என்று நினைத்தவள் காதலுடன் அவனைப் பார்த்துக் கொண்டிருக்க, சரணோ அவளின் பார்வையை அறியாது காரியத்தில் கண்ணாயிருந்து மருந்துப் போட்டவன் கையைக் கழுவி கொண்டு வந்து படுத்தான்.

தன்னருகில் படுத்திருந்த மதுமதியை அவன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. கண் மூடிப் படுத்தவன், அவள் தூங்கியது உணர்ந்ததும் மெல்லக் கண் திறந்து அவளைப் பார்த்தான். மெல்லிய வெளிச்சத்தில் சிறு குழந்தை போல் உறங்கும்

அவளைப் பார்த்ததும் அவனுக்குள் ஏதோ ஒன்று புரண்டது. தனக்காகச் சூடு பட்டேனும் சமையலைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற அவள் ஆர்வம் கண்டு அவன் மனதில் ஏனோ இதம் பரவியது.

‘ஏன் மது நீ பொய்த்துப் போனாய்? எனக்கு நல்லவளாய் நீ அறிமுகம் ஆகியிருக்கக் கூடாதா? உன்னிடம் நான் வசதி எதிர்பார்க்கவில்லை, படிப்பை எதிர்ப்பார்க்கவில்லை, அழகை எதிர்பார்க்கவில்லை. எல்லோருக்கும் நல்லது செய்யும் நல்ல மனதை, அன்பை எதிர்பார்த்தேனே… அது ஏன் உன்னிடமில்லை? ஏன் நீ நல்லவளாக இல்லாமல் போனாய்?” அவன் மனம் ஊமையாக அழுதது.

******************************************

“மது…” காலையிலேயே கத்திய சரண் குரல் கேட்டுப் பதறியடித்து அறைக்குள் வந்த மதுமதி, அங்கே அவன் இல்லாதது கண்டு எங்கே என்று தேட, அவன் குளியலறையில் இருந்து தலையை வெளியில் நீட்டி,

“ஏய் ஷாம்பூ முடிஞ்சா…. எடுத்து வைக்க மாட்டியா? எல்லாம் எடுத்துச் சொல்லிக்கிட்டே இருக்கணும். உன் கிட்ட கத்திக் கத்தியே என் ஆயுள் முடிஞ்சிடும் போலிருக்கு” கத்தியவனைக் கண்டு ஒன்றும் பேசாமல் அவன் கேட்டதை எடுத்துக் கொடுத்தவளைக் கண்டு, அவன் ரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது.

‘வாயைத் திறக்கிறாளான்னுப் பாரு… ஊமைக் கோட்டான்… ஊமைக் கோட்டான்…’ மனதில் அவளைத் திட்டியபடி, தன் ஆத்திரத்தைக் கதவில் காண்பிக்க, அது படாரென்று சத்தத்துடன் மூடியது.

தன் மீது கோபத்தைக் காட்ட முடியாமல் கதவில் கோபத்தைக் காட்டும் கணவனை நினைத்து மனதில் சிரித்துக் கொண்டாள் மதுமதி. இரவில் அவனிடமிருந்த கரிசனம் காலையில் காணாமல் போயிருப்பதைக் கண்டு, ‘இரவிலிருந்த காதல் மன்னன் போய்ப் பகலில் முசுட்டு மன்னன் அவதாரம் வெளியில் வந்து விட்டது. மது

இப்படியே அமைதியை கையாண்டேன்னு வை.... அவனே தனியாக் கத்திக் கத்தி வெறுத்துப் போய் ஒரு நாள் திட்டுறதையே விட்டுடப் போறான்' மனதில் சொல்லிக் கொண்டவள் காதில் மீண்டும் சரண் குரல் கேட்டது.

“என்ன நின்னுக்கிட்டே கனவா? ரொம்ப நல்லது... போ... போய் அடுத்த வேலை என்னனுப் பாரு” சரண் அடுத்தென்ன பேசியிருப்பானோ... ஆனால் அதைக் கேட்க அவள் அங்கேயில்லை.

“மது அதைச் செய்... மது இதைச் செய்...” அவன் அலுவலகம் கிளம்பும் வரை அவளைப் படுத்தியெடுக்க, அவளும் அவன் கேட்டதை முகம் மாறாமல் செய்தாள். ஒரு கட்டத்திற்கு மேல் சுபத்ராவால் தான் பொறுக்க முடியவில்லை.

“சரண் ஏண்டா அவளைப் படுத்தற. அவள் வருவதற்கு முன் இந்த வேலைகள் எல்லாம் நீ தானே செய்த. இப்ப மட்டும் என்ன?”

“ம்... எனக்கு வேண்டுதல்?” அம்மாவிடம் பதில் சொன்னவன் மனைவியை நோக்கி மறுபடியும் கத்தினான். “மது...”

“சரண் அவள் பெயர் மதி தானே நீ ஏன் மதுன்னு கூப்பிடற?” சுபத்ரா குழப்பமாய்ப் பார்க்க,

“என்ன மது... அம்மா கேட்கிறாங்கள்ல ஏன்னு சொல்லு?”

சரண் எதனால் இப்படி அழைக்கிறான் என்று அன்று அவன் சொன்னது நியாபகம் வர, மதுமதியின் முகம் வெட்கத்தால் சிவந்தது. மருமகளின் சிவந்த முகத்தைப் பார்த்த சுபத்ரா சின்னஞ்சிறுசுகள் இடையில் ஏதோ ரகசியம் என்று நாகரீகமாக அங்கிருந்து விலக, வெட்கப்படும் மனைவியின் முகத்தை ஏதோ வேற்றுக் கிரகவாசி போல் பார்த்துக் கொண்டு சென்றான் சரண். அவன் அலுவலகம் போன பின்தான் மதுமதிக்கு ‘அப்பாடா’ என்று மூச்சு விட முடிந்தது.

நாட்கள் பறந்து செல்ல மதுமதி ஒருவாறு அந்த வீட்டின் பழக்க வழக்கங்களை முக்கியமாகச் சரணின் எண்ணங்களைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப நடந்து கொள்ள ஆரம்பித்தாள். இப்படிப்பட்ட நிலையில் ஒரு நாள் சரண் தன் உடைகளைப் பெட்டியில் அடுக்கிக் கொண்டு வெளியில் கிளம்பினான். அவன் ஏதும் சொல்வானென்று அவன் முகம் பார்த்தவளைக் கண்டு ஒன்றும் சொல்லாமல் அவளைத் தாண்டி சென்றவன் திரும்பாமலேயே, “பெங்களூர் செல்கிறேன் வர நான்கு அல்லது ஐந்து நாட்களாகும்” அவளின் பதிலை எதிர்பாராமல் அங்கிருந்து வேகமாக வெளியேறினான்.

## மலர் : 10

“மாமா கல்யாணம் எப்படி நடந்தது? அப்பா எப்படியிருக்காங்க? அவர் உடல்நலம் இப்பொழுது எப்படியிருக்கிறது? அப்புறம் மது எப்படியிருக்கிறாள்? இன்னும் கோபத்துடன் தான் இருக்கிறாளா? அவள் அப்பாவைப் பழிவாங்கன்னு தப்பா நடக்கலையே? எனக்குத் தான் அப்பாவைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை” தந்தையின் நினைவில் குரல் கம்மியது மதிவதனாவுக்கு.

“உன் அப்பா ரொம்ப நல்லாயிருக்காங்க. மகள் திருமணம் முடிந்ததில் ஒரு சுத்து எடைக் கூடிட்டாங்கன்னாப் பார்த்துக்கோ. மாமாவைப் பத்தின கவலையை விடு. நான் அவரைப் பத்திரமாப் பார்த்துக்கிறேன். இந்தா நீ கேட்டியே... கல்யாணா சிடி...”

“மதுவைப் பத்தி நீங்க சொல்லவே இல்லையே...” அவன் கையிலிருந்து சிடியை வாங்கிக் கொண்டே அவள் கேட்க,

“ம்... அவளுக்கென்ன எல்லாரையும் படுத்தியெடுத்துட்டு நல்லா... சௌக்கியமாயிருக்கா. ஆனா ஒண்ணுப் பழிவாங்கன்னு வந்தவ ஏனோ சத்தமில்லாமல் அமைதியாயிருக்கா. அது என்னைக்கு வெடிக்குமோ தெரியல” முணுமுணுவென்றக் குரலில் சொல்லியவன் முகம் கோபத்தைக் குத்தைக்கு எடுத்திருந்தது.

“மாமா உங்களுக்கு... மது மேல் ஏதும் கோபமா?” அவள் சற்றுக் கவலையுடன் கேட்க,

கணவன், மனைவி அந்தரங்கத்தை அவளிடம் வெளிச்சம் போட்டுக் காண்பிக்க விரும்பாதவனாய் பேச்சை மாற்றினான். “அவள் மேல் எனக்கு என்ன கோபம்? அவளும் நானும் சந்தோசமா இருக்கோம். அப்புறம் மறந்துட்டேன் இந்தா... உங்க ஹோட்டல் கணக்கு வழக்கெல்லாம் இதிலிருக்கு. சரியா இருக்கான்னுப் பார்த்துக்கோ” ஆம்... ராமகிருஷ்ணன் தொழிலைச் சரணே

பார்த்துக் கொண்டான். மதுமதியின் கையில் அவளை நம்பி ஒப்புடைக்க அவனுக்கு விருப்பமில்லை.

“என்னிடம் எதுக்கு மாமா இதெல்லாம் கொடுக்கிறிங்க? அப்பாவிடம் கொடுத்தால் போதும். இல்லை... மதுவிடம் கொடுங்களேன் அவள் பார்த்துக் கொள்வாள்”

“மதுவா...? வேண்டவே வேண்டாம்” அவசரமாக மறுத்தவன் அவளின் முக மாறுதலைக் கண்டு,

“அவள் திறமையை நீங்களே வைத்துக் கொண்டால் எப்படி? எனக்குப் பிசினெஸில் அவள் ஹெல் பண்ண வேண்டாமா? அதான் அங்கே உள்ள யூனிட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லியிருக்கேன். சரி அவளை விடு மாமாவிடமும் காண்பித்து விட்டுத் தான் உன்னிடம் கொண்டு வந்தேன். நீயும் இதைச் சரி பார்த்துச் சொல்லு” சரளமாய் அவள் நம்பும்படி பொய் கூறினான்.

“சரி கொடுங்க...” மதிவதனா அதை வாங்கிக் கொள்ள,

“மதி நீ போய் அந்த ஏற்றுமதிப் பொருட்களைச் சரி பார்த்துட்டு வா. ஏதாவது சின்னத் தப்பிருந்தாலும்... உடனே சரி செய்யச் சொல்லு”

“நான் பார்த்துக்கிறேன் நீங்க கவலைப்படாம உங்க வேலையைப் பாருங்க” புன்னகை முகத்துடன் கூறி விட்டுச் சென்றவளைக் கண்டு அவன் முகம் கனிந்தது.

‘பெண்ணென்றால் இவள் பெண் எனக்கென்று வாய்த்திருக்காளே... எப்பொழுது பார்த்தாலும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு...’ மதுமதியை நினைத்ததும் அவன் முகம் எரிச்சல் கொண்டது. அந்த எரிச்சலில், கோபத்தில் அவன் கணினியை உயிர்பிக்க, அந்தோ பரிதாபம் அது உயிர்ப்பிப்பேனா என்று அடம் பிடித்தது.

‘எனக்குன்னு வாய்க்கிறதே பொண்டாட்டியிலிருந்து... கம்ப்யூட்டர் வரை... ச்சே...’ மனதில் நொந்தவன் கண்ணில் மதிவதனாவின் மேசை மேலிருந்த கணினிப் பட அங்கே சென்றான்.

மதிவதனாவின் கணினியை உயிர்பித்தவன் அதன் திரையில் வந்த உருவத்தைக் கண்டு ஆச்சிரியமடைந்தான். அது அவன் தம்பி ஹரிஹரனின் புகைப்படம் அல்லவா. அவன் புகைப்படம் மதியிடம் எப்படி? என்று நினைத்தவன் கண்ணில் அவன் மேசை மேலிருந்த குடும்பப் புகைப்படம் கண்ணில் பட்டது. அதிலிருந்து ஹரியின் புகைப்படத்தை மட்டும் தனியே எடுத்திருக்கிறாள். அவள் விரும்புவது ஹரியைத் தானா? பாவம்... விரும்பியவனின் அண்ணன் பெண் கேட்டு வருவானென்று கொஞ்சமும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டாள். அவளிடத்தில் யாராக இருந்தாலும் இதைத் தான் செய்வார்கள்.

‘சரி ஹரிக்கு இவளைத் தெரியுமா? தெரிந்திருந்தால் முதன்முறையாகப் பார்த்தப் போதே கூறியிருப்பானே. ஆம்... மதியின் புகைப்படம் பார்த்ததும் காலையில் தான் பார்த்து விட்டு வந்ததாகக் கூறினானே... ஓ! அப்படியென்றால் முதல் சந்திப்பிலேயே மதி ஹரியிடம் விழுந்து விட்டாளோ? எது எப்படியோ மதி விரும்புவது ஹரியைத் தான்’ இனி தன் வேலை சுலபமென்று நினைத்த சரணின் மனம் வெகு நாட்களுக்குப் பின் சந்தோசமாகயிருந்தது.

சரண் இல்லாத நாட்களை மதுமதி உபயோகப் பூர்வமாய்க் கழித்தாள். சுபத்ராவிடம் சமையல் கற்றுக் கொண்டாள். எப்பொழுதும் அவருடனே சுற்றிக் கொண்டிருக்க, அவருக்கும் எல்லாவற்றையும் தன்னிடம் கேட்டுக் கேட்டுச் செய்யும் மதுமதியை ரொம்பப் பிடித்துப் போயிற்று. சுபத்ரா தவிர மதுமதிக்கு மிகவும் பிடித்த ஒரு ஜீவன் உண்டு அது தாத்தா வைத்தியநாதன்.

மதுமதி தன் தாத்தா நினைவில் வைத்தியநாதனிடம் ஒட்டிக் கொண்டாள். அவருக்கு ராமாயணம் முதல் தற்போதைய ஜூனியர் விகடன் வரை எல்லாவற்றையும் வாசித்துக் காட்டினாள். ஒருநாளைக்கு இரண்டு மணி நேரமாவது அவருடன் நேரத்தைச் செலவழிக்கத் தவறுவதில்லை. நேரம் கிடைக்கும் போது அப்பாவையும் பார்க்கப் போனாள்.

அவரிடம் கொஞ்சிக் குலாவி அவரையும் சந்தோசப்படுத்தி விட்டு வந்தாள்.

இதற்கிடையில் சுபத்ராவுடன் ஹரிணி வீட்டிற்குச் சென்றாள். அங்கு ஆகாஷுடன் விளையாடிப் பொழுதை கழித்தாள். இப்படிப் பகலில் மற்ற வேலைகள், யோசனைகள் மனதிலிருந்ததால் சரணின் நியாபகம் வரவே இல்லை. இரவு மட்டும் அவன் நியாபகம் வரும். அதிலிருந்து தப்பிக்கப் பகல் பொழுதில் வேலையை இழுத்துப் போட்டுச் செய்தவள் இரவில் உடல் களைப்பில் அயர்ந்து தூங்கினாள்.

இவ்வளவுக்கும் இடையில் மும்பைக்குத் தொடர்பு கொண்டு பேசவும் மறக்கவில்லை. மீராவிடம் வீட்டு நிர்வாகத்தைக் கேட்டவள், சோப்ராவிடம் தொழில் பற்றிக் கேட்டறிந்துக் கொண்டாள். அலைப்பேசியிலுள்ள சிசி கேமிரா மூலம் வீட்டையும் தொழிலையும் தன் நேரிடைப் பார்வையில் வைத்திருந்தவள், அங்கு நடந்த சிறு சிறு தவறுகளையும் அவர்களுக்குச் சுட்டிக் காட்டி, அதைச் சரி செய்யச் சொல்லவும் தவறவில்லை.

ஒருநாள் ராமநாதனும் ஹரியும் தொழில் சம்பந்தப்பட்ட விசயம் ஏதோ பேசிக் கொண்டு சரியான தீர்வு கிடைக்காமல் குழம்பிக் கொண்டிருந்தார்கள். விசயம் இதுதான் அமெரிக்கா நிறுவனம் ஒன்றிற்கு அவர்கள் ஏற்றுமதி செய்திருந்த ஆடைகளில் ஏதோ சிறு தவறு இருந்தது என்று அந்த நிறுவனம் அதைத் திருப்பியனுப்ப, மொத்தச் சரக்கும் இவர்களிடமே திருப்பி வந்துவிட்டது. இப்பொழுது அதை என்ன செய்வது? அதனால் ஏற்பட்ட நஷ்டத்தை எப்படிச் சரி கட்டுவது? என்று ஒன்றும் புரியாமல் இருவரும் முழித்தனர்.

சரண் பெங்களூர் சென்றிருப்பதால் அவனைத் தொந்திரவு செய்ய அவர்களுக்கு விருப்பமில்லை. அவர்களைப் பார்த்த மதுமதிக்கு அவர்கள் பேசியது புரிந்தாலும் எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். தானாக ஏதாவது சொன்னால் அதிகப்பிரசங்கி என்று சொல்லி

விடுவார்களோ என்றெண்ணிப் பேசாமலிருந்தாள். அதைச் சுபத்ரா கண்டு கொண்டார்.

“மதி உனக்கு ஏதேனும் தெரிந்தால் ஆலோசனை சொல்லும்மா”

சுபத்ரா கூறியதைக் கேட்ட ராமநாதனும், “உனக்குத் தெரிந்தால் கூறம்மா... எங்களுக்கு ஒன்றும் பிடிபட மாட்டேங்குது”

“ஆமாம் அண்ணி... சரண் இருந்தால் எளிதாக இதைத் தீர்த்திருப்பான்... அவன் வேறு இங்கில்லை. இதற்கான தீர்வை நீங்களே சொல்லுங்களேன்” ஹரியும் தன் பங்கிற்குக் கூற,

“சரணின் அறிவு அவன் பொண்டாட்டிக்கு இல்லாமலா போகும். மதி நீ சொல்லம்மா” வைத்தியநாதனும் ஊக்கம் கொடுக்க மதுமதி தன் கருத்தைக் கூறலானாள்.

“மாமா அந்தச் சட்டையில் பை வைக்குமிடத்தில் தானே ஸ்டிச்சிங்கில் சின்னத் தப்பு நடந்திருக்கு. அதில் கொஞ்சம் எம்பிராய்டரி வொர்க் மாதிரி ஏதாவது வேலைப்பாடு செய்து, இங்கே லோக்கலில் விற்கலாம். மத்த ஸ்டேட்க்கும் அனுப்பி வைக்கலாம். இதை வாங்கும் கம்பெனிகள் இங்கு நிறைய உள்ளது. என்ன லாபம் நாம் நினைத்தைவிடக் கொஞ்சம் குறைவாகத் தான் கிடைக்கும். நான் சொல்வதில் ஏதும் தவறிருந்தால் என்னை மன்னிச்சுக்கோங்க மாமா” அவள் சொல்லச் சொல்ல அனைவரும் ஆச்சிரியமாக அவளைப் பார்த்தனர். சிக்கலான விஷயத்தைச் சுலபமாகத் தீர்க்க வழிச் சொன்ன அவளைப் பிரமிப்பாய் பார்த்தனர்.

“நீ சொல்வதில் தவறே இல்லம்மா. ஒன்றுமே கிடைக்காமல் நஷ்டமடைவதுக்கு இது எவ்வளவோ பரவாயில்லை. தேங்க்ஸ் மருமகளே...”

ராமநாதன் உணர்ச்சிப் பெருக்கில் தன் நன்றியைத் தெரிவிக்க, அதன் பின் எல்லோரும் மனதார அவளைப்

பாராட்ட, தொழிற் முறையில் எத்தனையோ பாராட்டைக் கம்பீரமாய் ஏற்றவள் இவர்களின் பாராட்டில் முகம் சிவந்து வெட்கப்பட்டுச் சுபத்ராவின் பின்னே மறைந்துக் கொண்டாள். அதற்குப் பின் ராமநாதனும் சரி... ஹரியும் சரி... தொழிலைப் பற்றி அவளிடம் விவாதிக்காமல் இருந்ததில்லை. சரண் இல்லாத இந்த ஐந்து நாளில் அந்த வீட்டிற்கு மதுமதி இன்றியமையாதவள் ஆகிவிட்டாள்.

*************************************************

“மதி இன்னும் எத்தனை நாள் தான் இப்படி ஒளிந்து வாழப் போற. பேசாமல் என் கூட வா. மாமாவிடம் நான் எடுத்துச் சொல்கிறேன். மது ஏதும் பிரச்சினைப் பண்ணுவாள்ன்னு நீ நினைச்சேன்னா அதை நான் பார்த்துக் கொள்கிறேன்” சரண் மதிவதனாவைத் தன்னுடன் வரச் சொல்லி அழைத்தான். அவனுக்குமே அவள் இப்படி யாருமற்றவளாய் இங்கே இருப்பதில் கொஞ்சமும் விருப்பமில்லை.

“இல்லை மாமா இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். அப்பா ஹெல்த் இன்னும் கொஞ்சம் நல்லாகட்டும். அதன் பின் நானே அங்கு வந்து விடுவேன். ப்ளீஸ் மாமா” இறைஞ்சுதலாய் சொன்னவளை மேலும் வற்புறுத்த மனமில்லாமல் சரண் சென்னைக் கிளம்பினான்.

நள்ளிரவில் வீடு திரும்பியவன் தன்னிடமிருந்த அறைச் சாவி கொண்டு கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவன், மதுமதி நல்ல உறக்கத்தில் இருப்பது கண்டு மெதுவே நடந்து வந்தவன் குளித்து உடை மாற்றி மனைவி அருகே படுத்தான். ஐந்து நாள் பிரிவோ இல்லை ஆண் மகனுக்கே உரிய உணர்ச்சிப் பெருக்கோ ஏதோவொன்று அவனைத் தூண்ட, கை நீட்டி அருகில் படுத்திருந்த மதுமதியைப் பிடித்து இழுத்து தன் அணைப்பில் கொண்டு வந்தான்.

யாரோ எவரோ என்று பயந்து மதுமதி திமிறவும், “நான் தான்...” சரணின் குரல் தேனாக மதுவின் காதில் விழ, “சரண்...” ஆவலாய் அவன் முகம் பார்த்தவள் அடுத்த நொடி

அவன் மார்பில் முகம் புதைத்தாள். அவளுக்குமே அவனைக் காணாத தவிப்பு இருக்குமல்லவா!

சரண் அவளின் செயலில் கொஞ்சம் அதிர்ந்து தான் போனான். அவுனுக்குமே அவள் அருகாமை வேண்டியதாய் தான் இருந்தது. ஆனால் இந்த ஆவல்... இந்தப் பரவசம்... அவனிடம் இருந்ததா என்றால்... இல்லை என்று தான் சொல்ல வேண்டும். மதுமதியின் அணைப்பு மேலும் மேலும் இறுக, அதில் தன்னை மறந்தவனாய் அவளின் முகம் நோக்கி குனிந்தான்.

எப்பொழுதும் சரணிடன் தேடலில் காமமும்.... கடமையும்... வேகமும்... மட்டுமே இருக்கும். ஆனால் இன்று அவன் தேடலிலிருந்த தாகம் இத்தனை நாள் பிரிவை இந்த ஒரு நாள் இரவில் தீர்க்க வேண்டுமென்ற அவன் எண்ணம் எல்லாம் அவளை மெய் மறக்கச் செய்ய, சும்மாவே அவள் அவன் மேல் காதல் கொண்டவள் அவனின் இந்த அணுகுமுறையில் முற்றிலும் தன்னைத் தொலைத்தவளாய் அவனுடன் ஒன்றினாள்.

“சரண்...” மன நிறைவுடன் அவள் அவன் மார்பில் மீண்டும் முகம் புதைக்கவும் தான் அவனுக்குச் சுய உணர்வே வந்தது.

மதி மயங்கிப் போய்த் தான் செய்தக் காரியம் நினைவில் வந்து தன் மீதே அவனுக்குக் கோபம் வந்தது. அந்தளவிற்காத் தான் அவளிடம் அடிமைப்பட்டு இருக்கோம் என்ற நினைவில் அவன் முகம் இறுகியது. அவளோ அவனின் இந்த மாற்றத்தை உணரவில்லை. கண் மூடிச் சுகமாய் அவன் நெஞ்சில் சாய்ந்திருந்தவளை வலுக்கட்டாயமாய்த் தன்னிடமிருந்து பிரித்து அவள் முகம் பார்த்தவன்,

“எல்லாம் தேவை... உடல் தேவை மட்டுமே...” அவளை எப்படியாவது காயப்படுத்த வேண்டுமென்று அவ்வாறு கூறியவன், தன் அடுத்தத் தேடலைத் துவங்கினான் ஆனால் இந்த முறை வேகமாக... மூர்க்கமாக... அவனின் பேச்சிற்குப் பதில் கொடுக்க முடியாமல் அவன் கை

முன்னேறுவதைத் தடுக்க முடியாமல் மதுமதி விக்கித்துப் போய் அப்படியே சிலையாய் சமைந்துப் போயிருந்தாள்.

## மலர் :11

“சரண் இன்னும் வேலை முடியலையா? ஏன் வீட்டிற்குக் கிளம்பாமல் இருக்க?” கேட்டபடி ஹரி, சரணின் அறைக்குள் நுழைந்தான்.

“வா ஹரி… ம்… வேலை முடிந்தது. இப்பக் கிளம்பத்தான் எண்ணியிருந்தேன். நீயே வந்துட்ட. நானே உன்னிடம் ஒரு விசயம் பேசலாம்ன்னு நினைச்சிட்டிருந்தேன்”

“என்ன சரண் ஏதும் பிரச்சினையா?” கொஞ்சம் கவலையுடன் ஹரி கேட்க,

“பிரச்சினை ஏதுமிருந்தால் தான் பேசணுமா? நான் பேசப் போவது வேறு ஹரி… உன் திருமணம் பற்றி ஏதாவது எதிர்ப்பார்ப்பிருக்கா? இல்லை நீ ஏதாவது பெண்ணை விரும்புகிறாயா?”

“திடீர்ன்னு என் கல்யாணத்தைப் பத்திப் பேசற? என்ன விஷயம்… பொண்ணு ஏதும் பார்த்திருக்கிறியா?” கேலியுடன் வினவினான் ஹரி.

“அப்படித்தான்னு வைச்சுக்கோயேன். இப்போ நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்”

“திருமணம் பற்றிப் பெரிய எதிர்பார்ப்பு ஏதுமில்லை. உன்னை மாதிரி அம்மா கைக் காட்டுகிற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு நிம்மதியாயிருக்கிறது தான் நல்லது. ஏன்னாப் பின்னாடி மாமியார் மருமகள் சண்டை வராது பார்த்தியா… அப்படி வந்தாலும் நீங்கள் பார்த்தப் பெண் தானேன்னு தப்பிச்சுக்கலாம் இல்ல… அதான்” ஹரியின் வார்த்தைக்கு வார்த்தைக் கிண்டல் இருந்தாலும் பெற்றோர் வார்த்தை மீறி திருமணம் செய்ய மாட்டேன் என்ற உறுதி அதில் தெரிந்தது.

“ரொம்பச் சந்தோசம் ஹரி” என்ற சரணை கூர்ந்துப் பார்த்த ஹரி, “சரண் ஏதோயிருக்கு… நீ இப்படியெல்லாம் பேச மாட்டியே. என்ன சொல்லு?”

“ஏன் ஹரி நான் ஏதாவது பொண்ணுப் பார்த்து வச்சிருந்தா உனக்கு ஓகேவா?”

“நிச்சயம் சரண் அம்மா, அப்பாவாக இருந்தால் என்ன... நீயாக இருந்தால் என்ன? நீங்கள் எல்லோருமே எனக்கு நல்லதுத் தான் செய்வீங்கன்னு நம்பிக்கை எனக்கு இருக்கு” தம்பியின் வார்த்தையில் மனம் நெகிழ்ந்து அவனை அணைத்துக் கொண்டான் சரண்.

**********************************

“அப்பா இந்தப் பிரச்சினை எப்படி இப்படி அழகா சால்வ் பண்ணினிங்க! நான் இருந்திருந்தால் கூட இப்படிச் செய்திருப்பேன்னா என்று தெரியாது. என்னயிருந்தாலும் சொல்லுங்க உங்கள் அனுபவம்... அனுபவம் தான்” இரவு உணவு உண்ணும் போது தந்தையைப் சிலாகித்துச் சரண் பேச, மதுமதி அவன் அருகிலிருந்து அவனுக்கு வேண்டியதைப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

“சரண் அதை நானாகச் செய்யவில்லை”

“பின்னே ஹரி ஹெல் பண்ணினானா? ஹரி நீயா இதைச் செய்யச் சொல்லியது?”

“அவனும் இல்லை சரண். எல்லாம் உன் மனைவி மதி தான் இந்தப் பிரச்சினை தீர வழிச் சொன்னாள். உண்மையில் அவள் புத்திசாலிப் பெண். அவள் மனைவியாய் கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்”

ராமநாதன் மருமகளைப் பாராட்ட, சரண் நம்ப முடியாமல் மதுமதியை நிமிர்ந்துப் பார்த்தான். எவ்வளவு பெரிய காரியம் பண்ணியிருக்கிறாள், ஆனால் அந்தக் கர்வம் சிறிதுமின்றித் தன்னிடமும் அதைப் பற்றிக் காட்டிக் கொள்ளாமல் இவளால் எப்படி இப்படியிருக்க முடிகிறது. இவள் நிச்சயம் தொழில் நிர்வாகத்தைக் கரைத்துக் குடித்தவளாக இருக்க வேண்டும். முதன் முறையாக மதுமதி மேல் மரியாதையை வந்தது. மதுமதியோ அவனின் வெறித்த பார்வையில் வெட்கித் தலையைக் குனிய,

அவளின் வெட்கம் கண்டு முதன் முறையாக அவன் முகத்தில் புன்னகை அரும்பியது.

மதுமதியின் இன்னொரு முகத்தைச் சரண் பார்க்கும் நாளும் வந்தது. அது அவன் மனதை முற்றிலும் மாற்றியது. ஹரிணியின் மகன் ஆகாஷிற்குப் பிறந்த நாள் வந்தது. அதை எப்படிக் கொண்டாடுவது என்று எல்லோரும் திட்டம் போட... மதுமதி அதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஹரிணி தான் அவளிடம் கேட்டாள்.

“அண்ணி உங்களுக்கு ஏதும் தோணினால் சொல்லுங்கள்”

“அது வந்து...” சரணைப் பார்த்தவாறுத் தயங்கி நிற்க,

“பரவாயில்லை அண்ணி... அண்ணன் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள்”

“ஆகாஷ் பிறந்த நாளை நாம் ஏன் ஏதாவது ஆசிரமத்தில் கொண்டாடக் கூடாது. ஆகாஷிற்கும் புரியும் வயதாகிறது. நம்மை விடக் கஷ்டப்படுபவங்க இருக்கிறாங்கன்னு தெரியும் போது அவனுக்குமே அனாவசிய வீண் ஆடம்பரச் செலவுகள் செய்யத் தோணாது. அதை இல்லாதவங்களுக்குக் கொடுத்து உதவலாமேன்னு தான் அவனுக்குத் தோணும். இந்த வயதில் நாம் கத்துக் கொடுத்தால் தான் வளர வளர நல்ல பண்புகளோடு அவன் வளருவான். ஆகாஷ் பேரைச் சொல்லி அந்த ஒரு நாளாவது ஆசிரமத்தில் உள்ளவர்கள் நல்ல உணவு உண்பார்களே” மதுமதி பேசப் பேச அங்குள்ளவர்கள் பிரமிப்பாய் பார்க்க.... சரணோ ஆச்சிரியமாய்ப் பார்த்தான்.

“அத்தை வாங்களேன் எங்க வீட்டில் ரோஸ் பூத்திருக்கு வந்து பாருங்க” அதற்குள் ஆகாஷ் குதூகலத்துடன் அவளை அழைக்க,

“ஓ... அப்படியா வா போகலாம்” அவனின் உற்சாகம் அவளையும் தொற்ற அவனுடன் அங்கிருந்துத் தோட்டத்திற்குச் சென்றாள்.

மதுமதியை மெச்சுதலாய் பார்த்த ஹரிணியின் மாமியாரும் மாமனாரும், சரணிடம் திரும்பி, “சரண் உன் மனைவி போல் நல்ல மனம் கொண்ட பெண்ணைப் பார்க்க முடியாது. காத்திருந்த உனக்கு நல்ல பெண்ணைத் தான் அந்தக் கடவுள் மணம் முடித்து வைத்திருக்கிறார்” மதுவை மனதாரப் பாராட்ட, சரணுக்குப் பேச வார்த்தைகள் வரவில்லை.

ஆகாஷின் பிறந்த நாளன்று எல்லோரும் ஆசிரமம் கிளம்பிச் சென்று, அங்குப் பிறந்த நாளை கொண்டாடி அனைவருக்கும் உணவு வழங்கிய போது எல்லோருக்குமே மனம் நிறைந்திருந்தது. மதுமதி அங்கிருந்த சிறு குழந்தை ஒன்றிற்குச் சளியால் மூக்கு ஒழுகிக் கொண்டிருப்பதைப் பார்த்து சற்றும் அருவருப்படையாமல் அதைத் தன் கைக்குட்டையால் துடைத்து விட்டு, தண்ணீரால் முகத்தைக் கழுவி விட, அவளின் செய்கையில் முகம் மலர்ந்து சிரித்த குழந்தையை அவள் அள்ளியெடுத்து அதன் பட்டுக் கன்னத்தில் முத்தமிட, குழந்தை அவளைப் பார்த்து சிரிக்க, அதனுடன் இணைந்து அவளும் சிரித்தாள். அதைத் தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்த சரணுக்கு அவளின் செய்கை நடிப்பாய் தெரியவில்லை. மாறாக அவளின் தாய்மை உணர்வு தான் அவனுக்குத் தெரிந்தது.

இரவின் தனிமையில் சரண் மதுமதியிடம், “உனக்குக் குழந்தைகள்ன்னா ரொம்பப் பிடிக்குமா?”,

‘என்ன இவன் திடீரென்று இப்படிக் கேட்கிறானே’ என்று வெட்கத்தில் முகம் சிவந்தவள், ‘ஆம்’ என்பது போல் தலையசைக்க, அவளின் வெட்கமும் அவளின் தலையசைப்பும் அவனுக்கு அழைப்பு விடுவதாய்த் தோன்ற, அவள் முகம் நோக்கி குனிந்தவன் அவளிடம் முதன்முறையாகக் காதல் கணவனாய் நடந்து கொள்ள, அவனின் செய்கையில் ஆச்சிரியம் அடைந்து, அவனின் காதலில் முற்றிலும் தன்னைத் தொலைத்தவளாய் அவன் கைகளுக்குள் அடங்கினாள்.

யோசனையிலிருந்த சரண் அருகில் படுத்திருந்த மனைவியைப் பார்த்தான். களைப்புடன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவள் நெற்றியில் மென்மையாக இதழ் பதித்தான். அவனின் மனம் முழுவதும் குழப்பமே எஞ்சியிருந்தது. மதுமதியைப் பழிவாங்க வந்தவள் என்று தான் அவளிடம் கொஞ்சம் கடுமையாக நடந்து கொண்டான். ஆனால் இப்பொழுதுக் காணும் அவளின் அமைதி, அவளின் செயல், தொழிலிலிருக்கும் அறிவு, குழந்தையிடம் காண்பிக்கும் அன்பு இதெல்லாம் பார்க்கும் போது அவள் நல்லவள் தானோ என்ற எண்ணம் அவன் மனதில் எழாமலில்லை. முதன் முறையாக அவள் நிலையிலிருந்து யோசித்துப் பார்த்தான்.

‘யாராக இருந்தாலும் அவள் நிலையிலிருந்தால் தன் தாய்க்குத் துரோகம் செய்தவனைப் பழிவாங்க நினைக்கத்தான் செய்வார்கள். நானும் அவள் நிலையிலிருந்து இருந்தால் அப்படித்தான் செய்திருப்பேன். அவளின் நோக்கம் எதுவாக இருந்தால் என்ன... என்னிடம் இது நாள் வரை சின்ன முகத் திருப்பலோ கோபமோ எரிச்சலோ கொண்டது இல்லையே. என்னிடமும் இவ்வளவு தன்மையாகப் போக வேண்டிய அவசியம் என்ன? இந்த நிமிடம் வரை இவளைப் பற்றிய விவரங்கள் தேடிக் கொண்டு தான் இருக்கிறேன். ஆனால் சிறு விவரம் கூடக் கிடைக்கவில்லையே’

‘பெண்ணே நீ யார்? எங்கிருந்து வந்தாய்? உனக்கு என்ன தான் வேண்டும்? என் மனம் என்னையும் அறியாமல் உன் பக்கம் சாயத் தொடங்கி விட்டதே. நீயே என்னை விட்டு விலகினாலும் என்னால் உன்னை விட்டு விலகியிருக்க முடியுமா என்று தோன்றவில்லை’

அந்த நிமிடம் அவனுக்கு அது புரிந்தது... அவன் மதுமதியைக் காதலிக்கிறான் என்று. கொஞ்ச நாள் முன்பு வரை அவளைக் கண்டாலே ஆகாதவன் இன்று காதலிக்கிறானா? அவனால் அவனையே நம்ப முடியவில்லை. இது எப்படிச் சாத்தியம்? அவனுக்குப் புரியவே இல்லை.

‘ஏன் முடியாது அவள் கெட்டவள் என்பதால் தானே நீ அவளை ஏற்க மறுத்தாய் இப்பொழுது அவள் நல்லவள் என்று தெரிந்ததும் உன் மனம் அவளை விரும்பத் தொடங்கி விட்டது’ அவனின் மனம் அவனுக்கு எடுத்துக் கூற, ‘உண்மைத் தான் அவள் நல்லவள் தானே இனி என்ன தயக்கம்? அவள் என் மனைவி… அவளை நான் நேசிப்பதில் என்ன தவறு?’ என்று மனதுக்குள் கூறிக் கொண்டவன் மகிழ்ச்சியில் வானில் பறந்தான். எல்லாம் யோசித்தவன் பழிவாங்கவென்று வந்தவள் ஏன் பழிவாங்காமல் அமைதியாக இருக்கிறாள்? என்பதை யோசிக்க மறந்துவிட்டான். யோசித்திருந்தால் அவள் எல்லா உண்மைகளும் அறிந்துத் திருந்தியிருப்பதைப் புரிந்துக் கொண்டிருப்பான்.

சரண் அவளை விரும்புவதை அவளிடமே நேரிடையாகச் சொல்லியிருக்கலாம். ஆனால் ஏதோ ஒன்று அவனைத் தடுத்தது. அது இவ்வளவு நாள் கடுமைக் காட்டிவிட்டு திடீரென்று அன்பைக் காட்டினால் என்ன நினைப்பாளோ? என்ற தயக்கமாகக் கூட இருக்கலாம். வாய் விட்டுத்தான் அவன் சொல்லவில்லையே தவிர முன்பு மாதிரி அவளை எந்நேரமும் கடிந்துக் கொண்டோ, கோபப்பட்டுக் கொண்டோ அவன் இருக்கவில்லை. பின்னாளில் தான் பேசுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போகும் என்று தெரிந்திருந்தால் ஒருவேளை சரண் மனம் விட்டு பேசியிருந்திருப்பானோ என்னவோ? ஆனால் அதையெல்லாம் மதுமதி உணரவில்லை. எப்பொழுதும் போல் அவன் வேலைகளை அவன் செய்யச் சொல்லும் முன் அவளே அதைச் செய்து முடித்தாள்.

“என்ன நாதா எப்படியிருக்க…” அட்டகாசமாகக் கேட்டுக் கொண்டே வந்தார் ராமநாதனின் நண்பர் கேசவன்.

“நல்லாயிருக்கேன் கேசவா… நீ எப்படியிருக்க?” ராமநாதன் அவரிடம் நலம் விசாரிக்க… அப்படியே பேச்சு அரசியல், தொழில் என்று சுற்றிக் கடைசியில் குடும்பத்தில் வந்து நின்றது.

“நாதா இதை எப்படிச் சொல்றதுன்னு தெரியல? சரண் பெங்களூரில் ஏதோவொரு பெண்ணுடன் சுத்திக்கிட்டிருக்கிறதா சொல்றாங்களே உண்மையாவா?”

“கேசவா... யாரைப் பார்த்து என்ன வார்த்தைச் சொன்ன... அதுவும் சரணைப் பார்த்து ச்சே... ச்சே... அவன் அப்படிப்பட்டவன் இல்லைன்னு உனக்குத் தெரியாது”

“சரணைத் தான் எனக்குச் சின்ன வயதிலிருந்தே தெரியுமே. இதை வேறு யாரோ சொல்லியிருந்தால் நான் நம்பியிருக்க மாட்டேன். உங்க கம்பெனில வேலைப் பார்க்கிற என்ஜினீயர் என் செக்ரட்டரியோட மச்சான்... அவன் வந்து சரணைப் பத்தி இவன் கிட்டச் சொல்ல... இவன் என் கிட்ட வந்து வருத்தத்தோட இதைச் சொன்னான். என் செகரட்டரிப் பத்தி உனக்கே நல்லாத் தெரியும். அவன் ரொம்ப நல்லவன்... அதிலும் நம் பிரண்ட்ஷிப் அவனுக்கு நல்லாவே தெரியும். அதனால் பொய் சொல்லியிருக்கச் சான்ஸ் இல்லை. எதுக்கும் சரண் வந்தா விசாரிச்சுப் பாரு. பனை மரத்துக்குக் கீழே இருந்து பால் குடிச்சாலும் இந்த உலகம் தப்பாத்தான் பேசும்” என்றவர் விடைப் பெற்றுக் கிளம்ப, ராமநாதன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டார்.

“என்னங்க... இவர் என்ன இப்படிச் சொல்லிட்டுப் போறார்” சுபத்ரா கண்கள் கலங்க கேட்க, அவருக்குப் பதில் சொல்ல வாயெடுத்த ராமநாதன் தன் மனைவிக்குப் பின் நின்றிருந்த மதுமதியை அப்பொழுது தான் கவனித்தார்.

“அம்மாடி மதி... அவன் ஏதோ தப்பா புரிஞ்சிக்கிட்டுப் பேசறான். சரண் வரட்டும் நான் கேட்கிறேன்”

“அவரைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும் மாமா. அவர் நிச்சயம் தப்புப் பண்ணியிருக்க மாட்டார்” தெளிவாக எந்தவொரு கலக்கமும் இல்லாமல் கூறியவளைக் கண்டு ராமநாதனும், சுபத்ராவும் பிரமித்துப் போயினர்.

கேசவன் கூறியதைக் கேட்டு அவள் கொஞ்சமும் கவலைப்படவில்லை. அந்தளவுக்குச் சரணை நம்பினாள்.

அவன் கண்களில் பொய்யில்லை, அவன் வார்த்தையில் பொய்யில்லை, அவனின் செயலில் பொய்யில்லை... மொத்தத்தில் அவன் மிகவும் நல்லவன் என்று அவளுக்குத் தெரியும். கோபத்தைக் கூட அவன் நேரிடையாக அவளிடம் காட்டியவன் தான். அவளைப் பிடிக்கவில்லை என்றாலும் தாலிக் கட்டிய ஒரு காரணத்திற்காக அவளுடன் வாழ்பவன்... இதிலிருந்தே தெரியவில்லையா... அவன் திருமணப் பந்தத்தை எந்தளவிற்கு மதிக்கிறான் என்று.

“மாமா அத்தை நீங்க ரெண்டுப் பேரும் தேவையில்லாமல் கவலைப்படாதீங்க” என்றவள் தங்களறைக்குச் சென்றாள்.

அன்று சரண் வீட்டிற்கு வரும் போதே அங்கிருந்த அமைதி ஏதோ சரியில்லை என்று அவனுக்கு உணர்த்த, குழப்பத்துடன் உள்ளே நுழைந்தான், “சரண் இங்கே வா” ராமநாதன் அவனை அழைத்தார்.

“என்ன அப்பா சொல்லுங்க?”

“பெங்களூரில் நீ ஏதோ ஒரு பொண்ணுடன்...” மேலும் கேட்கச் சங்கடப்பட்ட ராமநாதன் என்ன கேட்பது என்று தெரியாமல் அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தார்.

“உங்களுக்கு யார் சொன்னது?” கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் சரண் கேள்வி கேட்க,

“யார் சொன்னால் என்ன? எந்தவொரு விசயத்தையும் ரொம்ப நாள் மூடி மறைக்க இயலாது” ராமநாதன் கோபத்துடன் கேட்டார்.

சுபத்ராவோ கண்கள் கலங்க, “சரண் உன்னிடம் நான் இதை எதிர்பார்க்கவில்லை. இதுக்குத் தான் அடிக்கடி பெங்களூர் போனியா? இப்பொழுது எல்லாம் நீ முன்பு போலில்லை. ஏன் சரண் இப்படி?”

சரண் எழுந்து வந்து சுபத்ராவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, “அம்மா என் மேல் நம்பிக்கையில்லையா? இவ்வளவு நாள் தப்புச் செய்யாதவன் இனிமேலாத் தப்புச்

செய்யப் போகிறேன். உங்கள் வளர்ப்பின் மேல் உங்களுக்கு நம்பிக்கையில்லையாம்மா?”

“ஐயோ என் கண்ணே... உன்னை நம்பாமல் நான் யாரை நம்பப் போகிறேன். ஆனாலும் இப்படி ஒரு அவச் சொல்லை நீ வாங்க வேண்டுமான்னு தான் என் தாயுள்ளம் பதறுது” சரணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதார்.

“அம்மா இப்போதைக்கு இதைப் பற்றி எதுவும் கேட்காதிங்க. நேரம் வரும் போது நானே சொல்கிறேன். ஆனால் ஒண்ணு மட்டும் உண்மை உங்கள் மகன் நல்லவன். என் மனைவி தவிர எந்தப் பெண்ணையும் மனதால் கூட நினைக்க மாட்டேன். அந்த நம்பிக்கையை மட்டும் என் மேல் வையுங்கள். அப்பா உங்களுக்கும் சேர்த்துத் தான் சொல்கிறேன்” பெற்றோரிடம் கூறியவன் அப்பொழுது தான் கவனித்தான் மதுமதி அங்கே இல்லாததை.

“அம்மா மதுவுக்கு...”

“ம்... தெரியும் சரண். வந்தவர் அவளைப் பாராது உன்னைப் பத்தியெல்லாம் சொல்லிட்டார்” மதுவுக்குத் தெரியும் என்று கூறியச் சுபத்ரா அவள் அவனை நம்பியதைக் கூற மறந்துவிட்டார்.

சரண் அதற்கு மேல் மனம் தாங்காமல் வேகமாகத் தங்களறையை நோக்கிச் சென்றான். ‘இதைக் கேட்டு மது அழுது கொண்டிருப்பாளோ ? எந்தப் பெண் தான் இதைத் தாங்கிக் கொள்வாள்? அவளை எப்படிச் சமாதானம் செய்யப் போகிறேன்?’ சரணுக்கு தன் மீதே கோபம் வந்தது. ‘மதியைச் சீக்கிரம் இங்கே வரவைழைக்கும் வழியைப் பார்க்க வேண்டும். இதனால் தேவையில்லாமல் என் வாழ்க்கையிலல்லவா குழப்பம் வருகிறது...’ மனதில் நினைத்துக் கொண்டே தன் அறைக் கதவைத் திறந்தவன் திகைத்தான்.

## மலர் : 12

சரண் தான் கண்டக் காட்சியில் திகைத்துப் போய்க் கதவைத் திறந்து வைத்த மாதிரி அப்படியே நின்று விட்டான். மதுமதி அழுதுக் கரைந்துக் கொண்டிருப்பாள்... எப்படி அவளைச் சமாதானம் செய்யப் போகிறோமோ? என்ற கவலையில் வந்தவனுக்கு அவள் செய்து கொண்டிருந்த காரியம் திகைப்பை ஏற்படுத்தாமல் இருந்தால் தான் ஆச்சிரியப்பட வேண்டும். மதுமதி சோபாவில் அமர்ந்து உலர்ந்தத் துணிகளை மடித்துக் கொண்டிருக்க, அவள் முகத்தில் அழுததற்கான சுவடு ஏதுமில்லை. அவ்வளவு ஏன் கோபத்தின் சாயல் கூட இல்லை.

கதவுத் திறந்த ஒலியில் நிமிர்ந்தவள் சரண் வந்து விட்டதை உணர்ந்து வேகமாக மடித்து வைத்த துணிகளை எடுத்து அலமாரியில் வைத்தவள், அதே வேகத்தில் அவனருகில் வந்தாள்.

“அதற்குள் வந்துட்டீங்களா? காபிக் கொண்டு வரவா?” அவன் அவள் முகத்தைக் கூர்ந்துப் பார்த்தபடிச் சரியென்பது போல் தலையசைக்க, அவனின் தலையசைப்பைச் சம்மதமாக எண்ணிக் கொண்டு அவள் கீழே விரைய, அவன் குழப்பத்துடன் சோபாவில் அமர்ந்தான். மதுவிடம் இதைப் பற்றி நீ கவலைப்படுகிறாயா என்று எப்படிக் கேட்பது? அதிலும் அவள் முகத்தில் சிறிதும் வருத்தத்தின் சாயலில்லை. ஒருவேளை அவள் தன்னை நேசிக்கவில்லையோ? அதனால் தான் இதைப் பற்றிப் பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லையோ?

‘ச்சே... ச்சே... மது அப்படிப்பட்டவள் இல்லை. என்ன அப்படிப்பட்டவள் இல்லை... அவளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? அவள் யாரையேனும் காதலித்தாளா? இல்லையா? என்று கூட உனக்குத் தெரியாது இதில் நீ அவளுக்குப் பரிந்துப் பேசுகிறாயா?’ அவன் மனதுக்குள்ளேயே பெரிய போராட்டம் நடந்தது. மனைவி

சந்தேகப்படாமல் இருப்பதைக் கண்டு எல்லா ஆண்களும் சந்தோசப்படுவார்கள். ஆனால் சரண் அதற்கும் வருத்தப்பட்டான்.

இப்படிப்பட்ட நிலையில் சரண் மீண்டும் பெங்களூர் புறப்பட்டான். அவன் அங்குச் செல்வது தெரிந்தும் அவனைக் கேள்வி எதுவும் கேட்காமல் அவனுக்கு உடைகள் எடுத்துக் கொடுத்துப் பெட்டியில் அடுக்க உதவிச் செய்த மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்த சரண் அவளாக ஏதும் கேட்பாளென்று எண்ணி அவள் முகம் பார்க்க, அவளோ அவன் முகத்தை நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

“போய் வருகிறேன்…” அவன் அவள் முகம் பார்த்துச் சொல்ல, அப்பொழுதுச் சட்டென்று அவள் அவனை நிமிர்ந்துப் பார்த்து, சரியென்பது போல் தலையசைக்க… அவள் முகத்தையே கூர்மையுடன் பார்த்துக் கொண்டிருந்த சரணின் கண்ணில் அவளின் கலங்கிய கண்ணும், ஏதோ சொல்ல எண்ணித் துடித்துக் கொண்டிருந்த உதடும் பட்டது.

அடுத்த நொடி அவளருகே வந்தவன் அவளை இறுக்கி அணைக்க, அவளுக்குமே அந்த அணைப்புத் தேவையாயிருக்க அவன் மார்பில் முகம் புதைத்து அவனுடன் ஒன்றிக் கொண்டு காற்றுக் கூட இடையில் புகாதப்படி அவனை இறுக பற்றிக் கொண்டாள். அவளுக்கு மட்டுமே அவன் சொந்தம் என்பது போலிருந்தது அவளது இறுகிய அணைப்பு. அவனின் மேல் அவளுக்கு நம்பிக்கையில்லாமல் இல்லை. ஆனாலும் திரும்பவும் அவன் பெங்களூர் என்றதும் அவளையும் அறியாமல் அவள் கண்ணில் நீர் அரும்பியது. அதைக் கண்டு அவன் உடனே அவளை அணைத்தவுடன் அந்தக் கண்ணீரும் அடங்கி விட்டது. அவனின் அணைப்பிற்கு இவ்வளவு சக்தியா?

சரண் மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தி, “மது என் மேல் உனக்கு நம்பிக்கையிருக்கிறதா?”

“ம்…”

“அது போதும் மது… உனக்கு எப்படி நான் மட்டும் கணவனோ…! அது போல் எனக்கு நீ மட்டும் தான் மனைவி…! அந்த ஒண்ணை மட்டும் எப்பொழுதும் நியாபகம் வைத்துக் கொள்”

“சரி…” ஒற்றை வார்த்தையில் பதில் சொன்ன மனைவியைக் கண்டு அவன் உதட்டில் புன்னகை அரும்பியது. அவளின் முகம் நோக்கி குனிந்து, அவளின் பட்டு போன்ற இதழை மென்மையாகத் தீண்டியவன் விட மனமில்லாமல் அங்கேயே தங்க, அவள் தான் அவனிடமிருந்து திமிறி விலகி, “நேரமாகி விட்டது…” என்று நியாபகப்படுத்த வேண்டியிருந்தது. அவன் சிரித்தபடி அவள் நெற்றியில் மீண்டும் தன் உதட்டை அழுத்திப் பதித்து அங்கிருந்து வெளியேறினான்.

மதுமதிக்கு என்றுமில்லாத நாளாக இன்று நிம்மதியாகயிருந்தது. ‘இந்தப் பந்தம் எப்படி ஏற்பட்டிருந்தாலும் அவனுக்கு நான்… எனக்கு அவன்… அதில் எந்த மாற்றமுமில்லை…’ சரணின் மன மாற்றம் கண்டு உள்ளம் குதூகலித்தவள் அந்த நிமிடம் மதிவதனாவை மறந்துத் தான் போனாள்.

*******************************

மதுமதி முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அதில் தன் முகத்தைத் தாங்கியவாறு சற்றுத் தள்ளித் தெரிந்தக் கடலைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அவளை எங்கேயும் அழைத்துக் கொண்டு போகவில்லை என்று சுபத்ரா சரணைக் கடிந்ததால், அவன் அவளைக் கடற்கரைக்கு அழைத்து வந்திருந்தான். கூட்டம் அதிகமில்லாத பகுதியாய் பார்த்தமர்ந்தவள் அருகில் சற்றுத் தள்ளி அவனும் அமர்ந்தான். கடலலைகள் கரையைத் தொட்டுத் தொட்டுத் தழுவி விளையாடுவதை மெய் மறந்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் அருகிலிருந்த கணவனைக் கூட மறந்தாள். கடலலைகளைப் பார்க்கப் பார்க்க மனதின் இறுக்கம் அகன்று நிம்மதிப் பரவுவதை உணர்ந்தாள்.

அவனோ சுற்றுப்புறம் எதையும் பார்க்காமல் மனைவியையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அதை அவள் உணரவில்லை. காற்றில் தலைமுடிப் பறக்க, சேலை முந்தானைக் காற்றிலாட அதை அடக்கித் தன் இடுப்பில் சொருகிச் சாதாரணமாக இருந்தவளைக் கண்டு அவன் மனம் மயங்கத் தான் செய்தது. அப்படியே அவளருகில் சென்று அவளை அணைத்து அவள் மடி மேல் படுக்க வேண்டும் என்ற ஆவல் அவனை உந்தினாலும் ஏதோ ஒன்று தடுக்க அவன் தயங்கினான். இன்னமும் அவளிடம் இயல்பாக நெருங்க அவன் மனதில் ஏனோ ஒரு தயக்கம் இருந்தது. அது ஒருவேளை இருவரும் மனம் விட்டுப் பேசாததால் அப்படியொரு எண்ணம் தோன்றியிருக்கலாம். அதனாலேயே தள்ளியிருந்து அவளை ரசித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது தான் இளைஞன் ஒருவனின் நடவடிக்கைச் சற்று வித்தியாசமாக இருக்க அவனை உற்றுக் கவனித்தான். கையிலிருந்த அலைப்பேசியில் ஏதோ பார்ப்பது போலிருந்தாலும் அவன் அதைப் பிடித்திருந்த கோணம் மதுமதியை நோக்கியிருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

“மது நீ இங்கேயே இரு. நான் இதோ வந்திர்றேன்…” மனைவியிடம் சொன்னவன் அவனை நோக்கி நடந்தான். இவன் வருவதைக் கண்டு அவன் வேகமாக எதிர் திசையில் நடக்க… சரணோ அதைவிட வேகமாக நடந்து அவன் சட்டையைப் பிடித்து இழுத்து அவன் கையிலிருந்த அலைப்பேசியைக் கைப்பற்றினான். ஒருகையால் அவனைப் பற்றியபடி அலைப்பேசியைப் பார்க்க அதலிருந்த புகைப்படத்தைப் பார்த்தவனுக்கு ஆத்திரமும் கோபமும் கட்டுக்கடங்காமல் பொங்கியது.

அதிலிருந்த புகைப்படங்கள் எல்லாம் மதுவின் சேலை விலகியிருந்த இடுப்புப் பிரதேசத்தை அப்பட்டமாய்க் கவர்ச்சியாய்க் காட்டியது. அதையெல்லாம் ஆத்திரத்துடன் அழித்தவன் அதைத் தன் சட்டைப் பையில் போட்டுக்

கொண்டு, “ஏண்டா நாயே உன் வீட்டுப் பொம்பளைங்களை இப்படிப் படமெடுக்க வேண்டியது தானே” என்று கூறிக் கொண்டே அவனை அடித்துத் துவம்சம் செய்துவிட்டான். அடித் தாங்க முடியாமல் அவன் மூர்ச்சையாகி கீழே விழ, அப்படியிருந்தும் ஆத்திரம் குறையாமல் அவன் முகத்தில் தன் காலால் எட்டி உதைத்த பின் தான் அங்கிருந்து அகன்றான் சரண்.

தன் சட்டைப் பையிலிருந்து அலைப்பேசியை எடுத்து மெமெரிக் கார்டை மட்டும் தனியே எடுத்து வைத்தவன், அதைத் தன் கையால் அக்குவேறு ஆணிவேராய் பிரித்து உடைத்துக் கடலில் தூக்கிப் போட்டான். அதன் பின்னரே அவன் மனம் அமைதியானது. அந்த நேரம் ஒன்று மட்டும் அவனுக்குப் புரிந்தது. மதுமதி அவனுக்குச் சொந்தமானவள். அவளுக்கு ஏதாவது ஒன்றென்றால் அவன் அதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க மாட்டான். அந்தளவுக்கு அவளைக் காதலிக்கிறான்... அதை உணர்ந்ததும் அவனையும் அறியாமல் அவன் உதட்டில் புன்னகை வந்து ஒட்டிக் கொண்டது.

பின்னர் ஒன்றும் அறியாதவன் போல் மனைவியின் அருகில் நெருங்கி அமர்ந்தவன் அதே புன்னகையுடன் அவள் தோளைச் சுற்றிக் கையைப் போட்டுக் கொண்டான். அவனின் செயலில் ஆச்சிரியமடைந்தவள் அவனைப் புரியாமல் பார்க்க... அவனோ அவள் பார்வையை உணர்ந்திருந்தாலும் அவள் பக்கம் பார்வையைத் திருப்பாமல் வேறு பக்கம் தன் பார்வையைச் செலுத்தி இயல்பாயிருப்பது போல் காட்டிக் கொண்டான். ஆனாலும் அவளை அணைத்திருந்த கையை அவன் எடுக்கவில்லை. அவளும் அவன் அணைப்பை விட்டு விலக மனமில்லாமல் அப்படியே அமர்ந்திருக்க, அந்தப் பேச்சற்ற மௌனம் கூட இருவருக்குமே பிடித்துத்தான் இருந்தது. நேரம் செல்லச் செல்ல சரணே அந்த மௌனத்தை உடைத்தான்.

“போலாமா மது?” அவளின் காதுக்கருகில் அவன் குரல் மென்மையாக ஒலிக்க, அவன் மீசை ரோமம் அவள் காதை லேசாக உரச, அவன் உடல் தொடுகையில் கிடைக்காத

இன்பத்தை ஏனோ இந்த மெல்லிய தீண்டல் அவளுக்குக் கொடுக்க, கண் மூடி அதை அனுபவித்தாள்.

“ம்…” மனம் மயங்கியவள் அந்த மயக்கத்திலிருந்து தெளியாமலேயே பதிலளிக்க, அவளின் முக மாறுதல் அவனைத் தன்வசம் இழக்கச் செய்ய, தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்தவன் எழுந்து அவளை நோக்கிக் கையை நீட்டினான். அவளும் மறுக்காமல் அவனின் நீட்டிய கையைப் பற்றி எழுந்து அவனுடன் இணைந்து நடக்க, இருவரின் நெஞ்சிலும் காதலே நிறைந்திருந்தது.

கார் அருகில் வந்ததும் மதுவுக்காகக் கதவைத் திறந்து விட்டவன், அவள் ஏறியதும் கதவை மூட, அவனின் செய்கையில் அவள் ராஜகுமாரி போல் உணர்ந்தாள். எப்பொழுதும் அவளின் ஓட்டுனர் அவ்வாறு செய்வது தான், ஆனால் அதிலெல்லாம் சற்றும் அசராதவள், காதல் கொண்டவனின் இந்தச் சிறு செய்கையில் மனம் மயங்கினாள். மறுபுறம் ஓட்டுனர் இருக்கையில் ஏறியமர்ந்தவன், “மது… ஹோட்டலுக்குப் போகலாமா?” சரணின் குரல் மென்மையாக அவளிடம் கேட்க, அவனின் குரலைக் கேட்டு அவனுக்கே ஆச்சிரியமாக இருந்தது. தான் இவ்வளவு மென்மையாகப் பேசுவோமா என்று.

“ம்…” அவனின் முகம் பார்க்க வெட்கப்பட்டு வெளியில் பார்த்தபடிச் சொல்லியவள் மறந்தும் அவன் புறம் திரும்பவில்லை. இன்று ஏனோ அவனின் ஒவ்வொரு செய்கையிலும் ஏதோ வித்தியாசம் தெரிய, அதில் முற்றிலும் தன்னைத் தொலைத்தவளாய் அவளிருந்தாள். அவனின் இந்தச் செய்கை அவளின் காதல் மனதை இன்னும் தூண்டிவிட, அவன் மீதானக் காதல் கட்டுக் கடங்காமல் கரைப் புரண்டு ஓடியது.

சரண் மதுவின் முகத்தைப் பார்க்க ஆசையிருந்தும், ஜன்னல் பக்கம் திரும்பியிருக்கும் அவளை எப்படி அழைப்பது என்று குழம்பி, அவளின் முதுகை சிறிதுநேரம் வெறித்தவன் நீண்டப் பெருமூச்சு விட்டபடி அவளின் கையைப் பற்றி அழுத்தியவன் பின்புக் காரை எடுத்தான்.

அந்த ஐந்து நட்சத்திர விடுதி அந்த இரவு வேளையில் உண்மையிலேயே நட்சத்திரமாய் ஜொலித்தது. மெல்லிய விளக்கு ஒளியில் மேஜைகள் போடப்பட்டு, அருகிலேயே செயற்கை நீரூற்று அதில் வாத்துக்கள் நீந்திச் செல்ல, வண்ண மீன்கள் நீருக்கு வர்ணஜாலத்தை அள்ளி வீசப் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருந்தது. அந்தச் சூழலில் மனதைப் பறிக் கொடுத்தவளாய் சரணைப் பின் தொடர்ந்தாள் மது. அவள் அமர நாற்காலியை இழுத்துப் போட்டவன் அவள் அமர்ந்ததும் தானும் அவளருகில் அமர்ந்து மெனுக் கார்டை அவளிடம் நீட்டி,

“உனக்குப் பிடித்ததை ஆர்டர் செய்...” அவனின் வார்த்தையில் நம்பமுடியாதவளாய் கண்களை அகல விரித்து அவனைப் பார்க்க, அவனோ ஒற்றைப் புருவத்தைத் தூக்கி ‘என்ன’ என்பது போல் கேட்க, அவள் ஒன்றுமில்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை இடமும் வலமுமாக அசைத்தவள் மெனு கார்டில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். இருவருக்கும் வேண்டியதை பேரரிடம் ஆர்டர் கொடுத்து விட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவளைத் திடீரென்று பின்புறமாக இருகரம் வந்து அவள் தோளைப் பற்ற, யாரோ எவரோ என்று அவள் பயந்துக் கத்துவதற்குள்,

“ஹேய் பேபி... ஹவ் ஆர் யூ?” பழக்கப்பட்ட குரல் காதுக்கருகில் ஒலிக்கத் திரும்பிப் பார்த்தவள் ஆனந்த அதிர்ச்சியில் அப்படியே எழுந்து நின்றாள்.

“ஹேய் ரிஷி... நான் நல்லாயிருக்கேன். நீ இங்கே என்ன பண்ற?”

“பேபி... பேச்சை மாத்தாதே... நீ ஈரோப் கண்ட்ரிக்கு டூர் போயிருக்கிறதாச் சொன்னாங்க. நீ எப்படி இங்கே? மும்பை பிசினெஸ் வேர்ல்டே நீ இல்லாமல் தவிச்சுப் போயிட்டுத் தெரியுமா? அது மட்டுமா... நானும் தான்...” ரிஷி அவளுக்கருகில் இருந்த நாற்காலியில் சாவகாசமாக அமர்ந்தவன், அவளின் கையைப் பிடித்து உட்கார வைத்து அவன் கேள்வியை நிதானமாகக் கேட்க, மதுமதியோ

இப்பொழுது அச்சத்துடன் சரணைப் பார்த்தாள். தன்னைக் கண்டு கொள்வானோ என்ற பயமே அதற்குக் காரணம்.

அவளின் கணிப்புச் சரி என்பது போல முகம் இறுக அவன் அமர்ந்திருந்தான். யாரோ ஒருவன் தன் மனைவியைத் தோளில் கை வைக்கிறான்... உரிமையோடு அவள் கைப் பிடித்து உட்கார வைக்கிறான்... இதில் பேபி என்ற அழைப்பு வேறு... சரணுள் எழுந்த ஆத்திரத்திற்கும் கோபத்திற்கும் அளவே இல்லை. ரிஷி செய்வதற்கு மறுப்புப் பேசாமல் அவன் இழுத்த இழுப்பிற்கு ஆடும் மனைவியைக் கண்டு எல்லாக் கோபமும் அவள் மேல் திரும்ப அவளைத் தீயாய் உறுத்து விழித்தான். அவனின் பார்வையில் அவள் அஞ்சி நடுங்கித் தான் போனாள்.

ரிஷி அப்பொழுது தான் சரணைக் கவனித்தான். ‘இவன் ஏன் மதுவை முறைத்துப் பார்க்கணும்? அதற்கு அவள் ஏன் இப்படிப் பயப்படணும்?’ ஒன்றும் புரியாமல் பார்த்தவன் மதுவிடம்,

“பேபி... யாரிது? உன்னை எதுக்கு அவன் முறைச்சுப் பார்க்கிறான்?” ரிஷியின் வார்த்தையில் உரிமைக் கோபம் இருந்ததை மது உணர்ந்தாளோ இல்லையோ சரண் நன்கு உணர்ந்தான். ஆத்திரத்தில் பல்லைக் கடித்தவன் ஒன்றும் பேசாமல் மதுவையே முறைத்துக் கொண்டிருக்க, மதுமதி தான் இக்கட்டான நிலையில் மாட்டிக் கொண்டு முழித்தாள்.

“பேபி... யார் இவன்?” மீண்டும் ரிஷி கேட்க,

“இ... இவர்... என் கணவர் ஹரிசரண்...”

“வாட்... உனக்காக நான் காத்துக்கிட்டிருக்கும் போது இவனை எப்படி நீ கல்யாணம் பண்ணலாம்?” ரிஷியின் வார்த்தைகள் கோபத்துடன் வந்து விழ, அதைக் கேட்டுச் சரண் அதிர்ச்சியுடன் மனைவியைப் பார்த்தான்.

## மலர் : 13

“ம்... இறங்கு...” சரண் குரல் கோபத்துடன் ஒலிக்க, மதுவோ பரிதாபமாக அவனைப் பார்த்தாள்.

“என்னங்க... நான் சொல்றதக் கேளுங்க...”

“நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்... எனக்கு எல்லாம் தெரியும்” அவன் நேரெதிரே வெறித்துப் பார்த்துக் கொண்டு அவளைத் திரும்பிப் பார்க்காமலே பதில் சொல்ல, அவன் முகம் பாறைப் போல் உணர்ச்சிகளற்று இறுகிப் போயிருந்தது. இனி அவன் வாயைத் திறக்க மாட்டான் என்றெண்ணி அவள் இறங்கிக் கொண்டு அவன் முகத்தைப் பாவம் போல் பார்க்க, அவனோ அவள் இறங்கக் காத்திருந்தார் போல் காரை வேகத்தோடு அங்கிருந்து கிளப்பினான். காரின் சக்கரங்கள் தேய்ந்து அது எழுப்பிய சத்தம் வைத்தே அவனின் கோபம் அவளுக்கு நன்கு புரிந்தது. அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்தவள் வேறுவழியின்றித் தங்களறைக்குச் சென்றாள்.

உடலைச் சுத்தம் செய்து உடைகள் மாற்றிக் கொண்டு படுத்த பின்பும் சரண் வரவில்லை என்றதும் அவளுக்குப் பயம் பிடிக்க ஆரம்பித்தது. கோபத்தில் எங்கே சென்றானோ? எப்பொழுது வருவானோ? என்ற கேள்விகள் மனதில் படையெடுக்கப் படுக்கையில் சாய்ந்தவள் அவன் வரவிற்காகக் காத்திருந்தாள்.

கோபத்துடன் சென்ற சரணோ மதுபானக் கடையில் அமர்ந்துத் தன் கையிலிருந்த மது அடங்கிய கோப்பையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் அந்த ரிஷி பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் கல்வெட்டாய்ப் பதிந்திருக்க, அதற்குப் பதிலடிக் கொடுக்காமல் மழுப்பிப் பேசிக் கொண்டிருந்த மனைவி முகம் நியாபகத்தில் வர அவன் கோபம் எல்லையைக் கடக்க... ஆத்திரத்துடன்,

“நீயெல்லாம் நல்ல பொண்டாட்டியாடி...? ராட்சசி... எத்தனை நாளாய் என்னை அவமானப் படுத்தணும்ன்னு நினைச்சுட்டிருந்த. அடுத்தவன் உன் புருஷனைப் பத்திக் கேவலமாப் பேசுறான். அதைக் கண்டிக்காம... இல்லை ரிஷி... நொள்ள ரிஷி... ன்னு மழுப்பிகிட்டிருக்க... உன்னையெல்லாம்... ச்சே... உன்னைப் போய் நல்லவள்ன்னு நினைச்சு மனசைப் பறிக்கொடுக்க இருந்தேனே... நல்லவேளை கடவுளே உன் சுயரூபத்தைக் காட்டிட்டார். தேங்க்ஸ் கடவுளே...” மதுக் கோப்பையை வானை நோக்கிக் காட்டியவன் மளமளவென்று ஒரே மூச்சில் அதைக் காலிச் செய்தான். மனதில் மூண்ட எரிச்சலை அந்த மதுபானத்தின் எரிச்சல் கூட மட்டுப்படுத்தவில்லை. ரிஷியும் மதுவும் பேசிய உரையாடல் அவன் மனதுக்குள் படம் போல் ஓடியது.

“வாட்... உனக்காக நான் காத்துக்கிட்டிருக்கும் போது இவனை எப்படி நீ கல்யாணம் பண்ணலாம்?” ரிஷி கோபத்துடன் கேட்க,

“ரிஷி... என்ன சொல்றிங்க...” மதுமதி அதிர்ந்துப் போய் அவனைப் பார்த்தாள். ரிஷியின் வார்த்தைகளை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

ரிஷி அவளின் தாத்தாவின் நண்பர் ஜெகன்நாத்தின் பேரன். அதனால் அவனிடம் மட்டும் அவள் இயல்பாகக் கலகலப்பாகப் பழகுவாள். அதை அவள் தாத்தாவும் பாட்டியும் பெரிதாகக் கண்டித்ததில்லை. ஆனால் அவன் மனதில் அப்படியொரு எண்ணம் இருக்குமென்று அவள் ஒருபோதும் நினைத்ததில்லை.

“உண்மையைத் தான் சொல்றேன். உங்க தாத்தா என் தாத்தாவிடம் எனக்கு உன்னைப் பெண் கொடுப்பதற்கு ஏற்கெனவே பேசியிருந்தார். அவர் திடீரென்று இறந்ததும்... சரி ஒரு வருடம் போகட்டும்ன்னு வீட்டில் அதைப் பத்திப் பேசவில்லை. சர்ப்பரைசா இருக்கட்டுமேன்னு நானும் உன்னிடம் சொல்லவில்லை. அதற்குள் நீ என்னடான்னா

கணவன்னு இவனைக் காட்டுகிறாய். இதை உன்னிடம் எதிர்ப்பார்க்கவில்லை பேபி” அவன் கோபித்துக் கொள்ள,

மது தாத்தா என்றதுமே வேறு எதைப் பற்றியும் யோசிக்காமல் அப்படியே அமர்ந்துவிட்டாள். சரணோ காதில் புகை வராத குறையாக இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான். இருவரின் மனநிலை அறியாமல் ரிஷி பேசிக் கொண்டே போனான்.

“என்ன பேபி... உன் வசதி என்ன? அழகு என்ன? போயும் போயும் இந்தப் பிளாக்கி தான் உனக்குக் கிடைத்தானா? இப்படிப்பட்ட ஒருவனைத் திருமணம் செய்து கொள்ள அப்படியென்ன அவசரம் உனக்கு? ஒருவேளை உன்னை ஏதும் ப்ளாக் மெயில் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கிட்டானா? எதுவாயிருந்தாலும் சொல்லு... பயப்படாதே நான் இருக்கிறேன் உனக்கு” மதுவுக்குக் கேட்கும்படி அவன் மெதுவாகச் சொன்னாலும் பாம்புச் செவியனான சரண் காதில் அது நன்கு விழுந்தது.

சரண் ரிஷி சொன்னதைக் கூடப் பெரிதுபடுத்தவில்லை. அவன் யாரோ எவரோ? அவன் காது கவனமாக மனைவி கூறும் வார்த்தைக்காகக் காத்திருந்தது. அவனின் பாதி... அவனை என்னவன் என்று பெருமையாகச் சொல்லப் போகிறாள். அதைக் கேட்டு இந்த மைதா மூஞ்சிக்காரன் முகம் போகிற போக்கைப் பார்க்க வேண்டும் என்று ஆர்வத்துடன் அவன் தயாராக... அவளோ அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி அல்லவா ஊத்திவிட்டாள்.

“தாத்தா...” சுந்தரத்தின் நினைவில் அவள் தேம்பித் தேம்பி அழ, தன் வாய் வார்த்தைக்காகக் கார்த்திருக்கும் கணவனை அவள் அந்த நேரம் மறந்து தான் போனாள். அவ்வளவு நாள் வளர்த்து ஆளாக்கிய தாத்தாவின் பாசத்தின் முன்... நேற்று வந்த கணவனைப் பற்றி யோசிக்க மறந்துவிட்டாள்.

சரண் அவள் அழுகையில் அப்படியே ஸ்தம்பித்துப் போய் அமர்ந்திருந்தான். ‘அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லையா? அந்த மைதா மூஞ்சிக்காரனைத் தான்

அவளுக்குப் பிடித்திருக்கிறதா? அப்படியென்றால் என் காதல்... அது அவ்வளவு தானா? இன்னும் என்ன சந்தேகம்? அதான் தாலிக் கட்டிய என்னை வேறு ஒருவன் முன் விட்டுக் கொடுத்துக் கொண்டு என் எதிரேயே அமர்ந்திருக்கிறாளே என்னருமைப் பொண்டாட்டி... யாருக்குக் கிடைக்கும் இப்படியொரு பாக்கியம்? ம்ஹூம்... எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்குது?' மனதில் ஆயாசமாக நினைத்தவன் அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காமல் நாற்காலியைத் தள்ளிவிட்டு எழ, அதன் சத்தத்தில் மது அவனை நிமிர்ந்துப் பார்க்க, அவனோ அவளைத் திரும்பியும் பாராமல் நடக்க... மது ரிஷியிடம் திரும்பி,

"நாம் பிறகு பேசலாம்... தப்பா எடுத்துக்காதீங்க ரிஷி"

"பேபி நான் இன்னும் மூணு நாள் இங்கே தான் இருப்பேன். எப்ப வேணும்ன்னாலும் எனக்குக் கால் பண்ணு" ரிஷி சொன்ன வார்த்தைகள் சரணின் காதிலும் விழ, அவன் முகம் இறுகிப் போனது. மதி அவனைப் பின் தொடர்ந்து வந்து அவன் அனுமதியில்லாமல் காரிலேறி அமர, அவனோ அவளை முறைத்துப் பார்த்தவன் ஒன்றும் பேசாமல் வீட்டை நோக்கிக் காரைப் பறக்க விட்டான்.

நடந்ததெல்லாம் நியாபகத்தில் மீண்டும் மீண்டும் வர, அவன் மனதில் வெறியேறிக் கொண்டே இருந்தது. எவ்வளவு குடித்தானோ அவனுக்குத் தெரியாது. கடை மூடப் போவதாகச் சொல்லவும் தான் அங்கிருந்து கிளம்பினான். தட்டுத்தடுமாறி வீட்டிற்குக் காரை ஓட்டி வந்தவன் தன்னிடம் இருந்த சாவியால் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். நல்லவேளை யாரும் அங்கில்லை... மெதுவே காலடிச் சத்தம் எழுப்பாமல் நடந்து தன்னறைக்குச் சென்று கதவைத் திறந்து உள்ளே வந்தவன், அவனின் வரவை உணர்ந்து எழுந்தமர்ந்த மதுவைக் கண்டதும் அவன் மனதில் அடங்கிருந்த வெறி வீறுக்கொண்டு வெளிவர, உடையைக் கூட மாற்றாமல் அவளருகே சென்றான்.

எதுவும் பேசாமல் அவளருகே அமர்ந்தவன், அவளின் கலங்கிய கண்களை உற்றுப் பார்த்தவன் மனதில்,

‘அவனைக் கல்யாணம் பண்ணிக்கலைன்னு அழுறியா... ம்ஹூம்... ஆசைப்பட்டு என்ன செய்ய...? இந்தச் சரண்... அந்த மைதா மூஞ்சிக்காரனை முந்திக்கிட்டானே...’ நக்கலாய் நினைத்தவன், அவள் முகம் நோக்கிக் குனிந்து அவளின் உதட்டில் தன் உதட்டை அழுத்தி முத்தமிட, அவனிடமிருந்து வந்த மது வாடை அவளுக்கு அருவருப்பைக் கொடுக்க, அவனிடமிருந்து தன் உதட்டை விடுவிக்க எண்ணித் திமிறினாள். அவளின் திமிறலில் அவளை விடுவித்தவன், தன் கையணைப்பில் அவளை வைத்துக் கொண்டு அவள் முகத்தைக் கூர்ந்துப் பார்த்து,

“ஏன் எங்களையெல்லாம் உங்களுக்குப் பிடிக்காதோ? அந்த வெள்ளப் பாச்சாவைத் தான் உங்களுக்குப் பிடிக்குமோ?” அவனின் பேச்சில் ஆத்திரத்துடன் அவனை உதறிக் கொண்டு எழுந்தவள்,

“லூசுத்தனமாப் பேசாமப் படுங்க. குடிச்சிட்டு வந்து கண்டதும் உளறாதீங்க” அவளும் காட்டத்துடன் பதிலளிக்க,

“யாருடி லூசு... நானா? ஆமாம் நான் லூசுத்தான்... லூசா இருக்கக் கண்டு தான் அவன் என்னைக் கறுப்பன் சொன்னதைக் கேட்டும் அவனை நாலுத் தட்டுத் தட்டாமல் வந்தேன் பாரு நான் லூசுத்தான். அதையெல்லாம் விட அவன் சொன்னதைக் கேட்டு நீ எனக்குச் சப்போர்ட் பண்ணாம அவன் பேசியதுக்கு... அவனைக் கட்டிக்காமல் என்னைக் கட்டியதுக்கு நீ அழுதியே அதைக் கையாலாகாதவனாப் பார்த்துக்கிட்டிருந்தேனே... நான் லூசுத்தான். அவன் கிட்ட அப்படியென்னடி இருக்கு... மைதா மாவைப் பிசைஞ்சு வைச்ச மாதிரி ஒரு மூஞ்சி... மீசையே இல்லாமல் பொட்டைப் பய மாதிரியிருக்கான். அவன் கிடைக்கலேன்னு நீயும் ஒப்பாரி வைக்க... ச்சே... இப்ப நான் உண்மையில் லூசுத்தான்... உன் கிட்டப் போய்ப் பேசிக்கிட்டு இருக்கேன் பாரு... உன்னையெல்லாம்...” சொல்லிக் கொண்டே அவளை அலேக்காகத் தூக்கிப் படுக்கையில் சரித்து அவளோடு சேர்ந்து தானும் சரிந்து, தன் மனதின் எரிச்சலை அவள் மேனியில்

முரட்டுத்தனமாய்க் காட்ட, என்றும் அவனுக்கு அடங்கிப் போகிறவள் இன்று ஏனோ போராடினாள்.

“ச்சீ… நீங்க எல்லாம் மனுசனா… மிருகம்…!” சொல்லிக் கொண்டே பலங்கொண்ட மட்டும் அவனைப் பிடித்துத் தள்ளியவள், சட்டென்று படுக்கையிலிருந்து எழுந்து அறையின் மூலையில் போய் நின்றுக் கொண்டாள்.

“ஏண்டி… இவ்வளவு நாள் மனுசனாத் தானே தெரிஞ்சேன். இன்னைக்கு அவனைப் பார்த்ததும் நான் மிருகமாகிட்டேனா?” எக்காளமாகச் சொல்லியபடி அவளை நெருங்க, அவளோ அவனைக் கையமர்த்தித் தடுத்து,

“மனுசன்னு தான் நினச்சேன்… ஆனால் இப்ப நீங்க… மிருகம்ன்னு ப்ருப் பண்றீங்க” முகத்தை மூடிக் கொண்டு அப்படியே சரிந்து அமர்ந்தவள் ‘ஓ’வென்று அழ, அவள் அழுகை அவனை ஏதோ செய்ய, ஒரு நொடி அவளை அமைதியாய் பார்த்தவன், மறுநொடி அவளின் உதாசீனம் நெஞ்சை அறுக்க,

“போடி… போ… உலகத்திலேயே நீ ஒருத்தித் தான் பெண்ணா? வேறு பெண்களே இல்லையா என்ன? காசை விட்டெறிஞ்சா ஆயிரம் பொண்ணுங்க வரும். போடி இவளே…” ஆவேசமாகக் கத்தியவன் கதவை அறைந்துச் சாத்திக் கொண்டு வெளியேற, மதுமதியோ மூடியக் கதவையே வெறித்துப் பார்த்தாள்.

மதுமதிக்கு இந்த மாதிரித் தரக்குறைவானப் பேச்சுக்களைக் கேட்டுப் பழக்கமில்லை. அவளுக்குச் சரணின் பேச்சுப் புதிதாக இருந்தது. ஆனாலும் அவனை வெறுத்து ஒதுக்க முடியவில்லை. இப்பொழுதுக் கூட அவன் குடித்துவிட்டுத் தன்னறிவு இல்லாமல் நடந்து கொள்வதைத் தான் அவள் வெறுத்தாளே தவிர, அவனின் மீது அவளுக்குக் கோபமில்லை. அவனின் இந்த நடத்தைக்கு என்ன காரணம் என்று யோசித்தவள் ரிஷியுடன் பேசியதை மனதில் ஓட்டிப் பார்த்தாள். நினைவு வர வரத் தான் பண்ணிய முட்டாள்த்தனமான காரியம் நியாபகம் வர

தலையில் கை வைத்துக் கொண்டு அப்படியே அமர்ந்துவிட்டாள்.

‘ச்சே… ஏன் இப்படி நடந்து கொண்டேன்? சரணைப் பத்தி யோசிக்காமல் தாத்தாவை மட்டுமே யோசித்து… முட்டாள்… முட்டாள்… அதான் சரண் கோபமாக நடந்து கொண்டானா? தாத்தாவை நினைத்துத் தான் நான் அழுதேன்… ரிஷியைத் திருமணம் செய்யாமல் இருந்ததற்காக நான் அழவில்லை… என்று சொன்னால் சரண் புரிந்துக் கொள்வானா? சின்ன வயசிலிருந்து ரிஷி நல்ல பிரண்ட்… அதையும் சொன்னால் புரிந்துக் கொள்வானா? எங்கே புரிந்து கொள்ளப் போகிறான்? இதோ இப்பொழுது பேசியது போல் பேசத்தான் போகிறான்’ யோசித்துக் கொண்டே இருந்தவள் அவன் சொன்னது நியாபகம் வர,

‘அய்யயோ… சொன்னது போல் வேறெங்கும் போயிருப்பானோ?’ மனம் பதைபதைக்க அறையை விட்டு வெளியில் வந்தவள், வீட்டின் வாசக்கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்று பார்க்க, அங்கே சரணின் கார் நின்றிருந்தது. கார் இங்கிருக்க அவன் எங்கே? என்று காருக்குள் உற்றுப் பார்க்க… அங்கே சரண் காரின் இருக்கையைப் பின்னால் நன்றாக இழுத்துவிட்டு அதில் படுத்திருந்தான். அவனைக் கண்டதும் மனது நிம்மதியடைய, கார் கதவைத் திறந்து உள்ளே ஏறினாள். அவனருகில் அமர்ந்து அவன் கையை எடுத்துத் தன் கையோடு வைத்துக் கொள்ள, அவனோ அதை விடுவிக்கப் போராட, அதை இறுக பற்றிக் கொண்டு,

‘சரண்… சாரி… நான் ரிஷி கேட்டதுக்குப் பதில் பேசாமல் அழுதது தவறு தான். நீங்க நினைச்ச மாதிரியான அர்த்தத்தில் நான் அழல”

“பின்னே வேறு எந்த அர்த்தத்தில் அழுத…?” உக்கிரத்துடன் சரணின் வார்த்தைகள் வெளிவந்தது.

“ஐயோ சரண்… நீங்க தப்பாப் புரிஞ்சிக்கிட்டிங்க. ரிஷி எனக்கு நல்ல பிரண்ட் அவ்வளவு தான். சின்ன வயசிலிருந்து ஒண்ணாவே வளர்ந்ததால வேறு

மாதிரியான எண்ணங்கள் எனக்குக் கிடையாது. அதே மாதிரி தான் அவனையும் நினைச்சேன். அவன் மனசில் அப்படியொரு ஆசையிருக்கும்ன்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கல. நான் அழுததுக்குக் காரணம் ரிஷி தாத்தாவைப் பத்திப் பேசியதும் அவர் நியாபகத்தில் என்னையும் அறியாமல் அழுதுவிட்டேன். வேறெந்த உள் அர்த்தமும் இல்லை. உண்மையாச் சொல்றேன் சரண்... என் மனசில் நீங்க மட்டும் தான். இந்த ஜென்மத்தில் நீங்க மட்டும் தான் என் கணவர். இந்த ஜென்மம் மட்டுமல்ல இனி வரும் எல்லா ஜென்மத்திலும்... ப்ளீஸ் என்னைப் புரிஞ்சிகோங்க சரண். ஐ லவ் யூ சரண்" அவள் தன்னை நேசிக்கிறாள் என்பதை அவள் வாய் வார்த்தையின் மூலமாக அறிந்ததும் அதுவரை அவன் மனதிலிருந்த கோபம் எரிச்சலெல்லாம் சட்டென்று சூரியனைக் கண்ட பனி போல் காணாமல் போக, மனம் லேசாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மதுமதி தான் யார்? எதுக்காக அவனைத் திருமணம் செய்தோம்? யாரிடத்தில் தான் இருக்கிறோம்? எல்லாவற்றையும் மறந்தாள். அவளுக்கு நினைவிலிருந்தது எல்லாம் சரணின் கோபமுகம் மட்டுமே. எப்படியாவது அவனைச் சமாதானப்படுத்த வேண்டும் என்றெண்ணம் மட்டும் தான் அவள் மனதிலிருந்தது. தன்னை மறந்துத் தன்னைப் பற்றிய விவரங்களைத் தேடிக் கொண்டிருக்கும் கணவனிடம் அவளைப் பற்றி அவளே சொல்லிக் கொண்டிருந்தாள். காதல் அவள் கண்ணை மறைத்துவிட்டதோ?

"ப்ளீஸ் சரண் ரூமுக்கு வாங்களேன். இங்கே சரியாக் காத்துக் கூட வரல. ப்ளீஸ்..." அவள் கெஞ்ச, அதில் என்ன கண்டானோ பதில் பேசாமல் அவன் காரை விட்டிறங்கி வீட்டை நோக்கி நடக்க, அவளும் அவனைப் பின்தொடர்ந்தாள். அறைக்குள் நுழைந்து படுக்கையில் படுத்ததும், அவனருகே வந்து படுத்து அவன் கையை எடுத்துத் தன் மேல் போட்டவள்,

"சாரி... நான் அப்படி நடந்திருக்கக் கூடாது" என்று சொல்லியவாறு அவன் முகம் நோக்கிக் குனிய, அவளைத்

தடுத்தவன், “தூக்கம் வருது...” தெளிவில்லாமல் முனங்க,

“சாரி... சரண்... சாரி...” அவனுக்குப் போர்வை போர்த்திவிட்டு, அவன் கையை எடுத்து தன்மேல் போட்டுக் கொண்டு அவன் கையணைப்பிலேயே படுத்தவள் அப்படியே உறங்கிப் போனாள்.

தூக்கம் வருகிறது என்று சொன்னவன் தூக்கம் வராமல் தன்னருகில் படுத்திருந்தவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளைப் பற்றிய விவரம் நூலளவுக் கூடத் தெரியாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது அவளைப் பற்றிய விவரம் கொஞ்சம் தெரிந்திருக்கிறது. ஆனால் தெரிந்தத் தகவல் தான் அவனுக்கு அவ்வளவு உவப்பாகயில்லை. தன்னை விட அந்தஸ்தில் பலமடங்கு வசதியானவளாகத் தன் மனைவி இருப்பாளோ என்ற சந்தேகம் வர அவன் நிம்மதிப் பறிப் போனது.

“என்ன பேபி... உன் வசதியென்ன? அழகென்ன? போயும் போயும் இந்தப் பிளாக்கித் தான் உனக்குக் கிடைத்தானா? இப்படிப்பட்ட ஒருவனைத் திருமணம் செய்து கொள்ள... அப்படியென்ன அவசரம் உனக்கு?’ ரிஷியின் வார்த்தைகள் அவன் காதில் ரீங்காரமிட அப்படியே எழுந்தமர்ந்தவன் தலையைப் பிடித்துக் கொண்டான்.

## மலர் : 14

“என்னங்க…”

“ம்…” மதுமதியைத் திரும்பியும் பார்க்காமல் சரண் அலுவலகத்திற்குச் செல்வதற்காக உடையை மாற்றுவதில் மும்முரமாக இருக்க, அவளோ அவன் ஏதும் பேசுவானோ என்று அவன் முதுகையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் பேசமாட்டான் என்று புரிய அவன் முன் வந்தவள்,

“சாரிங்க… தப்பெல்லாம் என் மேல் தான். அந்த நேரம் நான் ரிஷி கேட்டதுக்குப் பதில் பேசியிருக்கணும். அதை விட்டு விட்டு அழுதிருக்கக் கூடாது. சாரி… அதுக்காக நீங்க பேசாமயிருந்து எனக்குத் தண்டனைக் கொடுக்காதீங்க” தொண்டைப் பகுதியில் கை வைத்து மன்னிப்பை வேண்டுவது போல் அவள் யாசிக்க, அதில் அவன் மனம் உருகித்தான் போனான்.

அதிலும் நேற்று அவளே அவனை நேசிப்பதாய் சொன்னப் போது அவன் மனம் முழுவதுமாக அவள் பக்கம் சரிந்துவிட்டது. ஆனாலும் ரிஷியின் வார்த்தைகள் அவன் காதில் ஒலிக்க, அவனையும் அறியாமல் ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை அவன் மனதை ஆக்கிரமிக்க, பதில் பேசாமல் அவளை விட்டு விலகிச் சென்று அறையை விட்டு வெளியேறினான்.

தன்னிடம் பேசாமல் சென்றவனைக் கண்டு அவள் கண்கள் கலங்கியது. திருமணமான இத்தனை நாளில் ஒருநாள் கூட அவன் பேசாமலிருந்தது கிடையாது. கோபத்தில் கூட ரெண்டு வார்த்தை அவளைத் திட்டிவிட்டுத் தான் போவான். ஆனால் அவனின் இந்த அமைதி அவளைக் கொல்லாமல் கொன்றது. கணவனின் கோபத்தில்… பாராமுகம் தந்த துக்கத்தில் இருந்தவளுக்குத் தன்னைப் பற்றி… தாத்தாவைப் பற்றி… ரிஷியைப் பற்றி… எல்லாம் அவனிடம் சொன்னதை மறந்துப் போனாள். அது அவள் நினைவில் இல்லாது போனது அவளின் தூரதிர்ஷ்டமே.

காரைச் செலுத்திக் கொண்டிருந்த சரண் மனதில் மதுவின் நினைவே ஆக்கிரமித்து இருந்தது. கல்யாணமான நாள் முதல் இன்று காலையில் நடந்தது வரை யோசித்தவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது அது... மதுமதி மேல் எந்தத் தவறுமில்லை என்பதே. அவள் ஒரு மகளாய் தந்தையைப் பழிவாங்க வந்திருக்கலாம். ஒரு மனைவியாய் தன் கடமையை ஒழுங்காகத் தான் செய்தாள். அவனிடமும் நன்றாகத் தான் நடந்து கொண்டாள். அதில் அவளைக் குறைச் சொல்ல முடியாது. அவள் நல்லவள் தான். ஆனால் தான் தான் கெட்டவனாகி விட்டதாக எண்ணி, மதுவிடம் தான் நடந்து கொண்ட விதத்துக்குத் தன்னைத்தானே வெறுத்தான். அவளைப் பற்றிய விவரங்கள் ஏதுமறியாது இருந்தவனுக்கு இப்பொழுது ரிஷி மூலம் கொஞ்சம் விவரம் தெரிந்திருக்க... அதை வைத்து அவளைப் பற்றி முழுவதுமாக அறிய எண்ணியவன் நேரே துப்பறியும் நிறுவனத்திற்குக் காரைச் செலுத்தினான்.

அன்று இரவும் சரண் மதுவிடம் ஒதுக்கம் காண்பிக்க, அதற்கு மேல் அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. “உங்களுக்கு என்னைப் பிடிக்கலியா?” ஏக்கக் குரலில் கேட்டவளை அள்ளியெடுத்து...

‘இல்லையடிப் பெண்ணே... இந்த உலகத்திலேயே உன்னைத் தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அந்தளவுக்கு நான் உன்னைக் காதலிக்கிறேன் செல்லம்’ முத்தமிட்டுக் கொஞ்சி கெஞ்சி அவள் காலடியில் வீழ்ந்துக் கிடக்க அவன் மனம் விரும்பத்தான் செய்தது.

‘வேண்டாம்... வேண்டாம்... இத்தனை நாளாய் அவளுக்கு நான் செய்தத் துரோகம் போதும். இனியாவது அவளைப் பற்றி முழுவதும் தெரிந்து கொண்டு... அதன் பின் மதியையும் இங்கே அழைத்து வந்து... முன்பு மதுவைப் பற்றி என் மனதிலிருந்த நிலை... தற்பொழுது அவள் மேலிருக்கும் காதல்... இதையெல்லாம் சொல்லி அவளிடம் மன்னிப்புக் கேட்டு அதன் பின் அவள் என்னை மன்னித்து ஏற்றுக் கொண்டால் மட்டுமே அவளை நான் தொடுவேன்.

அதுவரை விலகித் தான் இருக்க வேண்டும்’ தனக்குள் சொல்லிக் கொண்டவன்,

“அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை மது… நீயாக ஏதாவது தவறாக நினைத்துக் கொள்ளாதே” அவள் கண்ணைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு சொல்ல, அதைக் கேட்டு ஏமாற அவள் என்ன பள்ளிச் சிறுமியா? அவன் நின்ற நிலையிலேயே அவன் மனது புரிய, அவனருகில் வந்தவள், அவன் கழுத்தில் தன் கைகளை மாலையாகக் கோர்த்து… அவன் உயரத்திற்கு எக்கி, அவன் உதட்டோடு தன் உதட்டை வைத்து அழுத்தி முத்தமிட, அவனோ அவளின் எதிர்பாராத தாக்குதலில் மனம் மயங்கி நிற்க… எல்லாம் கொஞ்ச நேரம் தான், பின் சுதாரித்து அவளை விட்டு விலகியவன், “வேண்டாம் மது… எனக்குத் தலைவலியாயிருக்கு” படுக்கையில் படுக்கப் போனான்.

அவன் கையைப் பிடித்துத் தடுத்து, “இல்லை… உங்கள் மனதில் ஏதோயிருக்கு. ஆனால் அது… நான் நடந்து கொண்ட விதத்தில் என்றால் தயவுசெய்து என்னை மன்னிச்சிருங்க” அவன் பதிலை எதிர்பாராமல் விடுவிடுவென்று நடந்து படுக்கையில் விழுந்தவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள். அவளின் மூடியக் கண்களின் வழியே கண்ணீர் வழிந்து கொண்டிருக்க, அதைப் பார்க்கச் சகிக்காது அவன் பால்கனிப் பக்கம் சென்றான். அந்த இரவு இருவருக்குமே தூங்கா இரவாகிப் போனது.

******************************************

மறுநாள் அலுவகத்தில் தன்னறையில் அமர்ந்திருந்த சரண் இருக்கைகளையும் கழுத்தின் பின்பக்கமாய்க் கோர்த்து நாற்காலியில் சாய்ந்தமர்ந்துத் தன் முன் பரப்பி வைக்கப்பட்டிருந்த மும்பையில் இருந்து வெளிவரும் பிரபல ஹிந்தி, ஆங்கில நாளிதழ்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். எல்லாப் பத்திரிக்கையும் அவன் மனைவி மதுமதியைத் தான் புகழ்ந்து எழுதியிருந்தது. மும்பையின் வளர்ந்து வரும் இளம் தொழிலதிபர் என்றும்…

இன்னும் சில வருடங்களில் இந்தியாவின் தலைசிறந்த தொழிலதிபர்களுள் ஒருவராக வர வாய்ப்பிருக்கிறது என்றும்... பக்கப் பக்கமாய்ப் புகழ்ந்து தள்ளியிருந்தது. அதிலிருந்து ஒரு செய்தித்தாளை எடுத்துப் பார்த்தவன் பார்த்துக் கொண்டே இருந்தான்.

வெள்ளை நிற நீண்டக் கவுன், குதிகால் செருப்பு, கழுத்தில் காதில் வைரம், பளிச்சிடும் புன்னகை என்று தேவதைப் போலிருந்தவளைப் பார்க்க பார்க்க அவன் நெஞ்சு வலித்தது. அவனைத் திருமணம் செய்தது முதல் இந்தப் புன்னகையை அவள் முகத்தில் அவன் கண்டதில்லை. அதைத் தான் அவன் குழித் தோண்டிப் புதைத்து விட்டானே. அவளின் அழகு, வசதி எல்லாம் பார்க்கும் போது அவனுக்கும் அவளுக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது. அவனும் வசதியானவன் தான் இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் அவள் அளவுக்கு வசதியில்லை. அந்தளவிற்கு உயரத்திலுள்ளவள் தனக்கு அடங்கித் தான் ஏவிய வேலைகளைப் புன்னகை மாறாமல் செய்து கொண்டு... ஏன் அப்படி நடந்து கொண்டாள்? யோசிக்க யோசிக்க அவனுக்கு உண்மைப் புலப்பட... அப்படியே ஸ்தம்பித்துத் தான் போனான்.

‘முதலிலிருந்தே அவளுக்கு என் மேல் காதலா? எப்பொழுது ஏற்பட்டது இந்தக் காதல்? அதனால் தான் நான் என்ன சொன்னாலும் செய்தாலும் பதில் பேசாமல் கேட்டுக் கொண்டாளா? அவ்வளவு காதலா என் மேல்... அவளின் தன்னலமற்ற இந்தக் காதல் கிடைக்க நான் என்ன தவம் பண்ணியிருக்க வேண்டும்...!’ நினைக்க நினைக்க அவன் நெஞ்சு இனித்தது.

எல்லாம் ஒரு கணம் தான்... சட்டென்று அவன் முகம் சோர்ந்தது. தான் செய்தத் துரோகம் மட்டும் அவளுக்குத் தெரியுமேயானால் இந்தக் காதல் அவளிடத்தில் இருக்குமா? நிச்சயம் இருக்காது... ‘தூ’வென்று தன்னைக் காறித் துப்பிவிட்டுப் தான் போகப் போகிறாள். அதற்கு முன் அவனே அவளிடம் உண்மைச் சொல்லிப் பாவ மன்னிப்புக் கேட்க எண்ணினான். அதற்குப் பின் அவள் என்ன

தண்டனைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். முடிவெடுத்த பின் முதலில் மதிவதனாவைத் தான் அழைத்தான். எல்லாவற்றையும் அவளிடம் சொல்லியவன்,

“முதலில் நீ கிளம்பி இங்கே வா... மத்த விசயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன். இதற்கு மேலும் மதுவிடம் உண்மையைச் சொல்லாமல் இருப்பது நல்லாயில்லை”

“மாமா... அது வந்து...” அவள் இழுக்க...

“உன் கல்யாண விசயமாகத் தானே பயப்படுற. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். ஹரிக்கும் உனக்கும் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டியது என் பொறுப்பு”

“மாமா... உங்களுக்கு எப்படித் தெரியும்?” அதிர்ச்சியுடன் மதி கேட்க,

“அதான் உன் கம்ப்யூட்டர் ஸ்க்ரீனில் இருக்கும் ஹரியின் போட்டோ தான் எல்லாம் சொல்லுதே” அவன் கிண்டலாய் பதிலளிக்க...

“மாமா நான் இல்லாத நேரம் என் கம்ப்யூட்டரை நொண்டியிருக்கிங்களா? இருங்க... இருங்க... மதுவிடம் சொல்லி உங்களுக்குப் பனிஷ்மென்ட் கொடுக்கச் சொல்றேன்”

“அம்மா தாயே அப்படி ஏதும் பண்ணிடாதே. முதலில் நீ கிளம்பி வரும் வழியைப் பாரு”

“நாளைக்குக் காலையில் நான் அங்கிருப்பேன். ஓகேவா?”

“ம்... ஓகே” சிரித்தபடி அழைப்பைத் துண்டித்தவன் முகத்தில் யோசனையும் நெஞ்சில் நிம்மதியும் ஒருங்கே தோன்றியது.

மறுநாள் காலையில் ஏதோவொரு யோசனையுடன் கிளம்பிக் கொண்டிருந்த சரணை மதுமதியும் யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். உடையை அணிந்தவன் பெல்ட்டை பக்கத்தில் வைத்துக் கொண்டே தேட, அதையெடுத்து அவனிடம் நீட்டியவள், “எனித்திங் ராங்...”

“நத்திங்…” அவள் முகம் பாராமலே பெல்ட்டை வாங்கிக் கொண்டு நகர்ந்தான்.

அலுவலகம் கிளம்பும் வரை தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்த கணவனின் செயல்கள் வித்தியாசமாகப் பட்டாலும் அவளால் வாய் விட்டு அவனிடம் கேட்க முடியவில்லை. மௌனமாக அவன் அலுவலகம் கிளம்ப, மதியோ சமையலறைக்குள் நுழைந்தாள்.

“என்னம்மா… சரண் ஆபிசுக்குக் கிளம்பிட்டானா?” சுபத்ரா புன்னகையுடன் கேட்க,

“ம்… போயிட்டார் அத்தை…”

“என்ன அதியசமாயிருக்கு? காலையிலிருந்து சத்தமே கேட்கல”

“தெரியல… இன்னைக்கு என்னமோ ரொம்ப அமைதியாயிருந்தாரு”

“ஏதாவது பிசினெஸ் டென்சனாயிருக்கும். மதி… நான் உன்னிடம் ஒண்ணுக் கேட்பேன் தப்பா எடுத்துக்கக் கூடாது. சரண் உன்னைச் சந்தோசமா வச்சிருக்கானா? இங்கே நீ நிம்மதியாயிருக்கியா? ஏன்னா இப்பயெல்லாம் சரண் முன்ன மாதிரியில்லை. அதான் கேட்டேன். வாழ வந்த பெண் மனசுக் கஷ்டப்பட்டா அந்த வீடு நல்லாயிருக்காது. நீயும் ஹரிணியும் எனக்கு ஒண்ணு தான்ம்மா” அவரின் வார்த்தையில் மனம் நெகிழ்ந்தவள், அவரின் தோளில் ஆறுதலாய் சாய்ந்து,

“உங்களை மாதிரி ஒரு மாமியார் எனக்குக் கிடைச்சிருக்கும் போது எனக்கு என்ன கவலை? அவரும் என்னை நல்லாப் பார்த்துக்கிறார். நீங்க எங்களைப் பத்திக் கவலைப்பட வேண்டாம்”

“எப்படியோம்மா நீ சந்தோசமாயிருந்தாப் போதும்”

“ம்… சரி அத்தை. வெங்காயக் குழம்புக்கு இவ்வளவு வெங்காயம் போதுமா?” மதுவின் பேச்சில் சுபத்ராவும்

சமையல் வேலையில் ஆழ்ந்து விட அந்தப் பேச்சை அவரும் மறந்து போனார்.

சமையல் வேலைகள் முடித்துவிட்டு அறைக்கு வந்த மதுமதி ஓய்வாகச் சோபாவில் சாய்ந்தமர, அந்த நேரம் அலைப்பேசி இசைக்க, அதன் ஒலியிலேயே சரணின் அலைப்பேசி என்று புரிய, அவன் எப்படி இதை விட்டு விட்டுப் போனான்? என்று யோசித்துக் கொண்டே அதைத் தேடி எடுத்தவள் அழைப்பை எடுக்கலாமா வேண்டாமா என்று ஒரு நொடி யோசிக்க, ஒருவேளை அலைப்பேசிக் காணாமல் சரண் ஏதும் அழைத்திருந்தால் என்ற நினைவே அவளை அழைப்பை எடுக்கச் செய்தது. அவள் பேசுவதற்கு முன் மறுமுனை படப்படத்தது.

“ஹலோ மாமா… நான் மதி பேசுறேன். ஃபிளைட் கொஞ்சம் டிலே ஆகுமாம். அதனால் நீங்க இரண்டு மணி வாக்கில் என்னைக் கூப்பிட வந்தாப் போதும்” மதி பேசப் பேச மதுவுக்குத் தலைச்சுற்றுவது போலிருந்தது. அதிலும் அவளின் ‘மாமா’ என்றழைப்பு அவள் காதில் அமிலத்தை ஊற்றியது.

“ஹலோ… மாமா லைன்ல இருக்கீங்களா?” அவள் மறுமுனையில் படப்படக்க, மதுமதி ஒருநொடித் தன்னை நிதானப்படுத்திக் கொண்டவள்,

“உன் மாமா இங்கில்லை மதி. நான் மது பேசுறேன்”

மது பேசியதைக் காதில் வாங்காதவளாய் மதி உற்சாகத்தில் கூச்சலிட்டாள். “ஹேய் மது… எப்படியிருக்க? ம்… நீ நல்லாயிருப்பேன்னு எனக்குத் தெரியும். ஏன்னா மாம்ஸ் மேல எனக்கு நம்பிக்கையிருக்கு. சரி மாம்ஸ் அங்கேயில்லையா? நான் இன்னைக்கு அங்கே வர்றேன். ஃபிளைட் டிலே ஆன விசயத்தை மாம்ஸ் கிட்டச் சொல்லிடு. எனக்கு உன் கூட நிறையப் பேசணும்ன்னு இருக்கு. பட் இப்ப நேரமில்லை. நான் நேரில் வந்து பேசுறேன். பை”

“ஒரு நிமிசம் மதி… சரணை நீ எப்போ பார்த்தே… நான் தான் மதுன்னு அவருக்குத் தெரியுமா?” மதுமதியின் கேள்வியில்

மதிவதனா ரொம்பவும் யோசிக்கவில்லை. சட்டென்று பதிலளித்தாள்.

“நீ நம்ம வீட்டுக்குப் போனதும் மாம்ஸ் கிட்ட எல்லா உண்மையும் சொல்லிட்டேன். நீ தான் மதுங்கிறதையும் சேர்த்துத் தான்”

“ஓ... சரி மதி நேரில் பார்ப்போம்” என்றவள் நிதானித்து மனதைத் திடப்படுத்திக் கொண்டு, “மதி... இப்ப நீ எங்கே இருந்து பேசுற?”

“பெங்களூரில் இருந்து...” அதைக் கேட்டதும் மின்சாரத்தைத் தொட்டவள் உள்ளமும் உடலும் துடிக்க... அழைப்பைத் துண்டித்து அலைபேசியைத் தூக்கித் தூரப் போட்டவள் மனதில் கோபம் தான் பொங்கி எழுந்தது.

‘அப்படியென்றால் பெங்களூருக்கு அடிக்கடிப் போனது இவளைப் பார்க்கத்தானா? அப்போ திருமணத்திற்கு முன்பே நான் மதுமதி என்பது அவனுக்குத் தெரியுமா? தெரிந்திருந்துத் தான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டானா? நானாவது அவனை விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ஆனால் அவன்... காதல் கொண்டு மணம் புரிந்தானா? இல்லை வெறுப்பில் மணம் புரிந்தனா? இன்னும் என்ன சந்தேகம்... அதான் நேற்று நான் அவனைக் காதலிக்கிறேன் என்று கூறியும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போனானே. அது வெறுப்பில்லாமல் வேறென்ன? ஒருவேளை அவனை விட்டுப் போக மாட்டேன் என்று கோபமோ என்னவோ? அவன் மதியைக் காதலித்து அவளை வீட்டை விட்டு வெளியேற்றியதற்காக என்னைப் பழிவாங்க வேண்டுமென்று இப்படி நடந்திருப்பானோ...’ எதையெல்லாமோ நினைத்தவள் அந்த நினைவே அவளுக்குக் கசக்க, வேதனையில் முகம் சுருங்கியது. அவள் நினைவில் நிச்சயம் அன்று நடந்த நிகழ்ச்சி முதல் இன்று நடந்தது வரை காணொளிக் காட்சியாய் கண் முன்னே வந்தது.

‘ஆக… என்னைத் திருமணம் செய்தது என் மேலுள்ள காதலிலில்லை. என் மீதுள்ள வெறுப்பில் தான் மணம் முடித்தானா? மதியைப் போல் நடிக்க வந்திருக்கும் என் மேல் அவன் காதல் கொள்ள வேண்டுமென்று நானும் எதிர்ப்பார்க்கவில்லை. ஆனால் பிடிக்காமல் என்னை ஏன் திருமணம் செய்யணும்? வேண்டாமென்று சொல்லிவிட்டுப் போய்க்கிட்டே இருக்க வேண்டியது தானே. அதைவிட்டு விட்டு என்னை மணம் முடித்து என்னைப் படுத்தியெடுத்து… அதுவும் ஒரு பெண்ணைத் தன் உடல் பலத்தால் படுக்கையில் வீழ்த்தி வெற்றிக் கொள்வது என்பது எவ்வளவு ஒரு ஈனமான செயல். அதை ஏன் அவன் செய்ய வேண்டும்? அந்தளவுக்கு என் மேல் அவனுக்கு வெறுப்பா?’ அதை நினைக்கும் போதே அவனுடன் கூடிய கூடலில் நினைவு வந்து… அதனால் ஏற்பட்ட மனவலி, உடல்வலி நியாபகம் வர… இன்னமும் மனமும் உடலும் வலிப்பது போல் அவளுக்குத் தோன்ற ‘ஓ’வென்று கதறியழுதாள்.

‘இவன் யார் நான் செய்த தவறுக்குத் தண்டனைக் கொடுக்க? இவன் என்ன கடவுளா? என் தவறுக்கு என் அப்பா தான் எனக்குத் தண்டனைக் கொடுக்கவேண்டும். இவ்வளவு ஏன் மதி தண்டித்தால் கூட அதிலொரு நியாயம் இருக்கிறது. இடையில் இவன் யார் என்னைத் தண்டிக்க…?’ தன் பெண்மையை அவன் காலடியில் போட்டு நசுக்கியதை அவளால் தாங்க முடியவில்லை. அவள் மனதில் சரண் மேல் வெறுப்பு இமயமாய் வளர்ந்து கொண்டே போனது. அவள் கொஞ்ச நாளாய் மறந்து போயிருந்த பழைய மதுமதி கொஞ்சம் கொஞ்சமாய்த் தலைத் தூக்க கண்ணீரைத் துடைத்து எறிந்தவள், அடுத்தென்ன என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

அடுத்தச் சிலநிமிடங்களில் தொழிலதிபர் மதுமதியாய் முடிவெடுத்தவள், ஒரு காகிதத்தை எடுத்து நாலு வார்த்தை எழுதி வைத்துவிட்டு அறையிலிருந்து வெளியில் வந்தவள் யார் கண்ணிலும் படாமல் வீட்டை விட்டு வெளியேறி, வாடகைக் காரில் ஏறியமர்ந்தவள் ரிஷி தங்கியிருக்கும்

ஹோட்டலுக்குப் போகச் சொல்லிவிட்டு கண்மூடி இருக்கையில் சாய்ந்தாள்.

மூடிய விழிக்குள் அன்பே உருவான சுபத்ரா உருவமும், அவளின் தாத்தா போன்று பாசத்தைக் காண்பித்த வைத்தியநாதன் முகம் நியாபகத்தில் வந்தது. அதையெல்லாம் விடத் தந்தையின் பாசம் அறியாது வளர்ந்தவளுக்கு இத்தனை நாளாய் அந்தப் பாசத்தைக் கொடுத்த ராமகிருஷ்ணனைப் பிரிய வேண்டியதை நினைத்தால் தான் மனம் வேதனையில் கசங்கியது. தன்னைப் போல் தானே மதிவதனாவிற்கும் இருந்து இருக்கும்... அந்த நிலையிலும் அவளைப் பற்றிக் கவலைப்பட்டாள். அதற்குத் தனக்கு இந்தத் தண்டனைத் தேவைத்தான் என்றெண்ணியவள் மனம் கடைசியாகச் சரணிடம் வந்து நின்றது.

எல்லோரும் பாசமாயிருக்க, பாசம் காண்பிக்க வேண்டியவனோ வேசமிட்டு நடித்தான் என்பதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. இனி அவனுடன் வாழ்வதென்பது முடியாத காரியம். 'நான் இல்லாவிட்டால் அவனுக்கென்ன... அதான் மதிவதனா இருக்கிறாளே' என்று நினைத்தவள் உதடு இகழ்ச்சியாய் வளைந்தது. ஏனோ சரண் அனுசரணையாக நடந்த கடைசிக் கொஞ்ச நாட்களை அவள் மறந்துப் போனாள் என்பது தான் விந்தை.

மனதில் காதலித்தவன் மேல் மிதமிஞ்சிய வெறுப்பு வந்தால் அது காதலை அழித்துவிடும். அவன் மீது ஏற்பட்ட வெறுப்பு அவன் மீதானக் காதலை அழித்துவிட்டது. ஆனால் ஒன்று மனதிலிருந்த காதல் போனதும் காதலன் முன் கோழையாய் மாறியிருந்த மதுமதி காணாமல் போய், பழைய துடிப்பான... தைரியமான... கம்பீரமான மதுமதியாக அவள் மாறிவிட்டாள். இந்த மதுமதியிடம் சரண் காதல் யாசகம் கேட்டால் காதலைக் கொடுப்பாளா... இல்லை மறுப்பாளா...?

## மலர் : 15

சரண் நேரமாகிவிட்டதோ என்ற கவலையில் வேகமாக விமான நிலையத்துக்குள் நுழைய, அங்கே பெங்களூரிலிருந்து வரும் விமானம் மூன்று மணி நேரம் தாமதமாக வரும் என்று அறிவிப்பு வர, எரிச்சலுடன் தன் அலைப்பேசியைச் சட்டைப் பையில் தேடினான். எங்குத் தேடியும் கிடைக்கவில்லை... காலையில் அவசரத்தில் வீட்டில் வைத்துவிட்டு வந்திட்டோமோ என்றெண்ணியவன் பொதுத் தொலைப்பேசியிலிருந்து மதிவதனாவுக்கு அழைத்தான்.

“மதி ஃப்ளைட் டிலே ஆனா சொல்லமாட்டியா?” எரிச்சலுடன் சரண் படப்படக்க,

“இல்லையே மாமா... உங்களுக்குப் ஃபோன் பண்ணினேன்... மது தான் எடுத்தா... நான் அவக்கிட்ட எல்லா விவரத்தையும் சொல்லி... உங்கக்கிட்ட சொல்லச் சொன்னேனே”

“என்னது மதுவா?” அதிர்ச்சியில் அவனுக்குத் தலைச்சுற்றுவது போலிருக்க, சுதாரித்துக் கொண்டு “வேற எதுவும் அவக் கேட்டாளா?”

“ம்... உங்களை எப்படிப் பார்த்தேன்? அவ மதுன்னு உங்களுக்குத் தெரியுமா? இப்படி என்ன என்னமோ கேட்டா... சரி எப்படியும் அவளைப் பார்க்கத் தானே போறோம்ன்னு எல்லாத்தையும் சொல்லிட்டேன்”

“அதுக்கு அவள் ஒண்ணுமே சொல்லலியா?” பயமே அறியாதவன் மனம் இன்று ஏனோ பயத்தில் துடித்தது.

“ம்ஹூம்... ஒண்ணுமே சொல்லலியே? நேரில் வா பேசிக்கலாம்ன்னுச் சொல்லி வச்சுட்டா... என்ன மாமா ஏதும் பிரச்சினையா?” அவளின் கேள்வியில் தன்னைச் மீட்டுக் கொண்டவன்,

“இல்லை மதி... நான் பார்த்துக்கிறேன். எனக்காக ஒண்ணு செய். கால் டாக்சிப் பிடிச்சு உங்க வீட்டுக்குப் போ. நான்

அப்பா, அம்மா கிட்டப் பேசி அவங்களையும் கூட்டிட்டு அங்கே வர்றேன். உனக்கு முன்னே நான் அங்கே இருப்பேன் அதனாலக் கவலைப்படாதே" அவள் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் தொலைப்பேசியை அதன் தாங்கியில் வைத்தவன் தன் காரை நோக்கி ஓடினான்.

விமான நிலையத்திலிருந்து வீடு வந்த அந்த முக்கால் மணி நேரமும் அவன் உயிர் அவன் கையிலில்லை. 'மதுமதிக்கு என் நடத்தைக்கான காரணமெல்லாம் தெரிந்திருக்கும். இப்பொழுது என் மேல் கோபத்தில் இருப்பாளா? இல்லை அழுதுக் கரைந்துக் கொண்டிருப்பாளா? கோபத்தில் என்னைத் திட்டுவாளோ? பரவாயில்லை என்ன திட்டினாலும் வாங்கிக் கொள்ள வேண்டியது தான். நான் அவளுக்குச் செய்தக் காரியத்திற்குத் திட்டாமல், கோபப்படாமல் கொஞ்சவா செய்வாள்? அவள் கேட்கும் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியுமா? அன்று சரியாகத் தோன்றிய விசயம் இன்று தவறாகத் தோன்றுகிறதே... என் மனம் திருந்திவிட்டதை உணர்ந்துக் கொள்வாளா? என்னை ஏற்றுக் கொள்வாளா?' பலவிதச் சிந்தையிலிருந்தவனுக்கு மதுவின் காதல் சொன்ன முகமும், மன்னிப்புக் கேட்ட முகமும் நினைவில் வந்து இம்சிக்க, வீடு எப்போதடா வரும் என்றிருந்தது அவனுக்கு.

வீடு வந்ததும் காரை விட்டு வேகமாக இறங்கியவன், புயல் போல் உள்ளே நுழைந்தான். எதிர்ப்பட்ட சுபத்ரா அவனை வழி மறித்து, "என்ன சரண்... இந்த நேரத்தில் வந்திருக்க?" அவரின் கேள்வியைப் பொருட்படுத்தாமல், "மது... எங்கேம்மா?"

"மாடியில் தான் இருப்பா... ஏன் அவளுக்கென்னடா?" அவரின் கேள்விக்குப் பதிலளிக்காமல் அவசரமாகத் தங்களது அறை நோக்கிப் படியேறியவனைப் புரியாமல் பார்த்த சுபத்ரா, பின் புரிந்து சிரித்துக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தார்.

அறைக் கதவை திறந்து வேகமாக உள்ளே நுழைந்தவன், அறையைச் சுற்றித் தன் கண்களைச் சுழற்றினான். மதுமதியை எங்கும் காணவில்லை. எங்கே போனாள் இவள்? என்று யோசித்துக் கொண்டே குளியலறை, பால்கனி எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தவன் அங்கேயெல்லாம் அவள் இல்லாதது கண்டு ஒரு நொடித் திகைத்துத் தான் போனான். அப்பவும் அவள் வீட்டை விட்டு வெளியில் போயிருப்பாள் என்று அவன் எண்ணவில்லை. 'ஒருவேளை தாத்தா ரூமில் இருப்பாளோ என்னவோ' என்று நினைத்தவன் கீழே ஓடினான். அங்கேயும் அவள் இல்லை என்றதும் தான் மனம் பதற ஆரம்பிக்க, மீண்டும் மேலே அறைக்கு ஓடி வந்தான்.

அறை முழுவதும் தேடியவன் கையில் அவன் அலைப்பேசியும் அதன் கீழ் படபடத்த அந்தக் காகிதமும் கிடைக்க, அவசரமாகக் கண்களை அதில் ஓட்டினான். நான்கே நான்கு வார்த்தைகள் அவன் இதயத்தைச் சுக்கு நூறாக உடைக்கும் என்று சற்று முன்பு யாராவது சொல்லியிருந்தால் கூட அவன் சிரித்திருப்பான். ஆனால் அப்படி நடக்கக் கூடும் என்பதை இதோ இந்தக் காகிதம் உணர்த்துக்கிறதே. அந்தக் காகிதத்தைப் பார்த்தபடி அப்படியே கட்டிலில் அமர்ந்தான். "என்னைத் தண்டிக்க நீங்க யார்?" அந்த வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவனை வருத்த தாங்க முடியாதவனாய் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

மதுமதி தன்னை விட்டுப் போய்விட்டாள் என்பதை அவனால் நம்ப முடியவில்லை. ஏதோ கோபித்துக் கொள்வாள்... சண்டைப் போடுவாள் என்று தான் எண்ணியிருந்தான். இப்படி அவனை விட்டு விலகிப் போவாள் என்று கனவிலும் அவன் நினைத்துப் பார்க்கவில்லை. இனி தன்னிடம் திரும்பி வருவாளா? மாட்டாளா? அவனுக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் அவளில்லாமல் அவனுக்கு வாழ்வு என்பதில்லை. அதை அந்த நொடி அவன் உணர்ந்தான்.

தான் உணர்ந்தது போல் அவள் ஏன் உணரவில்லை? என்ற எண்ணம் மனதைத் தாக்க,

‘ம்ஹூம்... நான் செய்தக் கொடுமைக்கு அவள் எப்படி அப்படி உணருவாள். அப்படியென்றால் என்னைக் காதலிக்கிறேன் என்று சொன்னது பொய்யா? இல்லையில்லை... அது உண்மைத் தான். அதைத் தான் நான் என் நடத்தையால் கொன்றுவிட்டேனே. மது... நீ எனக்கு வேணும்... திரும்ப வருவியா?’ மனதுக்குள் புலம்பியவன் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. சிறிது நேரம் ஒன்றும் புரியாதவனாய் புலம்பியவன், பின் நிதானித்து அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து முடிவு செய்தான். முடிவு செய்தவன் நேரே தன் தந்தையை அழைத்தான்.

“அப்பா... உங்களிடம் ஒரு முக்கியமான விசயம் பேச வேண்டியிருக்கு. நீங்க இப்ப வீட்டுக்கு வாங்க. வரும் போது ஹரியையும் கூட்டிட்டு வாங்க” அவர் மறுக்க முடியாதப்படிப் பேசியவன் அலைப்பேசியை அணைத்து விட்டு என்ன பேச வேண்டும் என்று தன்னைத் தயார் செய்ய ஆரம்பித்தான்.

**************************************

“சரண் என்னப்பா... எதுக்கு வேலை நேரத்தில் நீ கூப்பிட்ட? என்ன விசயம்?” ராமநாதன் மகனிடம் கேட்க, சரணோ என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தலைக் குனிந்து அமர்ந்திருந்தான். வீட்டின் வரவேற்பறையில் எல்லோரும் அமர்ந்திருக்க, எல்லோரின் விழிகளும் சரணையே எதிர்ப்பார்ப்புடன் பார்த்துக் கொண்டிருந்தது.

மகனின் சிவந்த கண்கள் சுபத்ராவுக்கு எதையோ சொல்லாமல் சொல்ல அவன் அருகில் சென்றவர், அவன் தோளில் ஆறுதலாகக் கை வைத்து, “என்ன சரண்? ஏன் ஒரு மாதிரியிருக்க?” அவரின் ஆறுதலில் அவன் கண்கள் கலங்கியது, முயன்றுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன், “மது என்னை விட்டுப் போயிட்டாம்மா?”

“டேய்... என்னடாச் சொல்ற? மாடியில் தானே இருந்தா... அவ எதுக்கு உன்னை விட்டுப் போகப் போறா? நீ பண்றதைப்

பார்த்து நீ தான் அவளை விட்டுப் போயிருவியோன்னு நான் பயந்துட்டிருந்தேன். இதில் அவ உன்னை விட்டுப் போயிட்டாளாமா? நல்லாயிருக்கு நீ சொல்றக் கதை. நீ சொல்றதை நம்ப நான் ஒண்ணும் முட்டாளில்லை. ஏன்னா மது அந்தளவுக்கு உன்னை நேசிக்கிறா…” அம்மாவின் வார்த்தையில் அவன் முகம் மலர்ந்தது. அன்னை உணர்ந்தது கூடத் தான் உணராமல் போனோமே என்று அவன் உள்ளம் மருகியது.

“நீங்க மது மேல் வச்சிருக்கிற நம்பிக்கையைப் பார்க்கும் போது எனக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு. ஆனால் நான் நிஜமாத்தான்ம்மா… சொல்றேன்” அன்னையிடம் கூறியவன், எல்லோருடமும் மதுமதி யார்? அவள் எப்படி இங்கே வந்தாள்? எல்லாவற்றையும் அவன் சொல்லச் சொல்ல பெரியவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. கனத்த மௌனம் அங்கே நிலவியது.

“சரண் இவ்வளவு நடந்திருக்கு எங்கக்கிட்ட ஒரு வார்த்தைச் சொல்லணும்ன்னு உனக்குத் தோணலியா? இப்பப் பாரு எப்படிப்பட்ட பிரச்சினையில் இது வந்து நிக்குதுன்னு? சின்னவங்க நீங்க பாட்டுக்கு முடிவு பண்ணினா… பெரியவங்க நாங்க எதுக்கு?” ராமநாதன் குரல் கோபத்தைக் காட்டியது.

“அப்போ என் பேத்தி வர மாட்டாளா? என் கூட யார் பேசுவா? எனக்குப் புக்கெல்லாம் படிச்சுக் காண்பிப்பாளே… இனி அவ வரமாட்டாளா?” வைத்தியநாதன் புலம்பவும் அவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த கண்ணீர் சரண் கண்களிலிருந்து உருண்டோட தலையைக் குனிந்து கொண்டான்.

“என்ன சரண் இது இப்படியொரு சிக்கலில் போய் மாட்டிகிட்டியே?” ஹரி வருத்த குரலில் சொன்னான்.

“அப்படின்னா சரண்… நீ விருப்பமில்லாமல் தான் மதி… இல்லையில்லை என் மருமகள் மது… மதுவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டியா? அதான் அவளை அந்தப் பாடுப்படுத்தி எடுத்தியாடா? பிடிக்கலைன்னா முதலிலேயே எங்கக்கிட்டச்

சொல்லிக் கல்யாணத்தை நிறுத்தியிருக்க வேண்டியது தானே... அதை விட்டு விட்டு என்னடா இது? பெண் பாவம் பொல்லாதது சரண்... அது உன்னைச் சும்மா விடாது" சுபத்ரா தலையிலடித்துக் கொண்டு அழ, அவரருகே மண்டியிட்டு அமர்ந்தவன்,

"அம்மா... நீங்க நினைக்கிற மாதிரியில்லைம்மா. அவளைப் பிடிக்காம உங்க வார்த்தைக்காகக் கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் அதுக்கு அப்புறம் அவக்கிட்ட நான் என் மனசைத் தொலைத்துச் ரொம்ப நாளாச்சும்மா. என்னை நம்புங்கம்மா. அவளுக்கும் என்னை ரொம்பப் பிடிக்கும். இப்ப அவள் போயிருக்கிறது ஏதோ மனக்குழப்பத்தில் தான். அவளைச் சமாளித்து இங்கே கூட்டிட்டு வர என்னால் முடியும். என்னை நம்புறிங்கத் தானே?" சிறு குழந்தை போல் ஏக்கத்துடன் தன் முகம் பார்த்த மகனின் முகத்திலிருந்த சோகம், வேதனை அந்தத் தாயுள்ளத்தை ஏதோ செய்ய அவனைத் தன் வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

"உன்னை நம்பாமல் வேறு யாரை நம்பப் போறேன் சரண். இனியாவது நல்லதே நடக்கட்டும். நீ சொல்வது போல் நடந்தால் எனக்குச் சந்தோசமே. என் மருமகளைச் சீக்கிரம் கூட்டிட்டு வா. அப்பத்தான் எனக்கு நிம்மதி"

"கட்டாயம்மா... இப்போ நாம மாமாவைப் பார்க்கப் போகணும். இதுக்காக அவரைச் சந்தேகப்படாதீங்கம்மா. அவர் ரொம்ப நல்ல மனுசன். இந்த விசயம் தெரிந்து அவர் என்ன மாதிரி ரியாக்ட் பண்ணுவார்ன்னுத் தெரியல. நாம எல்லோரும் அங்கே போகலாம்"

"சரி நீங்கயெல்லாம் போயிட்டு வாங்க. நான் பேக்டரி போறேன்" ஹரி எழுந்து கொள்ள, சரணால் அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஹரி மதியைப் பிறகு பார்த்துக் கொள்ளட்டும். முதலில் மது பிரச்சினையைப் பார்ப்போம் என்றெண்ணியவன் தாத்தாவை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு, அப்பாவையும், அம்மாவையும் அழைத்துக் கொண்டு மதியின் வீட்டிற்குப் புறப்பட்டான்.

*****************************

“அடடே... வாங்க வாங்க. எல்லோரும் சேர்ந்து வந்திருக்கிங்க? எங்கே மதியைக் காணோம்?” வரவேற்ற ராமகிருஷ்ணனைச் சங்கடத்துடன் பார்த்தபடி உள்ளே நுழைந்தனர் மூவரும்.

“சம்பந்தி உங்கக்கிட்ட ஒரு விசயம் சொல்லணும். அதுக்கு முன்னாடி ஒரு கேள்வி கேட்கிறேன். அதுக்குப் பதில் சொல்லுங்க...” ராமநாதன் பீடிகையுடன் சொல்ல,

“என்ன வேணும்ன்னாலும் கேளுங்க சம்பந்தி... நமக்குள் என்ன தயக்கம்?” ராமகிருஷ்ணன் சிரித்துக் கொண்டே பேச,

“நான் கேட்பதுக்காக என்னைத் தப்பா நினைச்சுக்காதீங்க. உங்களுக்கு மதி ஒரே பெண்ணா இல்லை...” ராமநாதன் இழுக்க...

ராமகிருஷ்ணன் நெற்றியைச் சுருக்கி யோசனையுடன், “அன்னைக்கு மதியும் இதே தான் கேட்டா. இப்ப நீங்களும் இதைத் தான் கேட்கறிங்க. சரி உண்மையைச் சொல்றேன்... எனக்குப் பிறந்தது இரட்டைப் பெண்கள். அதில் ஒருத்தி இறந்துப் போயிட்டாள். ஆமாம்... நீங்க எதுக்கு இதைக் கேட்கிறிங்க” புரியாமல் அவர் ராமநாதனைப் பார்க்க, ராமநாதன் மெல்லப் பக்குவமாக மதுமதியைப் பற்றிச் சொல்ல, ராமகிருஷ்ணன் ஆச்சிரியத்தில் திகைத்து போய் வாயடைத்து அமர்ந்திருந்தார். சிறு குழந்தையில் இறந்துவிட்டதாய் எண்ணிய மகள் இன்று வளர்ந்து மங்கையாய் தன் கண் முன் வந்து, அவளுக்குத் தானே திருமணம் செய்து வைத்ததை அவரால் நம்ப முடியாமல் அப்படியே அமர்ந்திருந்தார்.

“ஆனா பாருங்க சம்பந்தி என் மருமக மேல எந்தத் தப்புமில்லை. அவள் தெரியாம செய்த இந்தக் காரியத்தில் பிறகு உண்மையை உணர்ந்து அமைதியாயிருக்கலாம். ரொம்ப நல்ல பெண் அவள்” ராமநாதன் மதுவுக்குப் பரிந்துப் பேச,

“என்ன இப்படிச் சொல்லிட்டிங்க... மதியும் அவளும் உருவத்தில் ஒரே மாதிரி இருக்காங்க இதை விட என்ன ஆதாரம் வேண்டும். அவள் உங்க மருமகள் மட்டுமல்ல என் மகளும் கூட. அவளைப் போய் நான் சந்தேகப்படுவேனா? எங்கே அவள்? மதி எங்கே போனாள்?” அடுத்தடுத்துப் படப்படப்புடன் அவர் கேள்விகள் கேட்க,

“மதி இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துடுவா?” சரண் பதிலளித்தான்.

“அப்போ மது...” ஆவலும் யோசனையுமாய் அவர் கேட்க,

“அவள் மும்பைக்குப் போய்விட்டாள். அப்படித்தான் நினைக்கிறேன்” சரண் சொல்லிவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டான். அவர் முகத்தை நிமிர்ந்துப் பார்க்கும் தைரியம் அவனுக்கு இல்லை.

“ஐயோ... எனக்கு மட்டும் என் இப்படி நடக்குது?” ஆயசமாகக் கூறியவர் சோபாவில் சாய்ந்தமர,

“மாமா கவலைப்படாதீங்க... மதுவை நான் எப்படியும் கூட்டிக் கொண்டு வந்துடுவேன். நீங்க உங்க ரெண்டுப் பெண்ணுங்க கூடச் சந்தோசமாயிருக்கப் போறீங்கப் பாருங்க” சரண் அவரைச் சமாதானப்படுத்த, அவரும் புரிந்தார் போல் தலையாட்டினார்.

“சம்பந்தி நான் கேட்கிறேன்னு தப்பா நினைக்காதீங்க. உங்களுக்கு மது மேல் கொஞ்சமும் சந்தேகம் வரலியா? நான் சொல்லும் சந்தேகம் புரியுதா... அதாவது நடை உடை பாவனையில்...” சுபத்ரா தயக்கத்துடன் கேட்க,

“இல்லைம்மா... அந்தளவுக்கு நான் சந்தேகக் கண்ணோட்டத்தில் அவளைப் பார்க்கவில்லை. என் பெண்ணைப் போய் நான் சந்தேகப்படுவேனா? அவள் மேல் நான் வைத்திருக்கும் பாசம் சந்தேகப்பட வைக்காதும்மா” அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கார் வந்து நிற்கும் ஓசைக் கேட்க, ராமகிருஷ்ணன் வாயிலை நோக்கி விரைந்துச் சென்றார்.

“அப்பா…” கண்கலங்க அவரை நோக்கி ஓடி வந்த மதிவதனாவை ஓங்கி ஒரு அறை விட்டார் ராமகிருஷ்ணன்.

“அப்பா…” ஒருநாளும் கோபப்படாத, அடிக்காத தந்தை அடித்ததும் மதி அதிர்ந்துப் போனவளாய் அவரைப் பார்க்க,

“ஏன் இந்த விசயத்தை முன்னமே நீ சொல்லல. என்கிட்ட சொல்லியிருந்தா இவ்வளவு பிரச்சினை வந்திருக்காதே. நீ பண்ணிய காரியத்தால் மது தான் பாதிக்கப்பட்டிருக்கா. அவளுக்கு நான், நீ… என்ன பதில் சொல்லப் போறோம் சொல்லு”

“அப்பா…” என்ற கூவலுடன் கட்டிக் கொண்ட மதியை அவரால் தடுக்க முடியவில்லை. அவரும் அவளை அணைத்துக் கொண்டு அழுதார்.

“சாரிப்பா… இவ்வளவு பெரிய பிரச்சினையாகும்ன்னு நானும் நினைக்கவில்லை. என்னை மன்னிச்சிருங்கப்பா. இந்தப் பிரச்சினைக்கு நான் தான் காரணம். அதனால் மதுவிடம் மன்னிப்புக் கேட்டு நானே அவளை அழைத்து வருகிறேன்” மதி அவரிடம் மன்னிப்புக் கேட்க, அவரும் அமோதிப்பது போல் தலையசைத்தார்.

மதிவதனாவைப் பார்த்து ஆச்சிரியத்தில் ராமநாதனும், சுபத்ராவும் பார்த்துக் கொண்டிருக்க, “என்னங்க அப்படியே நம்ம மருமக மது மாதிரியே இருக்கா இல்ல” சுபத்ராவால் ஆச்சிரியத்தை அடக்க முடியவில்லை. “ம்… ம்…” ராமநாதனும் வியப்பில் பேச மறந்தவராய் நின்றிருந்தார்.

“மாமா… அத்தை… என்னை மன்னிச்சுருங்க” மதி அவர்கள் இருவரின் காலில் விழ, அவர்கள் இருவரும் அவளின் செய்கையில் மனம் நெகிழ, சுபத்ரா தான், “நீ என்னம்மா செய்வ? எல்லாம் இவனைச் சொல்லணும். அப்பவே உண்மையைச் சொல்லியிருந்தா இந்தப் பிரச்சினை வந்திருக்காது”

“கடைசியில் உங்க எல்லோருக்கும் நான் தான் பலிக்கிடா ஆனேனா?” சரண் கேலியாகக் கேட்க, அவன்

நகைச்சுவையில் எல்லோரும் சிரிக்க, அவர்கள் சிரிப்பை மனநிறைவுடன் பார்த்தவன் மனதில் ‘மதுவை என்ன சொல்லி... எப்படி இங்கே அழைத்து வரப் போகிறேன்?’ என்ற எண்ணமே ஓடிக் கொண்டிருந்தது.

## மலர் : 16

“என்னம்மா இது உன் தகப்பனைப் பற்றி என்னிடம் கேட்டிருந்தால் நான் சொல்லியிருப்பேனே? எனக்கும் உன் தாத்தாவுக்கும் இடையில் எந்த ஒளிவு மறைவும் கிடையாது என்பது உனக்குத் தெரியாதா? அதை விட்டு விட்டுப் பழிவாங்கன்னுப் போய் யாரையோ மேரேஜ் பண்ணிக்கிட்டு... படிச்சப் பொண்ணு... இவ்வளவு பெரிய நிர்வாகத்தைக் கட்டி ஆளுறப் பொண்ணு நீ... நீ இப்படியொரு காரியம் பண்ணலாமா?” ஜெகன்நாதன் பேச்சில் பதில் பேச முடியாமல் தலையைக் குனிந்துக் கொண்டாள் மதுமதி.

“ரெண்டு வருசத்துக்கு முன்னேயே உன் பிறப்பின் ரகசியம் சுந்தரத்துக்குத் தெரியும். சென்னைப் போயிருந்தப்போ உன்னை மாதிரியிருக்கிற அந்தப் பொண்ணைப் பார்த்திருக்கிறான். பார்த்தவன் அந்தப் பெண்ணோட ரிஷிமூலம் நதிமூலம் எல்லாம் தோண்டித் துருவி விசாரிச்சதுல அந்த ராமகிருஷ்ணன் பொண்ணு தான் நீன்னும் ஹாஸ்பிட்டல்ல நடந்த குளறுபடியில் குழந்தை மாறிப் போனதும் அவனுக்குத் தெரிஞ்சுப் போச்சு. அப்ப என்கிட்ட வந்து கண்ணீர் விட்டு அழுதான். இது தெரிஞ்சா நீ அவனை விட்டுப் போயிருவியோன்னுப் பயந்தான். நாந்தான் முடிஞ்சுப் போன கதை முடிஞ்சுப் போனதா இருக்கட்டும். நமக்குத் தெரிஞ்ச ரகசியத்தை யார்க்கிட்டேயும் சொல்ல வேண்டாம்ன்னு மறைக்கச் சொன்னேன். நீ என்னடான்னா சாகுற நிலைமையில அவன் சொன்னதை அரைக் குறையாக் கேட்டுட்டு இப்படிப் பண்ணிட்ட. பழிவாங்கன்னுக் கிளம்பி போக இது என்ன சினிமாவா? வாழ்க்கைம்மா. கடைசியில் என்னாச்சுப் பார்த்தியா? உன் வாழ்க்கைத் தான் கேள்விக்குறியாப் போச்சு?” கடுமையுடன் அவர் கேட்க அதற்கு அவளிடம் பதில்லை.

“சரி... இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல. உனக்குப் பதிலா நான் உன் புகுந்த வீட்டில் வந்து பேசறேன். நீ உன்

புருசன் கூடப் போய் வாழற வழியைப் பாரு. உன் தாத்தா இருந்திருந்தா இதைத் தான் சொல்லியிருப்பான்”

“இல்லை தாத்தா… நீங்க அங்கெல்லாம் போக வேண்டாம். எனக்கு அவர் கூட வாழ விருப்பமில்லை. நான் இங்கே தான் இருக்கப் போறேன்”

அவளை ஒரு கணம் கூர்ந்து நோக்கியவர், “சரி அவன் கூட வாழ வேண்டாம். அவன் கட்டிய தாலியைத் தூக்கித் தூர எறிஞ்சிட்டு… ரிஷியைக் கல்யாணம் பண்ணிக்கோ. என்ன ரிஷி உனக்குச் சம்மதம் தானா?”

“எனக்கு மனப்பூர்வமா சம்மதம் தாத்தா. மது என் தோழி அவள் எந்த நிலையில் இருந்தாலும் நான் ஏத்துக்குவேன்” ரிஷியின் வார்த்தையில் மதுவுக்குக் கண் கலங்கியது.

‘இவர்கள் அன்பையெல்லாம் விட்டு விட்டு கானல் நீரை உண்மை என்று நம்பி என்னைத் தொலைத்தேனே’ நினைத்தவளுக்கு வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது.

“என்னம்மா… ரிஷியை மணக்கச் சம்மதமா?”

“இல்லை தாத்தா… என்னால் அது முடியாது. என் வாழ்க்கையில் திருமணம் முடிந்துப் போன விசயம். அது திரும்ப வேண்டாம் தாத்தா”

“ம்… இப்பத் தான்ம்மா எனக்கு உன்னை நினைத்துப் பெருமையா இருக்கு. என்ன தான் மாடர்ன் பெண்ணானாலும் கணவன் சென்டிமென்ட்ல இந்த இந்தியப் பெண்கள் அப்படியே விழுந்திறிங்களே அது எப்படிம்மா? அந்தளவுக்கு அவரை விரும்புறியா மது?”

“அந்தளவுக்கு வெறுக்கிறேன் தாத்தா…” கண்ணில் வார்த்தையில் வெறுப்பை உமிழ்ந்தவளைக் கண்டு ஜெகன்நாதனும், ரிஷியும் அயர்ந்து தான் போனார்கள்.

“நான் அவரை எவ்வளவு காதலித்தேன் தெரியுமா தாத்தா? ஆனால் அவர் என்னைப் பழிவாங்கன்னுக் கல்யாணம்

பண்ணியிருக்கார். இது தெரிஞ்சதுக்கு அப்புறமும் அவர் கூட நான் சேர்ந்து வாழணுமா? அப்படியொரு வாழ்க்கை எனக்குத் தேவைத் தானா? வேண்டாம்... அவரும் வேண்டாம்... அவர் போடுற வாழ்க்கைப் பிச்சையும் வேண்டாம்” ஆத்திரத்துடன் பேசியவளை என்ன சொல்லி ஆறுதல் கூறுவதென்று தெரியாமல் தாத்தாவும் பேரனும் முழித்தனர். அந்த நிலைமையிலும் அவள் தன் கணவனை ‘அவர்’ என்று மரியாதையுடன் விளித்தது ஜெகன்நாதனுக்குச் சற்று நிம்மதியை அளித்தது.

“சரிம்மா... அப்புறம் உன் இஷ்டம். எப்போ... என்ன... உதவி வேணும்ன்னாலும் கேளு. நாங்க எப்பவும் உன் கூட... உனக்குச் சப்போர்ட்டாத் தான் இருப்போம்ங்கிறதை மறந்துறாதே” சொன்ன ஜெகன்நாதன் கிளம்ப, ரிஷியும் அவருடன் கிளம்பினான்.

அவர்கள் சென்றதும் அறைக்கு வந்தவள் படுக்கையில் சாய, இதே மாதிரிப் படுக்கையில் சரணுடன் அவள் வாழ்ந்த வாழ்க்கை கண் முன் வலம் வர அந்த நினைவு தந்த கசப்பு வெறுப்பு அவள் மனதை வலிக்கச் செய்ய, அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. அது சரணை நினைத்தல்ல... அவள் காதல் பொய்த்துப் போனதை நினைத்து... தப்பானவனைக் காதலித்த தன் அறியாமையை நினைத்து... . பலவற்றையும் நினைத்து அழுதவள் அப்படியே உறங்கிப் போனாள்.

மறுநாள் காலையில் எழும் போதே கண்கள் எரிய... எழவே பிடிக்காதது போல் உடலெல்லாம் வலித்தது. ஆனாலும் எழுந்துத் தான் ஆக வேண்டும். அவளுக்காக அலுவலகத்தில் ஆயிரம் வேலைக் காத்துக் கிடக்கும். அலுவலக நினைப்பு வந்ததும் பரபரப்பாகக் குளியலறைக்குள் நுழைந்தாள். குளித்து முடித்து உடை மாற்றப் போகும் போது மீரா அவள் அறைக் கதவைத் தட்டினாள்.

“உள்ளே வாங்க மீராம்மா...”

“மதும்மா... உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்துருக்கார்”

‘காலையிலேயே யாராயிருக்கும்?’ என்று யோசித்தவள், “யாரு… பேர் ஏதும் சொன்னாங்களா?”

“ஆமாம்மா… ஹரிசரண்ன்னு… சொன்னாங்க” சரணின் பேரைக் கேட்டதுமே அவள் உடல் விறைத்தது.

அவன் அவளைத் தேடி இங்கே வருவான் என்று கொஞ்சமும் அவள் நினைக்கவில்லை. ‘எதுக்கு என்னைத் தேடி வரணும். நான் இல்லைன்னா விட்டது தொல்லைன்னு நிம்மதியாயிருந்திருக்க வேண்டியது தானே” கடுப்புடன் நினைத்தவள் எப்படியும் அவனைச் சந்தித்துத் தான் ஆக வேண்டும் என்றெண்ணி, “மீராம்மா… அவரை உட்காரச் சொல்லுங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் வர்றேன்”

மீரா சென்றதும் மதுமதி அலுவலகத்திற்குச் செல்லத் தான் எடுத்து வைத்த சுடிதாரை உள்ளே வைத்தவள், ‘அடேய் சரண் உனக்குச் சேலைக் கட்டினால் தானே பிடிக்கும். இன்னைக்கு இருக்கு உனக்கு விளையாட்டு…’ மனதில் நக்கலாய் நினைத்தவள், அலமாரியிலிருந்து வெள்ளையில் பிங்க் பூ வேலைப்பாடு நிறைந்த முழுநீளப் பாவடையும், பிங்க் நிறத்தில் மேல் சட்டையும் எடுத்தவள் அதை அணிந்து கொண்டு கண்ணாடி முன் நின்றுப் பார்த்தாள். சேலையில் இருப்பதை விட இதில் மிகவும் சின்னப் பெண்ணாகத் தெரிந்தாள். அவனுக்குப் பிடிக்காது என்று இவ்வளவு நாள் ஒதுக்கி வைத்திருந்த மேக்கப் சமாச்சாரங்களை முகத்தில் பூசினாள். மீண்டும் ஒரு முறை கண்ணாடியில் அழகுப் பார்த்தவள் திருப்தியடைந்தவளாய் சரணைப் பார்க்கச் சென்றாள்.

மதுமதியின் வீட்டில் தவிப்பாய் சரண் அமர்ந்திருந்தான். வீட்டின் பணச் செழுமையைப் பார்த்தவனுக்கு அவள் தன்னை மன்னித்து ஏற்பாளா? என்ற சந்தேகம் வந்துவிட்டது. இவ்வளவு பெரிய பணக்காரியா அவனுக்குக் கைக் கட்டி சேவகம் பார்த்தாள் என்ற பிரமிப்பு ஒரு புறம் மனதை அழுத்த நிலைக் கொள்ளாமல் தவித்தான். அப்பொழுது தான் மாடிப்படியிலிருந்து குதிகால் செருப்பின் ‘டக் டக்’கென்ற ஒலிக் கேட்க, அவனையும்

அறியாமல் அவன் கண்கள் அந்தப் பக்கம் திரும்பப் படியிலிறங்கி வந்து கொண்டிருந்த மதுவைக் கண்டதும் கண்கள் வியப்பில் அகல, அவன் கால்கள் தன்னிச்சையாய் எழுந்து அவளை நோக்கி ஓரடி முன்னே வைத்தது.

மதுமதியின் கண்களிலிருந்த வெறுப்பில்... அன்னியத்தன்மையில்... அப்படியே அசையாது நின்று விட்டான். நாய்குட்டி போல் தன்னைச் சுற்றி வந்த மது இவளில்லை என்ற உண்மை அவன் மூளைக்குத் தாமதமாய்ப் புரிய, அவளை ஏக்கத்துடன் பார்த்தபடி நின்றிருந்தான்.

“உட்காருங்க மிஸ்டர். சரண்... மீராம்மா... எனக்கும் இவருக்கும் சேர்த்து...” முகத்திலோ குரலிலோ எந்தவொரு பாவமும் காட்டாமல் பேசியவளைக் கண்டு தான் வந்த காரியம் கைக்கூடுமா? என்ற கேள்வி மனதில் பெரிதாக எழுந்து அவனைப் பயமுறுத்தியது.

“இதோ ஒன் மினிட்ல டீ கொண்டாறேன்” தான் போடும் டீயின் மேல் அவ்வளவு பெருமை மீராவுக்கு, சொல்லியவாறு உள்ளே செல்ல முற்பட்ட அவரைத் தடுத்தவள்,

“அவருக்கு டீ பிடிக்காது. நல்லாப் பாலைச் சுண்டக் காய்ச்சி... ஸ்ட்ராங்கா டிக்காஷன் விட்டு...” என்று சொல்லிக் கொண்டே போனவள் ஏதோ நியாபகம் வந்தவளாய் தன் நாக்கைக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்தியவள், “ஸ்ட்ராங் காபிக் கொண்டு வாங்க”

சரண் அவள் வார்த்தையில் மகிழ்ந்துத் தான் போனான். அவள் என்ன தான் மாறியிருந்தாலும் அவளின் அடி மனதில் அவன் இருக்கிறான், அவனின் மனைவி என்ற நினைப்பிருக்கிறது. அதுவே அவனுக்கு நிம்மதித் தர, அவளை எப்படியும் மாற்றி விடலாம் என்ற நம்பிக்கை வர சிறிதுக் கர்வத்துடன் நிமிர்ந்து நின்றான். அவன் நின்ற விதம் அவளை எரிச்சல் படுத்த அவனை நோக்கிப் பார்த்தவள், “அங்கே போய்ப் பேசலாமா?” சொல்லியவள் அவனை அலட்சியப் படுத்தியவாறு அவள் அலுவலக

அறையை நோக்கி நடக்க, அவனும் அமைதியாய் அவளைப் பின் தொடர்ந்தான்.

“உட்காருங்க…” அவனை நாற்காலியில் அமரச் சொன்னவள், அவள் அமராமல் ஜன்னல் வழியே வேடிக்கைப் பார்த்தாள். அதற்குள் மீரா குடிப்பதற்குக் கொண்டு வர சிறிது நேரம் அங்குப் பேச்சில்லை. அவன் காபிக் குடித்துக் கொண்டே அவளை அளவிட்டுக் கொண்டிருந்தான்.

பாவாடைச் சட்டையில் மிகவும் சின்னப் பெண்ணாகத் தெரிந்தாள் அவள். சேலையில் தெரியாத அவள் அழகு, உடலோடு ஒட்டியிருந்த இந்த உடையில் கொட்டிக் கிடக்க, அவனால் அவளை விட்டுக் கண்களை விலக்க முடியவில்லை. அதிலும் உதட்டுச் சாயமிட்டு மினுமினுத்த உதடு அவனைப் போதைக் கொள்ள வைத்தது. அது தந்தப் போதை அவனுக்கு மட்டும் தானே தெரியும். அதன் மயக்கம் அவன் கண்ணில் இன்னமும் மிச்சமிருக்க அவன் அவளை வெறித்துப் பார்க்க, வெளியில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவள் சட்டென்று திரும்பிப் பார்க்க, அவனின் திருட்டுத்தனத்தை அவன் கண்கள் காட்டிக் கொடுக்க… அவள் அவனை முறைக்க அவனோ வெண்ணையைத் திருடியக் கண்ணனாய் திருத்திருவென முழித்தான்.

“சாரி…” அவன் மெதுவாய் சொல்ல…

“எதுக்கு?” உஷ்ணமாய் அவனை முறைத்துப் பார்த்தாள்.

“எல்லாத்துக்கும் தான் மது…”

“ஓஹோ… சாரி கேட்டுட்டா எல்லாம் சரியாப் போயிடுமோ?”

“மது நான் சொல்றதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்கணும். ஏனோ தானோன்னு கேட்டு நம்ம ரெண்டுப் பேர் வாழ்க்கையையும் கேள்விக் குறியாக்கிடாதே” அதற்கும் அவள் அவனை முறைக்க,

“ஓகே ஓகே… நான் சொல்றதுக்கு முன் ஒரு விசயத்தை உனக்குச் சொல்லிக்க விரும்பறேன். நான் உன்னைக்

காதலிக்கிறேன் அதை மட்டும் மனசில் வச்சிட்டு நீ முடிவுப் பண்ணு. எனக்குப் பிடிக்காத ஒண்ணை யாருக்காகவும் நான் செய்ய மாட்டேன். அப்படிச் செய்யச் சொல்லி யாரும் என்னை வற்புறுத்தவும் முடியாது. அப்படிப்பட்ட நான் உன்னை எப்படி விருப்பமில்லாமல் திருமணம் செய்ய முடியும். நம் திருமணத்திற்கு முன்பே நீ மதியில்லைன்னு எனக்குத் தெரியும். ஆனால் பழிவாங்க வந்த பெண் எப்படிப்பட்டவளாக இருப்பாளோ என்ற எண்ணத்தில்... அதற்குக் காரணம் நிச்சயம் அதுவல்ல... அப்படிச் சொல்லி என்னை ஏமாத்திக்கிட்டேன். ஏன் தெரியுமா நான் உன்னை அந்தளவுக்குக் காதலிக்கிறேன்... ஆம்... நிச்சயம் அன்று நீ பார்த்த முதல் பார்வையில் அன்னைக்கே உன்னிடம் வீழ்ந்து விட்டேன். பாழாய் போன இந்த ஈகோ... கெட்ட மனதோடு வந்திருக்கும் பெண்ணிடம் போய் மயங்கிறியேன்னு என் மேலே எனக்குக் கோபம். அதனால் தான் என் மனதை உன்னிடம் சொல்லவில்லை. ஆனால் இப்போ சொல்றேன் நீயில்லாமல் நான் வாழ முடியாது... அதை நீ பிரிஞ்ச இந்த ஒரு நாளில் நான் புரிஞ்சிக்கிட்டேன்" அவளருகே வந்து அவள் கையை அவன் பிடிக்க, அவள் அதை உருவி கொள்ளப் போராட, சட்டென்று அந்தக் காரியத்தை அவன் செய்தான்.

அவள் அருகே மண்டியிட்டு அமர அவள் பதறிப் போய் நகர, அவனோ அவள் நகராமல் இருப்பதற்காகத் தன்னிச்சையாய் தன் கைகளை அவள் இடுப்போடு சேர்த்துப் பிடித்துக் கொண்டு பேச அவள் தான் கூச்சத்தில் நெளிய ஆரம்பித்தாள். ஆனால் அவன் அதை உணராமல் மேலே பேசிக் கொண்டே போனான். "ஆகாஷ் பர்த்டே அன்னைக்கு நீ ஆசிரமத்தில் ஒரு சின்னக் குழந்தைக்கு முகம் துடைத்து அதன் அழுக்கைக் கூடப் பொருட்படுத்தாமல் தூக்கி முத்தம் கொடுத்தியே அந்த நிமிடம் என் மனதில் உன் மேல் காதல் வந்துவிட்டது. உன் தாய்மை உணர்வு எனக்குப் புரிந்தது. அப்பொழுது உன் காலடியில் விழுந்த மனம் இன்னமும் எழவில்லை" அவன் சொல்லச் சொல்ல, அன்று அவன் அவளிடம் மென்மையாக நடந்து கொண்டது அவள் நியாபகம் வர, அதில் மதி மயங்கி

அவன் மேல் அவள் பித்தானதை நினைத்து அவள் நெஞ்சம் வலித்தது.

“உனக்கு ஒண்ணுத் தெரியுமா? மதி ஒருநாள் என்னைப் பார்த்து நான் வேறு ஒருவனைக் காதலிக்கிறேன்னு சொன்னா. ஆனா அப்போ கூட என் மனசு வலிக்கல. ஆனால் அந்த ரிஷி உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு சொன்னப்போ... சத்தியமாச் சொல்றேன் என் உயிர் போற வலியை நான் உணர்ந்தேன். அந்தளவுக்கு வலிச்சது...” அவன் நெஞ்சைத் தொட்டுக் கண்ணீர் மல்க வேதனையுடன் சொல்ல, அவனின் வலியை அவளும் உணர்ந்தாள்.

“அந்த மாதிரி ஒரு உணர்வை... வலியை... என் வாழ்நாளில் நான் உணர்ந்தது கிடையாது மது... அதான் அன்னைக்குத் தண்ணியடிச்சிட்டுத் தாறுமாறாய் உன்கிட்ட நடந்துக்கிட்டேன். சாரிடா... இனி அதுமாதிரி நடந்துக்க மாட்டேன். என்னை மன்னிச்சு ஏத்துக்கோ மது. தப்புச் செய்தவன் திருந்த கூடாதா? என் காதலை நிரூபிக்க எனக்கொரு சான்ஸ் கொடுக்க மாட்டியா மது?”

கண்களில் ஏக்கத்துடன் கேட்டவனின் நிலை அவள் மனதை ஏதோ செய்யத் தான் செய்தது. ஆனாலும் தன் பெண்மையைக் கேவலப்படுத்திய அவனை மன்னிக்க அவளால் முடியவில்லை. அவனை விட்டு விலகி நின்றவள், “முதல்ல எழுந்திருங்க சரண். இது என்ன டீன் ஏஜ் பையன் மாதிரி...” எரிச்சலுடன் அவள் சொல்ல, அவள் சொன்னதற்காக எழுந்து நாற்காலியில் அமர்ந்தவன் அவளின் பதிலுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்.

“நீங்க உங்க நிலையிலிருந்து பேசிட்டிங்க. ஆனால் என் நிலையிலிருந்து யோசித்துப் பாருங்க. ஏமாத்திவிட்டு ஓடிப் போன அப்பா, அதைக் கண்டு மனம் நொந்து இறந்த அம்மா இதைக் கேட்ட ஒரு பெண்ணின் மனநிலை என்ன மாதிரியிருக்கும் கொஞ்சம் யோசித்துப் பாருங்க. இப்படிப்பட்ட நிலையில் அந்த அப்பாவைப் பத்தித் தெரிஞ்சா நான் பழிவாங்குவேனா... இல்ல அப்பான்னுப்

பாசமாய்ப் போய்க் கொஞ்சுவேனா? ஆனால் அங்கே போனதுமே எனக்குத் தெரிஞ்சுப் போச்சு நான் நினைத்த அப்பா அவர் இல்லை... அவர் நல்லவர்ன்னு... அதனால் தான் என்னை நான் மாத்திக்கிட்டேன். அவருக்காக உங்களை மணக்கச் சம்மதித்தேன். ஆனால் அதுக்கப்புறம் உங்களை நான் நேசித்தேன். உங்க கையால் தாலி வாங்கும் போது என் மனசில் நிறைந்து இருந்தவர் நீங்க மட்டும் தான்" இதை அவள் சொன்னப் போது அவன் மனதில் தோன்றிய உணர்வை வர்ணிக்க முடியாது. ஒரே நேரத்தில் வலியும், மகிழ்ச்சியையும் ஒருசேர அனுபவித்தான்.

"ஆனா நீங்க... என்னைப் பத்தித் தெரிஞ்சும் எனக்குத் தண்டனைக் கொடுக்கணும்ன்னு நீங்க நடந்துக்கிட்ட விதம்... ச்சே... நீங்க மனுசனே இல்லை. பழிவாங்குறதுன்னா படுக்கையில் பலம் காட்டிப் பெண்ணை வீழ்த்தறது இல்ல. நான் உங்களைப் பழிவாங்கிக் காட்டவா? அதுக்கு எனக்கு ஒரு நொடிப் போதும். உங்க தொழிலை இல்லாமல் ஆக்கி ஒண்ணுமில்லாதவனா நடுரோட்டில் நான் நிற்க வைக்கவா? அந்த மாதிரி நேருக்குநேர் என்னுடன் மோதிப் பாருங்க. சுக்குநூறா நீங்க தான் உடைச்சுப் போவீங்க. அப்போ தெரியும் இந்த மதுமதி யாருன்னு?" ஆங்காரத்துடன் அவள் பேசப் பேச அவன் அயர்ந்துப் போய் அப்படியே நின்றான்.

"ரே பண்ணுறவனுக்குக் கூட ஏதாவது ரீசன் இருக்கும். ஆனால் நீங்க பண்ணியதுக்கு... நீங்க சொல்லும் காரணம் உங்களுக்கே சரியாயிருக்கா? உங்களைப் போய்த் திருமணப் பந்தத்தை மதிக்கிறவர்ன்னுத் தப்பா நினைச்சேனே என்னை... சே..."

"இப்பவும் நான் இந்தப் பந்தத்தை மதிக்கப் போய்த் தான் உன்கிட்ட வந்து மன்னிப்புக் கேட்டுக்கிட்டு இருக்கேன். ஐ லவ் யூ மது... ப்ளீஸ் என்னைப் புரிஞ்சுக்கோ...."

“ஹ... அது எப்படிச் சரண் உங்களால இப்படிப் பேச முடியுது? உங்க அம்மாவுக்காகத் தானே என் கழுத்தில் தாலிக் கட்டுனிங்க. இதில் காதல் எங்கே வந்தது?” அவளிடமிருந்து வார்த்தைகள் நக்கலாக வந்தது.

“இவ்வளவு நேரம் அதைச் சொல்லியும் இப்படி நீ பேசுறது எனக்கு வலிக்குது மது. சரி நான் வேணும்ன்னே தான் செஞ்சேன்னு வச்சுக்குவோம். மதிக்குப் பார்த்த மாப்பிள்ளை நான்னு தெரிந்தும் நீ என்னைத் திருமணம் செய்தது காதல்ன்னா... என்னதும் காதல் தான்” அவனுக்குப் பதிலளிக்க அவளிடம் வார்த்தைகளில்லை.

“சரி எல்லாத்தையும் விடுங்க... நான் உங்களை லவ் பண்றேன்னு சொன்னேன்ல அப்பவாவது நீங்க உங்க லவ்வைச் சொல்லியிருந்தா நான் கொஞ்சம் உங்களை நம்பியிருப்பேன். ஆனால் இப்ப நீங்க சொல்வது கொஞ்சமும் நம்ப முடியல”

“அன்னைக்கு ரிஷியையும் உன்னையும் தப்பா நினைச்சுட்டேன். ஹேய்... அப்படி முறைக்காதே நீ லவ் சொல்லியதும் அது தப்புன்னு புரிஞ்சிப் போச்சு. ஆனால் என் மனசைச் சொல்லாம மறைச்சதுக்குக் காரணம்... ரிஷி சொன்ன மாதிரி உனக்கு நான் பொருத்தம் இல்லாதவனோன்னு என் மனசுக்குள் ஒரு இன்பீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ். அதான் என் மனசை உன்கிட்ட நான் சொல்லல. வேற எந்தக் காரணமும் இல்லை”

“சரி போனதை எல்லாம் விடுங்க... உங்க வாழ்க்கையில் இந்த மது இனி கிடையாது. நாம சேர்ந்து வாழணும்ன்னுக் கனவில் கூட நினைக்காதீங்க. நீங்க மதியையே கல்யாணம் பண்ணிக்கோங்க... அவள் தான் உங்களுக்குக் கரெக்ட் சாய்ஸ்” இதைச் சொல்லும் போது மற்ற பெண்கள் போல் மதுமதியின் கண்கள் கலங்கவில்லை... வார்த்தைத் தடுமாறவில்லை... தைரியமாக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அவன் கண்களைப் பார்த்துக் கம்பீரமாக அவள் சொல்ல... அவன் திகைத்துத் தான் போனான். அவள் மனதை மாற்றுவது அவ்வளவு சுலபமல்ல என்பது

அப்பொழுதுத் தான் அவனுக்குப் புரிய... அடுத்தென்ன செய்வது என்று தெரியாமல் திக் பிரம்மைப் பிடித்து அவளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

## மலர் : 17

“நான் எதுக்கு மதியைக் கல்யாணம் பண்ணிக்கணும். எனக்குத் தான் பொண்டாட்டி நீ இருக்கிறியே... மனைவி உயிரோடு இருக்கும் போது மறுமணம் செய்தா என்னை உள்ளே தூக்கிப் போட்டுருவாங்க. அதுக்கு நான் ஆளில்லைப்பா” உடனடியாகத் தன்னைச் சுதாரித்துக் கொண்ட சரண், அவளின் கடினமான கேள்விக்கு இலகுவாகப் பதில் சொல்ல, அவனை எரிச்சலுடன் பார்த்த மதுமதி,

“வேணும்ன்னா உங்களுக்கு டிவோர்ஸ் தர்றேன். என்னால் உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் வராது. நிம்மதியா அவளைக் கல்யாணம் பண்ணிக்கோங்க” அவள் சொல்லி முடிக்கவில்லை... அவளருகில் வேகமாக வந்தவன் அவள் தாடையை ஒற்றைக் கையால் இறுகப் பிடித்து முகத்தை நிமிர்த்தி, அவள் விழிகளுக்குள் தன் பார்வையைச் செலுத்தியப்படி,

“நான் அன்னைக்குச் சொன்னது தான் இன்னைக்கும் சொல்றேன். நல்லாக் கேட்டுக்கோ. திரும்பத் திரும்ப என்னைச் சொல்ல வைக்காதே. உனக்குக் கணவன்னா அது நான் மட்டும் தான். அதே மாதிரி எனக்கு மனைவின்னா அது நீ மட்டும் தான் என்ன புரிந்ததா?” முதலிலிருந்த மது என்றால் அவன் வார்த்தையில் மயங்கி நின்றிருப்பாள். ஆனால் இப்பொழுது உள்ளவளோ மனம் உலைக்களமெனக் கொதிக்க ஆத்திரத்தை அடக்க முடியாதவளாய் கண்களால் அவனை எரித்தாள்.

“நீங்க சொல்றதுக் கேட்பதற்கு நல்லாத்தான் இருக்கு. ஆனால் நம்பும்படியாத் தான் இல்லை. நீங்க அவளைப் பார்க்கத் தானே பெங்களூர் போனீங்க. இல்லைன்னுச் சொல்லுங்கப் பார்ப்போம்” அவளின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் அவன் தடுமாற,

“உங்களால் பதில் சொல்ல முடியாது. உண்மை சிலநேரம் கசக்கத் தான் செய்யும்”

“ச்சீ…” என்றபடி அவளைப் பிடிதிருந்த கையை விட்டவன், “மதியைப் பார்க்கத் தான் போயிருந்தேன் இல்லைன்னு நான் சொல்லல. ஆனால் நீ நினைக்கிற மாதிரிக் கிடையாது. என்னைக் கேள்வி கேட்கிறியே நீ மட்டும் அந்த ரிஷி பேசியதுக்குப் பதில் பேசாமல் அழுதியே… அதுக்கு என்ன அர்த்தம்… என்னை ஏன் தான் கல்யாணம் பண்ணிக்கிட்டோம்ன்னு நீ வருத்தப்படுறதாத் தானே அர்த்தம்”

“முதல்ல வாயைக் கழுவுங்க சரண். லூசு மாதிரிப் பேசாதீங்க. தாத்தாவை நினைச்சுத் தான் அழுதேனே தவிர… உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்காக இல்லை. உங்களைச் சந்திச்சதை என் அதிர்ஷ்டமாத் தான் நான் நினைக்கிறேன். நீங்க பேசுறதைப் பார்த்தா நான் வேற மாதிரித் தான் நினைக்க வேண்டும் போலிருக்கு” அவள் சொன்னது கேட்டு அவன் மனதில் தென்றல் அடிக்க,

“மது… உனக்கு ஒரு காரணம் இருக்கிற மாதிரி தான் எனக்கும்… மதி தனிமை உணர்வு தாக்கக் கூடாதுன்னு தான் அவளைப் பார்க்கப் போனேன். வேற எந்தத் தப்பான எண்ணமும் இல்லை. உனக்கு ஒண்ணுத் தெரியுமா… அவள் நம்ம ஹரியைத் தான் காதலிக்கிறா… அதான் எனக்கும் அவளுக்கும் நடக்கவிருந்த கல்யாணம் பிடிக்காம நீ வந்த உடன் அவள் வீட்டை வெளியேறிட்டா… நல்லவேளை அவள் அப்படிப் போனதால் தான் அழகான தேவதை மாதிரி நீ கிடைச்சிருக்க…”

மதி ஹரியைக் காதலிக்கிறாள் என்பது மதுவுக்குப் புதிய செய்தி… அதைக் கேட்டதும் அவள் மனம் பெருத்த நிம்மதியடைந்தது. எல்லாம் கொஞ்ச நேரம் தான், ‘ஓ… அதான் என்னிடம் சரணைப் பற்றிய விவரங்களைச் சொல்லாமல் ஓடினாயா? நீ ஓடிப் போனதால் மாட்டிக் கொண்டு முழிப்பது யார்…? துன்பப்படுவது யார்? நான் தானே… உனக்கென்ன நிம்மதியாயிருக்க…’ மதியை நினைத்து ஆத்திரம் வர… அந்த ஆத்திரமெல்லாம் சரண் மேல் பாய்ந்தது.

“சபாஷ்… உங்களைப் பிடிக்காம ஓடிப் போன அவ நல்லவ… ஆனால் நான் கெட்டவளா? அதான் என்கிட்ட அப்படி நடந்துக்கிட்டிங்களா?” கோபத்துடன் வார்த்தைகள் விழ,

“நீ கெட்டவள்ன்னு நான் சொல்லலியே… என் மது ரொம்ப… ரொம்ப… நல்லவள்” என்றவன் அவள் கண்ணோடு கண் கலந்துக் காதலாய் சொல்ல… அவள் தான் அவன் பார்வையைச் சந்திக்க முடியாமல் தடுமாறினாள். பிறகு சுதாரித்துக் கொண்டு அவனிடமிருந்து வலுக்கட்டாயமாகத் தன் பார்வையை விலக்கி ஜன்னல் வழியாக வெளிப்புறத்தைப் பார்த்தாள்.

“வேண்டாம் சரண்… நமக்குள் எதுவும் வேண்டாம்… என்னால் உங்களுடன் வாழ முடியாது” மெதுவான குரலில் அவள் சொல்ல,

மதுவின் அடிமனதில் அவன் மேல் காதலிருக்கிறது… அதை விடத் தன் மேல் வெறுப்பு அதிகமாகயிருக்கிறது… காதலை விடக் வெறுப்பு மிஞ்சியிருக்கிறது என்றால் அவள் மனம் எந்தளவுக்குக் காயப்பட்டிருக்கும். இந்தக் காயத்திற்குத் தான் மருந்திட வேண்டுமென்றால் அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும். தன் காதலை அவளுக்குப் புரிய வைக்க வேண்டும். அவளின் அடிமனதில் புதைந்திருக்கும் தன் மீதான அவள் காதலை மீட்டெடுக்க வேண்டும். முதல் இரண்டையும் அவனால் சுலபமாகச் செய்ய முடியும். ஆனால் கடைசி ஒன்றைச் செய்ய அவன் மிகவும் போராட வேண்டியிருக்கும். பரவாயில்லை வாழ்க்கையே போராட்டம் தானே… போராடிப் பார்ப்போம் என்று முடிவுச் செய்தவன்,

“நீ வேண்டாம் என்கிறாய்… ஆனால் எனக்கு நீ வேண்டுமே…”

“இதை வேறு யாரிடமாவது சொல்லுங்க. இதை நான் நம்பத் தயாராயில்லை. எனக்கு ஆபிஸ்க்கு லேட்டாகிருச்சு. நான் கிளம்பணும்” சுள்ளென்றக் கோபத்துடன் அவள் பேச…

“ம்... வெளியே போடான்னுச் சொல்லாமச் சொல்ற. ஆனா இதைக் கேட்டு ரோசப்பட்டு நான் போய்டுவேன்னு நீ நினைக்காதே. நீ வரும் வரைக்கும் மாமியார் வீட்டு விருந்து சாப்பிட்டு இங்கேயே இருக்கேன். நீ வந்ததும் மீதிக் கதையைப் பேசிக்கலாம்” ரொம்பவும் கூலாக அவன் சொல்ல,

“எக்கேடோ கெட்டுப் போங்க...” என்றவள் அவனைத் திரும்பியும் பார்க்காமல் அங்கிருந்து வெளியேறினாள். தான் எதையோ கண்டு பயந்து ஓடுவது போல் அவளுக்கே தோணத் தான் செய்தது. அவள் வேகமாக வெளியேறுவதைக் கண்டவனுக்கு ஒருபுறம் சிரிப்பு வந்த போதும், மறுப்புறம் தன் மேலேயே கோபம் வந்தது.

******************************************

“மது ராத்திரி இவ்வளவு நேரமாகியும் இன்னமும் நீ வீட்டுக்கு வரல? எங்கேயிருக்க?” கடுமையுடன் ஜெகன்நாதன் குரல் ஒலித்தது.

“தாத்தா நீங்க வீட்டுக்கு வந்திருக்கிங்களா? வர்றதாப் போன் பண்ணியிருந்தா நான் முன்னமே வந்திருப்பேனே? இதோ இப்ப வந்திர்றேன்” மது சொன்னது போல் அரை மணி நேரத்தில் வீட்டிலிருந்தாள்.

சரண் ஜெகன்நாதனுடன் அமர்ந்துப் பேசிக் கொண்டிருக்க, ரிஷி அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். மது சற்று யோசனையுடன் உள்ளே நுழைந்தாள். அவள் வரவை உணர்ந்துத் திரும்பிப் பார்த்த ஜெகன்நாதன்,

“போனில் நான் கேட்டக் கேள்விக்கு இன்னமும் நீ பதில் சொல்லல? இவ்வளவு நேரம் எங்கயிருந்த?” கோபமாய் அவர் கேட்க,

“மனசு சரியில்லை... அதான் பீச்சுக்குப் போனேன் தாத்தா” பயத்தோடு பதில் சொன்ன மதுவை ஆச்சிரியத்துடன் சரண் பார்த்தான். தங்கள் பிரச்சினைக்கு ஜெகன்நாதனை அணுகியது மிகச் சரியே என்று அவனுக்குத் தோன்றியது.

அவர் சொன்னால் இவள் கேட்பாள் என்று மீரா பேச்சுவாக்கில் சொன்னதை நியாபகம் வைத்து அவரை இங்கே அழைத்தது மிகச் சரியே என்று நினைத்தவன்… அந்த நினைவில் புன்னகைக்க, அது அவள் கண்ணில் பட்டு அவனை முறைத்தாள்.

“அதுக்காக இந்த நேரத்தில் பீச்சுக்குப் போனது சரியில்லைம்மா. காலம் கெட்டுக் கிடக்கு” என்று அவளைக் கண்டித்தவர், “சரி அதை விடு… மாப்பிள்ளை என்னமோ சொல்றாரு. நீ என்ன பதில் சொல்லப் போற?”

“என்ன சொன்னார் தாத்தா?”

“அவர் செய்தத் தவறுக்கு அவரை நீ மன்னிக்கணுமாம். அவர் உன் கூட வாழ ஆசைப்படுறார். உன்னைச் சென்னைக்குக் கூட்டிக்கிட்டுப் போகணும்ன்னு பிரியப்படுறார்”

“தாத்தா நான் தான் சொன்னேனே அங்கே போக விருப்பமில்லை. இவர் கூட வாழ விருப்பமில்லைன்னு. இதுக்கு மேலே எதுவும் பேசத் தேவையில்லை” அவள் சொன்னதைக் கேட்டுச் சரண் பாவம் போல் ஜெகன்நாதன் முகம் பார்க்க, அவர் அவனைக் கண்ணமர்த்திப் பொறுமையாக இருக்கும்படி சைகைச் செய்தவர்,

“என்னம்மா இது நீ பேசுறது சரியில்லை. அவர் எல்லா விசயத்தையும் என்னிடம் சொல்லிட்டார். தப்பு ரெண்டுப் பேரிலும் தான் இருக்கு. அதனால் நீயும் கொஞ்சம் அனுசரிச்சு நடக்கணும் மது. அவருக்கும் ஒரு சான்ஸ் கொடுத்துத் தான் பாரேன். ஒரு மனுசன் தப்பை உணர்ந்து திருந்த கூடாதாம்மா” அவரின் பேச்சை என்றுமே அவள் தட்டியது இல்லை. என்ன பதில் பேசுவது என்று தெரியாமல் அவள் முழிக்க, ரிஷி கோபத்துடன் தன் தாத்தாவைக் குறுக்கிட்டான்.

“தாத்தா அவளுக்குத் தான் விருப்பமில்லைன்னு சொல்றா தானே விடுங்களேன். அதை விட்டுட்டுப் போ போன்னா அவ பாவமில்லையா?” மதுவிடம் திரும்பி, “பேசாம அவன்

கட்டிய தாலியைக் கழட்டி அவன் மூஞ்சியில் தூக்கி ஏறி. அதுக்கப்புறமாவது அவன் உன்னை விட்டுப் போறானான்னு பார்ப்போம்" அவன் பேச்சில் சரணை விட மது தான் அதிகம் அதிர்ந்தாள்.

அவளுக்குச் சரணைப் பிடிக்காது தான். அதற்காக அவன் கட்டிய தாலியை அவன் கண் முன்னே கழட்டிப் போட சொல்லும் ரிஷியின் அநாகரீக வார்த்தை அவளுக்கு ரசிக்கவில்லை. சரணோ ரிஷியைத் தீயாய் உறுத்து விழித்தான்.

"ரிஷி என்ன பேச்சு பேசற. மும்பைக்கு வந்த அன்னைக்கே மது அதைச் செய்ய மாட்டேன்னு சொல்லி... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கவும் சம்மதிக்கலையே... திரும்பவும் அதை நீ ஏன் பேசுற?" அவரின் வார்த்தைகள் சரணுக்கு எவ்வளவு நிம்மதியைத் தரும் என்பதை அவர் அறிந்து தான் இருந்தார். அதே போல் அவன் முகம் பளிச்சென்று மலர அவருக்கு நிம்மதியாயிருந்தது.

"மது சுந்தரம் சொன்னா நீ கேட்பே தானே. அது போல் என்னை உன் தாத்தாவா நினைச்சேன்னா நான் சொல்றதைக் கேளு. இல்லைன்னா உன் இஷ்டம்..." வருத்தத்துடன் அவர் சொல்ல, அவரின் வருத்தம் அவளைப் பாதிக்க... அவரருகே ஓடி வந்தவள் மண்டியிட்டு,

"ஐயோ... என்ன இப்படிச் சொல்லிட்டிங்க... எனக்கு நீங்க ரெண்டுப் பேரும் ஒண்ணுத் தான். நீங்க சொன்னதுக்காக நான் அவர் கூடப் போறேன்" அவள் சம்மதித்தது அவருக்குச் சந்தோசமாக இருக்க,

"இது தான் எங்கள் மது... மற்றவர்கள் உணர்வுக்கும் இடமளித்துப் புரிந்து நடந்து கொள்வது தான் மதுவின் ஸ்பெசாலிட்டியே. அதே போல் உன் கணவனின் மனதையும் புரிந்து நடந்து கொள்ளம்மா. சரண் ரொம்ப நல்ல பையன்" அதற்குப் பதில் பேசாமல் அவள் தலையாட்டினாள்.

‘இதை இவள் சொல்வதுக்குக் காலையில் நான் எத்தனை டயலாக் பேச வேண்டியிருந்தது. இவர் ஒரே வார்த்தையில் இப்படிச் சாய்ச்சுப்புட்டாரே’ சரண் மனதுக்குள் ஆச்சிரியப்பட்டுப் போனான். ரிஷி மட்டும் கோபமாயிருந்தான். சிறிது நேரமிருந்து ஜெகன்நாதன் மதுவிற்கு அறிவுரைச் சொல்லிக் கொண்டு கிளம்ப, இருவரும் தனித்து விடப்பட்டனர்.

‘இப்பொழுது இவனை எங்கே படுக்கச் சொல்வது? என்னுடன் என் ரூமுக்கு அழைத்துச் செல்வதா? கீழே உள்ள கெஸ்ட் ரூமில் படுக்கச் சொல்வதா?’ மது யோசிக்க, மீரா இருவரையும் பார்த்துக் கொண்டிருப்பதை அறிந்து, வேறுவழியின்றிச் சரணை நோக்கி, “வாங்க…” என்றவள் தன்னறைக்கு அழைத்துச் சென்றாள்.

“தேங்க்ஸ் மது…” அறைக்குள் நுழைந்ததும் அவள் கையைப் பற்றி அவன் தன் நன்றியைத் தெரிவிக்க, கையை அவன் பிடியிலிருந்து உருவி கொண்டு, “உங்க தேங்க்ஸ்யை நீங்களே வச்சுக்கோங்க. அதுக்கு முன்னாடி நான் சில கண்டிசன் போடுவேன் அதுக்கு நீங்க ஓகேன்னா… உங்க கூட வருவதில் எனக்கு ஒண்ணும் ஆட்சேபணையில்லை” அவள் சொல்லவதைக் கேட்டு அவன் ஒன்றும் ஆச்சிரியப்படவில்லை. கையைக் கட்டிக் கொண்டு அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று அவள் முகத்தைப் பார்த்தான்.

“தாத்தாவுக்காகத் தான் நான் அங்கே வர்றேன். ஒரு மாசம் தான் அங்கே இருப்பேன். அதுக்குள்ள என் மனசு மாறும்ன்னு எனக்கு நம்பிக்கையில்லை. அதுக்கப்புறம் என்கிட்ட மனைவி என்கிற உரிமையை நீங்க எதிர்ப்பார்க்கக் கூடாது. இதுக்கெல்லாம் சம்மதிச்சாத் தான் நான் அங்கே வருவேன்” அவள் உறுதியாகக் கூற,

“நீ சொல்ற ரெண்டையும் என்னால் ஏத்துக்க முடியாது. ஒரு மாசத்தில் உன் மனசை மாத்த முடியலன்னா… அதனால் மூணு மாசம் டைம் கொடு. அப்புறம் அழகான

பொண்டாட்டியைப் பக்கத்தில் வச்சுகிட்டு எவனாவது விரதமிருப்பனா? நீ பேசுறது காமெடியா இல்ல...!”

“சரண்...” ஏறக்குறைய அவனைப் பார்த்துக் கத்தியவள், “என்னோட டெர்ம்ஸ் அன்ட் கண்டிசன் நான் சொல்லிட்டேன். இதுக்கு நீங்க ஒத்துகிட்டாத் தான் நான் அங்கே வருவேன்”

“நானும் என்னோட டெர்ம்ஸ் அன்ட் கண்டிசனைச் சொல்லிட்டேன். அதுக்கு நீயும் ஒத்துக்கணும்” அவனும் அவளை மாதிரிச் சொல்லிக் காட்ட, அவனை அவள் முறைக்க, “இல்லைன்னா நான் ஜெகன்நாத தாத்தா கிட்டப் போய்ச் சொல்ல வேண்டியிருக்கும். வசதி எப்படி?” அவளைப் பார்த்து கண்சிமிட்டியபடிக் கேட்க,

அவளோ அவனை இயலாமையுடன் பார்த்தவள் வேறுவழியின்றி, “சரி உங்க இஷ்டத்துக்கு என்னமோ பண்ணித் தொலைங்க” அவனிடம் கத்தியவள், பிறகு நிதானித்து, “சரி நீங்க எப்போ ஊருக்குப் போகப் போறீங்க. முதல்ல நீங்க போங்க... எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு அது முடிஞ்சதும் நானே வர்றேன்”

“ரெண்டுப் பேரும் சேர்ந்துத் தான் போகப் போறோம். மார்னிங் பிளைட்டில் டிக்கெட் புக் பண்ணிட்டேன்” அவன் சொல்ல, ‘எல்லாம் திட்டமிட்டுச் செய்துவிட்டு ஒன்றும் அறியாதவன் போல் முகத்தை வைத்திருக்கிறான் பாரு... ராஸ்கல்’, அவனை மனதில் திட்டியவள், வெளியே அவனை முறைத்துப் பார்த்துவிட்டுப் படுக்கையில் போய் விழுந்தாள்.

சிறிதுநேரம் கழித்துப் பக்கத்தில் சரண் படுப்பது போல் தோன்றத் திடுக்கிட்டு எழுந்தவள், “ஹேய்... இங்கே என்ன பண்றீங்க? அங்கே சோபாவில் போய்ப் படுங்க”

அவன் பதில் பேசாமல் மெத்தையில் ஊன்றியிருந்த அவள் கையைத் தட்டி விட அவன் மேலே விழுந்தவளை மென்மையாக அணைத்தவன், “இந்த... தனித்தனியா படுக்கிற வேலையெல்லாம் இங்கே வேண்டாம். எனக்குத் தூங்க நீ வேணும். உன்னைக் கட்டிப் பிடிச்சிட்டுத்

தூங்கினாத் தான் எனக்குத் தூக்கமே வரும். நீயில்லாம நேத்து நைட் நான் தூங்கவே இல்லை” அவன் பேசியதைக் கேட்டவள், கோபத்துடன் அவன் அணைப்பிலிருந்து விலகி கட்டிலை விட்டிறங்கி,

“சரண்… இந்த மாதிரி இனி பேசனீங்க… நான் அங்கு வருவதைப் பத்தி யோசிக்க வேண்டியிருக்கும்” அவன் முகம் பாராமல் கூறியவள்… அவன் பதிலையையும் எதிர்பாராமல் சோபாவில் சென்று படுத்துக் கண்களை இறுக மூடிக் கொள்ள… அவன் அவள் செய்கையைத் தடுக்கும் வகையறியாமல் இயலாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

‘மது என்னைப் புரிந்து கொண்டு காதல் மனைவியாக என்று மாறுவாள்? மாறுவாளா? இல்லை இப்படியே இருப்பாளா?’ மனதில் பலவற்றையும் நினைத்துக் குழம்பியவன் தூக்கத்தை மறந்துப் போய் விடிய விடிய முழித்திருந்தான்.

## மலர் : 18

“மது... என் மகளே...” மதுமதியைக் கண்டதும் தன் வயதைக் கூட மறந்தவராய் ஓடிவந்து அவளைக் கட்டிக் கொண்டார் ராமகிருஷ்ணன்.

“இந்த அப்பாவிடம் ஏனம்மா உண்மையைச் சொல்லவில்லை? அப்படிச் சொன்னால் நான் உன்னைத் தப்பா நினைச்சுருவேன்னு பயந்துட்டியா மது? அப்பாவைப் பார்த்தால் உனக்குப் பாவமாயில்லை? என்னைப் பிரிந்து எனக்கு ஏன் இவ்வளவு பெரிய தண்டனைக் கொடுத்தே?” அவரின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் அவரின் அணைப்பில் ஆறுதலாய் அவர் தோள் சாய்ந்தவள், மௌனமாய்க் கண்ணீர் வடித்தாள்.

“சாரிப்பா... சாரி...” அதைத் தவிர அவள் வாய் வேறு எதையும் சொல்லவில்லை. அதற்குள் சுபத்ரா அவளருகில் வந்து,

“உனக்குச் சரண் மேல் கோபமிருக்கலாம்... ஆனால் இந்த அத்தையிடம் உன் மனக்கஷ்டத்தைச் சொல்லியிருக்கலாமே மது... அந்தளவுக்கு என்னை நீ வேத்து மனுசியாத்தானே நினைச்சுயிருக்க” மாமியாரின் வார்த்தையில் முற்றிலும் உடைந்தவள், “அத்தை...” என்று அவரைக் கட்டிக் கொண்டு அழ, சரண் அவளை வேதனையுடன் பார்த்திருந்தான்.

ஹரி பிரமிப்பாய் மதுமதியையும், மதிவதனாவையும் பார்த்துக் கொண்டிருந்தான். ஏன் ராமநாதனும் அப்படிப்பட்ட ஒரு மனநிலையில் தான் அமர்ந்திருந்தார். எந்தவொரு வேற்றுமையும் இல்லாமல் இருவரும் உருவத்தில் ஒன்று போலிருந்தனர்.

“அதான் மது வந்துட்டாளே... பின்னே எதுக்கு எல்லோரும் அழுறிங்க... சந்தோசமாயிருங்க...” வைத்தியநாதனின் குதூகலக் குரலில் எல்லோரும் அவரைப் பார்க்க, மதுமதி ஓடிவந்து அவர் முன் மண்டியிட்டு அவரின் கைகளை

அன்போடு பற்றிக் கொண்டு, “தாத்தா எப்படியிருக்கீங்க? ஐ ரியலி மிஸ் யூ தாத்தா?” உண்மையாய் சொல்ல,

“நீயில்லாமல் எனக்கு நேரம் போகவே இல்லை… ரொம்பக் கஷ்டமாயிருந்தது தெரியுமா?” சிறு பிள்ளையாய் அவர் சிணுங்க, “அதான் நான் வந்துட்டேன்ல… இனியென்ன…? தாத்தா உங்களுக்காக ஒரு கிசுகிசுச் சொல்லவா…? அந்த நான்கெழுத்து நடிகைக்கும், ஆறெழுத்து நடிகருக்கும் அமெரிக்காவில் ரகசியத் திருமணம்… யாருன்னு கண்டுபிடிங்கப் பார்ப்போம்” கண்சிமிட்டி அவள் கேட்க, சரண் அவளை ஆச்சிரியமாய்ப் பார்த்தான். அவளுக்குத் தன்னிடம் மட்டும் தான் கோபம் என்பது புரிய, அவன் மனம் கொஞ்சம் கனத்துத் தான் போனது.

“தெரியலியே… யாருன்னு சொல்லேன்…” வைத்தியநாதன் கெஞ்ச…

“ம்ஹும்… அவ்வளவு சீக்கிரம் சொல்லிருவேனா? நானே மூணு நாளா மண்டையை உடைச்சுக் கண்டுப்பிடிச்சேனாக்கும். இன்னைக்கு ஃபுல்லா யோசிங்க… அப்படியும் தெரியலைன்னா… நாளைக்குச் சொல்றேன்”

“என்ன மது…!” சிணுங்கிய தாத்தாவை உலக அதிசயமாய்ப் பார்த்தான் சரண். எப்பொழுதும் பெரிய மனிதர் என்ற தோரணையில் வலம் வரும் தாத்தாவா இது? அவனுக்குச் சந்தேகமாயிருந்தது.

அதற்குள் மதிவதனா, மதுமதியின் அருகில் வந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டு, “சாரி மது… என்னால் தான் இவ்வளவு பிரச்சனையும்… என்னை மன்னித்துவிடு”

“உன் நிலையிலிருந்து பார்த்தால் நீ செய்தது சரியே… தப்பெல்லாம் என் மேல் தான். சரிவிடு… நடந்ததை யாராலும் மாற்ற முடியாது” மது புன்னகைக்க, சரணுக்குக் காதில் புகை வராத குறை தான். எல்லோரையும் மன்னிக்கும் அவள் தன்னை மட்டும் ஏன் மன்னிக்க மாட்டேங்கிறாள்? என்று அவனுக்கு ஆயாசமாகயிருந்தது.

ஹரிணி தன் மாமியார் மாமனாரை தனியாக விட்டு விட்டு வர முடியாததால் அவளிடம் தொலைப்பேசியில் நலம் விசாரித்தாள். அதன் பின்னர் வீட்டில் மகிழ்ச்சி பொங்கியது. அத்தனை நாள் பிரிவை மதுமதி தன் தந்தையின் அருகிலேயே இருந்து அவரிடம் கொஞ்சிப் பேசி ஆற்றிக் கொண்டாள். மதிய நேர உணவு முடிந்ததும் எப்படியும் மது தங்கள் அறைக்கு வருவாள் என்ற நப்பாசையில் முதலில் அறைக்குச் சென்ற சரண், அவளுக்காகக் காத்திருக்க, ஆனால் அவள் வரவேயில்லை. காத்திருந்து... காத்திருந்து... சலித்துப் போனவனாய் கீழே வரவேற்பறைக்கு வந்தவன் அங்கே மதுமதியும், ஹரியும் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு கடுப்பானான்.

அவனைப் போல் கடுப்பான இன்னொரு ஜீவனும் இருந்தது அது மதிவதனா. அவளும் வந்ததிலிருந்து பார்க்கிறாள்... ஹரி அவளைக் கொஞ்சமும் கண்டு கொள்ளவில்லை... அதைவிட அவன் மதுவிடம் ரொம்ப அக்கறையாய் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு எரிச்சலடைந்தவள் அவர்களுக்கு எதிரிலிருந்த சோபாவில் அமர்ந்துக் கோபத்துடன் பத்திரிக்கையைப் புரட்டிக் கொண்டிருந்தாள். சரண் மதியைக் கண்டு கொண்டான். அவனும் அவளும் ஒரே இனமல்லவா... அவளருகில் வந்தமர்ந்தவன்,

“என்ன மதி... அண்ணியும் கொழுந்தனும் ரொம்பப் பிலிம் காட்டுறாங்களோ...?” சரணின் பேச்சில் திடுக்கிட்டு நிமிர்ந்துப் பார்த்தவள், பின் சலித்துக் கொண்டு, “ரொம்ப........ மாமா”, ‘ரொம்ப’வில் அழுத்தம் கொடுத்துப் பதில் சொல்ல,

“என்ன ரொம்பச் சலிச்சுக்கிற...”

“பின்னே என்ன மாமா உங்க தம்பி சரியான மொக்கைப் பீசா... இருக்காரே. அழகான பொண்ணு நான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன். அவங்க என்னடான்னா அண்ணிக் கூடக் கடலைப் போடறாங்க. இது சரியான்னு நீங்களே சொல்லுங்க?”

“ஹேய்... இங்கே யாரு அழகான பொண்ணு?” சுற்றும் முற்றும் சரண் தேட, “மாமா...” என்று சிணுங்கிய மதி, “நான் அழகான பொண்ணா உங்க கண்ணுக்குத் தெரியலியா? இருங்க இருங்க... மதுக்கிட்ட சொல்றேன்... நீ அழகாயில்லைன்னு மாமா சொன்னாங்கன்னு சொல்றேன். எனக்குப் பதிலா அவள் உங்களை மொத்துவா?”

“ஏய்... இது அநியாயம் அவளை அழகில்லைன்னு நான் எங்கே சொன்னேன்?” பதறியவனாய் அவன் கேட்க,

“நானும் மதுவும் உருவத்தில் ஒரே மாதிரியிருக்கோம்... நான் அழகில்லைன்னா... அவளும் அழகில்லைன்னுத் தானே அர்த்தம். எப்புடி?” கெத்தாக அவள் வினவ,

“இதில் இப்படி ஒரு ஆப்புயிருக்கா. அம்மா... தாயே... உலகத்திலேயே நீ மட்டும் தான் அழகுப் போதுமா?”

“அது... அந்தப் பயமிருக்கணும்” சுடிதாரின் கழுத்துப் பகுதியைத் தூக்கி விட்டுக் கொண்டாள்.

“அதை விடு... இதுங்களை என்ன செய்றதுன்னு மொதல்ல யோசி...”

“அவங்களை நாம ஒண்ணும் செய்ய முடியாது. சரி அவங்களை விடுங்க நாம ரெண்டுப் பேரும் பேசலாம்” மதி சொல்லவும் வேறுவழியின்றி அவளுடன் பேசிக் கொண்டிருந்தவன் நேரம் செல்லச் செல்ல மனைவியை மறந்துப் பேச்சில் ஒன்றிப் போய்விட்டான்.

ஹரி கேட்டதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்த மதுமதியின் காதில் சரண் சிரிக்கும் ஒலிக் கேட்க, திரும்பிப் பார்த்தவள் கண்ணில் சரணும், மதியும் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பது விழ, கணவனை முறைத்துப் பார்த்தாள். ஏதோ உந்துதலில் அவளைத் திரும்பிப் பார்த்தவனுக்கு அவளின் முறைப்புக் கண்டு முதலில் ஒன்றும் புரியவில்லை. பின் புரிந்ததும் அவன் இதழ்கள் விசமமாய்ப் புன்னகைத்தது.

‘என்னருமைப் பொண்டாட்டியே… என்னமா முறைக்கிற… மதி கூடப் பேசுறது உனக்குப் பிடிக்கலியா? அவ்வளவு கோபம் வருது. அப்படின்னா என் மேல் உனக்குக் காதலிருக்கு… அன்பிருக்கு… கூடிய சீக்கிரம் என் வழிக்கு வந்துருவப் போலிருக்கே’ மனதுக்குள் சொல்லிக் கொண்டவன் மனதில் முதலிலிருந்த சோர்வுப் போய் உற்சாகம் வந்தது. வேண்டுமென்றே மதியிடம் சிரித்துச் சிரித்துப் பேசி மதுவின் முறைப்பைப் பரிசாகப் பெற்றுக் கொண்டான். அந்த முறைப்பே அவனுக்குப் பூமழைப் பொழிந்தது போலிருந்தது.

********************************************

மாலையில் தந்தையுடனும் தங்கையுடன் மது பேசிக் கொண்டிருக்க அவளருகில் இயல்பாய் வந்தமர்ந்தான் சரண். தந்தையின் முன் அவன் அருகாமையை அவளால் தவிர்க்க முடியவில்லை. இது தான் சாக்கு என்று அவன் அவள் புறம் நன்றாகச் சாய்ந்தமர்ந்து அவள் தோள் சுற்றிக் கையைப் போட்டுக் கொண்டு மற்றவர்களிடம் இயல்பாகப் பேச இவளுக்குத் தான் அங்கே உட்காரப் பிடிக்கவில்லை.

“மதி… மது தான் நம் ஹோட்டல் கணக்கெல்லாம் பார்த்துக் கொள்கிறாள். இனி நீயும் அவளும் சேர்ந்துப் பார்த்துக் கொள்ளுங்கள்” ராமகிருஷ்ணன் சொல்ல… மது அதிர்ந்து போய்ச் சரணைப் பார்த்தாள். ‘ஏன் என்னிடம் இதைப் பற்றிச் சொல்லவில்லை’ என்று அவள் கேட்பது போல் அவனுக்குத் தோன்ற… அவள் கண்களைச் சந்திக்க முடியாமல் தலைக் குனிந்தான் அவன்.

“அப்பா… மாமா மதுவை நம் ஹோட்டலுக்கு எல்லாம் அனுப்ப மாட்டாராம். அவருடைய கம்பெனிக்குத் தான் அழைத்துப் போவாராம். ஏன்னா அவளின் திறமை அவருக்கு மட்டும் தானாம்…” சொல்லியவாறு மதிவதனா கலகலத்துச் சிரிக்க…

‘போச்சுடா… சும்மாவே ஆடுவாள்… இதில் இவள் வேறு இப்படிக் கோர்த்துவிட்டாளே. என்ன செய்யக் காத்திருக்காளோ தெரியலியே… சரண் எவ்வளவோ

சமாளிச்சுட்ட... இதை நீ சமாளிக்க மாட்டியா என்ன...' தனக்குத் தானே பேசி மனைவிக்குப் பயந்த மனதைச் சமாளித்துக் கொண்டான்.

"இல்லைப்பா... மதியே எல்லாத்தையும் பார்த்துக்கட்டும். மும்பையில் உள்ளதைப் பார்க்கவே எனக்கு நேரமில்லை" மதுமதி சமாளிப்பாகச் சொன்னாலும் அவளின் சிவந்த முகம் அவளின் ஆத்திரத்தை அப்படியே பறைச் சாற்ற அவன் உண்மையிலேயே பயந்துத் தான் போனான். முதலில் அவளின் கோபத்தைச் சமாளிக்க வேண்டுமென்று நினைத்தவன்,

"மது கார்டனுக்கு வாயேன்... உனக்குப் பிடிச்சச் செடி ஒண்ணு வாங்கிட்டு வந்திருக்கேன்..." மருமகனின் பேச்சில் மகிழ்ந்த ராமகிருஷ்ணன்...

"போம்மா மது... மாப்பிள்ளை ஆசையாய் கூப்பிடறார் இல்ல"

"ம்... மாமா நடத்துங்க... நடத்துங்க..." கண்சிமிட்டியபடிச் சொன்ன மதிவதனாவைப் பார்த்து அசடு வழிந்தவனை உறுத்து விழித்த மதுமதி,

"வாங்க...." வெடுக்கென்று சொன்னவள் வாயிலை நோக்கி நடக்க... அவளை அமைதியாகப் பின் தொடர்ந்தான்.

"மது... சாரிடா..."

இப்போ எதுக்கு மன்னிப்பு என்று அவள் கேட்கவில்லை, "என்னவொரு நம்பிக்கை என் பேரில்... என் அப்பா சொன்னக் கணக்கெல்லாம் என்னிடம் நீங்க ஒரு நாளும் நீங்க காண்பித்ததில்லை. ஏன்... நான் ஏதாவது சுருட்டிக் கொண்டு போய்டுவேன் என்ற பயமா?" படபடவென அவள் பொரிய....

"சாரி மது... அன்னைக்கு இருந்த சரண் அப்படி... ஆனால் இப்ப அப்படியில்லை. என்னைப் புரிந்துக் கொள். இனியும் உன்னை அப்படி நினைக்க நான் என்ன முட்டாளா? நீ எவ்வளவு பெரிய பணக்காரி... உன்னைப் போய் அப்படி

நினைப்பேனா?” என்று சொல்லி அவனுக்கு அவனே ஆப்பு வைத்துக் கொண்டான்.

“அப்போ நான் வசதியில்லாதவளா இருந்தால்... ச்சீ... நீங்களும் உங்க நினைப்பும். வசதியில்லாமல் இருந்தாலும் நேர்மையா இருக்கிறவங்க எவ்வளவோ பேர் இருக்காங்க. எல்லாரையும் ஒரே மாதிரி எடைப் போடாதீங்க” என்று சொல்லி நிறுத்தியவள், “என்னைப் பத்தி நல்லவிதமா நினைச்சதுக்குத் தேங்க்ஸ்” இருகரத்தையும் உயரே கூப்பிக் கும்பிட்டவள் அவனைத் திரும்பியும் பார்க்காமல் உள்ளே செல்ல... உண்மையில் அவன் அயர்ந்துதான் போனான்.

‘அவனவன் மூணு நாலுன்னு கல்யாணம் பண்ணிக்கிட்டு ஜாலியா இருக்காங்க. நான் ஒண்ணே ஒண்ணு பண்ணிக்கிட்டுப் படற அவஸ்தையிருக்கே... அய்யய்யயோ... இத்துடன் முடிஞ்சதா... இல்லை இன்னும் என் கணக்கில் ஏதும் பாக்கியிருக்கா... கடவுளே...’ மனதுக்குள் புலம்பியவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது... தன் மனைவியைச் சமாளிப்பது அவ்வளவு எளிதல்ல என்பது.

இரவு உணவு வேலையின் போது சரண், அவள் கையைப் பிடிப்பது, காலில் உரசுவது என்று சில்மிசம் செய்ய, பொறுத்துப் பொறுத்துப் பார்த்தவள், இடுப்பைத் தடவிய அவன் உள்ளங்கையில் நறுக்கென்று கிள்ள, ‘ஆ’வென்று கத்தியவனை எல்லோரும் என்னவென்று பார்க்க, அவர்களைப் பார்த்து அசடு வழிந்தவன் தலையைக் குனிந்து கொண்டான்.

இரவு ராமகிருஷ்ணன், மதிவதனா தங்கள் வீட்டிற்குச் செல்ல, அவர்களை வழியனுப்பிவிட்டு மதுமதியைத் தேடிய சரணின் கண்ணில் அவள் தட்டுப் படவில்லை. மேலே தங்களறைக்குச் சென்றவன் அங்கே அவன் கண்டக் காட்சி அவனுக்கு வருத்ததை அளித்தது.

மதுமதி அறையின் வாயிலில் நின்று கொண்டு உள்ளே செல்லலாமா... இல்லை வேண்டமா... என்று இருமனதாய் நின்று கொண்டிருக்க, அதைப் பார்த்தவன் தன் மனவருத்தத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, அவளருகில்

சென்று அவள் எதிர்பாராத விதமாக அவளைத் தூக்க, அவள் திமிறிக் கீழே இறங்க முயல, அவன் அதைத் தடுத்தவாறு அவளை அறைக்குள் தூக்கிச் சென்று காலால் கதவைச் சாத்திவிட்டு அவளைப் படுக்கையில் கிடத்தி, தானும் அவளை அணைத்தவாறுப் படுத்தவன், "இதுக்குத்தானே பயந்துட்டு அங்கேயே நின்னுகிட்டிருந்த. இப்ப பயம் போயிருச்சா?"

"ச்சு... விடுங்க என்னை... எனக்குப் பிடிக்கலன்னு சொல்றேன். திரும்பத் திரும்ப இதையே ஏன் பண்றீங்க?" இயலாமையுடனும் கோபத்துடனும் கேட்டவளைக் கண்டு அவனுக்குப் பாவமாகத் தான் இருந்தது. ஆனால் பாவப் புண்ணியம் பார்த்தால் இருவரின் வாழ்க்கையும் கேள்வுக்குறியாகிவிடுமே? என்றெண்ணியவன்,

"இங்கே பார் மது... உன் விருப்பமில்லாமல் நான் உன்னை எதுவும் செய்ய மாட்டேன். என்னை நம்பு. அதற்காகச் சின்னதா ஒரு ஹக்... ஒரு கிஸ்... கூட இல்லைன்னா எப்படி? அப்புறம் வாழ்க்கை ரொம்ப ட்ரையாயிருக்குமே...!" கண்சிமிட்டிக் கேலிக் குரலில் கூறியவனை முறைக்க மட்டும் தான் அவளால் முடிந்தது.

அவளின் முறைப்பை அவன் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் அவளை அணைத்து முத்தமிட வர... அவனை விலக்கித் தள்ளியவள், படுக்கையிலிருந்து தலையணையும் போர்வையும் எடுக்க...

"மது... உன் அறைப் போல் இங்கே சோபா எல்லாம் கிடையாது. அதனால் இங்கே தான் நீ படுக்கணும்" நக்கல் குரலில் அவன் கூற, அவனுக்குப் பதில் கூறாமல் அவள் கீழே போர்வையை விரித்து அதில் படுத்தாள். அவளின் செயலில் அவன் பதறிப் போய்... அவளருகே வந்து,

"என்ன மது இது? மேலே வந்து படு... உனக்குக் கீழே படுத்து பழக்கமிருக்காது. நான் உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன்"

“இல்லை... அங்கே படுக்க எனக்குப் பிடிக்கவில்லை. நீங்க போய்ப் படுங்க” கண்ணை மூடிக் கொண்டு அவள் பதில் சொல்ல... என்ன செய்வது என்று தெரியாமல் அவளைப் பார்த்திருந்தவன் சட்டென்று அவளைக் குனிந்துத் தூக்க... அவனின் எதிர்பாராத இந்தச் செயலில் திகைத்தவள் அவனிடமிருந்து விடுபடப் போராட...

“ஷ்... மது நான் உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன். என்னை நம்பு...” என்றவன் அவளைக் கட்டிலில் படுக்க வைத்து... நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்து,

“இவ்வளவு நாள் உன் அருமை தெரியாமல் படுத்தி விட்டேன். நான் திருந்திவிட்டேன் மது... இனி உன்னைத் தேவதைப் போல் பார்த்துக் கொள்வேன்” சொல்லியவன் கீழே படுத்துக் கண் மூட... அவனின் செயலில் அவளுக்குத் தான் மனம் வருந்தியது. அவன் கீழே தரையில் படுத்திருக்க... தான் மட்டும் சொகுசாய் மெத்தையில் படுத்திருப்பது அவளுக்கு உறுத்தியது. மென்மையான அந்த மெத்தை இப்பொழுது அவளுக்கு முள்ளாய்க் குத்தியது.

எல்லாம் கொஞ்ச நேரம் தான் அவன் தனக்குச் செய்தத் துரோகம் நியாபகம் வர, ‘நல்லா அனுபவிடா...’ என்று மனதில் கருவிக் கொண்டாள். இருவருமே ஒருவரை ஒருவர் நினைத்துக் கொண்டு தூங்காமல் விழித்திருந்தனர்.

## மலர் : 19

காலையில் எழுந்த சரணின் கண்ணில் காபிக் கோப்பையுடன் அறைக்குள் நுழைந்த மதுமதி கண்ணில் பட, "குட்மார்னிங் செல்லம்…" சிரித்தபடிக் காலை வணக்கம் சொல்லியவாறு அவள் கையிலிருந்த காபிக் கோப்பையை வாங்கக் கையை நீட்ட, அவளோ அவன் கையில் அதைக் கொடுக்காமல் கட்டிலில் ஒரு மூலையில் அமர்ந்து நிதானமாக அதைப் பருகியபடி,

"இன்னமும் நான் உங்களுக்குக் காபிக் கொண்டு வருவேன்னு நீங்க எப்படி எதிர்பார்க்கிறீங்க? அன்னைக்குக் காபிக் கொண்டு வந்ததை என்னால் மறக்க முடியாது. அன்னைக்குச் சூடுப்பட்டது என்னமோ கையில் தான். ஆனால் காயப்பட்டதோ இங்கே…" அவள் நெஞ்சைத் தொட்டுக் காண்பிக்க… அதில் அவன் மனம் ஓடிந்துதான் போனான். ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, அவளருகில் நெருங்கி அமர்ந்தவன், அவள் கையிலிருந்த கோப்பையைப் பற்றி ஒரு வாய் பருகியவன்,

"என்ன ஒரு டேஸ்ட்…" கண்மூடி ரசித்துச் சொல்லியவன், "என் வாழ்நாளில் இப்படியொரு காபிக் குடித்ததில்லை" குறும்பாகக் கூறிக் கண் சிமிட்ட, அவளோ அருவருப்புடன் எழுந்தவள் குளியலறைக்குச் சென்று மீதிக் காபியை வாஷ்பேசினில் ஊற்றிவிட்டு வெளியில் வந்தாள்.

அவள் முகத்தில் இன்னமும் அருவருப்பும், எரிச்சலும் மீதியிருந்தது. கட்டிலில் பொத்தென்று அமர்ந்தவள் மடியில் தலையணை எடுத்து வைத்து அதில் இருகரங்களைக் கோர்த்து தன் தலையைத் தாங்கிக் கண் மூடி அமர்ந்தாள். அவளின் செயலில் அவன் முகம் கறுத்து உணர்ச்சிகள் தொலைத்து இறுகிப் போனது. அவள் முகம் பாராமல்,

"சாரி…" என்றவன் குளியலைறைக்குச் சென்று கதவை மூடிக் கொள்ள அவளுக்குத் தான் தலை வலித்தது. அது அவன் செய்கையால் அல்ல.. அவளின் செய்கையால்…

****************************************************

“ஹரி மதியைப் பத்தி என்ன நினைக்கிற?” சரணும் ஹரியும் நகரத்தின் மையத்திலிருந்த ஷாப்பிங் மாலில் உணவகம் இருந்த பகுதியில் அமர்ந்திருந்தனர்.

“ம்... அவங்களைப் பத்தி நினைக்க என்னயிருக்கு? அண்ணியோட சிஸ்டர் அவ்வளவு தான்” கையிலிருந்த பழச்சாறை உறிஞ்சிக் கொண்டே அண்ணனுக்குப் பதிலளித்தான் ஹரி. அவனின் பேச்சில் சரண், “சுத்தம்...” என்றவாறுத் தலையில் கையை வைத்துக் கொண்டான்.

“சரண் விசயத்தை ஒழுங்காச் சொல்லு. எனக்குச் சுத்தி வளைச்சுப் பேசினாப் புரியாது”

“நான் சொல்ற விசயத்தைக் கேட்டு நீ மதியைத் தப்பா நினைக்கக் கூடாது” சரண் மெதுவே மதிவதனா அவனை விரும்பும் விசயத்தைச் சொல்ல, ‘ஆ’வென வாயைப் பிளந்தான் ஹரி. அவன் சத்தியமாக இதை எதிர்ப்பார்க்கவில்லை.

“இப்போ சொல்லு... நான் பார்க்கும் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதாய்ச் சொல்லியிருக்க... உனக்காக நான் பார்த்திருக்கும் பெண் இந்த மதி தான் உனக்கு ஓகேவா?”

“சரண்... இப்படித் திடீர்ன்னுக் கேட்டா எப்படிடா? எனக்குக் கொஞ்சம் யோசிக்க அவகாசம் கொடு”

“இதில் யோசிக்க என்னடா இருக்கு? நாம விரும்பறப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறதை விட நம்மை விரும்பும் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா வாழ்க்கை நல்லாயிருக்கும்டா” திருமணமானப் புதிதில் மதுமதி தன் மேல் கொண்ட காதலை எண்ணிப் பார்த்தச் சரணின் கண்கள் கனவில் மிதக்க... அவன் குரல் ஏக்கத்துடன் காதலுடன் ஒலித்தது.

“ஓஹோ... அனுபவம் பேசுதோ?” ஹரி அவனைக் கிண்டலடிக்க, “ம்... அனுபவம் தான் தம்பி... அதை

அனுபவித்துப் பார் உனக்குப் புரியும்” அதே நக்கல் குரலில் சரண் சொல்ல,

“சரண் நீ இவ்வளவு சொல்றதால நானும் ஓகே சொல்றேன். ஆனால் அப்பாவும் அம்மாவும் சரின்னுச் சொல்லணும். அவங்களுக்குப் பிடிக்கலைன்னா... அவங்க விருப்பத்தை மீறி என்னாலும் ஒண்ணும் செய்ய முடியாது”

“அப்பா அம்மாவைக் கன்வின்ஸ் பண்றது என்னோட வேலை... உனக்குப் பிடிச்சியிருக்கான்னுத் தான் எனக்குத் தெரிய வேண்டியிருந்தது. அது தெரிஞ்சிடுச்சு... இனி இதை அரேஞ்ச்டு மேரேஜாக்க வேண்டியது என்னோட பொறுப்பு நீ கவலைப்படாதே” பொறுப்புள்ள அண்ணனாய் பேசியவன், “ஹரி மதியோட போன் நம்பர் வேணுமா?” குறும்புடன் தம்பியைப் பார்த்துக் கேட்க,

“வேண்டாம் சரண்... இப்பவே தேவையில்லாத ஆசைகளை ஏன் வளர்க்கணும்? முதல்ல வீட்டில் ஓகே சொல்லட்டும் அப்புறம் பார்க்கலாம்” தம்பியின் நிதானப் பேச்சில் நெகிழ்ந்தவன் அவனை இறுகக் கட்டிக் கொண்டான்.

அதன் பின்னர்ச் சரண் சற்றுத் தீயாய் வேலைச் செய்தான் என்றே சொல்லணும். ராமநாதனிடமும் சுபத்ராவிடமும் மதிவதனாவை ஹரிக்குப் பேசி முடிக்கலாமா என்று கேட்க, “சரண்... எனக்குக் கூட இந்த யோசனை வரவே இல்லைடா... எனக்குச் சம்மதம் சரண்” மூத்த மகனின் அறிவைக் கண்டு சுபத்ரா ஆச்சிரியப்பட்டுப் போனார்.

“அதான் உன் அம்மாவே ஓகே சொல்லிட்டாளே... அதுக்கப்புறம் நான் மறுக்க முடியுமா?” கைக் கட்டி வாய் பொத்திப் போலிப் பணிவுக் காட்டிய ராமநாதனை சுபத்ரா முறைக்க,

“உடனே மாமாவுக்குப் போன் போட்டுக் கேளுங்கம்மா. நல்ல காரியத்தைத் தள்ளிப் போடாதீங்க” சரண் அவசரப்பட, ராமகிருஷ்ணனிடம் ராமநாதன் மதியை ஹரிக்குப் பெண் கேட்க, அவர் மறுவார்த்தையின்றி உடனே சம்மதிக்க... அப்பொழுது தான் சரணுக்கு

நிம்மதியாயிருந்தது. இதைக் கேள்விப்பட்டதும் மதி சரணுக்கு அலைப்பேசியில் அழைத்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

மதுமதியும் சரணிடம், “தேங்க்ஸ்... மதிக்காக நீங்க இவ்வளவு செஞ்சிருக்கீங்க. ரொம்பச் சந்தோசம்...” உண்மையான மகிழ்ச்சியுடன் அவள் சொல்ல,

“வெல்கம் மை டியர்...” இடைவரைக் குனிந்து அவள் நன்றியை புன்னகையுடன் ஏற்றுக் கொண்டவனைக் கண்டு அவளுக்கும் மகிழ்ச்சியாயிருந்தது. காலையில் அவன் மகிழ்ச்சியை அவள் குழி தோண்டிப் புதைத்துவிட்டாள் அல்லவா? அது மீண்டதும் அவனின் உற்சாகம் அவளையும் தொற்றிக் கொண்டது.

*******************************************

“மாமா உங்களுக்கு ரொம்பத் தேங்க்ஸ்” மதிவதனா உணர்ச்சிவசப்பட்டுச் சரணின் கையைப் பிடித்துக் கொண்டு கண் கலங்கினாள். அன்று தான் அவளுக்கும் ஹரிக்கும் நிச்சயதார்த்தம் நடக்கவிருந்தது. அவனைத் தனிமையில் சந்தித்த மதி அவனிடம் தன் நன்றியைத் தெரிவிக்க...

“மதி இதுக்கெல்லாம் போய் யாராவது தேங்க்ஸ் சொல்லுவாங்களா? நல்லநாள் அதுவுமா இப்படியாக் கண் கலங்குவ?”

“இல்ல மாமா... கைக் கூடாதுன்னு நினைச்சு மனசுக்குள் பூட்டி புதைச்சு வைச்சக் காதல் இன்னைக்கு உங்க மூலமா நிறைவேறியிருக்கு. என் நன்றியைச் சொல்ல வார்த்தைகள் இல்லை” என்று கண்ணீர் விட்டு அழுதவளை ஆறுதலாகத் தன் தோள் மீது சாய்த்துக் கொண்ட சரண், “மதி நீ எனக்கு ஹரிணி மாதிரி இன்னொரு தங்கை தான். என் தங்கைக்கு நான் செய்ய மாட்டேன்னா... இப்படி நன்றி சொல்லி என்னை அந்நியப்படுத்தாதே” அவனின் பேச்சில்

கண்களைத் துடைத்தவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். இதெல்லாம் அங்கு வந்த மதுமதியின் கண்ணில் பட்டது.

மதிவதானா அறையிலிருந்து வெளியில் வந்தவனை மதுமதி பிடித்துக் கொண்டாள். "பேசறதெல்லாம் வேதாந்தம்... ஆனால் செய்றக் காரியமெல்லாம்... அதுக்குக் கொஞ்சமும் சம்பந்தமுமில்லை" கடுகடுவென முகத்துடன் அவள் நின்றிந்தக் கோலம் அவனுக்குச் சிரிப்பை வரவழைக்க...

"என்ன சொல்ற எனக்குப் புரியல..." அவள் வலிய வந்து அவனிடம் பேசுவது அவனுக்குச் சந்தோசமாயிருக்க... பேச்சை வளர்த்தான்.

"மதிக்கிட்ட உங்களுக்கு என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு... அதுவும் அவளை உங்க தோளில் சாய்ச்சுக்கிட்டு... அதென்ன அப்படியொரு போஸ் கொடுத்திட்டு இருக்கீங்க? பெருசாச் சொன்னீங்க என் மனசில் ஒண்ணுமில்ல அப்படி... இப்படின்னு..." மதுவின் பேச்சில் அவளின் பொறாமை உணர்வு வெளிப்பட, அவனுக்கு இன்னமும் குஷியானது.

"அன்னைக்கு யாரோ மதியைக் கல்யாணம் செஞ்சுக்கோங்கன்னு பெருசாச் சொன்னாங்க. இன்னைக்கு அவ கூடப் பேசினதுக்கு இப்படிச் சண்டைக்கு வர்றாங்க. அவங்களை உனக்குத் தெரியுமா மது...!" அவன் கிண்டலாய் கேட்க... பதிலுக்கு அவள் முறைத்தாள்.

"மனசுல என் மேல் இவ்வளவு காதலை வச்சுகிட்டு பெருசா மதியை நீங்க கல்யாணம் பண்ணிக்கோங்கன்னு அன்னைக்கு எவ்வளவு கெத்தாச் சொன்ன... உணமையாத் தான் சொல்றியோன்னு அப்படியே ஆடிப் போயிட்டேன் தெரியுமா...! ராட்சசி என்னை உயிரோட கொல்றதே உனக்கு வேலையாப் போச்சு?" செல்லமாய் அவள் மூக்கைப் பிடித்து ஆட்டியபடிக் கடிந்தவனிடம்,

"நீங்க கல்யாணத்துக்கு முந்தி மதியைப் பார்த்துத் தானே விரும்புனீங்க... என்னமோ என்னை விரும்பிக் கல்யாணம்

பண்ணிக்கிட்ட மாதிரி பேச்சைப் பாரு”

“ஓ… உன் மனசில் இது வேறு ஓடுதா? வேறு என்னம்மா என் மேல் சந்தேகமியிருக்கு? மொத்தமா சொல்லிரு… புண்ணியமாப் போகும்” என்றவன், “ஒரு பெண்ணைப் பார்த்தா சைட் அடிக்க மாட்டோம்மா அது போல் தான் மதியைப் பார்த்தது. மத்தபடி நீ நினைக்கிற மாதிரியெல்லாம் இல்லை. மதியும் ஹரிணியும் எனக்கு ஒண்ணு தான். மனைவியை மட்டும் தான் நேசிக்கணும்ன்னு குறிக்கோள் வச்சிட்டிருக்கிற என்னைப் பார்த்து இப்படியொரு கேள்வியைக் கேட்டுட்டியே மது” நாடக பாணியில் பேசியவனைக் கண்டு அவளுக்கு எரிச்சல் வந்தது.

“ஆமாம்… நீங்க நேசிச்ச லட்சணத்தைத் தான் நான் பார்த்தேனே” கழுத்தை நொடித்துச் சொல்லியபடி விழா நடக்கும் இடத்திற்கு அவள் செல்ல, அவளைச் சிரிப்புடன் பின் தொடர்ந்தான் சரண்.

******************************************

“ஹாய்…” ஹரி மதிவதனாவைப் பார்த்துச் சொல்ல, மனம் நொந்துப் போனாள் மதி. கொஞ்ச நேரத்துக்கு முன்பு தான் இருவருக்கும் நிச்சயம் நடந்தது. தனியாகப் பேசுவதற்காக இருவரையும் அனுப்பினால்… அவனோ புதிதாய்ப் பார்ப்பது போல் ‘ஹாய்’ என்கிறான். அவளோ கடுப்புடன் அவனைப் பார்த்தவள்,

“உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ஐ லவ் யூ ஹரி” அவனை நிமிர்ந்துப் பார்த்து அவன் கண்களுக்குள் தன் கண்களைக் கலந்தவாறுச் சொன்னவளை அதிசயமாய்ப் பார்த்தான் ஹரி.

“பின்னே என்ன ஹரி… உங்களை முதன் முதலில் எங்க ஹோட்டலில் பார்த்ததிலிருந்து நான் நானாக இல்லை. அந்தளவுக்கு என் மனதை நீங்க கவர்ந்திட்டீங்க. இத்தனை மாசமாய் நான் மனசுக்குள்ளேயே உங்களை லவ் பண்ணிக் குடும்பம் நடத்திக்கிட்டிருக்கேன். நீங்க என்னடான்னா

ஏதோ தெரியாத மாதிரி ஹாய்ன்னு சொல்றது மனசுக்குக் கஷ்டமாயிருக்கு. மறுபடியும் முதல்ல இருந்தான்னு அலுப்பாயிருக்கு” சலித்த குரலில் சொன்னவள் தன் ஏக்கத்தை அவனுக்கு உணர்த்தினாள்.

ஹரி அவளின் வார்த்தையில் மனசெல்லாம் பரவசமாக அப்படியே காற்றில் மிதப்பது போன்ற உணர்வில் மிதந்து கொண்டிருந்தான். ‘சரண்... நீ சொன்னது சரிதான். நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தைக்குமான அர்த்தத்தை இப்ப உணர்றேன்’ மனதுக்குள் அண்ணனுக்கு நன்றி சொன்னவன் தைரியமாக அவளருகில் வந்தான்.

“மதி... குடும்பம் நடத்துறதுன்னா எப்படி மதி... இப்படியா?” அவள் எதிர்பாராதவிதமாய் அவள் முகம் நோக்கி அவன் குனிய,

“என்ன பண்ணப் போறீங்க?” என்னத்தான் தைரியமாகப் பேசினாலும் அவனின் செயல் அவளுக்குப் பதற்றத்தை அளிக்க... பதறிப் போய் அவனை விட்டு விலகினாள்.

“எவ்வளவு தைரியமாப் பேசின... இப்ப இப்படி விலகிப் போற...” சொல்லிக் கொண்டே அவன் மேலும் நெருங்க... அவள் அச்சத்துடன் அவனைப் பார்க்க, அவளின் அச்சம் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

“பயப்படாதே... நான் உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன். நான் பக்கா ஜென்ட்டில்மேனாக்கும்...” அவள் கையைப் பிடித்து மென்மையாய் அதில் இதழ் பதிக்க... மதி அவனின் செய்கையில் நாணி அவன் முகம் பார்க்க வெட்கப்பட்டுத் தலைக் குனிய, “போலாமா...?” அவள் பேசாமல் தலையசைக்க, “ஹேய்... இவ்வளவு நேரம் என்னமாப் பேசினே? இப்ப ஒரேடியாய் அமைதியாயிட்ட...” ஹரி அவளைக் கேலி செய்ய...

“போங்க ஹரி...” வெட்கப்பட்டவள் அங்கிருந்து வெளியில் ஓட... முகமெல்லாம் சிரிப்பாக ஹரி அவளைப் பின் தொடர்ந்தான். இருவரின் மகிழ்ச்சியான முகங்களைக் கண்டு மதுமதிக்கு நிம்மதியாகயிருந்தாலும், நிச்சயம்

அன்று தனக்கு ஏற்பட்ட மனவேதனையை எண்ணி முகம் சுருங்கினாள். எவ்வளவு வசதியிருந்தும் இந்த மாதிரிச் சின்னச் சின்னச் சந்தோசங்களைத் தான் இழந்துவிட்டோமே என்ற நினைவு அவளை உறுத்த கண்கள் லேசாகக் கலங்கியது.

சரண் மதுவைக் கவனித்துக் கொண்டு தான் இருந்தான். அவளின் முகமும் கண்களும் அவளின் மனதைக் காட்டிக் கொடுக்க, அவளின் கையை ஆறுதலாக பற்றி, “நடந்து முடிந்ததை மாற்ற முடியாது மது. இனி மேல் நடப்பதை என்னால் மாற்ற முடியும். என்னை நம்பு மது... ப்ளீஸ்”

‘எல்லாத்துக்கும் இவன் தானே காரணம்’ எண்ணம் தோன்ற வெடுக்கென்று அவன் கையை உதறித் தள்ளினாள். அவளின் செயலில் அவன் ஆடித் தான் போனான்.

நிச்சய வீட்டில் புகைப்படம் எடுக்கக் கூப்பிட்டப் போது சரண் மதுவிடம், “மது இங்கே வா” அவள் கைப்பிடித்துத் தன்னருகில் இழுத்து அணைத்தவாறு நிற்க, அவளோ அவன் கையை விலக்கி தன் அப்பாவுடன் சேர்ந்து நின்றுக் கொண்டாள்.

அடுத்தப் புகைப்படத்திற்காகவாவது அவளுடன் சேர்ந்து நிற்கலாம் என்று அவளை அவன் ஏக்கத்துடன் பார்க்க, அவளோ அவனைக் கண்டு கொள்ளாது சுபத்ராவின் அருகில் சென்று அவர் தோளில் முகம் பதித்துச் சிரித்தப்படி போஸ் கொடுக்க, மற்றவர்கள் அறியாமல் அவள் செய்தச் செயல் அவனுக்கு மட்டுமே புரிந்தது. அவனுக்கு அவளின் புறக்கணிப்பு நன்கு புரிய, அது அவனை வலிக்கச் செய்ததை அவள் அறியவில்லை.

*******************************************

இரவில் தனிமையில் அவளருகே வந்தவன், “ஏன் மது இப்படிப் பண்ணினே?”

“எப்படி...?” நக்கலாய் கேட்டாள்.

“அதான் போட்டோ எடுக்கும் போது என் பக்கத்தில் ஏன் நிற்கல? இந்தக் கறுப்பன் உனக்குப் பொருத்தமில்லாதவன்னு நினைக்கிறியா?” அவனின் குரலில் அவ்வளவு இறுக்கம் தெரிந்தது.

“ஹா… ஹா… இன்னைக்குத் தான் சரண் என் மனதை சரியாச் சொல்லியிருக்கீங்க? ஆமாம்… என் பக்கத்தில் நிற்க உங்களுக்கு என்ன தகுதியிருக்கு? என்ன பொருத்தமிருக்கு? ப்ளாக் அன்ட் வைட் டிவி மாதிரி கேவலமான காம்பினேசன் நம்மோடது… வசதியிருக்கா… அழகிருக்கா? இல்லை ஜோடிப் பொருத்தம் தான் இருக்கா… அப்படி வேறென்ன பொருத்தம் தான் நம்மிடையே இருக்கு? பை லக் உங்களுக்கு நான் கிடைச்சிருக்கேன். அது உங்க அதிர்ஷ்டம்… ம்ஹூம் என்னோட துரதிர்ஷ்டம்” அவனைக் காயப்படுத்த வேண்டுமென்றே அவள் பேச…

அவளின் பேச்சில் மனம் அடிபட்டுத்தான் போனான் சரண். அவளருகே வந்து மண்டியிட்டு அமர்ந்து, “மது… நான் செய்தது மிகப் பெரிய தவறு தான். அதற்கு மன்னிப்பே கிடையாதா? நீ பேசியது எனக்கு ரொம்ப வலிக்குது… ப்ளீஸ் என்னை ஏத்துக்கலைன்னாலும் பரவாயில்லை… இந்த மாதிரிப் பேசி என் மனசைக் கொல்லாதே…” அதற்கு மேல் தாங்க முடியாதவனாய் அவள் கையில் முகம் புதைக்க… அவனின் கண்ணீரை அவள் கை உணர்ந்தது.

மதுவோ அவன் கண்ணீர் கண்டு ஸ்தம்பித்துப் போய்விட்டாள். அவள் ஏதோவொரு கோபத்தில் தான் அப்படிப் பேசியது. அவனைக் காயப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தன்னையுமறியாமல் அவள் பேச, அது அவனை இந்தளவுக்குக் காயப்படுத்தும் என்று அவளும் நினைக்கவில்லை. அவள் பேசிய பேச்சுச் சரியாக வேலைச் செய்த போதும், அதனால் அவன் விட்டக் கண்ணீர் அவனை விட அவளையே அதிகம் காயப்படுத்தியது.

என்னத்தான் அவன் மேல் கோபமிருந்தாலும்… அவள் உள்ளுக்குள் அவன் மேல் காதல் கொண்ட மனம்

இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறதே, அது அவன் கண்ணீரைப் பார்த்ததும் மெல்ல எழ, அவளையுமறியாமல் அவள் கண்களில் கண்ணீர் வழிய... அது சரணின் தலையில் சொட்டியது. அதன் ஈரத்தில் நிமிர்ந்துப் பார்த்தவன்,

“மது...” சந்தோசத்துடன் எழுந்து அவள் முகத்தை இருகையால் தாங்க, அவளோ அவனைப் பார்க்க முடியாமல் துயரத்துடன் முகம் கசங்க, உதடு துடிக்கக் கண்களை மூடிக் கொள்ள, மூடியக் கண்களிலிருந்து விடாமல் கண்ணீர் வழிந்தது. அதைப் பார்த்தவன் மனம் நெகிழ... கைகளால் அவள் கண்ணீரைத் துடைத்து விட, அவள் அவன் ஸ்பரிசத்தைத் தாங்க முடியாதவளாய் கண்களை இன்னமும் இறுக மூடிக் கொண்டாள்.

“தேங்க்ஸ் மது...” மூடிய அவள் விழிகளில் மென்மையாய் முத்தமிட்டவன் மனநிறைவுடன் கீழே படுத்துத் தூங்க, அவள் அங்கே இருக்க மனம் இல்லாமல் பால்கனிக்குச் சென்றமர்ந்தாள். ஏனோ அவளுக்கு அவள் மேலேயே கோபம் வந்தது. ஒருமனம் அவனை ஏற்கச் சொல்ல... மறுமனம் அவனை ஏற்க மறுத்தது... இரு பக்கமாய் ஊசலாடிய மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் அந்தப் பால்கனியிலேயே உறங்கி விட்டாள்.

## மலர் : 20

“மது… இந்த ஆரஞ்சுக் கலர் சேலை உனக்கு நல்லாயிருக்கும். இதையே நீ கட்டு” அன்று அவன் கண்ணில் கண்ணீர் கண்டப் பின்பு அவள் கொஞ்சம் அவனை விட்டு விலகியே இருந்தாள். இன்று ஹரி - மதிவதானா திருமணத்திற்கு உடையெடுக்கச் செல்கிறார்கள். அதற்குக் கிளம்பிக் கொண்டிருந்த மதுமதி என்ன உடை அணிந்துச் செல்ல என்றெண்ணித் தன் உடைகளை ஆராய்ந்தவள் ஆரஞ்சு வண்ணச் சேலையைக் கையிலெடுக்க, அதைத் தான் சரண் நன்றாகயிருக்கிறது என்று சொன்னான். அவன் சொன்னதற்காகவே அதை உள்ளே வைத்துவிட்டு, அழகிய வேலைப்பாடு அமைந்த அடர் பச்சை நிறச் சுடிதாரை எடுத்தவள் நக்கல் பார்வையை அவன் மேல் செலுத்திவிட்டு உடை மாற்றும் அறைக்குள் நுழைந்துக் கதவைச் சாத்தினாள்.

அவளின் செயலில் அவன் மனம் வாடியது. தன்னைப் புரிந்துக் கொள்ளவே மாட்டாளா? என்று யோசித்துக் கொண்டிருந்தவன் கண்ணில் உடை மாற்றிக் கொண்டு வந்த மனைவி பட, நாகரீகமாகத் தைக்கப்பட்டிருந்த அந்தச் சுடிதாரில் அவளின் அழகு அப்பட்டமாய்த் தெரிய அவனால் கண்களை அவளிடமிருந்து விலக்க முடியவில்லை. தன் மனவருத்தத்தை மறந்து அவளின் அழகைப் பருகியவன்,

“சேலையை விடச் சுடிதார் உனக்குச் சூப்பர்” பார்வையால் தன்னை விழுங்கியப்படிக் கூறியக் கணவனை முறைத்துப் பார்த்தவள் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தாள். கழுத்துப் பக்கம் இறக்கித் தைக்கப்பட்டு, உடலோடு ஒட்டி, அவளின் இடுப்பு வளைவுகளை அழகாக எடுத்துக் காட்டியது அந்த உடை. அவளின் அழகு அவனின் கண்களுக்கு விருந்தாவதா? என்ற எண்ணம் எழ, சற்று முன் உள்ளே வைத்த சேலையை எடுத்துக் கொண்டு மீண்டும் உடை மாற்றும் அறைக்குப் போனாள். அவளின் செயலில் அவனுக்கு இப்பொழுதுக் கோபம் வரவில்லை… சிரிப்புத்தான் வந்தது.

“சுடிதாரை விட இந்தச் சேலையில் இன்னமும் அம்சமாயிருக்கச் செல்லம்” சேலை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தவளை மேலும் கீழும் பார்த்து ரசித்து... கண்சிமிட்டிச் சொன்னவன் பார்வை அவள் இடையில் படிந்து அங்கேயே தங்கியது.

“கொஞ்சம் கூட விவஸ்தையில்லாமல்... உங்களை...” இடுப்புச் சேலையைச் சரி செய்தவள் அருகிலிருந்த சீப்பை எடுத்து அவன் மேல் விட்டெறிய, அதை லாவகமாகப் பிடித்தவன் அவளருகில் செல்ல, அவளுக்கு அவன் என்ன செய்யப் போகிறானோ என்ற பயம் மனதிலிருந்த போதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனை நிமிர்ந்துப் பார்க்க,

“நீ எந்த ட்ரெஸ் போட்டாலும் அழகு தான். இல்லை...” அவள் காதில் ரகசியம் சொன்னவனைக் கண்டு அவள் ரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிற, அவனை அடிப்பதற்கு ஏதுமிருக்கிறதா என்று அவள் சுற்றும் முற்றும் தேட, அதற்கு மேல் அங்கு நிற்க அவன் என்ன முட்டாளா? விடு ஜூட் என்று வெளியில் ஓடிவிட்டான். அவனின் செய்கைக் கண்டு அவளுக்கு இப்பொழுதுச் சிரிப்புத் தான் வந்தது.

**************************************************

“அண்ணி இந்தப் புடவை நல்லாயிருக்காப் பாருங்க” ஹரிணி மதுமதியிடம் ஒரு புடவையை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்க, அப்பொழுது மதுவின் பின்னால் வந்த சரண் அவளுக்குத் தெரியாமல் ஹரிணியிடம் ‘நீ போ... நான் பார்த்துக்கிறேன்’ என்று சைகையால் சொல்ல, அவள் நமட்டுச் சிரிப்புடன்,

“அண்ணி இதைப் பார்த்திட்டிருங்க... நான் அம்மாக்கிட்ட ஒரு முக்கியமான விசயம் சொல்ல மறந்துட்டேன். சொல்லிட்டு வந்திர்றேன்” அவளின் பதிலை எதிர்பார்க்காமல் ஹரிணி அந்த இடத்தை விட்டகல, புரியாமல் அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த மதுவின் கண்ணில் ஹரியும் மதிவதனாவும் பேசிச் சிரித்துக் கொண்டு புடவை எடுப்பது விழ,

அவளையுமறியாமல் அவள் திருமணத்திற்குப் புடவை எடுக்க வந்த போது நடந்த நிகழ்ச்சி மனதில் ஓட மனதில் ஏக்கம் நிறையப் பெருமூச்சொன்றை விட்டாள்.

“ஹேய் செல்லம்... அங்கே யாரைப் பார்த்திட்டிருக்க... நான் இங்கே இருக்கேன் செல்லம்” அவளின் மனநிலை அறிந்து அதை மாற்ற எண்ணி சரண் அவ்வாறு பேச... அவன் பேச்சில் திடுக்கிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தவளைக் கண்டு,

“இந்தப் புடவை உனக்கு நல்லாயிருக்கும் மது... இதையே எடுத்துக்கோ” அவனைக் கண்டதும் அவளின் ஏக்கமெல்லாம் கோபமாய் அவன் மேல் திரும்பியது.

“எனக்குப் புடவை செலெக்ட் பண்ண கூட உங்களுக்கு நேரமிருக்கா என்ன...! எனக்காக உங்களோட பொன்னான நேரத்தை வீணாக்க வேண்டாமே. எனக்குப் பிடித்ததை நான் செலக்ட் பண்ணிக்கிறேன். நீங்க உங்க வேலையைப் பாருங்க” காரமாய் வந்து விழுந்த அவளின் வார்த்தையில் அவன் முகம் தொங்கிப் போய் அங்கிருந்துச் செல்வதைக் கண்டு நியாயத்திற்கு அவளுக்குச் சந்தோசமாயிருக்க வேண்டும். ஆனால் ஏதோ ஒன்று அவள் மனதைக் கனக்கச் செய்ய... அவன் அவளுக்காக முதன்முதலாகத் தேர்வுச் செய்த புடவையை ஆசையுடன் வருடிக் கொடுத்தவள் கண்களில் கண்ணீர் பளபளத்தது. பின்பு தன்னைச் சுதாரித்துக் அதையே பில் போட அனுப்பினாள்.

“இந்தப் பக்கம் வா மது... அங்கே கூட்டமாயிருக்கு” மின்தூக்கியில் ஏறும் போது மதுமதியின் கையைப் பிடித்துத் தடுத்துத் தன் பக்கம் அழைத்த சரண் அவள் தோள் மீது கைப் போட்டு தன்னோடு சேர்த்தணைத்துக் கொண்டான்.

அன்று அவனின் இந்தச் செய்கையில் தான் காதலை உணர்ந்த அந்தத் தருணத்தை நினைத்துப் பார்த்தவளுக்கு அவன் மேலிருந்த கோபம் பின்னுக்குத் தள்ளப்பட்டு அவன் மீதானக் காதல் முன்னுக்கு வர.... இப்பொழுது அதே காதல் அவன் மேல் பொங்கி வழிய அவனையே இமைக்காமல்

பார்த்தாள். தன் போக்கில் யோசித்துக் கொண்டிருந்த சரண் ஏதோ தோன்ற அருகிலிருந்த மனைவியைப் பார்க்க, அவள் கண்ணில் தெரிந்தக் காதலில் ஒரு கணம் தடுமாறித் தான் போனான். அவன் இவ்வளவு நாளாய் ஏங்கிக் கொண்டிருந்த பார்வையல்லவா அந்தப் பார்வை. அவளின் பார்வை அவனுக்கு ஓராயிரம் கதைச் சொல்ல... உலகத்தையே வென்றுவிட்ட உணர்வில்... மகிழ்வில்... அவளைச் சுற்றியிருந்த கையை இன்னமும் அழுத்தித் தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டான்.

****************************************

“இதில் யாரு மது அத்தை... மதி அத்தை...” ஆகாஷ் தாடையில் சுட்டுவிரல் வைத்து யோசித்துக் கொண்டிருக்க, அவனின் செயலில் மதுமதிக்கும் மதிவதனாவுக்கும் சிரிப்பு வந்தது.

“சரியாச் சொல்லுப் பார்க்கலாம்” மது அவன் தலையைக் கலைத்தபடிக் கேட்க,

“சொன்னா எனக்கு என்ன தருவிங்க...” பேரம் பேசினான் சின்னவன்.

“ம்... உனக்கு எவ்வளவு வேணுமோ அவ்வளவு சாக்லேட் ஐஸ்க்ரீம் வாங்கித் தர்றேன்”

“டீல் ஓகே...” என்றவன் இருவரையும் கூர்ந்துப் பார்த்துவிட்டு, “இன்னைக்கு மதி அத்தைக்குத்தான் கல்யாணம் அதனால இது தான் மதி அத்தை” மணப்பெண் அலங்காரத்தில் இருந்த மதிவதனாவைச் சரியாகச் சுட்டிக் காட்டி விட்டு, “நீங்க மது அத்தை... . கரெக்டாச் சொன்னேனா?” கைகொட்டிச் சின்னவன் சிரிக்க,

“சமத்து ஆகாஷ்...” அவனைத் தூக்கி முத்தமிட்டாள் மது. அதற்குள் பெண்ணழைக்க எல்லோரும் வர மதுமதியும் அறையிலிருந்து வெளியில் வந்தாள்.

அங்கே தம்பி அருகில் நின்று கொண்டிருந்த சரண் அப்பொழுது தான் மனைவியைப் பார்க்கிறான். காலையில்

அவளுக்கு முன் கிளம்பி மண்டபத்துக்கு வந்துவிட்டான். பட்டுச் சேலையில் அழகாகயிருந்தவளைக் கண்ணிமைக்காமல் பார்த்தவனுக்கு அவள் கட்டியிருந்த சேலை மெதுவாகத் தான் அவன் மூளையின் உறைத்தது. அன்று அவன் தேர்வு செய்து அவள் வேண்டாமென்று ஒதுக்கி வைத்த சேலையல்லவா இது...? அப்படியென்றால் தான் நகர்ந்ததும் அதை அவள் வாங்கியிருக்க வேண்டும். அவனுக்குப் பிடித்ததை அவள் எடுத்திருக்கிறாள் என்றால் அவள் தன்னை மன்னித்துவிட்டாள் என்று தானே அர்த்தம். அதற்கு மேல் அவனால் சும்மாயிருக்க முடியவில்லை. அவளருகே வந்தவன், வேண்டுமென்றே அவள் காதில் குனிந்து சும்மா முணுமுணுக்க...,

"என்ன சொல்றிங்க? எனக்குக் கேட்கல..." கொஞ்சம் சத்தமாகக் கேட்டாள் மதுமதி. மேளச் சத்தத்தில் அவளுக்கு அவன் சொன்னது கேட்கவில்லை. அவனுக்கு அது தானே வேண்டும்... அவள் கைப்பிடித்து மணப்பெண் அறைக்கு அழைத்துச் செல்ல, அவளும் ஏதோ முக்கிய விசயம் பேச அழைத்துச் செல்கிறான் என்றெண்ணி அவன் பின்னே சென்றாள். எல்லோரும் திருமணத்தைப் பார்க்கச் சென்றதால் அறையில் யாருமில்லை. அவள் உள்ளே நுழைந்ததும் அவசரமாகக் கதவைத் தாளிட்டவன், அதைவிட அவசரமாக அவளை அணைக்க,

"என்னங்க இது? கல்யாண மண்டபத்தில் போய்..." அவனைப் பிடித்து அவள் தள்ள...

"ப்ளீஸ் மது... கொஞ்ச நேரம்..." என்று சொல்லியவாறு அவள் கழுத்தில் முகம் புதைத்தவன் அவள் சூடியிருந்த பூவின் வாசத்திலும் அவளின் பிரத்யேக நறுமணத்திலும் மனம் மயங்கி அப்படியே கண்மூடி நிற்க, அவனின் செயலைக் கண்டு தடுமாறியவள் மது தான். கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்த்தவள் அவன் அசையாததால்,

"தாலிக் கட்டும் நேரம் நாம அங்கே இல்லைன்னா... எல்லோரும் என்ன நினைப்பாங்க" அவளின் குரலில் தன்னைச் சுதாரித்தவன் அவளைச் சட்டென்று

விடுவித்தான். அவன் விட்டதும் வெளியே போக எத்தனித்தவளை, “ஒரு நிமிசம்...” அவள் கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தி அவளின் சேலைக் கசங்கலை சரி செய்து, கலைந்திருந்த மூடியைச் சரி செய்து, “இப்ப போகலாம்... வா” மனநிறைவுடன் அவள் கையைப் பிடித்து வெளியில் அழைத்துச் சென்றான்.

திருமணத்தின் ஒவ்வொரு சடங்கையும் மதுமதி ஏக்கத்துடன் பார்த்தாள் என்றால், சரணோ தன் திருமணத்தில் தான் இருந்த மனநிலையை இப்பொழுது எண்ணி வருந்தினான். ‘கெட்டிமேளம்... கெட்டிமேளம்’ என்ற சத்தத்தில் தன்னினைவுக் கலைந்தவன், அட்சதையை மணமக்கள் மீது தூவி விட்டு தன் மனைவி பக்கம் திரும்பியவன் அவள் விழியிலிருந்த ஏக்கத்தைக் கண்டு கொண்டான். அதைத் தன் மனதில் பதிந்தும் கொண்டான்.

இரவு மதிவதானவை ஹரியின் அறைக்கு அனுப்பிவிட்டுத் தங்கள் அறைக்கு வந்த மதுமதி அங்குச் சரண் இன்னமும் தூங்காமல் இருப்பதைக் கண்டு புரியாமல் பார்த்தவாறு உள்ளே சென்றவள் தான் போட்டிருந்த நகைகளை ஒவ்வொன்றாய் கழட்டி வைக்க, அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் சரண்.

பிங்க் நிறத்தில் மெல்லிய சரிகையிட்டப் புடவை அணிந்து தலை நிறையப் பூச்சூடி அழகாகயிருந்தவளைக் கண்டு மனம் மயங்க... இன்று நடத்த நிகழ்வுகள் அனைத்தும் அவனின் திருமண இரவை அவனுக்கு நியாபகப்படுத்த, அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அவளருகே வந்தவன் அவள் எதிர்பாராத விதமாக அவளைத் தூக்கிப் படுக்கையில் கிடத்தியவன், அவள் மேல் சரிய, அடுத்து அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை உணர்ந்த மது,

“ப்ளீஸ் சரண்... வேண்டாம்” அவனைப் பலவந்தமாகத் தள்ளியபடி மறுக்க,

“ப்ளீஸ் மது... எனக்கு நீ வேணும்” அவனின் அறிவு அவள் சொல்வதைக் கேள் என்றாலும், காதல் பித்துப் பிடித்த

மனமோ அதைக் கேட்காமல் அவள் மறுக்க மறுக்க அவன் அவளுள் மூழ்கினான்.

மதுமதிக்குப் புரிந்து போனது அவனிடம் தன் சொல் எடுபடாது என்று. என்றுமே அவன் தன் மனதைப் பற்றிக் கவலைப்பட மாட்டானா? என்று அவளுக்கு விரக்தியாக இருந்தது. அவன் கைகள் முன்னேற முன்னேற யாரோ முன்பின் தெரியாதவன் தன்னை வன்கொடுமை செய்வது போல் அருவருப்பாய் அவள் உணர்ந்தாள். அவ்வளவு தான் அவ்வளவு நேரம் அடக்கி வைக்கப்பட்ட அழுகை கேவலாக வெளிப்பட்டுப் பின் ‘ஓ’வென்று பெரிதான அழுகையாக மாறியது. சரண் அவளின் அழுகையில் தன் உணர்வுகள் அறுபட்டு அவளிடமிருந்து விலகினான். அவளின் நிலைப் புரிந்தவன் ‘ச்சே’ என்று சொல்லியவாறு தன் நெற்றியில் அறைந்து கொண்டான். அருகில் தேம்பித் தேம்பி அழும் அவளைத் தேற்றும் வழியறியாதுப் பாவம் போல் அவளைப் பார்த்தான்.

“ப்ளீஸ் மது… சாரிம்மா”

“எத்தனை தடவைத் தான் சாரி சாரின்னு சொல்லிட்டு இதே தப்பைப் பண்ணிறிங்க? நீங்க ஒவ்வொரு முறைத் தொடுறப்பவும் அன்னைக்கு நீங்க என்னை வலிக்க வலிக்க அனுபவிச்சது தான் நியாபகம் வருது. அதிலும் இப்போ நீங்க தொடறப்போ எனக்கு யாரோ ஒருத்தன் என்னை ரே பண்ற மாதிரியிருக்கு. என்னால முடியல” முகத்தை மூடிக் கொண்டு அவள் அழ… அவளின் வார்த்தைகளைக் கிரகித்துக் கொள்ளவே அவனுக்குச் சற்று நேரம் பிடித்தது.

அதிலிருந்த உண்மை அவன் மனதைச் சுட… அதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளின் முன் கூனிக் குறி அவமானப்பட்டுப் போனான். ஆனாலும் தன்னிலை விளக்கம் கொடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் அவன் இருந்ததால் அவன் தன்னை முயன்று சமாளித்துக் கொண்டு அவளிடம் பேசினான்.

“மது... நான் முதல்ல வேணும்ன்னா அந்த மாதிரி நடந்திருக்கலாம். ஆனால் ஆகாஷ் பர்த்டே அன்னிக்கு ஆசிரமம் போய்விட்டு வந்ததிலிருந்து நான் உன் கிட்ட நல்லாத்தானே நடந்துகிட்டேன். அதைக் கொஞ்சமும் நீ உணரலையா. அப்பவே என் மனசு மாறிடுச்சுன்னு உனக்குப் புரியல”

அன்று அவன் நடந்து கொண்டது அவளுக்கு நியாபகம் வர, “அன்னைக்கு ஒருநாள் மட்டும் தானே...” அவள் குரல் மெதுவாக ஒலிக்க, சற்று நம்பிக்கையுடன் அவன் நிமிந்தமர்ந்தான்.

“அதுக்கப்புறமும் நீ அதை உணரலியா?”

“ம்ஹும்...” ஒற்றை வார்த்தையில் அவன் மனதை அப்படியே வெட்டிச் சாய்த்து விட்டாள் அவனுருமை மனைவி.

‘அவளால் என் மாற்றத்தைக் கூட உணர முடியாமல் இருந்திருக்கிறாள் என்றால்... அந்தளவுக்கா அவளிடம் நான் மோசமாக நடந்து கொண்டேன்’ தன் மேலேயே கோபம் வந்தது.

“என்னை மன்னிக்கவே மாட்டியா மது...” அவனின் குரலிலிருந்த ஏக்கம் அவள் மனதைச் சற்றுத் தொட்டசைக்க,

“தெரியல... உங்க மேல உள்ளக் காதல் உங்க நடவடிக்கையால செத்துப் போயிருச்சுன்னு தான் நான் நினைச்சேன். ஆனால் அது சாகல... என் உள்ளுக்குள்ளேயே ஆழமாப் பதிஞ்சிருக்கு. இப்பவும் உங்களைக் கண்டு அந்தக் காதல் மனம் உருகத் தான் செய்யுது... இதோ இப்ப உங்க வருத்தம் பார்த்து நானும் கஷ்டப்படத் தான் செய்றேன். ஆனாலும் ஏதோ ஒண்ணு உங்களை நெருங்க விட மாட்டேங்குது. அது என்னன்னே எனக்கும் புரியல” சொல்லியவாறு அவள் அழ, அவள் அழுகையில் அவன் தான் அதிகம் வேதனையடைந்தான்.

“வேண்டாம் மது... இதுவரைக்கும் என்னால் நீ பட்டக் கஷ்டம் போதும். இனி மேல் உன் கண்ணிலிருந்து கண்ணீர் வரக் கூடாது. அதுவும் எனக்காக நீ கண்ணீர் வடிக்கிறது... வேண்டாம்... அதுக்கு நான் தகுதியானவன் இல்லை. நான் பண்ணிய காரியம் உன்னை வருத்தியிருந்தால் சாரிடா... ரியலி ஐம் சாரி... மது” அவளின் தலையில் ஆறுதலாய் கை வைத்தவன், பின் எழுந்து உடை மாற்றிக் கொண்டு கார் சாவியை எடுத்துக் கொண்டு வெளியேறினான். அவன் எங்கே போகிறான் என்று கேட்க கூடத் தோணாதவளாய் அவள் தனக்குள் அழுதுக் கரைந்துக் கொண்டிருந்தாள்.

காரில் சென்று கொண்டிருந்த சரணின் மனம் காரின் வேகத்தை விட வேகமாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்தது. மதுமதியின் அழுகை அவனை ரொம்பவே பாதித்திருந்தது. கட்டிய கணவனின் தொடுகையை யாரோ ஒருவனின் தொடுகையாக அவளுக்குத் தோன்றியதை அவள் சொல்லக் கேட்டு அவனுக்கு இன்னமும் தான் உயிரோடு இருக்க வேண்டுமா? என்று தான் தோன்றியது. அந்தளவுக்கு மனதில் அடிப்பட்டுப் போனான்.

‘மது... எனக்கு மன்னிப்பே இல்லையாடா... நான் செய்தது தவறு தான்... மன்னிக்க முடியாத குற்றம் தான்... ஆனால் நான் செய்தத் தவறை உணர்ந்துவிட்டேன் மது. என் மனதில் நீ தான் இருக்கிறாய்... உன் மீதானக் காதல் தான் இருக்குது. அதை நீ உணரவே மாட்டாயா? தவறு செய்தவன் திருந்த கூடாதா? திருந்தியவனை மன்னிக்க முடியாத அளவுக்கு உன்னை எது தடுக்குது மது....? என் மேல் உனக்குக் காதலிருக்கு... அந்தக் காதலையும் மீறி உன்னை என்னருகில் வர விடாமல் எது தடைக்கல்லாயிருக்கு? ஒருவேளை என் மேல் நம்பிக்கையில்லையா? இல்லை என் காதல் மேல் நம்பிக்கையில்லையா? எப்படி என் காதலை உனக்குப் புரிய வைப்பேன்? ஐயோ... மது என் காதலை உனக்குப் புரிய வைக்கும் வழி தான் எனக்குப் புரிய மாட்டேங்குது?’

தனக்குள் புலம்பிக் கொண்டு காரை ஓட்டிச் சென்றவன் கண்ணில் எதிரில் வந்து கொண்டிருந்த மணல் லாரி பட்டது. லாரியின் ஓட்டுனர் குடி வெறியில் இருந்தானா என்னவோ அது தாறுமாறாகச் சாலையில் வேகமாக வந்து கொண்டிருந்தது. அதைக் கண்டதும் அவன் கண்கள் பளிச்சிட்டது.

‘மது என் காதலை உனக்கு எப்படி நிரூபிப்பது என்று எனக்குத் தெரியவில்லை? ஒருவேளை என் உயிரை விட்டால் நீ என்னை... என் காதலை... நம்புவாயா? அப்படி நம்பாவிட்டாலும் பரவாயில்லை... உன் வாழ்க்கையில் இந்தச் சரணால் ஏற்பட்ட துன்பங்கள் போதும். இனியும் என்னால் நீ துன்பப்பட வேண்டாம். நீ அந்த ரிஷியைத் திருமணம் செய்து கொள். அவன் தான் உனக்கு ஏற்றவன். அவன் தான் உன்னைச் சிறுவயதிலிருந்து காதலிக்கிறான். என்னைப் போலில்லாமல் உன்னைப் பூப் போல் பார்த்துக் கொள்வான். நான் இடையில் வந்தவன் இடையிலேயே போகிறேன். ஆம் மது... உன் காதல் கிடைக்காத உலகத்தில் நான் வாழ விரும்பவில்லை’

சரண் ஒரு முடிவுக்கு வந்தவனாய் ஸ்டீயரிங் வீலில் இருந்து கையை எடுத்தவன் தன் சீட் பெல்ட்டைக் கழட்டி விட்டு நேரே தன் காரை லாரியை நோக்கி விட்டான். தற்கொலை என்பது கோழைகளின் முடிவு... வாழ்க்கையை எதிர் கொள்ளாத முட்டாள்களில் செயல்... என்று பேசிய அவனே இன்று அதே செயலைச் செய்ய வேண்டி வரும் என்று கொஞ்சமும் அவன் நினைத்துப் பார்க்கவில்லை. அந்தளவுக்கு அவன் மனம் அடிப்பட்டுப் போய் வலித்தது. இப்பொழுது புரிந்தது தற்கொலை செய்வதற்கும் மன தைரியம் அதிகம் வேண்டுமென்று...

லாரியின் ஓட்டுனர் தன்னை நோக்கி கார் ஒன்று வருவதை உணர்ந்து, “ஏய்...” என்று கத்திக் கொண்டே லாரியை மறுபக்கம் வளைக்க... அதையும் மீறி கார் லாரியோடு அதிவேகத்துடன் மோதியது. பதைபதைப்புடன் இறங்கி ஓடி வந்த லாரியின் ஓட்டுனர் கார் அருகில் சென்று பார்க்க... அது அப்பளமாய் நொறுங்கியிருந்தது. அவ்வளவு தான்

அவனின் குடிப் போதை முற்றிலும் இறங்க பின்னங்கால் பிடறியில் படப் பயத்துடன் ஓட்டமெடுத்தான்.

சரணின் தலைக் கார் கண்ணாடியில் மோதி அவன் தன் சுயநினைவைக் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்தான். அவனின் மூடியக் கண்ணுக்குள் மது காதலாய் பார்த்தாள்... அவன் தொடுகையில் அவள் உருகிக் குழைந்தாள்... கோபமாய்ச் சண்டைப் போட்டாள்... கதறி அழுதாள்... மொத்தத்தில் அவள் மட்டுமே அவன் கண்ணுக்குத் தெரிந்தாள். அந்தளவுக்கு அவனின் நினைவை அவளே ஆக்கிரமித்து இருந்தாள். அவளின் நினைவில் அவன் வாய் மெதுவே முணுமுணுத்தது.

“மது... ஐ லவ் யூ...”

## மலர் : 21

“மது… இந்தக் காபியாவது கொஞ்சம் குடிம்மா…” சுபத்ரா மதுமதியிடம் கெஞ்சிக் கொண்டிருக்க அவளோ எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் சொன்னது கூட அவள் காதில் விழவில்லை.

சரணுக்கு விபத்து நடந்தது என்று நள்ளிரவில் ஃபோன் வந்ததிலிருந்து அவள் அப்படித்தான் இருக்கிறாள். சுபத்ரா தான் தன் மனதைத் தேற்றிக் கொண்டு அவளை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். சரணின் இந்த நிலைக் கண்டு அவரின் பெற்ற வயிறு துடித்தது. தன்னோடு ஒப்பிடும் போது மதுமதியின் நிலை மிகவும் பரிதாபமாகத் தோன்ற அவளைத் தேற்றுவது தான் அவரின் முக்கிய வேலையாய்ப் போனது. ராமநாதனும் அப்படியே இடிந்துப் போய் அமர்ந்திருந்தார். ஹரிக்கும், மதிக்கும் இன்னமும் விசயம் தெரிவிக்கப் படவில்லை. அவர்களின் சந்தோசத்தை ஏன் கெடுக்க வேண்டும் என்று சுபத்ரா தான் சொல்ல வேண்டாம் என்று தடுத்துவிட்டார். அதே மாதிரி ராமகிருஷ்ணனுக்கும் இன்னமும் சொல்லவில்லை.

“மது…” சுபத்ரா சற்று அழுத்தமாகக் கூப்பிட்டதும் ஏதோ கனவிலிருந்து விழிப்பது போல் மலங்க மலங்க விழித்த மருமகளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

“அத்தை… சரணுக்கு ஒண்ணும் ஆகாதில்லையா?”

“அவனுக்கு ஒண்ணுமாகாது மது. நாம் கும்பிடும் கடவுள் அவனை நிச்சயம் காப்பாற்றுவார். நீ ஏதாவது குடிம்மா… அப்போ தான் உடம்புக் கொஞ்சம் தெம்பா இருக்கும். நீ பட்டினிக் கிடப்பதால் எதுவும் மாறிவிடுமாச் சொல்லு” சிறு குழந்தைக்குச் சொல்வது போல் சொல்ல…

“வேண்டாம் அத்தை…” பலகீனமான குரலில் சொன்னவள் கண்களை மூடிச் சுவற்றில் சாய்ந்துக் கொண்டாள். அதற்கு மேல் அவரும் அவளை வற்புறுத்தவில்லை.

மதுமதியின் மனம் முழுவதும் சரணின் நினைவுகளே வியாபித்திருந்தது. சரணின் ஒரு பக்கம் முழுவதும் நல்ல அடி, மறுப்பக்கம் கொஞ்சம் அடி தான். ஆனாலும் தலையிலிருந்து கால் வரை கட்டுக்கள் போடப்பட்டு அவன் படுத்திருந்த கோலம் கண்டு அவள் மனம் பதபதைத்துத் தான் போனாள். அவள் கண் முன்னே அழகாய் கண் சிமிட்டிச் சிரித்த சரணின் முகம் வந்து அவளை இம்சித்தது.

‘என்னால் தான்... எல்லாம் என்னால் தான்... நான் மட்டும் அவனின் விருப்பத்திற்குச் சரியென்று சொல்லியிருந்தால் சரண் என்னை விட்டுப் போயிருக்க மாட்டான். இந்த மாதிரி அடிப்பட்டுப் படுத்திருக்கவும் மாட்டான்’ உள்ளுக்குள் கதறியவள் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் விம்மிவிட்டாள்... சட்டென்று சூழ்நிலைப் புரிய வாயில் தன் இரு கையை வைத்து அழுகையை அடக்கிக் கொண்டாள். ஆனாலும் அவள் கண்கள் மௌனமாகக் கண்ணீர் வடிக்கத் தான் செய்தது.

‘என் சரணுக்கு ஒண்ணுமாகக் கூடாது. உங்களுக்கு ஒன்றென்றால் அதுக்கப்புறம் நான் உயிரோடு இருக்க மாட்டேன். சரண்... உங்களுக்கு என் காதல் தானே வேண்டும்... உங்க வாழ்நாள் முழுவதும் காதல் செய்ய நான் காத்திருக்கிறேன். வாங்க... சரண்... வந்து என்னை எடுத்துக் கொள்ளுங்க. நான் உங்க மனம் புண்படும்படி பேசியிருக்கக் கூடாது. என்னை மன்னித்து விடுங்க... சரண். நீங்களும் நானும் ஆயிரம் ஆண்டுகள் வாழ வேண்டும். உங்களைப் போல் குழந்தைகள் நிறையப் பெறணும். சரண்... வந்தவிடுங்க... என்னைத் தவிக்கவிட்டுப் போய்விடாதீங்க. ஏற்கெனவே யாருமில்லாத அநாதை நான். இப்போ நீங்களும் அநாதையாய் என்னை விட்டு விட்டுப் போய்விடாதீங்க. எனக்கு நீங்க வேண்டும்... உங்க காதல் வேண்டும்... நேசம் வேண்டும்... உங்க அருகாமை வேண்டும்... இப்பவே ஓடிவந்து என்னை அணைச்சுக்கோங்கச் சரண்...’

சரணின் உயிர் முன் அவன் மீதான அவளின் மனவருத்தம் ஒன்றிமில்லாமல் போனது. அவன் இல்லையென்றால்

தனக்கு வாழ்வில்லை என்பதை அந்த நொடி உணர்ந்துக் கொண்டாள். இன்னமும் அவளின் வீம்பை இழுத்துப் பிடிக்கக் அவளுக்கு விருப்பமில்லை. தன் உயிரில் கலந்துவிட்டவனின் உயிரோடு கலக்க எண்ணினாள். இதுநாள் வரை அவள் போட்டிருந்த கட்டுப்பாடை மனத்தடையை அவன் மீதான நேசம் தகர்த்தெறிந்தது. இப்பொழுது அவன் உயிர் பிழைக்க வேண்டும் என்ற எண்ணம் தவிர அவள் மனதில் வேறு ஏதுமில்லை.

“மதும்மா…” ராமகிருஷ்ணன் அவளிடம் ஓடிவர… தந்தையைக் கண்டதும் அதுவரை அடக்கி வைத்திருந்த அவள் கண்ணீர் அணைப் போல் உடைத்துக் கொண்டு வெளியில் வர,

“அப்பா… என்ற கூவலுடன் அவரைக் கட்டிக் கொண்டாள். மகளின் நிலைக் கண்டு அவருக்கும் வருத்தமே… ஆறுதலாய் அவளை அணைத்துக் கொண்டார். அவரோடு வந்த மதிவதனாவும் அவளின் அருகில் அமர்ந்து,

“மாமாவுக்கு ஒண்ணுமாகாது மது… தைரியமாயிரு…” ஆறுதலாய் அவள் கையை வருடிக் கொடுத்தாள்.

“என்னப்பா… இது சரணுக்கு இவ்வளவு பெரிய ஆக்சிடெண்ட் நடந்திருக்கு… என்னிடம் சொல்லணும்ன்னு உங்களுக்குத் தோணலியே” ஆற்றாமையுடன் ஹரி தந்தையிடம் கேட்க,

“நேத்துத் தான் கல்யாணமாகி இருக்கு. இந்த நேரத்தில் உங்களைத் தொந்திரவு செய்ய வேண்டாம்ன்னு தான்…” சுபத்ரா இழுக்க,

“அம்மா… என் அண்ணனை விட என் சந்தோசம் எனக்கு முக்கியமில்லை. அந்தளவுக்கு என்னைக் கீழ்த்தரமாக நினைச்சுட்டீங்க இல்ல…” அவன் வருத்த குரலில் சொல்ல…

“இல்லைடா… அப்படியெல்லாம் இல்லை ஹரி” சுபத்ரா அழுது கொண்டே அவன் கையைப் பற்ற, அவனும் வெடித்து அழுதான்.

“டாக்டர் என்ன சொல்றாங்கம்மா…”

“மூணு நாள் கழித்துத் தான் சொல்ல முடியும்ன்னு சொல்றாங்க” அவரின் பதில் கேட்டு அவன் மனம் நொந்து போனான். தோழமையுடன் சிரித்துப் பழகிய சரணின் முகம் அவன் விழிகளுக்குள் வந்து போக… வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டான் ஹரி.

மருத்துவர்கள் விதித்திருந்த மூன்று நாள் கெடுத் தாண்டி ஐந்து நாட்கள் சென்று தான் சரணின் நினைவுத் திரும்பியது. அந்த ஐந்து நாட்களும் மதுமதி உணவருந்தாமல்… இவ்வளவு ஏன் தண்ணிக் கூட அருந்தாமல் அங்கேயே பழியாகக் கிடந்தாள். அவள் மனம் முழுவதும் அவன் நலமாக வேண்டும் என்ற பிரார்த்தனையே இருந்தது. எல்லோரும் வீட்டிற்குச் சென்று வர இவள் மட்டும் மருத்துவமனையில் தங்கிக் கொண்டாள். காலையில் எழுந்து குளித்து முடித்து மருத்துமனை வளாகத்தில் உள்ள கோவிலில் போய் அவனுக்கு வேண்டிக் கொண்டு வந்து ஐசியூ வந்தாளென்றால் இரவு வரை அங்கேயே தான் காத்துக் கிடந்தாள். அவன் எந்நேரமும் விழிக்கக் கூடும் என்பதால் அங்கேயே இருந்தாள். அந்த ஐந்து நாட்களும் ஒருவிதத் தவ வாக்கையை வாழ்ந்தாள் என்றே சொல்ல வேண்டும்.

“பேசண்ட்டுக்கு நினைவு திரும்பியிருக்கு… யாராவது ஒருத்தர் வந்து பாருங்க” செவிலிப்பெண் கூறியது, சுபத்ரா மதுமதியை உள்ளே அனுப்பி வைத்தார். கணவனுக்காக அவள் படும் துன்பம் அவருக்குத் தானே தெரியும். மாமியாரை நன்றியுடன் பார்த்த மது வேகமாக உள்ளே ஓடினாள்.

உடல் முழுவதும் கட்டுக்களுடன் கணவன் படுத்திருந்த நிலை அவளுக்கு அழுகையை உண்டாக்கியது. மெல்ல அவனருகில் சென்று கட்டுப் போடாத அவன் கைப் பகுதியில் தன் கையை வைக்க, அந்த நிலையிலும் அவள் ஸ்பரிசத்தை அவன் உணர்ந்தது போல் அவன் கண்கள்

மெதுவே திறந்தது. அவளைப் பார்த்தும் மின்னல் கீற்றாய் ஒரு புன்னகை அவன் உதட்டில் மலர்ந்தது.

“மது...” மெல்லிய குரலில் அவள் பெயரை மிகுந்த சிரமத்துடன் அவன் விளித்தான்.

“சரண்...” அவன் கை மேலே விழுந்துக் கதறிவிட்டாள்.

“அழாதே... உன் கண்ணீருக்கு நான் தகுதியில்லாதவன் மது. நான் உனக்கு வேண்டாம். நான் உன்னை விட்டுத் தூரப் போகிறேன். பார்க்க முடியாத தூரத்திற்கு... நீ அந்த ரிஷியைத் திருமணம் செய்து கொள். அவன் தான் உனக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமானவன். என்னை மாதிரியில்லாமல் உன் அருமைத் தெரிந்து... உன்னை நல்லாப் பார்த்துக்குவான். அப்புறம் அம்மாவை நான் ரொம்பக் கேட்டதாச் சொல்லு. நான்னா அவங்களுக்கு உயிர்...” அன்னையின் நினைப்பில் புன்னகைக்க முயன்று தோற்றான்.

“சரண்... அப்படியெல்லாம் பேசாதீங்க” அவள் கதறியதை அவன் கண்டு கொண்டதாய் தெரியவில்லை.

“இல்லை இப்ப பேசலைன்னா... பிறகு பேசவே முடியாமல் போய்விடும்” என்று சொன்னவன், “மது... எனக்கு ஒரு சத்தியம் பண்ணிக் கொடு... உனக்குக் குழந்தைப் பிறந்தால் என் பெயர் வைப்பாயா? கணவனாய் பெற முடியாத உன் அன்பை உன் மகனாய் நான் பெற வேண்டும்”

“சரண்... என்ன பேசுறீங்க?” அவள் தலையில் அடித்துக் கொண்டு அழ, திடீரென்று சரண் மூச்சுவிடச் சிரமப்பட்டவனாய்,

“மது... எனக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வருது... யாரோ எங்கேயோ என்னை இழுத்துப் போற மாதிரி... எனக்கு முடியல மது... என்னமோ செய்யுது... ரொம்பப் பயமாயிருக்கு” அவள் கையைப் படித்துக் கொண்டு சொன்னவன் கண்கள் தாமாக மூடி... தலை ஒருபக்கமாய்ச் சாய்ந்தது.

“சரண்…” மதுமதி அலறிய அலறல் அந்த ஐசியூ எங்கும் எதிரொலிக்க… செவிலிப் பெண்களும் மருத்துவரும் ஓடிவர… சரண் அபாயக் கட்டத்தைத் தாண்ட அடுத்த மூன்று மணி நேரமானது. அந்த மூன்று மணி நேரமும் மது செத்துப் பிழைத்தாள் என்றால் மிகையாகாது. அதிலும் அவன் பேசிய பேச்சுக்கள் அவளை மிகவும் காயப்படுத்தியிருந்தது. அடுத்து அவன் கண் விழித்த போது அவனைப் பார்க்கப் போகவே பயந்தாள்.

“அத்தை நீங்க போய்ப் பாருங்க. நான் போய்ப் பார்த்துத் தான் அவருக்கு ஏதோ ஆகிப் போச்சு”

“என்ன மது… மூடத்தனமாய்ப் பேசிக்கிட்டு…” சுபத்ரா கடிந்தப் போதும் அவள் உள்ளே வரவில்லை. அவர் உள்ளே போய்ப் பார்த்துவிட்டு வந்து அவன் நன்றாகயிருப்பதாகச் சொல்ல… அதன் பின் தான் அவளுக்கு உயிர் வந்தது. அடுத்தப் பத்துத் தினங்களில் ஐசியூவிலிருந்து அவனை அறைக்கு மாற்றினார்கள். அதன் பின் அவன் உடல்நலம் வெகுவாக முன்னேறியது.

மெதுவே கண் முழித்த சரணின் பார்வையில் அவன் குடும்பத்தினர் பட, அவனின் மனமோ மனையாளைத் தேடியது. “அம்மா… தண்ணி வேணும்” மெதுவாய் அன்னையை அழைக்க…

“அத்தை அவருக்கு இதைக் கொடுங்க…” மதுவின் குரல் அவன் காதில் தேனாய் விழ, குரல் வந்த திசையை ஆவலுடன் பார்த்தான். அவளோ அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவள் பார்க்காதது அவனுக்கு ஏதோ போலிருந்தது.

“சரண் குடிப்பா…” சுபத்ரா அவன் வாயருகில் பழச்சாறை கொண்டு வந்து புகட்டிவிட, அவன் விழிகளோ அவளையே ஏக்கத்துடன் பார்த்தது. அவனின் எண்ணத் தவிப்பை மற்றவர்கள் புரிந்து கொண்டு அறையை விட்டு வெளியேற… இருவரும் தனித்து விடப்பட்டனர்.

“மது…” அவன் கூப்பிட்டும் அவள் திரும்பிப் பார்க்கவில்லை. அவனருகில் தலையைக் குனிந்து கொண்டு நின்றிருந்தாள்.

“என்னால் உனக்கு ரொம்பத் தொந்திரவு என்ன? நான் உன்னைக் கஷ்டப்படுத்தக் கூடாது… உன்னை விட்டுப் போகணும்.. உயிராடு இருக்கக் கூடாதுன்னு தான் லாரியில் காரைக் கொண்டு மோதினேன். பட் பேட் லக்… என் உயிர் போகல. இப்பவும் சொல்றேன்… உனக்குப் பிடிக்காமல் நீ இங்கே இருக்க வேண்டாம் மது. மும்பைக்குப் போய்விடு” அவன் பேசப் பேச அவள் முக இறுக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள். தன்னை விட்டு விலகிப் போவதற்காக அவன் வேண்டுமென்றே காரை லாரியில் விட்டது அவள் மனதைக் கொல்லாமல் கொன்றது.

“அவ்வளவு தானா? இல்லை வேறெதுவும் இருக்கா?” உணர்ச்சியில்லாத குரலில் அவள் கேட்க, அவன் புரியாமல் இல்லை என்பது போல் தலையசைக்க, அவள் பேசாமல் அங்கிருந்து நகர்ந்தாள்.

மருத்துவமனையில் அவனிருந்த அந்த ஒரு மாதமும் அவள் அவனிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. அவன் தான் ஏக்கத்துடன் அவள் முகம் பார்ப்பான். அவளோ ஒரு மனைவியாய் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்தாள். ஆனால் பேச்சு வார்த்தை என்பதில்லை. அவளின் மௌனம் கண்டு அவன் பயந்துத் தான் போனான். அவள் எந்த நேரம் வெடிப்பாளோ என்ற பயம் அவன் மனதில் இருந்து கொண்டே இருந்தது.

வீட்டிற்கு வந்து மேலும் ஒரு மாதமான பின்பும் அவள் மௌனம் தொடர்ந்ததை அவனால் தாங்க முடியவில்லை. இந்த மௌனயுத்தத்தைத் பொறுத்துக் கொள்ள முடியாமல், அவன் அவளிடம் கேட்டு விட்டான்.

“மது… இன்னமும் எனக்காக உன் வாழ்க்கையைப் பாழாக்க வேண்டாம். நான் உனக்கு டிவோர்ஸ் கொடுக்கிறேன். உனக்கு மனம் பிடித்த வாழ்க்கையை நீ வாழ்ந்து கொள்ள உனக்கு உரிமை உண்டு…” சொன்னவனை… முகத்தில்

எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் நிமிர்ந்துப் பார்த்தவளைப் புரியாமல் அவன் பார்த்தான்.

மலர் : 22

“இப்போ உடம்பு சரியாகிருச்சா…” மதுமதி சம்பந்தமில்லாமல் சரணைப் பார்த்துக் கேட்க, அவன் தன் காது தான் சரியாகக் கேட்கவில்லையோ என்று தன் காது இரண்டையும் நன்றாகத் தேய்த்துவிட்டு அவளைப் பார்த்தான்.

“உங்க காதில் எந்தக் கோளாறுமில்லை… சரியாத் தான் கேட்குது… முதல்ல கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க” உணர்ச்சியில்லாமல் அவள் கேட்க,

“ம்… நல்லாயிருக்கேன்…” அவன் சொல்லி முடிக்கவில்லை… அவளருகில் கிடந்த தலையணையை எடுத்து,

“அப்போ உங்களை அடிச்சாலும் தப்பில்லை…” என்று சொல்லிக் கொண்டே சராமாரியாக அடிக்க,

“ஏய்… எதுக்குடி… அடிக்கிற… சொல்லிட்டு அடி…” அவன் அலற,

“ம்… எவ்வளவு தைரியமிருந்தா… எனக்காகத் தான் தற்கொலைப் பண்ணிகிட்டேன்னு சொல்வீங்க… அதுல வேற ரிஷியைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு அட்வைஸ் வேற… என்னவொரு பெருந்தன்மை… உங்களை எல்லாம் உருட்டுக் கட்டையால் அடிச்சிருக்கணும். ஹாஸ்பிட்டல்ல படுத்து எழுந்த உடம்புன்னு தான் தலையணையால் அடிக்கிறேன். உங்களுக்கெல்லாம் இது பத்தாது. சொல்வீங்களா… என்னைப் பார்த்து அப்படிவொரு வார்த்தைச் சொல்ல உங்களுக்கு எப்படி மனசு வந்தது? உங்களை…” சொல்லிக் கொண்டே… அவன் கழுத்தை நெறிப்பது போல் அவன் கழுத்தில் தன் இரு கரத்தையும் வைத்து அழுத்த…

சரணோ அவளின் செயலில் தன் இருகைகளையும் தொங்கப் போட்டு, “கொன்னுடு… மது… என்னை உன்

கையால் கொன்னுடு… நான் உனக்குச் செய்தப் பாவத்துக்கு உன் கையால் என்னைக் கொன்னு விடு…” கண்களை மூடிக் கொண்டு புன்னகையுடன் அமைதியாய் சொல்ல,

“ஐயோ… சரண்…” அவள் கோபமெல்லாம் பறந்துப் போக அவன் தாடையைத் தன் இரு கரங்களால் தாங்கி அவன் முகம் முழுவதும் முத்தத்தால் அர்ச்சிக்க, அவளின் செயலை அவன் எதிர் பார்க்காதவனாய் கண்களை அகல விரித்துப் பார்க்க,

“ஏண்டா… இப்படியெல்லாம் பேசற…” அவன் மார்பில் முகம் புதைத்து அவள் அழ, அவளின் அழுகைக் கண்டு அவனையும் அறியாமல் அவன் கை அவள் தலையை ஆறுதலாய் வருடியது.

“உங்களுக்கு ஆக்சிடெண்ட்ன்னு கேள்விப் பட்டதும் என் உயிர் என் கையிலில்லை… உங்களுக்கு ஏதாவது ஒண்ணுன்னா நானும் அப்படியே செத்துடணும்ன்னு தான் நினைச்சேன். அப்படிப்பட்ட என்னைப் போய் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கோன்னுச் சொல்ல உங்களுக்கு எப்படி மனசு வந்தது? அதிலேயும் எனக்கு நல்லது செய்யன்னு தற்கொலை பண்ணிக்கப் போனீங்களா? இது தான் நீங்க நல்லது செய்யும் லட்சணமா?” அவள் பேசப் பேச… அவளின் தன் மீதான நேசம் இன்னமும் அவள் மனதிலிருப்பது தெரிந்ததும், அவன் மனதிலிருந்த உறுத்தல் எல்லாம் நீங்க… அவள் முகம் நிமிர்த்தி அவளைப் பார்த்தவன்,

“மது… என்னை மன்னிச்சிட்டியா… உண்மையாவாடா சொல்ற…” நம்ப முடியாமல் கேட்டவனிடம்,

“பின்னே இதில் யாராவது பொய் சொல்வாங்களா? உங்களை மன்னிக்க நான் யார் சரண்? அந்த நேரக் கோபத்தில் அப்படித் தோணிச்சு அவ்வளவு தான். நீங்க ஒண்ணும் தப்புப் பண்ணல. தப்புப் பண்ணியதெல்லாம் நான் தான். ஐ லவ் யூ சரண்… இனி இந்த மாதிரி

பேசாதீங்க... என்னால் தாங்கிக்க முடியாது" சொன்னவளின் கண்ணில் கண்ணீர் தளும்பியது.

"மது... என் செல்லமே..." அவன் அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.

"நீ தானேடா சொன்ன... நான் உனக்குப் பொருத்தமில்லாதவன்... என் தொடுகை யாரோ தொடுவது போலிருக்குன்னு... அதைக் கேட்டதும் எனக்குச் செத்துடலாம் போலிருந்தது தெரியுமா...? இதுக்கப்புறமும் ஏன் உயிரோடு இருக்கணும்ன்னு தான் அப்படிச் செஞ்சேன்..." அவன் குரலிலிருந்த வலியை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

"சாரி... சரண்... நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது தான். அந்த நேரத்தில் என்னையும் அறியாமல் அப்படிப் பேசிட்டேன். சாரி..." கண்ணில் இறைஞ்சுதலுடன் கேட்டவளை அதற்கு மேல் மன்னிக்காமல் இருக்க முடியமா? அவளின் இதழில் ஆழமாய் முத்தமிட்டு அவன் மன்னிக்க, அவளும் தன் மன்னிப்பை அதை விட அழமாய் முத்தமிட்டு அவனிடம் வேண்ட... இருவருமே ஒருவரிடம் ஒருவர் மயங்கியிருந்தனர்.

"மது செல்லம் உனக்குள் இப்படியொரு புயல் இருக்குன்னு தெரியாமப் போச்சே" அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு அவளைப் பார்த்துக் கண்சிமிட்டிக் கேட்க,

"என்னவோய்... நக்கலா... இந்த மதுவை என்னன்னு நினைச்சீங்க..." கையை மடக்கி புஜத்தை தட்டியப்படிப் பெருமையாய் அவள் அவனைப் பார்க்க...

"அதானே... என் மது யாரு... என் செல்லப் புஜ்ஜி குட்டி... என் அம்முக்குட்டி..." என்று சொல்லியவாறே அவன் அவளைக் கொஞ்ச...

"வேண்டாம்... சரண். ப்ளீஸ்..." அவள் கெஞ்சிக் கேட்க... அவள் முகத்தில் என்ன கண்டானோ,

“சரி வேண்டாம்... செல்லத்துக்கு வேற என்ன வேணும்?” அவளின் மூக்கை ஆட்டியப்படி கேட்க,

“ஏன் சரண்... நான் சொன்னதுக்காக இப்படி நீங்க பண்ணலாமா? நீங்க எத்தனை முறை என்னைத் திட்டியிருக்கீங்க... மனசு வலிக்கிற மாதிரி நடந்திருக்கீங்க... ஆனால் எப்பவுமே நான் தற்கொலைப் பண்ணிக்கணும்ன்னு நினைச்சது கிடையாது. என்னைக்காவது ஒருநாள் நீங்க என்னைப் புரிஞ்சுக்குவீங்க... மனசு மாறுவீங்கன்னு நான் காத்திருந்தேன். ஆனால் நீங்க... ஒரு சொல் கூடப் பொறுக்க முடியாமல்... இனி மேல் இந்த மாதிரி முட்டாள்த்தனமா செய்யாதீங்க” அவள் மெல்ல விசும்ப,

“அப்படி இல்லைடா மது... நீ சொன்ன வார்த்தை என்னை ரொம்பக் காயப்படுத்திருச்சு. அதான் அப்படி... அதுக்காக நான் செய்ததைச் சரின்னுச் சொல்ல வரல. அந்த நேர விரக்தியில்... உன் அன்பில்லாத இந்த உலகத்தில் வாழ வேண்டாம்ன்னு அப்படியொரு முடிவு எடுத்துட்டேன். என் அன்பை... என் காதலை உனக்கு எப்படிப் புரிய வைக்கன்னுத் தெரியாமல்... சாரிடா...”

“மூணு மாசம் டைம் கேட்டுத் தானே என்னைக் கூட்டிக்கிட்டு வந்தீங்க... ஆனா மூணு வாரம் கூடத் தாங்க முடியல உங்களுக்கு... ஏதோ கோபத்தில் சொல்லியதை வச்சு... ச்சு... போங்க” அவள் வேதனையில் முகம் கசங்க... அதைப் பார்க்க சகிக்காது,

“நீ பக்கத்தில் இருக்கும் போது மூணு வாரம் என்ன மூணு நாள் கூட என்னால் தாக்குப் பிடிக்க முடியாது. இதில் மூணு மாசம் வேறயா? அவ்வளவு தான் நான்? அதெல்லாம் சும்மா ஒரு பேச்சுக்கு இங்கே உன்னை வரவழைப்பதற்காகச் சொன்னது அதையெல்லாம் நீ நம்புவியா என்ன?” அப்பாவியாய் விழி விரித்து அவன் கேட்க,

“அடப்பாவி அப்போ சும்மா சொல்லித்தான் என்னை இங்கே கூட்டிக்கிட்டு வந்தீங்களா? நானும் நம்ம புருசன் நல்ல

மனுசன்... அப்பாவின்னுல நினைச்சேன். உங்களை...” கோபமாய்ச் சொன்னவளை...

“என்னை...” கிண்டலாய் கேட்டவனைப் பார்த்துக் கோபப்பட முடியாமல் சிரித்தவளை அள்ளியெடுத்து தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு கண் மூடி அந்த நிமிடத்தைச் சுகமாய் அனுபவித்தான். கொஞ்ச நேரம் பொறுமையாயிருந்த மது மெல்லத் தலையை நிமிர்த்தி, “அவ்வளவு தானா...?” கண்களில் ஏமாற்றத்துடன் கேட்க...

“இன்னைக்குக் கோட்டா அவ்வளவு தான். ஆக்சிடெண்ட் ஆன உடம்பு இல்லையா? இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் மது...” அவன் பதிலில் சற்று ஏமாற்றமடைந்தவள், “சரி... உங்க இஷ்டம்...” அவன் கையணைப்பிலே அப்படியே உறங்கிவிட... அவன் தூங்காமல் முழித்திருந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

**************************************

அடுத்து வந்த நாட்கள் வேகமாய்ச் செல்ல நாட்கள் மாதங்களாகியது. ஒருநாள் மதிவதனா மகிழ்ச்சியுடன் மதுமதியிடம் வந்தவள், “மது... நானும் ஹரியும் ஹனிமூனுக்குப் பாரிஸ் போறோம்” குதூகலத்துடன் சொல்லியவளை மகிழ்ச்சியுடன் வாழ்த்தியவள் மனதின் மூலையில் சரணும் தானும் எங்கேயும் செல்லவில்லை என்பது உறுத்தியது. அப்படியே கேட்டாலும் அன்று போல் இன்னமும் உடல்நலம் சரியாகவில்லை என்று சமாளிப்பான். அதே யோசனையுடன் அறையில் அமர்ந்திருந்தவள் சரணின் வருகையைக் கவனிக்கவில்லை.

“ஹாய்... செல்லம்...” அலுவலகம் போய்விட்டு வந்தவன் அப்படியே அவள் மடியில் படுத்து இடுப்போடு அவளை அணைத்து அவள் வயிற்றில் முகம் புதைத்துக் கொண்டான். எப்பொழுது வெளியில் போய்விட்டு வந்தாலும் அவன் இப்படித்தான் செய்வான்.

“ம்... செல்லத்துக்கு என்ன...!” அவனின் தலைக் கேசத்தை விரல்களால் அளைந்தவாறுக் கேட்க,

“இரு... இரு... சொல்றேன்...” பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டு விமான டிக்கெட்டை அவளிடம் நீட்டினான்.

“நாம ஹனிமூன் போகப் போறோமா...?” ஆவலுடன் அதை விரித்துப் பார்த்தவள் ஏமாற்றத்தில் முகம் சுருங்கினாள்.

“என்ன சரண்... மும்பைக்குப் பிளைட் டிக்கெட் புக் பண்ணியிருக்கீங்க?”

“என்ன இங்கேயே இப்படிச் செட்டில் ஆகிடலாம்ன்னு நினைப்பா... அங்கே இருக்கிற தொழில்... வீடு எல்லாத்தையும் என்ன பண்றதா ஐடியாயிருக்கு?”

“ம்ச்சு... அதெல்லாம் வேண்டாம்... நான் இங்கேயே உங்க கூடவே இருந்தால் போதும்” அவன் தலை மேல் கவிழ்ந்து கன்னத்தை அவன் தலையோடு ஒட்டி வைத்துக் கொண்டு சொன்னவளைக் கண்டு அவன் மனதில் காதல் சாரலடித்தது. சொத்து வசதி வேண்டாம் தான் தான் வேண்டும் என்று அவள் சொன்னது கேட்டு எழுந்த காதல் மிகுதியில் அவள் கழுத்தை வளைத்து இழுத்து அவள் முகத்தைத் தன் முகத்திற்கு நேரே கொண்டு வந்து அவளின் இதழோடு இதழ் அணைத்தவன்... வெகுநேரம் கழித்தே அவளை விடுவித்தான்.

“சரி... உனக்கு வேண்டாம்ன்னே வச்சுக்குவோம். ஆனால் அதையெல்லாம் சரி பண்ணிட்டு வர வேண்டாமா?” அவன் கேட்க... அவள் தன் தலையசைப்பையே சம்மதமாகத் தந்தாள்.

மறுநாள் மும்பை கிளம்பிச் சென்றவளை அங்கே வரவேற்க சுபத்ரா நின்றிப்பதைக் கண்டு ஆச்சிரியத்தில் கண்களை அகல விரித்தாள் மதுமதி.

“அத்தை நீங்க எப்படி இங்கே?”

“நான் மட்டுமா… அங்கே பாரு…” அவர் கைக்காட்டிய திசையில் ராமகிருஷ்ணன், ராமநாதன், தாத்தா, ஹரி, மதிவதனா, ஸ்ரீதர், ஹரிணி, ஆகாஷ் எனக் குடும்ப உறுப்பினர் எல்லோரும் நிற்க… அவள் கேள்வியாய் கணவனைப் பார்த்தாள்.

“அன்னைக்கு ஹரி கல்யாணத்தை நீ ஏக்கத்துடன் பார்த்தாயே… அப்பவே முடிவு பணிட்டேன்… நீ இழந்த சந்தோசத்தை உனக்குக் கொடுக்கணும். இன்னும் கொஞ்ச நேரத்தில் நம்ம ரெண்டுப் பேருக்கும் உங்க ஊர் ஸ்டைலில் கல்யாணம்” சரண் சொல்லச் சொல்ல அவளுக்குப் பேச வார்த்தைகள் வரவில்லை. அவன் தோளில் சாய்ந்துக் கொண்டவளின் கண்களில் கண்ணீர் தளும்பியது.

“எப்படி இவ்வளவு வேலையும் செஞ்சீங்க?”

“நான் எங்கே செய்தேன்… நான் சொல்ல மட்டும் தான் செய்தேன்… எல்லாம் ரிஷி தான் செய்தான்”

“ஓ… ரிஷியும் இதில் கூட்டா? நீங்களும் அவனும் என்னைக்கு ஒண்ணாச் சேந்தீங்க?”

“அவன் மட்டுமா ஜெகன் தாத்தாவும் தான்…” என்றவன் இடைவெளி விட்டு அவளைக் காதலாய் பார்த்துக் கொண்டே, “அது உன் காதலை நீ சொன்னப் போது” அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவர்கள் இருவரும் வந்தார்கள்.

“இப்பத்தான் மது எனக்குச் சந்தோசமாயிருக்கு?” ஜெகன்நாதன் சொல்ல மது அவரின் கால் பணிந்து எழுந்தாள். ராமகிருஷ்ணன் ஜெகன்நாதன் அருகில் சென்று தன் மகளுக்கு இத்தனை நாள் பாதுகாப்பாய் இருந்ததற்கு நன்றி சொன்னார்.

ஜெகந்நாதனிடமும் ரிஷியுடமும் அங்குள்ள சொத்துக்களை ஒப்புடைத்துவிட்டு கணக்கு வழக்குகளைக் கணினியில் தான் பார்த்துக் கொள்வதாகவும் தேவைப்பட்டால் தான்

அங்கு வருவதாகவும் மதுமதி சொல்ல, அவளின் அந்த யோசனை எல்லோருக்கும் பிடித்திருந்தது.

வடக்கத்திய முறையில் நடந்த திருமணத்தில் கருகமணித் தாலியை சரண் மதுவின் கழுத்தில் அணிவித்து அவளைத் தன்னவளாக்கிக் கொண்டான். முந்தையைத் திருமணத்தில் இழந்த அவள் மகிழ்ச்சியை இந்தத் திருமணத்தின் மூலம் அவன் மீட்டெடுத்தான். அவளருகே இருந்து அவள் கையை விடாமல் பற்றிக் காதல் கணவனாய் அவன் நடந்து கொள்ள, அவனின் ஒவ்வொரு செயலும் அவளை முற்றிலும் தன்னை மறக்கச் செய்ய... ஏதோ வானுலகத்தில் சஞ்சரிப்பது போல் ஒருவித மயக்கத்தில் தன்னைச் சுற்றி நடப்பதை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்றிரவு தன்னறைக்குச் செல்லவே அவள் கால்கள் தயங்கியது. சரணின் காதல் பார்வைகளும்... செல்லச் சீண்டல்களும்... அவளை ரொம்பவே தயங்க வைத்தது. இந்தச் சரண் அவளுக்கு முற்றிலும் புதிது. கால்கள் பின்ன அறைக்குள் நுழைந்தவள் அவனைக் கண்ணால் தேட, அவளின் கள்வனோ அவள் பின்னாலிருந்து அப்படியே அவளைத் தூக்கிக் கொண்டுக் படுக்கையில் அவளைப் படுக்க வைத்து தானும் அவளை அணைத்தவாறு படுத்தவன், அவள் கை வளைவில் முகம் புதைக்க... சிறிதுநேரம் அவனிடம் அசைவில்லை.

மது மெல்ல அவன் தலையைத் தூக்கிப் பார்க்க, அவன் கண்களில் கண்ணீர் முத்துக்கள் பளபளத்தது. அவள் பதறிப் போய் அவனைத் தன் மடியில் படுக்க வைத்துக் கண்களைத் துடைத்து விட்டபடி,

“என்ன சரண் நல்ல நாளும் அதுவுமாய்...?”

“அன்று நம் திருமணநாள் இரவில்.... உன்னை... நான் மனுசனே இல்லை மது. மிருகம்... ஒரு பெண்ணென்று கூட எண்ணாமல்...” அவன் வேதனையுடன் கண்களை மூடிக் கொள்ள... அவனின் வேதனைக் கண்டு அவள் மனம் தான்

அதிக வேதனையடைந்தது. அவன் முன் நெற்றியில் தன் இதழ் பதித்தவள்,

“அதை மறந்திருங்க சரண்... இனி நாம் வாழப் போறதுப் புது வாழ்க்கைன்னு நினைச்சுக்கோங்க” அவன் முன் நெற்றியில் தன் இதழ் பதித்து அவள் சொல்ல... அவன் கண்களில் ஒளியுடன் அவளைப் பார்க்க...

“எனக்காக... என் மேலுள்ள காதலுக்காகத் தன் உயிரையே கொடுக்கத் துணிஞ்ச உங்களை மாதிரிக் கணவன் யாருக்குக் கிடைப்பாங்க? எனக்கு நீங்க கிடைச்சிருக்கீங்களே... அதே நான் செஞ்ச புண்ணியம்... ஏன் சரண் என் மேல் உங்களுக்கு அவ்வளவு காதலா?”

“ம்... அவ்வளவு காதல்... அதை வார்த்தையில் சொல்ல முடியாது” அவன் கண்களில் காதலோடு சொல்ல... அவன் மார்பில் முகம் புதைத்து, “சரண்... நான் உங்களிடம் ஒண்ணுக் கேட்பேன்... உண்மையாய் பதில் சொல்லணும்”

“என்னடா... சொல்லு...”

“சரண் நான் ரொம்பக் கெட்டப் பொண்ணுத் தானே...? பழிவாங்க... அது இதுன்னு தேவையில்லாமல் வந்து உங்களுக்கும் கஷ்டத்தைக் கொடுத்து... என்னை மன்னிச்சுருங்க... சரண்” அவள் கண்கள் கலங்க...

“ஹேய் என் செல்லக் குட்டியை யாரு கெட்டப் பொண்ணுன்னு சொன்னது. நீ ரொம்ப நல்ல பொண்ணுடா...! உன் நிலையில் யாரிருந்தாலும் இப்படித் தான் செய்திருப்பாங்க. உன்னால் எனக்குக் கஷ்டமா? நோ... நெவர்... செல்லம்... நீ எனக்குக் கிடைத்த தேவதை... அதுவும் வரம் கொடுக்கும் தேவதை... என் மனதில் முள்ளாய் உறுத்தி... பின் மலராய் மலர்ந்து மணம் வீசுபவள்... என்னைக் கொண்டாடும் தேவதைப் பெண் நீ...” அவன் தன் மனக் கவலையை மறந்து அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

“உண்மையில் நான் தேவதை தானா? நான் கெட்டவளில்லையா?” பரிதவிப்பாய் கேட்டவளை இறுக அணைத்துத் தன் பதிலை கையாலும் உதட்டாலும் அவள் மேனியில் அவன் அழுத்தமாய்ப் பதிக்க, அவளோ அந்தப் பதில் போதவில்லை என்று இன்னமும் வேண்டுமென்று அவனை யாசிக்க... இனிய கவிதையாய் அவனின் பதிலை நெடும் நேரம் அவள் மேனியில் அவன் எழுதினான். அவளோ விடைத் திருத்தும் ஆசிரியராய் அவனின் ஒவ்வொரு வார்த்தைக்கும் அவள் தன் அணைப்பால் மதிப்பெண் வழங்கி உற்சாகப்படுத்த... அவன் கொஞ்சம் கொஞ்சமாய் அவளின் உணர்வுகளை வென்றான்.

*****************************************************

“எங்க ரெண்டுப் பேரில் யார் மது...? யார் மதின்னுக் கண்டுபிடிங்கப் பார்ப்போம்?” மதுமதியும், மதிவதனாவும் ஒன்று போல் உடை உடுத்தி அணிகலன் அணிந்து நின்றிருக்க... அங்குக் கூடியிருந்தோர் முழிப் பிதுங்கியது.

“இது மது அத்தை... இல்லை இது மதி அத்தை... இல்லை இல்லை இது மது அத்தையே தான்” ஆகாஷ் குழம்பிப் போய் நிற்க, அவனோடு ஹரிணியும் குழம்பி நின்றாள்.

அவர்களைப் பெற்ற ராமகிருஷ்ணனால் கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த விளையாட்டிற்குத் தான் வரவில்லை என்று அவர் ஒதுக்கிக் கொள்ள, சுபத்ரா இருவரையும் சுற்றி வந்து பார்த்தும் அவராலும் கண்டுப்பிடிக்க முடியவில்லை.

ஹரியோ தன் மனைவி என்று அண்ணியைச் சுட்டிக் காட்டிவிட்டால்... அதற்குப் பயந்தே, “என்னை ஆளை விடுங்க...” அவனும் ஒதுங்கிக் கொள்ள...

கடைசியில் மாட்டியது சரண் தான். “சத்தியத்துக்கு வந்த சோதனையா இது...?” புலம்பியபடி எழுந்தவன் இருவரையும் சுற்றிச் சுற்றி வந்தான். அவனால் ஒன்றும் கண்டுப்பிடிக்க முடியவில்லை. பின் இருவரையும் கூர்ந்துப் பார்த்தான். ஒரு நொடி தான் சட்டென்று தன்

மனையாளைக் காட்டி, “என் மது…” என்று அவளைத் தூக்கிச் சுற்றினான். அவனின் செயலில் முதலில் அதிர்ந்த மது பின் வெட்கத்தில் முகம் சிவக்க, “ஐயோ எல்லோரும் பார்க்கறாங்க… விடுங்க… விடுங்க…” அவன் கைகளில் அவள் துள்ளித் தவிக்க, அவளின் தவிப்பை ரசித்தபடி மாயச் சிரிப்புச் சிரித்தவன், மெல்ல அவளைக் கீழே இறக்கினான்.

“எப்படி மாமா சரியாக் கண்டு பிடிச்சிங்க?” மதிவதனா ஆர்வத்துடன் கேட்க, அதே ஆர்வத்துடன் எல்லோரும் அவனைக் கேட்க,

“சொல்லவா மது?” அவளிடம் சரண் கேட்க… வெட்கப்பட்டவள் மறந்தும் அவனை நிமிர்ந்துப் பார்க்கவில்லை.

“அது பெரிய விசயமில்லை… என் பொண்டாட்டி எப்போ பார்த்தாலும் என்னை முறைச்சு முறைச்சுப் பார்ப்பா… இன்னைக்கும் போட்டியை மறந்து என்னை முறைச்சாளா…. ஆஹா… நாம் தேடி வந்த தங்கவேட்டை இங்கே இருக்குன்னு என்னவளை அள்ளிக்கிட்டேன்” குறும்பாய் சொன்னவன் மதுவைப் பார்த்துக் கண்சிமிட்ட… அவனின் பதிலில் திடுக்கிட்டவள்… கோபமாய் அவனைப் பார்த்தாள்.

“உங்களை…” மதுமதி அவனைத் துரத்த அவன் அவளிடமிருந்து தப்பித்து ஓட, ஓரளவிற்கு மேல் அவனைத் துரத்த முடியாமல் “ஷ்… அப்பா…” களைப்பாய் மதுமதி சோபாவில் அமர்ந்து சுபத்ராவிடம்,

“அத்தை அவரை உண்டாகியிருக்கும் போது பூஸ்ட் ரொம்பக் குடிச்சீங்களா? இந்த ஓட்டம் ஓடுறாரு” சலிப்பாய் சொல்ல…

“நீயும் குழந்தை உண்டானா என்னை மாதிரி பூஸ்ட் குடி… அவனை மாதிரிப் புள்ளையைப் பெத்துக்கலாம்” சுபத்ரா பேச்சுவாக்கில் தன் ஏக்கத்தை வெளிப்படுத்த,

“போங்க அத்தை....” அவள் அழகாய் வெட்கப்பட... எங்கிருந்து தான் வந்தானோ சரண், “மது அம்மாவே சொல்லிட்டாங்க... சீக்கிரம் குழந்தைப் பெத்துக்கலாம்” அவளருகில் வந்தமர்ந்துக் கெஞ்ச,

“உம்... ரூமுக்கு வாங்க... உங்களுக்கு இருக்கு” பழிப்புக் காட்டியபடி உள்ளே சென்ற மனைவியைக் காதலுடன் அவன் பார்த்தான். ஒரே மாதிரியான இருவரில் அவளை மட்டும் எப்படிச் சரியாக அடையாளம் கண்டு பிடித்தான்...? அது அவனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

“மது செல்லம்...” இரவில் குழைந்தப்படி வந்த சரணை முறைத்த மதுமதி ஒன்றும் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ள...

“என் செல்லத்துக்கு என்ன கோபம்?” அவள் கழுத்தில் முகம் புதைத்து அவன் வாசம் பிடிக்க... அவன் முகத்தைத் தட்டிவிட்டபடி,

“ஏன்னு உங்களுக்குத் தெரியாது? நான் உங்களைப் பார்த்து எப்பவும் முறைக்கிறேன்னா...?” இடுப்பில் கை வைத்துக் கண்களை உருட்டியப்படி அவள் கேட்க,

“இப்போ கூட என்னை முறைச்சுத் தானே பார்க்க... அந்த உண்மையைத் தான் நான் சொன்னேன்” பயப்படுவது போல் போலியாய் அஞ்சியப்படி சொன்னவனை மேலும் கண்களை அகல விரித்து உருட்டிப் பார்க்க... அதைக் கண்டு அவன் சிரித்தபடி அவளின் பார்வையைக் கண்டு கொள்ளாது... அவளை அள்ளியெடுத்துத் தன் மேல் போட்டவன், “எப்படிக் கண்டுப்பிடிச்சேன்னு உனக்குத் தெரியணும் அவ்வளவு தானே?” அவள் நெற்றியிலிருந்து தன் ஆள் காட்டி விரலால் அவன் கோலம் போட்டு வர,

அவன் தொடுகையில் உள்ளம் உருக... மனம் மயங்க... கண் மூடியிருந்தவள் கண்ணில் கையை நிறுத்தி, “என்னைப் பார்க்கும் போது மட்டும் காதலாய் பார்க்கும் இந்தக் கண்கள் இரண்டும் உன்னைக் காட்டிக் கொடுத்தது செல்லம். உன் ஒட்டு மொத்தக் காதலையும் நேசத்தையும்

உன் ஒற்றைப் பார்வையில் எனக்கு உணர்த்துவியே…” அவன் சொல்லச் சொல்ல அவள் கண்களை மெல்லத் திறந்துக் காதலாய் அவனைப் பார்க்க…

“இதோ… இந்தப் பார்வை தான் செல்லம் என்னைக் கொல்லாமல் கொல்லுது… உன்னைக் காட்டிக் கொடுத்த ஒற்றனான இந்தக் கண்களுக்கு நீ தண்டனைக் கொடுக்கிறாயோ இல்லையோ… இப்பொழுது நான் அதற்குத் தண்டனைக் கொடுக்கப் போகிறேன்” சொன்னவன் ஆசை ஆசையாய் காதலோடு அவள் கண்களில் முத்தமிட அவனின் ஸ்பரிசத்தில் தன் வசம் இழந்து மீண்டும் அவள் கண்மூட, அவளிருந்த கோலம் அவனை மயக்க,

“மது மை லவ்…” அவளை அப்படியே காதலாய் அள்ளிக் கொண்டான் அந்தக் காதல் கணவன். அன்று முள்ளாய் அவன் மனதைக் குத்தி ரணப்படுத்தியவள் இன்று மலராய் அந்த ரணத்திற்கு மென்மையாய் மருந்திடுகிறாள். இந்த மலர் மலர்ந்து அவன் மனமெங்கும் என்றென்றும் மணம் வீசும்.